# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 196 வைகாசி 27ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 10 ஜின் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 30
பக்கங்கள்: 56


## பாதாளக் குழுவின் இரண்டு பேர் சுட்டுக்கொலை

கண்டி, ஜூன் 10
கண்டியில் சிறப்பு அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இருவர் நேற்று உயிரிழந்த >> 53

## கடலட்டை பிடிப்பதை நிறுத்துமாறு நாளை கடையடைப்புக்கு அழைப்பு

### வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பேரணியும் இடம்பெறுமெனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமாகக் கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்டுள்ளதை நிறுத்துமாறு வலியுறுத்தி நாளை திங்கட்கிழமை மதியம்வரை கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அன்று பேரணியும் இடம்பெறவுள்ளதால் அனைவரையும் ஒத்துழைக்கு >> 53



# பீ.ரி.ஏ நீக்கம், காணி விடுவிப்பை இலங்கை துரிதப்படுத்தவேண்டும்

### ஐரோப்பிய ஒன்றியம் மீள வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 10
பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்குதல், மக்களின் காணிகளை விரைவாக விடுவித்தல் உள்ளிட்ட விடயங்களை இலங்கை அரசு விரைந்து செயற்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.
ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கையின் இணை ஆணைக் குழு என்பவற்றின் கீழ் தொழிற்படும் சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அரச தொழிலாளர் குழுமத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் ப்ருசெலில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தவிடயம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்குதல் அல்லது பன்னாட்டுத் தரநியமங்களுக்குட்ப >> 53

## மக்களிடம் கையேந்தும் வடக்கு மாகாண அரசு

### வேலைகளை முடிக்க நிதி வேண்டுமென முதலமைச்சர் விக்கி பகிரங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடக்கு மாகாண சபையிடம் நிதி வளம் மிகக் குறைவாகவே காணப்படுவதால், தற்போது சபை பொதுமக்களிடம் பங்களிப்பைக் கோரியுள்ளது. மலைபோல் குவிந்துள்ள வேலைகளைச் செய்துமுடிக்கவே பொதுமக்களின் >> 53

## ஈழத் தமிழர்களுக்கு நீதிவேண்டி சென்னையில் சிறப்புற்ற மாநாடு

கொழும்பு, ஜூன் 10
ஈழத்தமிழர்களுக்கு நீதிவேண்டி பன்னாட்டு வழக்கறிஞர்கள் மாநாடு சென்னையில் நேற்று இடம்பெற்றது.
ஈழத்தமிழர் ஆதரவு வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு மற்றும் அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையத்தின் ஏற்பாட்டில் ஈழத்தமிழர்களுக்கு நீதிவேண்டியதாக இந்த மாநாடு இடம்பெற்றது. >> 05

## 15 - 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று

யாழ்ப்பாணம், ஜூன் 10
நாட்டில் வழமையைவிட காற்றின் வேகம் அதிகரித்துள்ளது. மணித்தியாலத்துக்கு 15 தொடக்கம் 40 கிலோமீற்றர் >> 05

## காற்றின் தாண்டவத்தால் பல இடங்களில் மின்தடை

### மின்சார சபை ஊழியர்கள் இரவு பகலாகக் களப் பணியில்

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடக்கில் பல பிரதேசங்களிலும் காற்றின் வேகம் அதிகரித்ததால் மின்சாரம் பல இடங்களிலும் தடைப்பட்டது. அவற்றைச் சீர் செய்யும் பணியில் மின்சார சபை ஊழி >> 52

அரச தலைவர் செயலணிக்குள்

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்வாங்கப்படவேண்டும்

### வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 10
வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் சிறப்புச் செயலணிக்குள், அந்த மாகாணங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற நாடாளு >> 53

## வரிச் சுமையைக் குறைக்க வரிக் கொள்கை திருத்தம்

### ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 10
மக்கள் எதிர்கொண்டிருக்கும் வரிச்சுமையைக் குறைக்கும் வகையில் வரிக் கொள்கையில் திருத்தம் செய்வது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
கம்பஹா ரன்வெல பிரதேசத்தில் நேற்று நடை >> 52

## வட – கிழக்கு இணைந்த தாயகமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாகும்

### கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் இணைப்பாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10
வடக்கு-கிழக்கு இணைந்த தாயகம் தான் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் என்று கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் இணைப்பாளர்கள் தெரிவித்தனர்.
மட்டக்களப்பு முகத்துவாரத்திலுள்ள சூழலி >> 53

## தலை மன்னார் கடலில் மீனவர்கள் இருவர் மாயம்

2 நாள்களாகத் தேடுதல் >> 53

## வாள்வெட்டுக் குழுவின் 3 பேர் அதிகாலை கைது

>> 52

## பசுவும் எருமையும் இழுப்பதற்கு ஒப்பானது ஐ.தே.க - சு.க. ஆட்சி

### முன்னாள் அரசதலைவர் மகிந்த வர்ணிக்கிறார்

கொழும்பு, ஜூன் 10
சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சியமைப்பது என்பது பசு மாட்டையும் எருமை மாட்டையும் ஒன்றாக இழுத்துச் செல்வது போன்றது.
இவ்வாறு வர்ணித்திருக்கிறார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.
தான் உள்ளிட்ட பலரும் திருடர் திருடர் என்று இந்த அரசிலுள்ளவர்கள் குற்றம் சுமத்திய போதிலும், தற்போது அரசில் உள்ளவர்களுக்கே திருடன் திருடன் என்று கூறும் நிலை ஏற்பட்டிருக்கிறது.
மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.டி. பண்டாரநாயக்கவின் 100 ஆவது பிறந்த நாள் நிகழ்வு கம்பஹா இம்புல்கொட சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் நினைவுச் சிலைக்கு அருகில் நேற்று இடம்பெற்றது. >> 53




# விஞ்ஞானத்துறையை கற்க மாணவரை ஊக்குவியுங்கள்

## கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

**இன்னும் 5 ஆண்டுகளுக்குள் எங்களை நாங்கள் சரி செய்து கொண்டு விஞ்ஞானத் துறையில் எங்களுடைய மாணவர்களை மேலே கொண்டுவரவில்லை என்றால் நாங்கள் இங்கே கூக்குரலிடுவதில் அர்த்தமும் இல்லாமல் போய் விடும். நாங்கள் சிங்கள மய மாக்கலுக்குள் சங்கமமாகி சரணாகதி அடைகின்ற நிலைமையே ஏற்படும்.**



இவ்வாறு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்தார். நேற்று வடமராட்சி ஹாட்லி கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முப்பது ஆண்டு கால போருக்குப் பின்னர் வடக்கு மாகாணத்துக்கு தேவையான தகுதி மிக்க வைத்தியர்களை தகுதி மிக்க பொறியியலாளர்களை தகுதி மிக்க ஆசிரியர்களை தகுதி மிக்க சிவில் சேவையாளர்களை சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களை நாங்கள் பெற முடியாமல் தேடிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழல் எழுந்திருக்கிறது. தென்னிலங்கையிலிருந்து பலரை இங்கே கொண்டுவரவேண்டிய சூழல் எழுந்திருக்கிறது.

நாங்கள் கல்வி கற்ற காலத்தில் விஞ்ஞானத்துறையில் ஐந்து துறைகள் மட்டுமே காணப்பட்டன. தற்போது அப்படியல்ல. விஞ்ஞானத் துறையில் மட்டும் 27க்கும் அதிகமான துறைகள் பல்கலைக் கழகங்களில் உள்ளன. கணித விஞ்ஞானத்துறைகளில் தற்போது 40க்கும் அதிகமான துறைகள் உள்ளன.

ஹாட்லி கல்லூரி போன்ற அனைத்து வசதிகளையும் கொண்டுள்ள பாடசாலைகள் தமது மாணவர்களை 6 ஆம் தரத்திலிருந்தே அதிகமாக கணித, விஞ்ஞானத் துறைகளை நோக்கி நகர்த்த வேண்டும்.

எங்களுடைய யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மருத்துவமனைகளில் வைத்தியர்கள், தாதிகள் போன்றோர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாகவே அதிகம் காணப்படுகின்றனர். விஞ்ஞானத் துறையில் எங்களுடைய மாணவர்களை மேலே கொண்டு வரவில்லையென்றால் நாங்கள் இங்கே கூக்குரலிடுவதிலே எந்த அர்த்தமும் இல்லாமல் போய்விடும். நாங்கள் சிங்கள மயமாக்கலுக்குள் சங்கமமாகி சரணாகதி அடைகின்ற நிலமையே ஏற்படும்.

வடக்கு மாகாணத்தில் அதிகமான மாணவர்களையும் அதிக வளங்களையும் கொண்ட பெரிய பாடசாலைகள் அதிக அக்கறை எடுக்க வேண்டும் என நான் இந்த இடத்தில் கேட்டுக்கொள்கிறேன். இவற்றை நாங்கள் பாரா முகமாக விட்டுவிட்டுச் செல்ல முடியாது காரணம் இது எங்களுடைய மாணவர்களுடைய வளர்ச்சி மட்டுமல்ல எங்களுடைய சமூகத்தின் இருப்பு எங்களுடைய எதிர்கால சமுதாயத்தின் இருப்பு ஆகியவற்றை உத்தரவாதம் செய்கின்ற ஒரு விடயம். எங்களுடைய பெண்பிள்ளைகள் அதிகம் தாதியத் தொழிலை விரும்புவதில்லை. அது ஏன் என்று புரியவில்லை. ஒரு வைத்தியர் நாள் ஒன்றுக்கு நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே மேலதிக கடமையை செய்யலாம். ஒரு வைத்தியர் பெறும் சம்பளத்திலும் பார்க்க பல மடங்கு அதிகமாக தாதியத் தொழிலில் உழைக்க முடியும். எங்களுடைய மாணவர்கள் பெருமளவில் கணித விஞ்ஞானத் துறைகளை தெரிவு செய்ய வேண்டும். அவர்களை இந்தத் துறைகளை நோக்கி நகர்த்துவதற்கு ஆசிரியர்கள் உற்சாகமூட்ட வேண்டும் - என்றார். (ற)

## பிரபல எழுத்தாளர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன்.10

பிரபல நாவல், நாடகம் மற்றும் திரைப்பட திரை எழுத்தாளர் சோமவீர சேனநாயக்க உயிரிழந்தார்.



மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்த இவர் இன்று உயிரிழந்தார்.

இவர் தனது 74 வயதில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற,ரி4)

## போதைப்பொருளுடன் இராணுவ சிப்பாய் கைது

திருகோணமலை,ஜூன்.10

திருகோணமலையில் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இராணுவ சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார். மோராகமயைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார். இவரிடமிருந்து 40 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது எனக் கூறப்பட்டது. சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)

## துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஜூன்.10

மட்டக்களப்பு காத்தான்குடியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம நேற்று முன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இனந்தெரியாதேரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் தேனீர்க்கடை உரிமையாளரான 72 வயதுடைய முதியவரே உயிரிழந்தார்.

துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)

## பேருந்தின் சில்லில் சிக்கி இந்தியப் பிரஜை சாவு

கொழும்பு,ஜூன்.10

கொம்பனித்தெரு கெலனிவீதியில் இந்திய பிரஜையொருவர் தனியார் பேருந்தொன்றில் மோதி உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தில் ஏற முற்பட்ட நபர் கால் தவறி வீழ்ந்ததில் பேருந்தின் சில்லில் சிக்குண்டு படுகாயமடைந்தார் எனக் கூறப்பட்டது. படுகாயமடைந்த நபர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

24 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக பேருந்தின் சாரதி கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)

## 15 ஆண்டுகளாக மூடியிருந்த வீதியைத் திறக்க நடவடிக்கை

வவுனியா, ஜூன் 10

வவுனியாவில் 15 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருந்த நீதிமன்றத்துக்கும், சிறைச்சாலைக்கும் இடைப்பட்ட சந்தைக்கு செல்லும் வீதியை மக்களின் பாவனைக்கு விடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நகர சபைத் தவிசாளர் கடந்தவாரம் அந்த வீதியைச் சென்று பார்வையிட்டிருந்தார். தற்போது அந்த வீதியை மக்களின் பாவனைக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நகரசபை தலைவர் மற்றும் ஊழியர்களால் வீதிக்குக் குறுக்காக இருந்த வேலி அகற்றப்பட்டு பற்றைகள் சீராக்கப்பட்டது. கிரவல் இட்டு சீராக செப்பனிடப்பட்ட பின்னர் மக்கள் வீதியைப் பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-110)

## வீட்டிலிருந்து சடலம் மீட்பு

மட்டக்களப்பு,ஜூன் 10

மட்டக்களப்பு பெரியகல்லாறிலுள்ள வீடொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

இந்தச் சடலம் நேற்று மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெரியகல்லாறு பிரதான வீதியை சேர்ந்த 48 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்ற கோணத்தில் களுவாஞ்சிகுடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற,ரி4)

## பிரதி தவிசாளர் சுட்டுக்கொலை நேற்று ஒருவர் கைது

கொழும்பு,ஜூன் 10

காலி கரந்தெனிய பிரதேசசபையின் பிரதித் தவிசாளர் இனந்தெரியாதேரால் நேற்று முன்தினம் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரகஸ்மங்சந்தி பொலிஸாரால் 22 வயதுடைய இளைஞனே சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு தப்பிச் சென்றனர் எனக் கூறப்பட்டது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் கரந்தெனிய பிரதேசசபைக்கு போட்டியிட்டு வெற்றி பெற்ற 48 வயதுடைய டொனல்ட் சம்பத் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)

## திடீரென தீப்பற்றிய பாரவூர்தி

கொழும்பு,ஜூன் 10

தெற்குக்கான அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த லொறியொன்று தீப்பிடித்து எரிந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடவத்தையிலிருந்து மாத்தறை நோக்கி ஆடைகளை ஏற்றிச்சென்ற கன்டர் ரக லொறியொன்றே இவ்வாறு தீப்பற்றி எரிந்தது எனக் கூறப்பட்டது.

சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கெலனிகம பெலிஸார் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)



# வெளிநாட்டு இலங்கையர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்

## அரசதலைவர் மைத்திரி சுட்டிக்காட்டு



**கொழும்பு,ஜீன்10**

**வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் பிரச்சினைகள் மற்றும் மனக்குறைகளுக்குத்தீர்வுகளைப்பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்த சகல நிறுவனங்களும் தமது கடமைகளைப் புரிந்துணர்வுடனும் மனிதாபிமானத்துடனும் நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

ஊவா மாகாண வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகவளநிலையத்தைத்திறந்துவைக்கும்நிகழ்வுநேற்றுமுன்தினம்இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை பணியாளர்கள் எதிர்நோக்கும் சில பிரச்சினைகளுக்குஇதுவரைதீர்வுகள்பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பதுடன் அரசினால் நடைமுறைப்படுத்தப்படும்கொள்கைகளும்திட்டங்களும் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதற்குஅந்தநிறுவனங்களில்சேவையாற்றும் உத்தியோகத்தர்களின்செயற்பாடுகள்இன்றியமையாதவையாகும். என அரச தலைவர் தெரிவித்தார்.

நாட்டுக்குஅந்நியசெலாவணியைப்பெற்றுத் தரும்வெளிநாடுகளில்பணிபுரியும்இலங்கையர்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குவதும் சிறந்த மனநிலையுடன் அவர்கள் பணிபுரிவதற்கு தேவையான சூழலை உருவாக்கிக் கொடுப்பதும் அரசின் பொறுப்பாகும் என்று அரச தலைவர் தெரிவித்தார்.

இதன்பொருட்டு தற்போதைய அரசினாலும் பலவேலைத்திட்டங்கள்முன்னெடுக்கப்பட்டு வருவதுடன்,

வெளிநாடுகளில்பணிபுரியும்இலங்கையர்களின்நலன்புரிதேவைகளைநிறைவேற்றும் சகல நிறுவனங்களும் தமது கடமைகளை உரியவாறு நிறைவேற்றும் அதேவேளை மனிதாபிமானத்தைமதித்துசெயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

அமைச்சர்ஹரீன்பெர்னான்டோ, இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனெவிரத்ன, பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஊவா மாகாண ஆளுநர் ஆரிய பீ. ரெக்கவ, முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, முன்னாள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொதுமுகாமையாளர் கே.ஓ.டீ.டீ. பெர்னாண்டோ உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.என்றுள்ளது.

(ந.ரி2)



## மாதாந்த கல்வி கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு

வவுனியாவில்தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்த கல்விக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. வன்னிப்பட்டறை மக்கள் தொடர்பகத்தில் தமிழ் விருட்சம் அமைப்பினரால் நேற்று வழங்கப்பட்டது. வீழ்த்தப்பட்டாலும் கல்வியினால் எழுவோம் வன்னிப் பட்டறைநந்தா உணவகம் கனடா இணைந்து மேற்கொண்டு வரும் இந்தக் கொடுப்பனவுகள் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரால் வழங்கப்பட்டது. (ந.ரி4)


## மணிக் கூட்டுக் கோபுரக் கடிகாரம் மின்னல் தாக்கத்தால் செயலிழந்தது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான மணிக் கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்ட கடிகாரம் இடி மின்னல் தாக்கம் காரணமாக முழுமையாகப் பழுதடைந்துள்ளதுஎன்றுதெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சொந்தமான மணிக்கூட்டுக் கோபுரத்தின் மீது அண்மையில் இடி மின்னல் தாக்கம் ஏற்பட்டு மணிக் கூட்டுகோபுரத்தில்பொருத்தப் பட்டுள்ள கடிகாரம் முற்றாகச் சேதமடைந்து கடிகாரம் செயலிழந்து காணப்படுகின்றது.

இதுதொடர்பாகமாநகரசபை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டுகேட்டபோது,யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான குறித்த மணிக் கூட்டுக்கோபுரத்தில்தனியார் நிறுவனம் ஒன்றே கடிகாரத்தைப் பொருத்தித் தந்தது. அந்தக்கடிகாரம்இடிமின்னல் தாக்கம் காரணமாக முற்றாகச் சேதமடைந்துள்ளது. எனவே குறித்த நிறுவ னத்துக்கு இது தொடர்பில்தகவல் வழங்கியுள்ளோம். அவர்கள் விரைவில் திருத்தித் தருவதாக க் கூறியுள்ளனர் – என்றனர். (8)

விளம்பி வருஷ வீரமாகாளியின் சிறப்பம்சம்



பதினாறு செல்வமும் தா!
பத்தினித் தமிழ் தெய்வமே!

சீர் பொங்கு வண்ணையில் சேர் வீர மாகாளி தெய்வமாய் உற்றதேவி
சிற்சபை நடமிடும் சிவனாரின் இடப்பாதி சேர் உமை தாயும் நீயே
நீர் தங்கு நிலைதந்து நிறை ஊரும் புகழ் தந்து நிர்மலையான தாயே
நித்தலும் நாம் தொழ காங்காளி மாதங்கி பைரவி சிவையும் நீயே
தார்பொங்கு தக்கனை தடி வீரபத்திர தனி வீரகாளி நீதான்
தங்கு முக்கண்ணியும் சாமுண்டி, சங்கரி, சண்டிகை சூலி ஆனாய்
பார் பொங்க உன் அருள்மேல் தொங்க நாம் கூடி பத்திமை செய்து நின்றோம்
பதினாறு செல்வமும் நிறைவாக தந்து கார் பத்தினித்தமிழ் தெய்வமே!

ஆக்கம்: கலாபூஷணம் குடாநீரூரான்

[இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை
வண்ணை வீரமாகாளியம்பாளின் 7 ஆம் திருவிழா.]
அன்னதானம் இடம்பெறும்.

## ஹெரோயினுடன் சிப்பாய் கைது

திருகோணமலை,ஜீன்10

இராணுவச் சிப்பாய் ஒருவர் ஹெரோயினுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பகுதியில் கடமையாற்றி வரும் இராணுவ சிப்பாய் ஒருவரே, கைது செய்யப்பட்டதாக திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

படை முகாமுக்குள் கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய் ஹெரோயின் வைத்திருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து சந்தேகநபரைப் பொலிஸார் சோதனையிட்டனர்.

சந்தேகநபரிடமிருந்து 40 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ந.ரி2)

உங்கள் திருமண தேடலை இலகுவாக்க
அருந்ததி யின்
வரன் தேடுவோம் வாருங்கள்
16th June 10.00am - 3.00pm
செல்வ மஹால்
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (பூநாறி மரம்)
ஆயிரக் கணக்கான உள் நாட்டு,வெளி நாட்டு,
அரச தனியார் தொழில் புரியும் மணமக்களில் இருந்து
உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்
ஜோதிடர்களின் சேவை
பேச்சரங்கம்
www.arunthathee.com
Arunthathee (PVT) ltd
077 716 4524
20,K.K.S Road Kokuvil,Jaffna.
021 492 7527
5B 1/1 Moor Road,Colombo 06
011 406 3282

SINGER FINANCE இடமிருந்து
மோட்டார் சைக்கிள் லீசிங் உடன்
பெறுமதிமிக்க சிங்கர் மின்விசிறி ஒன்று
அல்லது தலைக்கவசங்கள் இரண்டு




உசேந்தன் 077 4 357 919
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

# மக்கள் சலிக்குமளவுக்கு நாம் செயற்படமாட்டோம்

## காணாமற்போனோர் அலுவலக தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஜீன்10

காணாமல் ஆக்கப்பட்டோரின் விவரங்கள் எம்மிடம் உள்ளன. மீண்டும்விவரங்களை சேகரிப்பது காணாமல்ஆக்கப்பட்டோரின்உறவுகளை சலிப்படைய செய்யும். அதனால் நாம் தற்போது தகவல் சேகரிப்பில் ஈடுபடவில்லை. மக்கள் அதிருப்தியடையும் வகையில்செயற்படமாட்டோம். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின்தலைவர்சாலியபீரிஸ் தெரிவித்தார்.

காணாமல்ஆக்கப்பட்டோர் அலுவலகம் தற்போது மக்களைச்சந்தித்துகாணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பில்விளக்கம்அளித்தல்மற்றும்மக்களின்கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்ஆகியசெயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. இவ்விடயம் தொடர்பில் குறிப்பிடுகையிலேயேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

முன்னர் நிறுவப்பட்டிருந்த ஆணைக்குழுக்கள் மற்றும் அரசதலைவரின் கீழான செயற்றிட்டங்கள் மூலமாகப் பெறப்பட்ட காணாமல்ஆக்கப்பட்டோர் தொடர்பானதகவல்கள்எம்மிடம் உள்ளன. எனவே மீண்டும் காணாமல் ஆக்கப்பட்டோரின் விவரங்களைத்தருமாறுஅவர்களது உறவினர்களிடம் கோருவது அவர்களைச் சலிப்படையச்செய்யும். அவர்கள் கவலையடையவும் நேரிடும். ஆகையால் நாம் இப்போது தகவல் சேகரிப்பில் ஈடுபடவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோரின் தகவல்களை இதற்கு முன்னர்எங்கும்பதிவுசெய்யாதவர்களுக்குஎதிர்வரும் சில மாதங்களில் விவரங்களை வழங்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். மக்களின்நம்பிக்கையைப் பொய்யாக்கும் வகையில் நாம்ஒருபோதும்செயற்படமாட்டோம். இது ஒரு சுயாதீன ஆணைக்குழு. எனவே எமது அலுவலகத்தின்நடவடிக்கைகளைஒரு முறைமையின்அடிப்படையிலேயே முன்னெடுக்க வேண்டும். அனைவரும் அதனைப்புரிந்துகொண்டு செயற்படுவது அவசியம் - என்றார்.

காணாமல்ஆக்கப்பட்டோர் அலுவலகம்இதுவரைமன்னார், மாத்தறை மற்றும் முல்லைத்தீவுஆகியபிரதேசங்களில் மக்களுடனான சந்திப்பைமேற்கொண்டுள்ளது. எதிர்வரும் 13 ஆம் திகதிபுதன்கிழமைதிருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் மக்களுடனான அடுத்த சந்திப்பை காணாமல்ஆக்கப்பட்டோர் அலுவலகம் மேற்கொள்ளவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (4)




# தேசிய அறநெறி விழா

யாழ்ப்பாணம், ஜீன்10

தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு தேசிய அறநெறி விழா நேற்று நடைபெற்றது.

நல்லூர்சிறிதுர்க்காதேவிமணிபண்டபத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் நா.வேதநாயகன், சின்மியாமிசன் சிதாகாசானந்தாசுவாமி, பிரதேசசெயலாளர்கள், அரச உயரதிகாரிகள் போன்றோர் கலந்து கொண்டனர்.

ஆறுமுகநாவலர்பயிற்சிநிலையத்தால்நடத்தப்பட்ட இந்தச்சமய அறநெறிக் கல்வி ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அரச தலைவரின் சிந்தனையின் கீழ் அறநெறிஆசிரியர்களின்அறநெறிஆனந்தம் திட்டத்தின்கீழ்பட்டயகற்கைகள்(டிப்ளோமா) ஆரம்ப நிகழ்வும் நடைபெற்றது. (ந-113)

# சாலையில்வழிமறித்துத்தாக்குதல் தென்மராட்சிபகுதியில்மூவர்காயம்

தென்மராட்சி, ஜீன்10

தென்மராட்சிப் பிரதேசத்தில் சாலைகளில் செல்வோரைவழிமறித்துதாக்குதல்நடத்தும் சம்பவங்கள் அண்மைக் காலமாக இடம் பெற்றுவருகின்றன.

நேற்று முன்தினம் மூவரும் நேற்றைய தினம் மாணவன் ஒருவரும் தாக்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்

20 வயதுடைய குறித்த இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மீசாலை வடக்கு வேம்பிராய் சாலையில் நேற்றுமுன்தினம் இரவு, 7.00 மணியளவில், முச்சக்கரவண்டியொன்றை நிறுத்துமாறு கைகாட்டிய கும்பல் அதன் சாரதியை மோசமாகத் தாக்கியது.

இரவு 9.00 மணியளவில், மிருசுவில் வடக்கு மன்னன்குறிச்சிப் பகுதியிலிருந்து சிட்டிவேரம் அம்பாள் ஆலயத் திருவிழா பார்க்க வந்தவர்களை வழிமறித்த கும்பல் இரும்புக்கம்பிமற்றும்கொட்டன்களால்தாக்கியது.

இரவு 10.00 மணிக்கு சாவகச்சேரிப் பகுதியில் சாலையில் நடந்து சென்ற இளைஞரை வழிமறித்த கும்பல் மோசமாகத் தாக்கி விட்டுத் தப்பியோடியது.

காயமடைந்த மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில்சேர்க்கப்பட்டு, சாவகச்சேரியில் தாக்கப்பட்டவர் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளைநேற்றுக்காலைமீசாலையில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு வந்த பரந்தனைச்சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவன்பேருந்திலிருந்துஇறங்கிநடந்துசென்ற வேளையில் பின்தொடர்ந்து சென்ற சிலர் மோசமாகத் தாக்கி விட்டுத் தப்பியோடினர். காயமடைந்தமாணவன் சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனவும். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாகபிரதேசத்தின்பலஇடங்களில் ஆலயங்களில் திருவிழாக்களுக்குச் செல்வோர் மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துவருவதுகுறித்துபொதுமக்களிடையே அச்சம்காணப்படுகிறதுஎனவும்தெரிவிக்கப்பட்டது. (ந,ரி2,9)

# முல்லைத்தீவில் 5 ஆயிரம்படையினரின் விவரங்கள்தொலைவு

முல்லைத்தீவு, ஜீன்10

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ளவர்களில் 5 ஆயிரம் படையினரின் விவரங்கள் அடங்கிய ஆவணம் கடந்த வியாழக்கிழமை தவறியுள்ளதாகப்படைத்தரப்பினர்கூறுகின்றனர். வாகனத்தில் செல்லும் போது முல்லைத்தீவு நெடுங்கேணி வீதிக்கு இடைப்பட்ட பகுதியில் குறித்த ஆவணங்கள் தவறியுள்ளன என்றும் அதில்படையினர்தொடர்பானவிவரங்கள்மற்றும் ஆவணங்கள் அடங்கிய கோப்புகள் அடங்குகின்றனஎன்றும்படையினர் தெரிவித்துள்ளனர். (4,ரி3)

# விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜீன்.10

சாலை விபத்துக்களில் சிக்கி காயமடைந்த இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம்முதன்மைச் சாலையில் இடம் பெற்ற சாலை விபத்தில் துணுக்காயைச் சேர்ந்த ஒருவர்காயமடைந்தார். நேற்றுக் காலை சாவகச்சேரி வடக்குப் பகுதி சந்தியொன்றில் சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில், 76 வயதுடைய முதியவர் ஒருவர்காயமடைந்தார். காயமடைந்தஇருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனத் தெரிவிக்கப்பட்டது. (ந,ரி2,9)

# வர்த்தகர்களுக்கு ரூ. 35 ஆயிரம் தண்டம்

ஊர்காவற்றுறைப்பிரதேசத்தில் தண்ணீர்ப் போத்தல்கள் உட்பட காலாவதியான உணவுப்பொருள்களைவிற்பனைக்கு வைத்திருந்த 5 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிவான் ரூபா 35 ஆயிரம் தண்டம் விதித்துள்ளார்.

தேசிய உணவு வாரத்தை முன்னிட்டுஊர்காவற்றுறைப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர்.ஜெகதாசன் ஊர்காவற்றுறை, தம்பாட்டி, நாரந்தனை, புளியங்கூடல் ஆகிய இடங்களிலுள்ள நான்கு வர்த்தக நிலையங்களையும் பிரபல அரிசிமா உற்பத்தி நிறுவனத்தைச் சேர்ந்த நடமாடும் விற்பனை வாகனத்தையும் சோதனைக்கு உட்படுத்திய போது தண்ணீர்ப் போத்தல்கள் உட்படக் காலாவதியான தூய்மையற்ற, பழுதடைந்த பொருள்கள், விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமைகண்டறியப்பட்டன. இதையடுத்து, இவற்றைக் கைப்பற்றி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஒப்படைத்தசுகாதாரப்பரிசோதகர் இவர்களுக்கு எதிராக கடந்த மாதம் 2 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வர்த்தகர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டமையைத் தொடர்ந்து நீதிவான் மூன்று வர்த்தகர்களுக்கும் ரூபா 5ஆயிரம் வீதம் 15ஆயிரம் ரூபாவும், இரு வர்த்தகர்களுக்கு10ஆயிரம் ரூபா வீதம் 20ஆயிரமும்தண்டம்விதித்துள்ளதாகதெரிவிக்கப்பட்டது. (115)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜீன் 10

பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உட்பட உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் 06 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

சேவையின் அவசியம் கருதி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பணிப்புரைப்படி பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

கண்டி பிரிவில் பணியாற்றிய பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. கீர்த்திரத்ன மாத்தளை பொலிஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

கம்பளை பிரிவில் பணியாற்றிய உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.ஜீ.என். ஜயசிங்க களுத்துறைப் பிரிவுக்கும், களுத்துறை பிரிவில் பணியாற்றிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் யூ.பீ. பலிஹவடன கம்பளைப் பிரிவுக்கும் மாற்றப்பட்டனர்.

உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எம்.டீ.டீ. சேனநாயக்க மாத்தறை பிரிவில் இருந்து இரத்தினபுரி பிரிவுக்கும், உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.டி. சந்திரபால அம்பாறையிலிருந்துகந்தளாய்பிரிவுக்கும் மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

அநுராதபுரம் பிரிவில் பணியாற்றிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் விஜித் டி அல்விஸ் கண்டி பொலிஸ்பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதாகபொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது. (ந,ரி2)

# கடும் காற்றால் மரங்கள் அழிவு

தென்மராட்சி, ஜீன்10

தென்மராட்சியில்நேற்றுவீசிய கடும் காற்றால் பயன்தரு மரங்கள் பல முறிந்துள்ளன. அதனால் பல தடவைகள் மின்சாரம் தடைப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வாழை, பப்பாசிபோன்றபயன்தரு மரங்கள் அழிவடைந்தன என்றும், சிறு குடியிருப்புக்கள் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டபோதும், இடர்முகாமைத்துவப் பிரிவுக்கு எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடும் காற்றால் பாடசாலை மற்றும் சாலையோரங்களில் வைக்கப்பட்டிருந்த விளம்பரத் தட்டிகளில் பொருத்தப்பட்டிருந்ததுணிகளும்தகரங்களும் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)



வடமராட்சி வத்திராயனில் நேற்று பனை மரம் முறிந்து மின்கம்பிக்கு மேல் வீழ்ந்தது. தெய்வாதீனமாக உயிர்ச்சேதங்கள் இல்லை. யாழ். குடாநாட்டில் காலநிலை மாற்றத்தால் கடும் காற்று வீசுகின்றது.

ஆங்காங்கே பனை மரங்கள் மற்றும் வளர்ந்த மரங்களின் கிளைகள் முறிந்து வீழ்கின்றன. பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ந)

# பிரதேச சபை உறுப்பினர் நேற்று இறந்தார்

யாழ்ப்பாணம், ஜீன்10

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் உறுப்பினராகவுள்ள இராசா குமாரசாமி சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சபையில் 2011 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியிருந்தார்.

60 வயதுடைய அவர் இந்திய இராணுவத்தின் காலத்தில் கைது செய்யப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் சிறைவாசம் அனுபவித்திருந்தவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,05)

## ஈழத்...

சென்னைதியாகராஜர்அரங்கத்தில்சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி து.அரிபரந்தாமன்தலைமையில்இதுஆரம்பமானது. சிறப்புவிருந்தினர்களாகம.தி.மு.கபொதுச்செயலாளர் வைகோ, விடுதலைச்சிறுத்தைகள் கட்சிதலைவர்தொல்திருமாவளவன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த சட்டத்தரணி கே.சுகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கு மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட இணைப்பாளர் கி.தேவராசா, முல்லைத்தீவுகேப்பாபிலவுபோராட்டக்குழுவைச் சேர்ந்தசி.சந்திரலீலா ஆகியோர்தமிழர்தாயகப்பகுதிகளில்தற்போதுஉள்ளநிலைகுறித்து மாநாட்டில் உரையாற்றினர்.

மூவாயிரத்துக்கும்மேற்பட்டவழக்குரைஞர்கள்அதில்கலந்துகொண்டனர். தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் அதில் கலந்துரையாடப்பட்டது. இறுதியில் பாசறைப்பாணர்தேனிசைசெல்லப்பா அவர்களின்தமிழிசைஇசைஅரங்கமும்இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (4,ரி3)

## 15-40 கிலோமீற்றர்...

வரையான வேகத்தில் தற்போது காற்று வீசுகிறது. இவ்வாறு யாழ்ப்பாணம் திருநெல்வேலியி லுள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். முன்னர்மணித்தியாலத்துக்குசுமார்10கிலோமீற்றர் வரையான வேகத்திலேயே காற்று வீசும். தற்போதுசிலநாள்களாகஇதன்வேகம் அதிகரித்துள்ளது. கடற்பரப்பில் தற்போது மணித்தியாலத்துக்கு 50 -60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசுகிறது. கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இந்தவிடயத்தில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தில்லைநாயகி கனகரெத்தினம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாயகி கனகரெத்தினம் நேற்று (09.06.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற மருதப்பு கனகரெத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - ஐயாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மருதப்பு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் நந்தினி, கமலதாசன் (பிரதேச வைத்தியசாலை, அளவெட்டி), கோவர்த்தனன் (கொழும்பு), கோமேதகன் (கண்ணா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரன் (மகா வித்தியாலயம், நயினாதீவு), சுமித்திரா (சமுர்த்தி அலுவலகம், புங்குடுதீவு), விஜிதா, வித்தியா (சமுர்த்தி அலுவலகம், புங்குடுதீவு) ஆகியோரின் மாமியும் லாவண்யா, சரன்யா, குணாளன், கவுதமன், மகிஷா, நிக்ஷிகா, கம்ஷாயினி, திபிக்சன், ரிஷானுகா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம், நாகம்மா, பார்வதி மற்றும் தெய்வானைப்பிள்ளை, பரராஜசிங்கம் கனகமணி, முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கனகம்மா, நாகம்மா மற்றும் கற்பகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு மதியம் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**4ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 160 6717**

(CS 17372/15017)



### இராசா குமாரசுவாமி

*(பிரதேச சபை உறுப்பினர் - வலிகாமம் தெற்கு, சுன்னாகம்.*
*சுன்னாகம் சுவர்ணா பேக்கரி உரிமையாளர்)*

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா குமாரசுவாமி நேற்று (09.06.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெயராணியின் பாசமிகு கணவரும் மயூரன் (தொழிற்பயிற்சி மையம் காரைநகர்), குகப்பிரியா (யாழ். பல்கலைக்கழகம்), அபர்ணா (உடுவில் மகளிர் கல்லூரி), வைஷ்ணவி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 16079/15/18)

ASSEMBLIES OF GOD

## ஜெபம் - தேசத்திற்கு

## நாட்டின் சுபீட்சத்திற்கான உபவாச மன்றாட்டு ஜெபம்

**இடம் - அசெம்பிளி ஒப் கோட்**
**14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.**
**காலம் - 12.06.2018 செவ்வாய்க்கிழமை**
**நேரம் - காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

**யாவரையும் அன்பாய் ஊக்கமாய் ஜெபிக்க அழைக்கின்றோம்.**

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி என் முகத்தை தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்திற்கு சேமத்தைக் கொடுப்பேன்!

II நாளாகமம் 7 : 14

**ஜெப இணைப்பாளர், போதகர் சாம் இராஜசூரியர்,**
**மேலதிக விவரங்களுக்கு - 076 639 7748, 077 503 3200**

## மரண அறிவித்தல்

### ஆழ்வாப்பிள்ளை சிவலிங்கம்

*(உரிமையாளர் - லா பான்சி)*



வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சென் அன்ரனிஸ் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை சிவலிங்கம் நேற்று (09.06.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை அழகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பூமணி, இராசலிங்கம், தவமணி, செல்வரட்ணம் மற்றும் செல்வவிநாயகம் (உரிமையாளர், ஈஸ்வரி நகை மாடம், பிரதான வீதி, பருத்தித்துறை), பாலச்சந்திரன் (உரிமையாளர்- வாணி நகைமாடம், பிரதான வீதி, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார் (உரிமையாளர் - நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்), சுரேஸ்குமார்(Chief MLT யாழ் போதனா வைத்தியசாலை), சுகந்தி(சிரேஷ்ட விரிவுரையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், தெகிவளை, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பவானி (ஆசிரியர் - யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), ராஜினி (ஆசிரியர் - யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரி), சுபாகரன் (Senior Quantity Surveyor/Alucare Pvt Ltd, Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரண்யா (மாணவி - கொ/கொழும்பு சைவமங்கையர் வித்தியாலயம்), அனுஷிகா (மாணவி - யா/வேம்படி மகளிர் கல்லூரி), அக்ஷிகா (மாணவி - யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ஆருக்சியா (மாணவி - யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"தில்லை வாசம்"**
**சென் அன்ரனிஸ் வீதி, மானிப்பாய்.**
**(யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)**


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**குமார் 077 747 5166/ சுரேஸ் 071 817 5807/ சுகந்தி 071 856 9962**

(CS 17363) (14,17)

## வைகாசிப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜீன்10
உடுவில் பதியுறை பெரிய தம்பிரான் கோயில் வருடாந்த வைகாசிப் பொங்கல்நிகழ்வுஇன்று காலை 6 மணியளவில் சாடி மனையிலிருந்து எடுத்து வரப்பட்டுவளந்துபானை வைத்தலுடன் பூசைகள் ஆரம்பமாகவுள்ளன.
காலை 10 மணிக்கு சுபிசேகஆராதனைகள்இடம் பெற்றுமாடபண்டம்எடுத்தலுடன் நண்பகல் 12 மணியளவில் சிறப்புப் பூசைகள் இடம்பெறும் என ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (131)




நல்லூர் கந்தசுவாமி கோவில் சகஷ்ர அபிசேகம் நேற்றுமாலை இடம்பெற்றது. முருகன் திருக்கல்யாணம் இடம்பெற்று முருகன் வள்ளி தெவ்வானை சகிதம் வீதியுலாவந்தபோது அடியவர்கள்வழிபாட்டில்ஈடுபடுவதைக்காணலாம். (127)

*பரபரப்பு நீடிக்கிறது*

# இரண்டரை வயதுடைய பாலகி இறந்துவிட்டாளா இல்லையா?

## 2 நாள்களாக மலசலம் வெளியேறுவதாக உறவினர் தெரிவிக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜீன்10
குழந்தைஇறந்துவிட்டதுஎன்றுகூறி சடலத்தைத் தந்த பின்னரும் குழந்தையில் துடிப்பு இருக்கிறது, மலம் சலம் வெளியேறுகிறது என்று கூறியுள்ள பெற்றோர், உறவுகள் குழந்தையை அடக்கம் செய்யாது 4 நாள்களாககிறிஸ்தவ ஆலயத்தில்வைத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. குழந்தை உயிருடன்தான் உள்ளதுஎன்றுஅவர்கள்கூறுகின்றனர்.
இந்தவிடயம்பெரும்பரபரப்பைஏற்படுத்தியுள்ளது. சம்பவம் மானிப்பாய் ஆலடியில் இடம்பெற்றது.
குழந்தைக்கு தலையில் கிருமித்தொற்று என்றுகூறி தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்த்து பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். நோய்ஏற்பட்டுசுமார்20நாள்களின் பின்னர் குழந்தை போதனா மருத்துவமனையில் இறந்துவிட்டது என்றுஅவரதுபேர்த்தியார்தெரிவித்தார். மருத்துவமனையில் விசாரணைகள், பரிசோதனைகளின் பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் கடந்த புதன்கிழமை இரவு10மணியளவில்கையளிக்கப்பட்டது. "மதியம் குழந்தையின் சடலத்தை அடக்கம் செய்ய முற்பட்ட போது குழந்தைக்கு மலம், சலம் வெளியேறியிருந்தமையை அங்கிருந்த பலரும்கண்டுகொண்டோம். அதனால் குழந்தையை அடக்கம் செய்யாது சேர்ச்சுக்குக் (தேவாலயம்) கொண்டு சென்று வைத்திருக்கிறோம். இன்று (நேற்று) நிலமையை அவதானித்து அடக்கம் செய்யவுள்ளோம்"என்றுகுழந்தையின் பேர்த்தியார் கடந்த வியாழக்கிழமை இர்வு தெரிவித்திருந்தார்.
"இன்று (நேற்றுமுன்தினம்)மதியம் அடக்கம் செய்யத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் இன்றும் (நேற்றுமுன்தினம்)மலம்,சலம்வெளியேறியிருந்தன. கையில் அசைவு காணப்பட்டது. உடல்விறைப்படையவில்லை. துர்நாற்றம் வீசவில்லை. குழந்தையினுடைய உடலின் ஒரு பகுதியில் சூடு இருப்பதை உணர்ந்தோம். அதனால் குழந்தை இறக்கவில்லை. கோமா நிலையில் உள்ளார் என்றே நாம் நம்புகிறோம். அதனால்தற்போதும் குழந்தையைதேவாலயத்தில்தான் வைத்திருக்கிறோம்" என்ற குழந்தையின் பேர்த்தியார், இன்று அடக்கம் செய்யவுள்ளோம் என்று நேற்றுத் தெரிவித்தார்.
"குழந்தை இறந்தாலும் வயிறு உட்பட உடலின் வயிற்றுப் பகுதி நசிபட்டால், அமத்துப்பட்டாலும் உடலிலிருந்து மலம், சலம் வெளியேற வாய்ப்புள்ளது. பொதுவாக மருத்துவமனையில்யாராவது இறந்தால்2 மணித்தியாலங்களின் பின்னர் தான் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைப்போம்" என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைச் சட்டமருத்துவநிபுணர்உ.மயூரதன் தெரிவித்தார். (4)



ஊர்காவற்றுறைமற்றும்வேலணைபகுதிகளில்நேற்றுப் பலத்த காற்று வீசியதால் பனை மற்றும் தென்னை மரங்கள் முறிந்து வீழ்ந்தன. வங்களாவடியிலுள்ள வெதுப்பகம் மீது பனை மரம் வீழ்ந்ததால் வெதுப்பக போறணை முற்றாகச் சேதமடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## கலாசாரப் பேரணி

யாழ்ப்பாணம், ஜீன்10
கலாசார ஊர்திப்பேரணி ஒன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் முற்பாக ஆரம்பித்து கே.கே.எஸ் வீதி, மருத்துவமனை வீதிகள் ஊடாக திருமறைக் கலாமன்றத்தைச் சென்றடைந்தது.
நேற்று மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரே, யாழ்ப்பாண மாகர சபை முதல்வர் இ.ஆர்னோல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இதில் பல பிரதேசங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் கலந்து கொண்டனர். "உரிமைகளை மதிப்போம், கலையால் பயன்பெறுவோம், கல்வியால் வேற்றுமை களைவோம், வேற்றுமையில் ஒற்றுமைகாண்போம், உரிமைகளைமதிப்போம், மனிதத்தை நேசிப்போம்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலம் இடம்பெற்றது. பின்னர் அரங்கிலும் நிகழ்வுகள் இடம்பெற்றன. (4,113)



சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3041 திகதி: 2018.06.09 சனிக்கிழமை
பச்சை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
15 31 50 74 E | 56 | 45,862,450/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 150
சீட்டிழுப்பு திகதி 09.06.2018 இளஞ்சிவப்பு
Development Fortune
வெற்றி இலக்கங்கள் 26 29 36 63
சுப்பர் இலக்கம் 03
அதிர்ஷ்ட மாதம் நவம்பர்
அடுத்த சூப்பர் ஜக்பொட் ரூ. 19,590,480/=
2018.06.14 ஆம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

அரிய வாய்ப்பு
நீர் கொழும்பு, கொச்சிக்கடை மற்றும் தங்கொட்டுவையிலிருந்து முதல் தரமான (1 ஆம் இலக்க) ஓடுகள் மற்றும் செங்கற்கள் விற்பனைக்கு உண்டு.
வீடுகளிற்கே விநியோகிக்கப்படும்.
தொடர்புகளுக்கு - யாழ் முகவர் - 077 202 8564
நீர் கொழும்பு முகவர் - 076 107 2826

### கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினராகிய **சிவலிங்கம் சுரேஸ்குமார்** அவர்களின் அன்புத்தந்தையார் **ஆழ்வாப்பிள்ளை சிவலிங்கம்** இன்று நேற்று (09.06.2018) காலமாகிவிட்டார்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நிறைவுகாண் தொழில் வல்லுனர்களின் ஒன்றியம் யாழ்ப்பாணம்.**

### மரண அறிவித்தல்

## பொன்னையா சிற்றம்பலம்



மலர்வு 17.12.1939 உதிர்வு 08.06.2018

குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிற்றம்பலம் கடந்த (08.06.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும் சரோஜினி தேவியின் பாசமிகு கணவரும் தங்கமணி (கனடா), தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சீனிவாசகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாதேவி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (லண்டன்), திருமதி சிவகரன் (ஆசிரியை யா/கொடிகாமம் அரசினர் வித்.), அம்பிகாதேவி (சுவிஸ்), பவானிதேவி (லண்டன்), பவதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), சிவதர்சினி (லண்டன்), ஞானகுருபரன் (லண்டன்), சிவகரன் (கமநல சேவைகள் நிலையம் சாவகச்சேரி), ரவிராஜ் (சுவிஸ்), சந்திரகுமார் (லண்டன்), வதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் வபிரன், லகிஷ் (ஜேர்மனி), அஜன், ஆரணி, அக்சியா (லண்டன்), அகானா, அபிலாஸ் (லண்டன்), மிதுஷன், டிஷானி (யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அபிஷா, றஜீன் (சுவிஸ்), கபிஷ்னா, அபிநாத் (லண்டன்), அஷ்வின், ஆறிஜன், ஆகாஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2018) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குடமியன், வரணி**
**077 923 1738**

**தகவல்: குடும்பத்தினர்.**

## “ தங்கத் தாரகை ” நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் , ஜுன் 10
யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரியின் வரலாற்றை உள்ளடக்கிய கொண்ட "தங்கத்தாரகை"என்ற நூல்வெளியீட்டு நிகழ்வு கல்லூரியின் சாண்டேஸ் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு காலை 9 நடைபெறவுள்ளது.
அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வு நிலைமேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் பழைய மாணவியுமான பிறேமவதி செல்வின் சிறப்பு விருந்தினராக மடு பிரதேச செயலர் பா.ஜெயகரன் அகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (113)

# குழந்தை கடத்தல் விவகாரம்: மேலும் 8 பேர் கைது

வவுனியா, ஜுன் 10
வவுனியா குழந்தை கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மட்டக்களப்பில் வைத்து மேலும் 8 பேர் வவுனியா சிறப்பு குற்றத்தடுப்பு பொலிசாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். கயஸ்ரக வாகனம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 31ஆம் திகதி வவுனியா குட்செட் வீதியில் உள்ள வீடொன்றில் தாயுடன் உறங்கி கொண்டிருந்த 8 மாத ஆண்குழந்தையை 6 பேர் கொண்ட இனந்தெரியாத நபர்கள் கடத்திச்சென்றனர். குறித்த வழக்கு வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரால் விசாரணை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடத்தப்பட்டு இரண்டு நாள்களின் பின்னர் கடந்த 2ஆம் திகதி குறித்த குழந்தை புதுக்குடியிருப்பு பொலிசாரால் மீட்கப்பட்டதுடன் குழந்தையை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு பெண்களும் கைது செய்யப்பட்டனர். அதன் பின் இன்னுமொருவர் கைது செய்ய பட்டார்.
அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியலாயத்தின் சிறப்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி கோரள கெதர தலைமையிலான 12 பேர் அடங்கிய பொலிஸ் குழவினர் விசேட விசாரணைகளை மேற்கொண்டு வந்ததுடன் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு வாழைச்சேனையில் வைத்து 8 பேரை கைது செய்துள்ளனர். அவர்களில் இருவர் வவுனியா, மற்றும் முல்லைத்தீவை சேர்ந்தவர்கள் எனவும் ஏனையவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிசார் தெரிவித்தனர்
கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் பிரகாரம், குழந்தையை கடத்துவதற்காக குழந்தையின் தந்தையார் வவுனியாவை சேர்ந்த ஒருவருடாக பணம் பேரம் பேசியதாகவும் குழந்தையை கடத்தி வைத்திருந்த இரு பெண்களுக்கும் தொண்ணூறாயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனையோருக்கு தலா ஐயாயிரம் ரூபாபணமும் வழங்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது. மீதி பணம் பின்னர் தருவதாக கூறப்பட்டதாக கைது செய்யப்பட்டவர்கள் தெரிவித்தனர்.
குழந்தையை இந்தியாவுக்கு கடத்த இருந்ததாகவும் விசாரணைகளில் இருந்து மேலும் தெரியவந்துள்ளது.
கைது செய்யப்பட்டவர்களை நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்துவதற்கு வவுனியா பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்கள் 20 தொடக்கம் 25 வயதுக்குட்பட்டவர்கள், அவர்களில் ஒருவர் கண்பார்வையற்றவர் எனத் தெரிவிக்கப்பட்டது. அலைபேசி உரையாடல்கள் மூலமே இவர்கள் கைது செய்யபட்டதாக பொலிசார் தெரிவித்தனர். (எ-110)

### தவிசாளர்களுடன் கலந்துரையாடல்

வடக்குமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களுடனான முக்கிய கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நாளை திங்கள் கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது.
உள்ளூராட்சி தொடர்பான முக்கிய 10 தலைப்புக்களின் கீழ் தவிசாளர்களுடன் ஆராயப்படவுள்ளது. அன்றைய தினம் தவிசாளர்களுடன் செயலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஆணையாளர் கோரிக்கைவிடுத்துள்ளார். (21,50)

## யாழில் போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டில் 4 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 10
யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவித்த குற்றச்சாட்டில் 18 வயதைச் சேர்ந்த 4 இளைஞர்கள் குருநகர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலையொன்றுக்கு அருகில் உள்ள மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இளைஞர்கள் போதைப் பொருள் பாவிப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர். இதன்போது நான்கு இளைஞர்கள் கஞ்சா மற்றும் போதைப்பொருள்களோடு கைது செய்யப்பட்டனர் எனவும் ஏனையோர் தப்பியோடி விட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
கைது செய்யப்பட்டவர்கள் குருநகர் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்னனர். குருநகர் பகுதியில் அண்மைக் காலமாக சிறுவர்கள் போதைப் பாவனையில் சீரழிந்து வருவது அதிகரித்து வருகின்ற நிலையில் மேற்படி பொலிசாரின் அதிரடி நடவடிக்கையை பாடசாலை சமூகம் உட்பட பல பொது அமைப்புக்கள் வரவேற்கின்றன. (எ-121)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,யூன் 10
யாழ்ப்பாணம், இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மாட்டு வண்டி சவாரிப் போட்டி வட்டுக்கோட்டை கொத்துத் துறை சவாரித் திடலில் இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# அரசியல் தலைவர்களுக்கு பாடம் கற்பித்த மாணவன்

*வாக்குறுதியை நிறைவேற்றி பாராட்டுகளைப் பெற்றான்*



மாங்குளம், ஜீன் 10
வவுனியா கனகராஜன் குளம் மகாவித்தியாலயமாணவர்நாடாளுமன்றத்தில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட மாணவன் ஒருவர் தான்வழங்கியவாக்குறுதியை உடனடியாகவே நிறைவேற்றிமுன்மாதியாகச்செயற்பட்டுள்ளான். அவரது இந்தச் செயற்பாட்டை பாடசாலைச் சமூகம் மட்டுமன்றி சமூக வலைத்தளங்களிலும் பலர் பாராட்டியுள்ளனர்.
வவுனியாகனகராஜன்குளம்மகாவித்தியாலயத்தின்மாணவர்நாடாளுமன்றத் தேர்தல் அண்மையில் இடம்பெற்றது. அதில்குறித்தபாடசாலையில்தரம் 6இல் கல்வி கற்கும் மாதுளன் என்ற மாணவன்போட்டியிட்டான்போட்டின் போதுமாணவர்நாடாளுமன்றஉறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் வகுப்றையைச்சுத்தம்செய்யும்கருவிளைத் தருகிறேன் என்று அவர் சக மாணவர்களுக்குவாக்குறுதிவழங்கினான். தேர்தலில் வெற்றி பெற்றார். சில நாள்களிலேயே அந்த வாக்குறுதிகளைமாதுளன்நிறைவேற்றியுள்ளார். தரம் 6இன் மூன்று பிரிவுகளுக்கும் தும்புத்தடி மற்றும் குப்பைக் கூடைகளை வழங்கியதன் மூலம் அனைவரது கவனத்தையும், பாராட்டுக்களையும் மாதுளன் பெற்றுள்ளார்.
தாம் வழங்கும் வாக்குறுதிளை நிறைவேற்றத் தவறும் அரசியல் தலைவர்கள்மத்தியிலேமாணவர்நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று வாக்குறியை நிறைவேற்றிய மாணவனின் செயற்பாடுகளைப்பலரும்மெச்சினர். (21)

## மும்மொழி தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,யுன்10
யாழ்ப்பாணம் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் மும்மொழித் தின நிகழ்வுபாசாலையின் பொன்னுத்துரை கலை அரங்கில் நாளை திங்கட்கிழமை மதியம் 2 மணிக்கு இடம்பெறும்.
அதிபர்சு.திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜிநோல்ட் குரே, சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்சி.மாணிக்கராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சி, ஜுன் 10
யாழ்ப்பாணம் , கொடிகாமப் பிரதேச முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு நிகழ்வு கொடிகாமம் அரசினர் வித்தியாலய மைதானத்தில் நாளை திங்கட்கிழமை மதியம் 2.30 மணிக்கு தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.அரியநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவனும் சிறப்பு விருந்தினராக கொடிகாமம் அரசினர் வித்தியாலய அதிபர் ப.தர்மபூபதியும், மதிப்புறு விருந்தினராக லயன்ஸ் கழகத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய லயன் ஜெயசங்கரும் கலந்து கொள்வர் எனத்தெரிவிக்கப்பட்டது. (9)

** ** ** **

தென்மராட்சி ஜுன் 10
யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு நிகழ்வு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மதியம் 2.30 மணிக்கு தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணயிப்பாளர் ச.அரியநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் "இ. சிவமங்கை, சிறப்புவிருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய கணிதமூல வள நிலைய முகாமையாளர் சி.பத்மநாதன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பிரதி அதிபர் சு.தேவரதி ஆகியோர் கலந்து கொள்வர் எனத்தெரிவிக்கப்பட்டது. (9)

## நிர்வாகத் தெரிவுக் கூட்டம்

யாழ்ப்பாணம் கைதடி வணிகர் மன்றம் மற்றும் கைதடி முச்சக்கரவண்டிகள் சங்கம் ஆகியவற்றின் செயற்பாட்டை மேம்படுத்தும் பொருட்டு இரு சங்கங்களுக்கும் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு நடைபெறவுள்ளது.சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்துகொள்வார் என தெரிவிக்கப்பட்டது. (9)

# புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வளாகத்தில் நாளை மூன்று விழாக்களின் கோலாகலம்

வவுனியா, ஜீன் 20
புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின், ஆலய வளாகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் ஆலய அலங்காரநுழைவாயில் திறப்புவிழா, ஆலய அன்னதான மடத்துக்கு அடிக்கல் நடும் விழா, ஆலய வரலாற்று நூல் வெளியீட்டு விழா என்பன இடம்பெறவுள்ளன.
ஏ9 வீதி, புதூர்ச் சந்தியில் அமைக்கப்பட்டு ஆலய அமைவிடத்தையும், அதற்கான வழியையும் காட்டி நின்று, வருவோரை வரவேற்கும் அலங்கார நுழைவாயில் திறப்பு விழா காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் தலைவரும் பூசகருமான இ.பூலோகசிங்கம்தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அலங்காரநுழைவாயிலை, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவும், வவுனியா வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் ச.தணிகாசலமும் இணைந்து திறந்து வைப்பர். பெயர்க்கல் திரைநீக்கத்தை லண்டனில் வாழும் திரு.திருமதி.கோபால் பிறேமா தம்பதி மேற்கொள்வர். இதேவேளை, ஆலயத்தின் தனிப்பெரும் மரபாகவும் பண்பாடாகவும் தொன்றுதொட்டு விளங்கிவரும் மகேஸ்வரபூசையாம் அன்னதானத்தைச் சிறந்தமுறையில் நிகழ்த்த, அதற்கென சிறப்பாக அமையவுள்ள அன்னதான மடத்துக்கு காலை 10 மணிக்கு ஆலயத்தில் அடிக்கல் நடப்படவுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அன்னதான மண்டபத்துக்கான அடிக்கல்லை நடுவார். அத்தோடு ஈழத்தின் புகழ்பூத்த பாரம்பரியம் மிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் ஆலய வரலாறு . தோற்றம், வளர்ச்சி, அன்னதானபணி, பண்டமெடுப்பு, பொருள்கள் சேகரித்தல், வேளைக்கயிறு ஆகிய பல அதிசய வரலாறுகளைக் கொண்டு வெளிவரும்முதல் வரலாற்றுநூல் காலை 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.
புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் கணக்காய்வாளர், ந.ஞானசுந்தரம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நூலுக்கான வெளியீட்டுரையையும் நயவுரையையும் தமிழருவி த.சிவகுமாரனும் .சிறப்புரையை புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய மூத்த உறுப்பினர் ம.செல்வரத்தினமும் நிகழ்த்துவர்.
முதற்பிரதிகளை, வவுனியா கோவில்குளம் ஸ்ரீ அகிலாண்டேச்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில், செயலாளரும் ஆதீனகர்த்தாவுமான ஆறுமுகம் நவரெத்தினராசா, வவுனியா சுகாதாரத் திணைக்களத்தின் மருத்துவ கலாநிதி மு.மதிதரன் ஆகியோர் பெறுவார்கள்.
சிறப்புப்பிரதிகள் வழங்கலைத் தொடர்ந்து நன்றியுரையை புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் பொருளாளர் கு.நாகநாதன் நிகழ்த்துவர்.ஆலயத்தின் வருடாந்தப் பெரும் பொங்கல் விழா மறுதினம் 11 ஆம் திகதி வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (21)

# தபால் ஊழியர்கள் நாளை போராட்டம்

## காலவரையறையின்றி தொடரும் எனவும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
தபால் ஊழியர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்ற நோக்கில் நாடுதழுவிய ரீதியில் 22 ஒன்றிணைந்த தபால் தொழில்சங்க முன்னணிகள் இணைந்து நாளை திங்கட்கிழமை முதல் தொடர் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளன.

திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தம் எனும் தலைப்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

தபால் திணைக்களத்தின் உயர்மட்டம் முதல் கீழ்மட்டம் வரையிலான எல்லா வகுப்பினரைப் போல் தபால் சேவையில் ஏற்பட்ட பாதிப்புகள் சொல்லில் அடங்காதவை அவை கொஞ்ச நஞ்சமல்ல. இழக்கப்பட்ட ஊழியர் உரிமைகளை மீளப்பெற்றுக் கொள்வதற்காக சுமார் 12 வருடங்கள் கடும் முயற்சி மேற்கொண்ட போதிலும் எந்தப் பதிலுமின்றி உள்ளோம். இந்தப்பிரச்சினைகள் உட்பட பல்வேறு அநீதிகளுக்கு எதிராக 2006ஆம் ஆண்டிலிருந்து கலந்துரையாடல், மாநாடுகள், போராட்டங்களில் ஈடுபட்டபோதும் இதுவரையும் எந்தப்பிரச்சினைகளுக்கும் தீர்வு எட்டப்படவில்லை. மேற்படி இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாளை திங்கட் கிழமைமாலை 4மணிமுதல் 22 ஒன்றிணைந்த தபால் தொழில் சங்க முன்னணிகள் ஊடாக தொடர் வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளது. என்றுள்ளது.
21,50)

# முஸ்லிம்களை வெளியேற்றியது மனவருத்தத்துக்குரியது

## இப்தார் நிகழ்வில் வடக்கு முதல்வர் கவலை

**வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணப் பகுதியில் மிகப் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தனர். எனினும் 1990ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் இங்கிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் நாட்டின் நாலா பாகங்களிலும் சிதறுண்டு வாழ்ந்துவருகின்றார்கள். இது மனவருத்தத்துக்குரியது.**

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மக்கள் பணிமனை தலைவரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி உலமா சபைக் கிளைத் தலைவருமான பி.எஸ்.எம் சுபியான் மௌலவி ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன், வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் எஸ்.தவராசா, யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதில் உரையாற்றும் போதே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; யாழில் இருந்து சென்ற முஸ்லிம்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் கொழும்பிலும் நீர்கொழும்பு போன்ற பகுதிகளிலும் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து தற்போது நல்ல நிலைமைகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்று அறிகின்றேன். ஆனால் புத்தளம் பகுதிகளில் குடியேறிய மக்கள் பொருள் பண்டங்களைத் தேடக்கூடிய வாய்ப்பு வசதிகள் குறைவாக உள்ள நிலையில் அடிப்படை வசதிகளுடனான வாழ்க்கையையே தொடர்ந்தும் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறப்படுகிறது. இது கவலைக்குரியது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் ஏனைய மக்களுடன் சகோதரர்களாக வாழ்ந்துவந்த போதும் 1990ல் ஏற்பட்ட குழப்ப நிலைகள் அவர்களின் வாழ்க்கையைச் சிதறுண்ட நிலைக்கு மாற்றியுள்ளது. இம் மக்களை அவர்கள் வாழ்ந்த அந்தந்தப் பிரதேசங்களில் அவர்களின் சொந்த நிலங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு அனைத்துத் தரப்புக்களும் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன. முயற்சிகள் வெற்றி அளிக்கும் என்று நம்புவோம் என்றார்.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் தெரிவிக்கும் போது: இஸ்லாத்தில் 5 தூண்களின் ஒன்றான இந்த ரமழான் மாதத்தில் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைவது போன்று ஏனைய விடயங்களில் மற்றைய சமூகத்துடன் ஒற்றுமையாகப் பணியாற்ற உறுதி பூண வேண்டும். ஏனெனில் எமக்கான உரிமைகளைப் பெறுவதற்கு சிறுபான்மையினரான நாம் ஒற்றுமையுடன் பெறுவதே இலகுவாகும். அந்த ஒற்றுமையை இந்த நோன்பு மாதம் எமக்கு வலியுறுத்துகின்றது என்றார். (21)

### ஒருங்கிணைப்பு கூட்டம்பிற்போடல்

யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை திங்கள்கிழமை நடைபெறவிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிறிதொரு தினத்தில் நடைபெறும் என யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பொ.தயானந்தன் தெரிவித்துள்ளார்.

### மகோற்சவம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகோற்சவம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 20 ஆம் திகதி புதன் கிழமை மாலை3.30மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினரும் தொண்டர் சபையினரும் அறிவித்துள்ளனர்.

# ஜெ. சி.பி. கொண்டு தேர் இழுத்த சம்பவம்; இன்றும் சாதிய தீண்டாமையின் கொடூரம்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பகுதியில் வரணி வடக்கிலே உள்ள கண்ணகி அம்மன் ஆலயத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தேர்ப்பவனியின்போது சாதிய தீண்டாமை அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கிறது. தேரின் வடங்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் தொட்டுவிடக்கூடாது என்பதற்காகத் தேரினை ஜெ .சி .பி. எனப்படும் இயந்திரத்தைப் பயன்படுத்தி இழுத்திருக்கிறார்கள் குறித்த ஆலய நிர்வாகத்தினர். இந்தச் சம்பவம் தமிழர் மத்தியில் இன்றும் சாதிய தீண்டாமையின் கொடூரம் நீடித்து வருகின்றமையை எடுத்துக்காட்டுகின்றது. இதனை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி வன்மையாகக் கண்டித்து எதிர்க்கின்றது.

அதேவேளை, இந்தச் சாதியத் தீண்டாமைச் சிந்தனைக்கும், செயற்பாட்டுக்கும் எதிரான வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் எமது கட்சி வலியுறுத்தி நிற்கின்றது என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.க.செந்திவேல் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

முப்பது வருட போரும், போராட்டங்களும் சாதிய தீண்டாமையை ஒழித்து விட்டதாகவே சில தமிழ்த் தேசிய கனவான்கள் பரப்புரை செய்துவந்தனர். ஆனால், அவை பொய்யுரைகள் என்பதை போர் முடிவுற்று ஒன்பது ஆண்டுகளுக்குள் இடம்பெற்ற சாதியத் தீண்டாமைச் செயற்பாடுகள் எடுத்துக்காட்டியுள்ளன. அதற்கு இன்னுமொரு உதாரணமாக கடந்த வருடம் அச்சுவேலிப் பகுதியில் இலங்கை இராணுவம் தேரினை இழுத்துக் கொடுத்து சைவத் தமிழ் மக்கள் சிலரின் சாதியத் தீண்டாமையைப் பாதுகாத்துக் கொடுத்த சம்பவம் அமைகிறது. அதன் தொடர்ச்சியாக இப்பொழுது ஜெசிபி இயந்திரம் வரணியில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி எந்தவொரு தமிழ்த் தேசியம் பேசும் தரப்புகளோ, நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்களோ வாய் திறக்காது மௌனம் காப்பது அசிங்கமானதும் வெட்கப்படத்தக்கதுமாகும். எனவே, இத்தகைய நாகரீகமற்ற காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் இனிமேலும் இடம்பெறாமல் தடுக்க வேண்டியது. சமூக மாற்றத்தை விரும்புகின்ற முற்போக்குச் சக்திகள் அனைவரதும் முக்கிய கடப்பாடாகும். ஆகவே, இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்துச் செயற்பட அனைத்துத் தரப்புக்களையும் அணிதிரளுமாறு எமது கட்சி அழைப்புவிடுக்கின்றது என்றுள்ளது.

இதேவேளை ஆலயத்தின் தேர் இழுப்பதற்குரிய வீதியின் அகலம் போதாமையால் அனைத்து உபயகாரர்களின் வேண்டுகோளின் பிரகாரமே பெக்கொவின் உதவியுடன் தேர் இழுக்கப்பட்டது. தவிர வேறு எந்தவொரு சமூக இழிவுபடுத்தும் நோக்கமல்ல என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

" ஆலயத்துக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேர் கடந்த வாரம் வெள்ளோட்டம் விடப்பட்டபோது ஆலயத் திருவிழா உபயகாரர்களான அனைத்துச் சமூகத்தினரும் பங்குபற்றியிருந்தனர். அவ்வேளையில் ஆலய வீதிகள் பத்து அடிக்குக் குறைவான அகலங் கொண்டதாகக் காணப்பட்டதால் தேரை இழுக்க முடியாத நிலை எற்பட்டது. ஆலய வீதிகளை விஸ்தரிப்பதற்குப் போதிய கால அவகாசம் இல்லாததால் அனைத்து உபயகாரர்களும் இணைந்து எடுத்த முடிவின் பிரகாரம் வாகனம் கொண்டு இழக்கப்பட்டதே தவிர எந்தவொரு சமூக இழிவுபடுத்தும் நோக்கமல்ல. ஆலய திருவிழாவின் உபயகாரர்களாக ஆலய சுற்றுவட்டத்தில் உள்ள அனைத்துச் சமூகத்தினரும் உள்ளனர் என்று நிர்வாகம் மேலும் தெரிவித்தது. (21,9)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடமாடும் சேவை

முல்லைத்தீவு, யூன் 10
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண மற்றும் வவுனியா அலுவலகங்கள் இணைந்த நடமாடும் சேவை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நாளை மறுதினம் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 19 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் மலக்கழிவுகள் கொட்டப்படுகின்றன

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்ப்பாணத்தில் மலக்கழிவு சுத்திகரிப்பாளர்களால் எடுக்கப்படும் மலக் கழிவுகள் நகரத்தின் பொது இடங்களில் கொட்டப்படுகின்றன என்று பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். நேற்று முன்தினம் அதிகாலை யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடி வெள்ள வாய்க்காலில் மலக் கழிவுகள் கொட்டப்பட்டன. அவற்றைக் கொட்டியவர்கள் அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர். இதனால் அந்தப் பகுதியைச் சூழ துர்நாற்றம் வீசியுள்ளது. உடனடியாக மக்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தகவலை வழங்கினர். இந்த நிலையிலேயே மக்கள் இவ்வாறனதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.


குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாநகரசபைக்கும் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன என்று மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

"2018.06.08ஆம் திகதி அன்று அதிகாலையில் சிவலிங்கம் புளியடி வெள்ள வாய்க்காலில் மலக்கழிவுகள் கொட்டப்பட்டமை தொடர்பாக பின்வரும் விடயத்தைத் தெரியப்படுத்துகின்றோம். யாழ்.மாநகர சபையில் மலக்கழிவுகள் அகற்றுவதற்குரிய நேரம் காலை 6மணி தொடக்கம் மாலை 6மணிவரை எனத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்னர் மலக் கழிவுகள் சேகரிக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் காக்கை தீவிலுள்ள மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்திலும் இந்த நேரத்துக்குப் புறம்பாக இக்கழிவுகளை பொறுப்பேற்பதும் தடை செய்யப்பட்டுள்ளது. இரவு வேளைகளில் மலக்கழிவுகள் சேகரிக்கப்படுவதும் அவை சட்டவிரோதமாகப் பொது நீர்நிலைகள், வாய்க்கால்களில் விடப்படுவது தொடர்பாகவும் முறைப்பாடுகள் கிடைத்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாண பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பொறுப்பதிகாரிக்கும் இவ்விடயம் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எமது அனுமதியின்றி இரவு வேளைகளில் மலக்கழிவுகள் எடுக்கப்படுவதற்கும் கொண்டு செல்வதற்கும் எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனைப் பொதுமக்கள் கருத்தில் கொள்ளவேண்டும். இச்செயற்பாடுகள் எதிர்காலத்தில் சீராக மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.
(21,8)



HOT LINE: 011 5 999 000
நீங்கள் வாங்கும் TV க்கு
இலவசமாக 2 தவணைகள் வரை நாங்கள் வழங்குகிறோம்!
கால்பந்தாட்டப் போட்டிகளின் அதிகாரப்பூர்வ தொலைக்காட்சி
24 வட்டி இல்லை
2 தவணைகள்
இலவசம் 3 வருட உத்தரவாதம்
முந்துங்கள்! இந்த அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்.
மாதாந்த தவணை ரூ.3,749 இலிருந்து
LG Life's Good
TOSHIBA Leading Innovation
49" 55" 65" 55" 49"
மாதாந்தம் | ரூ. 7,292
மாதாந்தம் | ரூ. 10,834
மாதாந்தம் | ரூ. 14,584
மாதாந்தம் | ரூ. 10,417
மாதாந்தம் | ரூ. 5,833
கடனட்டைகளுக்கு வட்டி இல்லை
SampathCards HNB PAN ASIA BANK DFCC BANK
Abans

சிறந்த விலையில், உயர்ந்த உத்தரவாதத்தில்
உலகத் தரமான கணினிகளை நம்பகமான இடத்தில் வாங்குங்கள்
WORLD'S BEST BRANDS
EFFICIENT AFTER-SALES SERVICE
INTEREST-FREE TERMS
Upto 3-YEAR EXTENDED WARRANTY
FREE PRINTER
ACER AMD A6-A3
A6-9220 Processor, 4GB RAM, 1TB HDD, 15.6" HD Display, Linux, 2-Year Warranty
ரூ.63,900 விசேட விலை ரூ.54,990
IP 320 CEL
Intel Celeron, 4GB RAM, 1TB HDD, AMD 10, Full HD 15.6" Display, 1-Year Warranty
ரூ.79,900 விசேட விலை ரூ.69,900
HP i5 - BLACK
Intel i5-8th Gen, 4GB RAM, 1TB HDD, Intel Graphics, 15.6" Display, Windows 10, 1-Year Warranty
ரூ.109,990 விசேட விலை ரூ.92,900 மாதாந்தம் ரூ.4,582 இலிருந்து
HP PAV 15 i7
Intel Core i7 8th Gen, 8GB RAM, 1TB HDD, 15.6" Display, Windows 10, 4GB Nvdia VGA, 1-Year Warranty
ரூ.163,990 விசேட விலை ரூ.137,990 மாதாந்தம் ரூ.6,832 இலிருந்து
acer Lenovo DELL hp
இன்றே நாடளாவிய அபான்ஸ் கிளைகளுக்கு வாருங்கள்!
8th Gen i3 FIRST TIME IN SRI LANKA
ACER QUAD CORE
Celeron N3450, Quad Core, 4GB RAM, 1TB HDD, 15.6" Display, Linux, 2-Year Warranty
ரூ.63,990 விசேட விலை ரூ.52,990
HP DUAL CORE
Intel Celeron, 4GB RAM, 500GB HDD, Intel Graphics, 15.6" Display, Windows 10, 2-Year Warranty
ரூ.61,990 விசேட விலை ரூ.51,990 மாதாந்தம் ரூ.2,499 இலிருந்து
ACER E5-576 CORE I3
Intel Core i3 8th Gen, 6GB RAM, 1TB HDD, 15.6" Display, Linux, 2-Year Warranty
ரூ.93,990 விசேட விலை ரூ.78,990
HP i3 - BLACK
Intel i3-7100, 4GB RAM, 1TB HDD, Intel Graphics, 15.6" Display, DOS, 3-Year Warranty
ரூ.85,900 விசேட விலை ரூ.72,900 மாதாந்தம் ரூ.3,579 இலிருந்து
ACER E5-576 CORE I5
Intel Core i5 8th Gen, 4GB RAM, 1TB HDD, 15.6" Display, Linux, 2GB VGA, 2-Year Warranty
ரூ.109,990 விசேட விலை ரூ.95,900
ரூ.89,990
HP AMD A9 - 9420 - 7th Gen
A9-9420, 8GB RAM, 1TB HDD, 2GB VGA, Windows 10, 3-Year Warranty
ரூ.91,500 விசேட விலை ரூ.79,990 மாதாந்தம் ரூ.3,812 இலிருந்து
ரூ.75,000
ACER E5-575 CORE i7
Intel Core i7 7th Gen, 8GB RAM, 1TB HDD, 15.6" Display, Linux, 2GB VGA, 1-Year Warranty
ரூ.139,990 விசேட விலை ரூ.119,990
BuyAbans.com us at www.facebook.com/abansit
நாடளாவிய அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
Abans




புங்குடுதீவு 04, பிட்டியம்பதி

## ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மகோற்சவ காலத்தில் விரதமிருக்கும் அடியார்களுக்கான அறிவித்தல்

மேற்படி ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருப்பதால் இந்த ஆண்டுக்கான **மகோற்சவ தினம் விளம்பி வருடம் 12.06.2018 செவ்வாய்க்கிழமை (வைகாசி 29 ஆம் நாள்) ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் முற்பகல் 11.30 மணியளவில் விஷேட வழிபாடுகளுடன் 21.06.2018 வியாழக்கிழமை (ஆனி 07 ஆம் நாள்)** நிறைவடையும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

**அன்றைய தினம் மாலை 02 மணியளவில் ஆலய முன்றிலில் மகாசபைக் கூட்டம் நடைபெறவுள்ளதால் நிர்வாக சபையினர் மகாசபையினர் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**-ஆலய பரிபாலன சபை.**

(cc173412) (13.17)

### UDA வின் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பிரத்தியேக தொலைத்தொடர்பு கூட்டாளியாக SLT முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம்

Sri Lanka Telecom

நகர பிரதேசங்களில் கட்டப்படும் ஏழு புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உட்கட்டமைப்பை வழங்க தேசிய தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான சிறிலங்கா டெலிகொம் (SLT) மற்றும் இலங்கை நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) இடையே அண்மையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின்படி குறித்த வீட்டுத் திட்டங்களுக்கு SLT பிரத்தியேக தொலைத்தொடர்பு சேவை வழங்குனராக செயற்படும்.

மத்திய மற்றும் உயர் வருவாய் கொண்ட குழுக்களிடையே நகர பிரதேசங்களில் அமைக்கப்படும் வீட்டுத் திட்டங்கள் மீது அதிக கேள்வி உள்ளது. எவ்வாறாயினும் நகர் பிரதேசங்களில் போதுமான இடங்கள் இல்லாதது உட்பட பல பிரச்சினைகளால் தற்போது போதிய வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை. இந்த பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வகையில் அடுத்த 5 ஆண்டுகளில் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு 500.000 வீட்டு அலகுகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் அரச துறை ஊழியர்கள், அதேபோன்று மத்திய மற்றும் உயர் வருமானம் கொண்ட குழுக்களுக்கு வீட்டுத் திட்டங்களை அமைக்க UDA விசேட திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு பொரளையில் 608 அலகுகள், தொழில் வல்லுநர்களுக்கு பன்னிபிட்டியவில் 500 அலகுகள் அதேபோன்று நடுத்தர வருமானம் பெறுவோருக்கு கொட்டாவையில் 300 அலகுகள், பொரளை எலியோட் பிளேஸில் 400 அலகுகள், தலவதுகொடையில் 400 மற்றும் 150 அலகுகள் கொண்ட இரு திட்டங்கள், கண்டி கடம்பேவில் 120 அலகுகள் என கொழும்பு நகரின் வெவ்வேறு பகுதிகளில் ஏழு வீட்டுத் திட்டங்கள் கட்டப்படுகின்றன.

இந்த கூட்டாண்மை குறித்து UDA சார்பில் கருத்து வெளியிட்ட அதன் தலைவர் திரு ஜகத் நந்தன முனசிங்க கூறியதாவது, "நாம் அதிகம் சிந்தித்து பரிசீலித்த பின்னரே SLT உடன் முக்கியத்துவம் வாய்ந்த இந்த உடன்படிக்கையை செய்து கொண்டோம். நாட்டின் தேசிய தொலைத்தொடர்பு சேவை வழங்குனர் என்ற வகையில், SLT இன் கடந்த கால உயர்மட்ட நிபுணத்துவம் மற்றும் சிறப்பான சேவை பற்றி ஆரம்பம் தொடக்கம் எமக்கு அனுபவம் உள்ளது. இதனாலேயே அந்த நிறுவனத்தின் நம்பகத்தன்மை மற்றும் திறன் மூலம் இந்த வீட்டுத் திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்படும் உயர்தர தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதி பூர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கிறோம். இது இந்த அடுக்குமாடி குடியிருப்பாளர்களின் எதிர்பார்ப்புக்கு மேலாக அதனை பூர்த்தி செய்வதாக அமையும்."

சமூகத்திற்கு இன்றியமையாத இந்த உடன்படிக்கை தொடர்பில் கருத்து கூறிய SLT தலைவர் திரு பீ.ஜி. குமாரசிங்க சிறிசேன தெரிவிக்கும்போது, "இந்த பிரமாண்ட திட்டத்தில் ICT கட்டமைப்பை உருவாக்கி அதனை பராமரிப்பதன் மூலம் எமது சமூகத்திற்கு சேவை செய்ய SLT க்கு மற்றொரு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பிரத்தியேக தொலைத்தொடர்பாடல் சேவை வழங்குனர் என்ற வகையில் நிலையான இணைப்பு, பிரோட்பாண்ட், PEO TV, CCTV அதேபோன்று அடுக்குமாடி குடியிருப்புகளின் பொது பகுதிகள் உட்பட அனைத்து திட்டங்களுக்குமான ஏனைய ஸ்மார்ட் கட்டட தீர்வுகள் உட்பட ஒட்டுமொத்தமாக நாம் ICT சேவைகளை வழங்குவோம். ஏழு அடுக்குமாடி குடியிருப்புகளின் அனைத்து குடியிருப்பாளர்களுக்குமான ICT தீர்வுகள் வழங்குவது மற்றும் கட்டட முகாமைத்துவமும் இதில் அடங்கும். SLT இன் நிகரற்ற தீர்வுகளை வழங்குவதைக் கொண்டு குடியிருப்பாளர் பெறவிருக்கும் உயர் அனுபவத்தை முன்னெடுப்பதை இட்டு உற்சாகமடைகிறது."

நிறுவனமானது பைபர் இணைப்பு மற்றும் செப்பு இணைப்புகள் மூலம் சேவைகளை வழங்கவுள்ளது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் UDA சார்பில், UDA தலைவர் திரு ஜகத் நந்தன முனசிங்க மற்றும் UDA பணிப்பாளர் நாயகம் திரு எஸ். எஸ். பீ. ரத்னாயக்க ஆகியோரும் SLT சார்பில், SLT தலைவர் திரு பீ.ஜி. குமாரசிங்க சிறிசேன மற்றும் SLT தலைமை வர்த்தக அதிகாரி திரு கித்தி பெரேரா ஆகியோரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

பட விளக்கம் (இடமிருந்து):

UDA பணிப்பாளர் நாயகம் திரு எஸ். எஸ். பீ. ரத்னாயக்க, UDA தலைவர் திரு ஜகத் நந்தன முனசிங்க, SLT தலைவர் திரு பீ.ஜி. குமாரசிங்க சிறிசேன மற்றும் SLT தலைமை வர்த்தக அதிகாரி திரு கித்தி பெரேரா ஆகியோர் உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் பங்கேற்றுள்ளனர்.

# மாற்று மோதிரம்

## WEDDING FAIR JAFFNA

**June 16,17**
9.00 am - 6.00 pm

DERMA COLOR வழங்கும் இலவச
**Bridal Makeup Work Shop**
June 16, 11am-02.00pm

அருந்ததி
JAFFNA DISTRICT BEAUTICIAN ASSOCIATION

**இணைந்து வழங்கும் BRIDAL WORK SHOP**
**International Hair Style & Bridal Make Up**

**By:Kayalvili Jayapragash**
(MUA)Bridel Makeup-Artist
Professional AD Dip.BTHD,C&G (UK)



2500/=

**Contact :**
**077 771 2604**
(President, Jaffna Beautician Association)

16th June, 2.30pm-5.30pm
**Chelva Palace**

இப் பயிற்சியில் பங்குபற்றுபவர்களுக்கு
Bridal Fashion Show Entrance Free

# Bridal Fashion Show

(17th June ,3.00 pm - 6.00 pm)

# Chelva Palace

**K.K.S Road,Kokuvil.**

**Contact:076 822 8522**

Main Sponsor: SRI VIJAYAS, NAYAGARA SALON & ACADEMY
Co. Sponsor: STUDIO 3000
Official Partners: LassanaFlora, DERMA COLOR, ASIA EXHIBITION, ANDRA PRINTERS, உதயன்
Organized By: Arunthathee

# காணாமற்போனோருக்கான பணியகத்தின் அடுத்த அமர்வு திருகோணமலையில்

கொழும்பு, ஜூன் 10

காணாமற்போனோருக்கான பணியகத்தின் அடுத்த அமர்வு திருகோணமலையில் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காணாமற் போனோருக்கான பணியகம், பிரதேச வாரியாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சந்தித்து வருகிறது. மன்னார், மாத்தறை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அமர்வுகளை நடத்திய காணாமற்போனோருக்கான பணியகம், எதிர்வரும் 13ஆம் திகதி திருகோணமலையில் அடுத்த அமர்வை நடத்தவுள்ளது. திருகோணமலை கலாசார மண்டபத்தில் இந்த அமர்வு இடம்பெறவுள்ளதாகவும், இதில் பணியகத்தில் 7 ஆணையாளர்களும் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. (5)




சிங்கர் பஷன் அக்கடமி மூலம் நடாத்தப்படும்

ரவிக்கைகளுக்கான
சான்றிதழ் பாடநெறி

இச்சான்றிதழ் பாடநெறி மூன்று மாதங்களுக்கான ஒரு பாடநெறியாக இருப்பதோடு முதல் கட்டமாக 5 ரவிக்கைகளும் மற்றும் ரவிக்கைகளுக்கேற்ற விசேடமான கை, கழுத்துப்பட்டி என்பன பற்றிய சிறந்த அறிவு கற்றுக்கொடுக்கப்படுகின்றது.

FREE

2018 ஜூன் மாதத்துக்குள் இப்பாட நெறிக்காக பதிவு செய்யும் அனைவருக்கும்
ஓர் அலங்கார சேலை இலவசம்.

நாடு முழுதும் 70 சிங்கர் பஷன் அக்கடமிகள் காணப்படுகின்றது.

உங்களுக்கு மிகவும் கிட்டிய கிளையைத் தெரிந்து கொள்ள இன்றே அழையுங்கள்
0212216320
0115400400

# மத்தளவை விட்டு கடைசி வானூர்தியும்வெளியேறுகிறது




கொழும்பு, ஜூன் 10

இலங்கையின் இண்டாவது பன்னாட்டு வானூர்தி நிலையமான, மத்தள மகிந்த ராஜபக்ச வானூர்தி நிலையத்துக்கான, சேவைகளை மேற்கொண்டு வந்த கடைசி வானூர்தி நிறுவனமும் அதனைக் கைவிட்டுள்ளது.

மத்தள வானூர்தி நிலையத்துக்கு பிளை டுபாய் நிறுவனம் மாத்திரமே வாரத்தில் நான்கு சேவையில் ஈடுபட்டு வந்தது. அந்த நிறுவனமும், சேவையை நிறுத்திக் கொள்ளப் போவதாக அறிவித்தது.

இதுபற்றி மத்தள வானூர்தி நிலைய முகாமைத்துவத்துக்கு ஏற்கனவே பிளை டுபாய் நிறுவனம் அறிவித்துள்ளது என்று, சிவில் வானூர்திப் போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக அபயசிங்க தெரிவித்தார்.

போதிய பயணிகள் இல்லாமையால், வருமானம் கிடைக்கவில்லை என்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன், வானூர்திகளில் பறவைகள் அடிக்கடி மோதுவதாகவும் முறையிடப்பட்டது என்றும் அவர் கூறினார். கடைசி வானூர்தி நிறுவனமும் வெளியேறியதால், மத்தள வானூர்தி நிலையம் மூடப்படும் அபாயத்தில் இருப்பதாக அங்கு வேலை செய்யும் பணியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (5)

NAITA SLGTI KILINOCHCHI SRI LANKA GERMAN TRAINING INSTITUTE

இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவகத்துடன் இணைந்து கொள்ளுங்கள் (SLGTI)

பயிற்சிநெறிகள் ஒக்டோபர் 2018 ஆரம்பமாகவுள்ளன

1. இயந்திரத் தொழில்நுட்பம்:
- எந்திரவினைஞர் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 4)
- தையல் இயந்திர பொறித்துறை வல்லுனர் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 4)
- உற்பத்தி தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 5)

2. மோட்டார் வாகனத் தொழில்நுட்பம்:
- மோட்டார் வாகனப் பொறித்துறை வல்லுனர் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 4)
- உந்துருளி / முச்சக்கரவண்டி பொறித்துறை வல்லுனர் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 4)
- மோட்டார் வாகனத் தொழில்நுட்பம்- (தேசிய தொழில் தகைமை மட்டம் -5)

3. மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்:
- மின்னியலாளர் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 4)
- குளிர்சாதனப்பெட்டி மற்றும் குளிரூட்டி திருத்துனர் - (தேசிய தொழில் தகைமை மட்டம் - 4)
- இயந்திர மின்னணுவியல்- (தேசிய தொழில் தகைமை மட்டம் - 5, 6)

4. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்:
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - (தேசிய தொழில் தகைமை மட்டம் (4, 5, 6)

5. கட்டுமானத் தொழில்நுட்பம்:
- கட்டுமான மேற்பார்வையாளர் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 4)
- கட்டுமான தொழில்நுட்பம் - (தேசிய தொழில் தகைமை மட்டம் - 5)

6. உணவு பதனிடல் தொழில்நுட்பம்:
- வெதுப்பகவியலாளர் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 4)
- உணவு தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 5)

விண்ணப்ப முடிவுத் திகதி
15 ஜூலை 2018



‘உங்களுடைய எதிர்காலத்தை எங்களுடன் திட்டமிடுங்கள்’

விண்ணப்பங்களை இங்கே பெற்றுக்கொள்ளலாம்
இணையத்தளம் : www.slgti.com
தொ. இல: 021 492 7799, 076 102 2227
SLGTI, அறிவியல் நகர், கிளிநொச்சி, இலங்கை.






விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கை தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரிய, இலங்கை.

Sri Lanka Telecom

## அறிவித்தல்

ஸ்ரீலங்கா ரெலிகொம்மினுடைய இணைப்பு வயர், கம்பம் அல்லது ஏதாவது தொலைத்தொடர்பு சம்பந்தமான அமைப்பை யாரேனும் ஒருவர் தகவல் அனுப்பும் நோக்குடன் பாவித்தல், பழுதாக்குதல், அகற்றிக் கொண்டு செல்லுதல் அல்லது குறுக்கீடு செய்தல் 1991 ஆண்டின் இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டம் இலக்கம் 25 இன் 47 ம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

மேற்படி சட்டத்தின் 55ம் பிரிவின்படி அதிகாரமின்றி ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் தொலைத்தொடர்பு கம்பத்தில் ஏறுதல் மற்றும் தொலைத்தொடர்பு இணைப்பில், கம்பத்தில் அல்லது வேறு தொலைத்தொடர்பு அமைப்பில் எதையாவது இணைத்தல் என்பனவும் குற்றமாகக் கருதப்படும்.

மேலும் மேற்படி குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீது ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தால், அச்சட்டங்களின்படி சட்டநட வடிக்கை எடுக்கப்படுவதுடன் அனுமதியின்றிப் பொருத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் அனைத்துப்பொருட்களும் எந்தவித அறிவித்தலுமின்றி அகற்றப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா ரெலிகொம்

(in 9463)

## பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

Educational Technologies Pvt Ltd
இலங்கையில் தனது 21 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

(Jaffna Branch)

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.

After Training Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance

Training Period Rs. 30, 000



ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

G.Anthany- Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road,Jaffna.

## Wanted
## Web developer / Programmer

We are looking for talented PHP / MYSQL Programmers to work as Software Architects, Leader Developer, Senior or Junior Programmers

As an ideal candidate, you should have working Experience in web development and Internet based Application / Database management systems.

**Salary from 100,000 - 300,000**

Apply with your CV detailing qualification and work experience.

job@irstha.com
021 221 7871
www.irstha.com
No.64, Kannathiddy Rd, Jaffna.

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 08 . 1991



இறப்பு 04 . 06 . 2018

## வைகுந்தநாதன் கௌசிகன்

*(பஸ் உரிமையாளர் WPND1003,*
*பழையமாணவர் - பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி A/L - 2010)*

யாழ் மாவிட்டபுரம் மேற்கு கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வைகுந்தநாதன் கௌசிகன் 04.06.2018 திங்கட்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் கந்தசாமி வைகுந்தநாதன் தவரஞ்சிதம் (சந்திரா) தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான குமாரபுரம் பரந்தனை சேர்ந்த கந்தசாமி சிவபூபதி தம்பதிகளினதும் காலஞ்சென்றவர்களான மாவிட்டபுரம் மேற்கு கொல்லங்கலட்டியைச் சேர்ந்த தனபாலசிங்கம் தையல்நாயகி தம்பதிகளின் அன்புப் பேரனும் வசிகரன்(ஆஸ்திரேலியா), பிரதீபன்(லண்டன்) காலஞ்சென்ற கௌரிதாசன் மற்றும் சிவகௌரி(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கயனி, ஜனனி, தயாநந்தன் ஆகியோரின் அருமை மைத்துனனும் தர்ஷிகன், மேனுயன் ஆகியோரின் அன்பு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தேவிவாசம், துரைவீதி சந்தி, K.K.S வீதி, இணுவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (11.06.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**வைகுந்தநாதன்(தந்தை) - 021 205 3384/ 0077 301 9943/ 077 791 5677**

(CS 17358) (14,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி சி.ரேவதி (B.A Hons)**

08.06.2018 வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக 33 ஆவது பட்டமளிப்பு விழாவில் **B.A(Hons)** பட்டம் பெற்ற **செல்வி சிற்றம்பலம் ரேவதியை** மனதார வாழ்த்துவதோடு மேலும் பல பட்டம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

**அக்கா, அத்தான், கஜிஷனா**
புகையிரதநிலைய வீதி, இணுவில் கிழக்கு.

## ஆண்/பெண் தொழிலாளர்கள் தேவை

யாழ் நகரை அண்டிய தொழிற்சாலை ஒன்றுக்கு மாதாந்த சம்பள அடிப்படையில் நிரந்தர கூலி வேலைக்கு 20 - 40 வயதுக்குட்பட்டவர்கள் தேவை
தொடர்பு :075 918 5180

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள 13 தொன் Aveling Barford Road Roller விற்பனைக்கு உண்டு.
077 430 6997/077 127 9591

## உடனடி வேலைவாய்ப்பு

O/L, A/L முடித்த மற்றும் பகுதிநேர வேலை செய்ய ஆர்வமுள்ள அனைவருக்கும் EPF/ETF உடனான நிரந்தர வேலைவாய்ப்பு
077 241 7007

## வீடு வாடகைக்குண்டு

Old Park Road யாழ்ப்பாணத்தில்
இருமாடி வீடு - 2864 ச அடி. $2\frac{1}{2}$ பரப்புக் காணி
அறைகள் - 06 சமையல் அறை 01, களஞ்சிய அறை
Toilets + Bath 06 including attached 03, Hall - 01, Viranda - 02
வாகன தரிப்பிட வசதிகள் உண்டு.
077 661 3486

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் புடைவைகடை ஒன்றுக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களும் அல்லது பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
077 202 6295

## குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு

பாவனையில் உள்ள 342 L LG குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. (Double Door good Condition, Gray colour)
0777 344 074/0777 396 176

## தேவை

சாவகச்சேரியில் இயங்கும்
**சுவி என்ரபிறைசஸ்**
நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
01. பண வசூலிப்பாளர்
02. விற்பனை பிரதிநிதி

077 739 5010 / 076 652 0074

## வேலையாள்கள் தேவை

மணிக்கூட்டு வீதி, யாழ்நகரிலுள்ள புடைவைக்கடைக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
(ஆண்கள் தங்கி நின்றும் வேலை செய்யலாம்)
தொடர்பு: **வேம்படி ரெக்ஸ்**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின்புறம்)
077 990 1002/021 221 7741

## நல்லூரில் வீடு விற்பனைக்கு

நல்லூரில் வீடு விற்பனைக்கு நல்லூர் மருதடி வீதியில் பெறுமதியான இடத்தில் 28 பர்ச் (3 பரப்பு) காணியில் உள்ள இரு வீடுகள்.
தொடர்பு -
076 114 4780, 077 505 9790

## TYRES - BRAND NEW FOR SALE

155 x 14
MORRIS - MINOR, OXFORD, AUSTIN CAMBRIGE, A/50,A/55,A/60
NANKANG TYRES - 077 313 9501

## வீடு விற்பனைக்கு

வட்டு கிழக்கு சித்தன்கேணியில் வட்டு இந்துக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள வீடு 3 பரப்பு 3 குளி விற்பனைக்குண்டு.
077 548 3478

## வீடு விற்பனைக்கு

மடம் வீதியில் 01 பரப்புக் காணி வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு.
077 656 9936

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் குடும்ப அங்கத்தவர்கள் 04 பேர் தங்கக்கூடிய சகல வசதிகளுடனும் கூடிய 03 அறைகளுக்குக் குறையாமல் உள்ள வீடு தேவைப்படுகிறது.
076 601 0287

## காணி விற்பனைக்கு

யா/ சுண்டிக்குளியில் சந்தன மாதா ஒழுங்கையில் உள்ள $2\frac{1}{2}$ பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உள்ளது.
(CS 17323) (14.17)
075 928 0567/077 366 4442

## அறைகள் வாடகைக்கு விடப்படும்

பல்கலைக்கழக மாணவ மாணவிகளுக்கு அறைகள் வாடகைக்கு விடப்படும்.
076 964 3316

## Toyota Rav 4 for Sale

Year 2007, 2nd Owner, Petrol, 80,000km, KO - xxxx, Tv, Dvd & Reverse Camera,Pearl White.
Exchange / Sale,
Price Rs.4.85 Million
CONTACT - 0773 400 880

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவகுடும்பம் 1986 திருவாதிரை 2இல் செவ்வாய் IT Management B.Sc படித்த பெண்ணிற்கு வெளிநாட்டிலோ, உள்நாட்டிலோ மணமகன் தேவை.
077 653 3656/011 255 9862

## வீடு விற்பனைக்கு

வளன்புரம் கொழும்புத்துறையில் $1\frac{3}{4}$ பரப்புக் காணியில் அமைந்துள்ள 3படுக்கை அறை, மாபிள் பதிக்கப்பட்ட 2 வரவேற்பறை, இணைந்த கொமேட்டுடன் குளியல் அறை, சாதாரண கழிவறை, வேறான சாதாரண குளியல் அறை, களஞ்சிய அறை கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 536 4396

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூரில் 2.9 பரப்பு இல் (கிட்டத்தட்ட 30 பேர்ச்சஸ்) 1 சாப்பாட்டு அறை, 4 படுக்கை அறை, 2 Toilet, Electric Water pump,tank, tube well மற்றும் விசாலமான கராஜ் வசதியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0717563730
0112932397 / 0212 223 088

## தையல் வேலைக்கு வேலையாள்கள் தேவை

நன்கு வெட்டித் தைக்கத் தெரிந்தவர்களும், தையல் வேலை தெரிந்தவர்களும் வேலைக்குத் தேவை. கோண்டாவிலை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
076 164 0401

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
13 . 09 . 1937

மறைவு
11 . 05 . 2018

கடந்த (11.05.2018) அன்று இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத்தலைவி

## திருமதி மகேஸ்வரி பஞ்சரத்தினம்

(கோண்டாவில் கிழக்கு)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டிக்கிரியைகளும் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்தோடு எங்கள் குடும்பத்தலைவியின் மறைவையொட்டி எம்முடன் துயர்பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மோகனராசா (மோகன்)
ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

அன்புடன் அழைத்து நிற்போர்
**குடும்பத்தினர்.**

(CS 10077)(14.17)

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## மாணிக்கசாமி வைத்தீஸ்வரன்

(ஓய்வு பெற்ற காணிப் பதிவாளர் – யாழ் மாவட்டம்)

அன்பிலே சிறந்தவராய்
மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய்
பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும்
கருணைவடிவமாய்
உரிமையாய் உணர்வை
அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை
நாடியே சென்றீர்கள்
பதினைந்து ஆண்டுகள்
பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாதம்
போற்றியே பணிந்திடுவோம்.

என்றும் நினைவில்
**குடும்பத்தினர்.**

'வைத்தீஸ் மஹால்'
றொட்டியாலடி, சுன்னாகம்.

(CS 17329)(14.17)

## வாடகைக்கு உண்டு

கொக்குவிலில்
அறை வாடகைக்கு உண்டு
**071 447 1790**

## வாடகைக்கு

யாழ் நகரில் அறைகள்
வாடகைக்கு (ரூம்கள்) உண்டு.
(CS 17355) (14.17) **077 728 3811**

## விற்பனைக்கு

சினையுடன் கூடிய உயர்இன பால்மாடுகள், குஞ்சுபொரிக்கும் இயந்திரம், சிறியகமரா Voice Recorder என்பன விற்பனைக்குண்டு.
**076 788 6074**
(CS 17353) (14.17)

## மணமகள் தேவை

1981.05.07 ஆம் திகதி பிறந்த மிருகசீரிட நட்சத்திரம். 10இல் சூரியன் செவ்வாய் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகன் தொழில் தனியார் (கடை)
**021 221 6201**
(CS 17357) (14.17)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
20 . 11 . 1934

மறைவு
11 . 05 . 2018

கடந்த (11.05.2018) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

அமரர்
## காசிப்பிள்ளை பொன்னுத்துரை

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்**

218/8, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
076 523 9123

**குடும்பத்தினர்.**

(CS 17342)(14.17)

# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி நாகையா



இணுவில் மேற்கு பாப்பாத்தோட்ட வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி நாகையா கடந்த (07.06.2018) வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சீனிக்குட்டி (இளையபிள்ளை) தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு நாகமணி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு நாகையாவின் (முன்னாள் பிரதேசசபை உறுப்பினர், இலங்கை தமிழ் அரசுக்கட்சி), அன்புமனைவியும் கிருபாகரன் (பொறுப்பதிகாரி, மதுவரித்திணைக்களம் மல்லாகம்), சந்திரவதனா (பிரான்ஸ்), கலையரசன் (இந்தியா), கலையரசி (கொழும்பு), ரவிச்சந்திரன் (விவசாயக்கல்லூரி, வவுனியா), செந்தில்நாதன் (ஆசிரியர், யா/ வைத்தீஸ்வராக்கல்லூரி), அபிராமி ஆகியோரின் அன்புத்தாயாரும் விஜயா, தயாபரன் (பிரான்ஸ்), சுதர்ஜினி (இந்தியா), ரவீந்திரகுமாரன் (FreeLanka Granite Limited,Colombo), கலைவாணி (நகரசபை, வவுனியா), தயாளினி (விரிவுரையாளர், ஆசிரியர் வளநிலையம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்றவர்களான கா.செ. நடராசா, சண்முகநாதன் மற்றும் செல்வரத்தினம், இராஜேஸ்வரி, லோகநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், யோகநாதன், நல்லையா மற்றும் செல்வராணி, பரமேஸ்வரி காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் நகுலேஸ்வரி, ராசலக்சுமி ஆகியோரின் அன்புமைத்துனியும் சரவணன், சேந்தன், கௌசிகன் (பிரான்ஸ்), ஆதித்தியன் (இந்தியா), சாகித்தியன், நாதங்கி (வவுனியா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கௌசி சேந்தகம்" பாப்பாத்தோட்ட வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

ES Printers



பனர் பிரிண்ட் (Banner), 35/=

# 357, Kasthuriyar Road, Jaffna.



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988 இல் பிறந்த ஆயிலிய நட்சத்திரம் கிரபாவம் 25 செவ்வாய்க்குற்ற மற்ற (சிங்கப்பூர் பொறியியலாளர்) மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு - 077 5581 401

## விற்பனைக்கு

வெள்ளவத்தை கம்டன் லேனில் 8.8 பேர்ச் காணி 3மாடி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

071 307 3266

## விற்பனைக்கு

J K. xxxx, HC xxxx இலக்கமுடைய 2Stock முச்சக்கரவண்டிகள் விற்பனைக்கு.

தொடர்பு - 077 8446 089

## அறை வாடகைக்கு

யாழ்.நகரில் பிரப்பங்குளம் வீதியில், வண்ணார்பண்ணையில் Room வாடகைக்கு உண்டு. தொடர்பு - 077 667 0582

## வேலை வாய்ப்பு

உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர் (ஆண் / பெண்) உணவு பரிமாறுபவர் (வெயிட்டர்), துப்புரவுத் தொழிலாளி (Cleaning Staff), வரவேற்பாளர் (Receptionist) பெண் தேவை.

தொடர்பு - 077 735 2165

## வீடு வாடகைக்குண்டு

அரியாலையில் A9 வீதிக்கு அருகில் சிறிய குடும்பத்துக்கேற்ற வீடு வாடகைக்கு உண்டு.(Anex)

தொடர்பு - 077 9118 609

## தங்குவிடுதி

The Cottage Guest House in Bolawatta. Open 24h/for your travel convenience. Close to Air port / For Colombo / Jaffna travelers. Clean Comfortable. AC/Non AC. Food/Hot Water/ TV Extra Call 0766979097/0312272320

(ACD 243/15/17)

## வேலையாள் தேவை

வலி தென்மேற்கு பகுதியில் இயங்கும் பிரபல மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் (Pharmasist) தேவை.

தொடர்பு - 077 883 0308
077 022 6809

## ஆசிரியர் தேவை

வெள்ளவத்தையிலுள்ள புத்தகம் வெளியிடும் நிறுவனம் ஒன்றிற்கு தரம் - 6 - 13 வரையான வகுப்புகளுக்கு அனைத்து பாடங்களுக்கும் புத்தகம் எழுதும் ஆர்வமுள்ள ஆசிரியர்களும், எழுதிய புத்தகங்களை வெளியிடும் நோக்கமுள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும். தொ.பே - 0777 901 354

## பதவிவெற்றிடம்

பயிற்சி ஆசிரியர்

# கேக் ஐசிங் (Cake Icing)
# தையல் (Tailoring)
# ஆரி எம்பிராய்டரி (Aari Embroidery)
# சமையல் (Cooking)

ஆகிய பயிற்சி நெறிகளுக்கான பகுதி நேர ஆசிரியர்கள் தேவை. தகைமையுடையோர் தொடர்பு கொள்ளவும் T.P: 0772288243

YICSD College
இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கன்னாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரில் சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய நல்ல சூழலில் அமைந்துள்ள வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு - 076 744 4014



பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

ரகசியம் பேணப்படும்

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் பதிவு தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி காளியம்மா
மாத்தளை - கண்டி வீதி, அம்பத்தன்ன.
077 327 2302/ 076 466 4153



## R.V.R கொங்கிறீட் தொழிற்சாலைக்கு வேலையாள்கள் உடன் தேவை

- மதவுகுழாய் அமைப்பதற்கு அனுபவமுள்ள (அனுபவமற்ற) தொழிலாளர்கள் மற்றும் மேசன், கூலியாள்கள் தேவை.
- வெல்டிங் மற்றும் லேத் வேலைகளுக்கும் பைவர்கிளாஸ் மோல்ட் ஒட்டு வேலைக்கும் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.

மூலப் பொருள்கள் உடன் தேவை

| | |
|---|---|
| மணல் | 100 கியூப் |
| சல்லி | 50 கியூப் |
| சிப்ஸ் | 20 கியூப் |

(00354) (4.17)

077 735 7373


## துயர் பகிர்கின்றோம்



### ஆனந்தராஜா நற்குணராஜா

எமது இராமதாஸ் நிறுவனத்தின் பரந்தாம் காரியாலயத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றிய ஆனந்தராஜா நற்குணராஜா அவர்கள் 08.06.2018 இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துய ருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுவாமி இராமதாஸ் நிறுவனம்
கருணாலயம் அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லம்
கருணாலயம் அன்னை கிருஷ்ணாபாய் ஆண்கள் இல்லம்

(cs.14559) (13.17)

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும்,
யாழ்/ மாவட்ட சபையின் முன்னாள் உறுப்பினரும்,
யாழ்/ மாநகர சபை உப தலைவரும்,
புத்தூர் கிராமசபையின் உப தலைவரும்,
ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவருமான
அமரர்

### தமிழரசு க.சின்னத்துரை (ஜே.பி)

அவர்களின்

### 3 ஆவது ஆண்டு நினைவு நாள் - 2018



காலம் : 10.06.2018
ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப.3.00 மணி
இடம் : அன்னாரின் இல்லத்தில்

தலைமை:
மூ.ஆனந்தகிருஷ்னன் (ஜே.பி) அவர்கள்
(முன்னாள் வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர்)

**நினைவுப் பேருரை நிகழ்த்துவோர்**

கௌரவ மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள்
(பா.உ.தலைவர் தமிழரசு கட்சி)
கௌரவ த.சித்தார்த்தன் அவர்கள்
(பா.உ.தலைவர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்)
கௌரவ சி.சிறிதரன் அவர்கள்
(பா.உ.த.தே. கூட்டமைப்பு)

**நன்றியுரை**

திருமதி ஸ்ரீ வசந்தமாலா அவர்கள்
(தமிழரசுவின் மகள்- முன்னைனாள் தபால் அதிபர். ஆவரங்கால்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

"தமிழரசி வாசம்"
வன்னியசிங்கம் வீதி,
ஆவ்ரங்கால்.

குடும்பத்தினர்

(cs.11306) (13.17)

"மாற்று மோதிரம்"

உங்களது திருமண நாள் நெருங்குகின்றதா?

திருமண ஏற்பாடுகளை எவ்வாறு இலகுவாக செய்யலாம் என்று யோசிக்கின்றீர்களா?

மாற்று மோதிரம் - திருமண கண்காட்சி.

எதிர்கால மணமக்கள் அவர்களின் சிறப்பு நாளினை மேலும் சிறப்பாக்க ஒரு சிறந்த வழி!

தமிழர்களின் பாரம்பரியத்தை நிலைநாட்டும் முகமாகவும், திருமண ஏற்பாடுகளை இலகுவாக்கும் முகமாகவும், சிறப்பு வாய்ந்த பல நிபுணர்களை யாழிற்கு செய்யும் விதமாகவும் நடைபெற இருக்கின்றது. இந்த மாபெரும் கண்காட்சியில் திருமணம் சார்ந்த அழகுக்கலை நிபுணர்கள், சிகை அலங்கார நிபுணர்கள், சமையற்கலை நிபுணர்கள், கேக் வடிவமைப்பாளர்கள், மணவறை அலங்கார நிபுணர்கள், அணிகல நிபுணர்கள், திருமண உடை வடிவமைப்பாளர்கள், புகைப்பட கலைஞர்கள் போன்ற பலர் தமது தயாரிப்புக்களையும் சேவைகளையும் பற்றி விவாதிக்கவும், நிரூப்பிக்கவும் இருக்கின்றனர். ஐம்பதிற்கும் மேற்பட்ட நிபுணர்கள் ஒரே கூரையின் கீழே ஒருங்கிணைக்கப்படவுள்ளனர். மேலும் மக்களுக்கு சிறப்பு சலுகைகள், பரிசு வவுச்சர்கள் வழங்கவுள்ளனர். பிரதானமாக இக்கண்காட்சியில் அழகுக்கலை பயிற்சி கருத்தரங்கு, மணப்பெண் அலங்கார கண்காட்சி, வரன் தேடுவோம் வாருங்கள் இடம்பெற இருக்கின்றது.

இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கவுள்ளது அருந்ததி. 2014ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கை தமிழர்களை பிரதானமாக கொண்டு இயங்கி வருகின்றது. ஒருவர் தனது வாழ்க்கை துணையை தேடவும், பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வீட்டிலிருந்தவாறே தேடுவதற்கு வருடத்திற்கு நான்கு முறை தம்மிடமுள்ள வரன்களை ஒருங்கிணைத்து திருமண பருவ இதழினை வெளியிடுகின்றது. மேலும் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களின் ஏற்பாடுகளை இலகுவாக்கும் விதமாக திருமண திட்டமிடல் காணப்படுகின்றது.

இக் கண்காட்சி எதிர்வரும் ஜீன் மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் 6 மணி வரை கொக்குவில் செல்வா பலஸ் இல் இடம்பெற இருக்கின்றது. மேலும் இந்நிகழ்ச்சி யாழ் வாழ் மக்களுக்கு ஒரு புதவித அனுபவமாகவும், பங்குபெறும் வழங்குனர்களுக்கு சிறந்த வாய்ப்பாகவும் அமையும்.

நம்முடைய முழமையான திருமண வழங்குனர்களின் ஆலோசனைகளை பெற்று மிகச்சிறந்த முறையில் உங்களது திருமண கொண்டாட்டத்தை அரங்கேற்றுங்கள்.



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### சேர் பொன் . இராமநாதன் நினைவுப் பேருரை

நாக இனக்குழுவும் இலங்கைத் தமிழரும்
(அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

பேருரை வழங்குனர்: Professor. P. Pushparatnam,
Senior Professor in History,
Department of History
Faculty of Arts,
University of Jaffna.

இடம் : கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி : 12.06.2018
நேரம் : பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்.

(N 6983)(4.17)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை

தமிழர் மத்தியில் இசை கிளைவிட்ட முறைமை
(ஆய்வு ஆற்றுகையாக)

பேருரை வழங்குனர்: Dr. S. Mounaguru,
(B.A (Hons), M.A, PGD in Edu, Ph.D
Retired Professor,
Former Dean, Faculty of Arts and Culture,
Eastern University

இடம் : கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி : 11.06.2018
நேரம் : பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்.

(N 6983)(4.17)

## காணி விற்பனைக்கு உண்டு

இல.84/7 அராலி வீதி, வண்ணார்
பண்ணைக் கோவிற்பற்று,
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
11½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS 17339) (14.17) **தொடர்பு: 077 029 4440**

## பணி நிலை வேண்டுகை

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் இயங்கும் முன்னணி தொழிற்சாலைக்கு உற்பத்தி பொருள்களை பொதியிடுவதற்கான பெண்தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். தகுதியானவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

(CS 17346) (14.17) **தொடர்பு: 021 205 8464**

## மரணஅறிவித்தல்கள்

### சேவியர் இரத்தினபாலன் போல்பிள்ளை (DADA)



பிறப்பு : 01.01.1946
நிறைவு : 04.06.2018

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் மூன்றாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம், கொழும்பு, பருத்தித்துறை தற்போது கனடாவில் வசித்தவருமான சேவியர் இரத்தினபாலன் போல்பிள்ளை 04.06.2018 காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி போல்பிள்ளை மற்றில்டா செல்வரட்ணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரசானந்தம், விஷாலாட்சி தம்பதிகளின் மருமகனும் ராசாத்தி என அழைக்கப்படும் சந்திரவதனாவின் அன்புக் கணவரும் சுபத்திரா(ஷோபி), சுகிலா(சுசி), சுரேஸ்ஆனந்(சுரேஸ்), சுஜாதா(சுஜா), சுபலட்சுமி(சுபா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மதியழகன், சான் தயாபரன், விக்கி வேலாயுதன், சங்கர், பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மார்க்கஸ், தனுஷன், சுவாதிகா, அபிஷன், சுருதி, சுரேன், சுபீக்ஷா, ஹரிஷின், சஹானா, சங்கீத், வைஷாலி, சௌமியா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் காலஞ்சென்றவர்களான இமானுவல் இரட்ணசிங்கம், அன்ரன் இரட்ணராஜா மற்றும் ஆன் தெரெசா இரட்ணமணி, ஜோஷிபி இரட்ணமலர் ஆகியோரின் சகோதரரும் எலிசபெத், மக்ஸி, யோகராஜா, நோயல் மற்றும் சிவனேந்திரா, இந்திரவதனா, பாலேந்திரா, விஜேந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மதி - 416 666 3631/ சான் - 416 567 7675**
**விக்கி - 416 457 7162/ சங்கர் - 416 362 5266**
**பிரபு - 947 244 8102**

(AC 509) (14.17)

### திருமதி பத்மாவதி வயிரவப்பிள்ளை



உடுவில் தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கு மற்றும் சிவகாமி அம்மன் கோயிலடி இணுவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி வயிரவப்பிள்ளை 08.06.2018 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்துவிட்டாார்.

அன்னார் கிருஸ்ணபிள்ளை வயிரவப்பிள்ளை (ஓய்வுபெற்ற காற்று வழங்கும் இயக்குநர் - காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா சிவஞ்ஞானம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவஞ்ஞானம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு கிருஸ்ணபிள்ளை, சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், சிவஞ்ஞானம் வீரேந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் சகோதரியும், சுதாகரன் (விற்பனை முகாமையாளர் - டுபாய்), பிரபாகரன் (ஆசிரியர் - யா/யூனியன்கல்லூரி-தெல்லிப்பழை), சுதர்ஜினி(அபிவிருத்தி உத்தியோகத்தர் - இடர் முகாமைத்துவம் - வலிதெற்கு பிரதேச செயலகம் உடுவில்) ஆகியோரின் பாசமிகு தாயும், கார்த்திப்பிரியா (ஆசிரியர் - டுபாய்), தமிழினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலிதெற்குப் பிரதேச செயலகம்), சோ.வரதராஜன் (பிராந்திய முகாமையாளர் அபான்ஸ் கம்பனி கிளிநொச்சி, முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, நடராசா, முருகேசு, தெய்வானைப்பிள்ளை, கனகம்மா ஆகி யோரின் மைத்துனரும், விருந்தா, றாதா துவாரகன், ஹரிஸ்மேனன், ஹரிஸ்மேனுஷன், காலஞ்சென்றவர்களான ஹரிஸ் மதுஷன், ஹரிஸ் மிதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக இணுவில்காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சிவகாமியம்மன் கோயிலடி, இணுவில்.** (cs.17330)(13.17) **கணவர், பிள்ளைகள், மருமக்கள்.**

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னாரில்..
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
IELTS Academic General FULL PART TIME
திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**பொன்னம்பலம் செங்கமலம்**
(கண்மணி)
(முன்னாள் தாதிய உத்தியோகத்தர் Manipay Green Memorial Hospital)



தோற்றம்
02.12.1937

மறைவு
12.06.2015

திதி: அபர பட்ச ஏகாதசி
[10.06.2018]

என்றும் எங்கள் மீது அன்பும் பாசமும் கொண்ட
எங்கள் தாயே! உங்கள் அன்பு முகம் கண்டு
மூன்றாண்டுகள் ஆனதம்மா உங்கள் அழகிய
முகமும் புன்சிரிப்பும் என்றும் எங்கள் முன்
நிழலாடுகின்றதே மூன்றாண்டுகள் என்ன
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்களை
நாங்கள் மறவோம் தாயே! உங்கள் ஆத்மா
என்றும் கண்ணன் பாதத்தில் சாந்தி பெறட்டும்.

6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. (CS.17314) (13.17) **குடும்பத்தினர்.**

## மரணஅறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சோமசுந்தரம்




மலர்வு 24.01.1943 உதிர்வு 07.06.2018


காக்கைய வளவு, புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் மன்னார் வீதி, பட்டாணிச்சூரையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சோமசுந்தரம் 07.06.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தட்செணமூர்த்தி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சதானந்தன், காலஞ்சென்ற நாகரட்ணம், லலிதாரட்ணம் (வவுனியா),கோகுலபாலன்(கனடா) காலஞ்சென்ற நித்தியகீர்த்தி, குணசீலன்(கொழும்பு), செல்வக்குமார்(ஜேர்மனி), இந்திராணி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதியழகன்(லண்டன்) காலஞ்சென்ற விஷ்னுபவன், விஜிதா(கனடா), கவிதா(ஆசிரியை - வ/கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயமாலினி, யோகராஜா(கனடா), யுட் பரதமாறன் (உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் - வவுனியா தெற்கு வலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரொகான், ரேஷ்மா, நிலவன், ஜனனி, அபிநாஸ், ஆதேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(AVA 00355) (14,17) **தகவல்: குடும்பத்தினர்.**

ES Printers
அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்


மக் பிரிண்ட் (MUG) 450/=

Books Binding


பனர் பிரிண்ட் (Banner), 35/=
Banners
தொடர்புகளுக்கு,
021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# போதை ஆபத்தான விதை

## போதைக்கு எதிரான கடமை வெளி நீண்டு பயணிக்க வேண்டும்

ப்ரியமதா பயஸ்



> சிறுவர்கள், பெரியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என அனைத்துத் தரப்பினரையும் ஒரு சிறு வலைப்பின்னலாக போதை எனும் அரக்கன் பின்னிப் பிணைத்து வைத்திருந்து காரியமாற்றுகின்றமை கவலை தரும் விடயம். குறிப்பாக, ஒரு உணவுப் பொருளையோ அல்லது அத்தியவசிய மருந்துப் பொருளையோ சந்தைப்படுத்துகின்ற போது, நம்நாட்டு உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்ற அல்லது பிற நாடுகளில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்கின்ற போது பிரத்தியேகமான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவற்றின் விற்பனை, பாவனை என்பன தொடர்பில் அரச நியமங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

**தனித்துவம்**

தமிழர்தாயகம் பண்பாட்டின் சீர்மைத்துவங்களை நிறைவாகவே கொண்டிருந்தது. அதன்வழி கலை, கலாசாரம், தனித்துவமான நடத்தைக்கோலம், பண்பியல்பு, தொழில் மேம்பாடு மற்றும் பொருண்மியச் செழிப்பு என்பவற்றை திறம்பட கட்டமைத்துக்கொண்டது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிற் தகைமை சார் உயர் கல்வி நிலை யங்கள், பொது அமைப்புகள், சமய நிறுவனங்கள் மற்றும் சமூக ஆற்றுப்படுத்தல் நிறுவன மையங்கள் என அத்தனையும் சமுதாய முன்னேற்றம் கருதி ஒருமித்த சிந்தனையோடு இயங்குநிலை பெற்றிருந்தது.

மாணவர்கள் கல்வியில் உயர் அடைவு கண்டனர். குடும்பங்களில் ஒற்றுமையும், ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக்கொள்ளும் நடத்தை வெளியும் சிறப்புற்று இருந்தன. சமூக இடைவெளிகளும் கீழோர் மேலோர் என்ற பகுபாட்டின் கருத்து முரண்பாடுகளும் தூரவிலகி நின்றன. ஒருவரை ஒருவர் அனுசரித்து நடக்கவும் சிநேகம் கொள்ளவும் சமூகத்தின் உயரிய பொருண்மைகள் வழிகாட்டின. ஒட்டு மொத்தத்தில் இலங்கையின் வட பகுதியில் தனித்துவமான இனத்துவ அடையாளமாக தமிழர்கள் நிலைப்படுத்தப்பட்டிருந்தனர். அதற்குரித்தான ஆரம்பங்களை மூன்று தசாப்த கால தமிழர் உரிமைக்கான விடுதலைப் போராட்டம் பூரணத்துவமான எழுதிப் பதியப்பட வேண்டிய இலக்கண இலக்கிய படைப்பாக்கமாக தந்திருந்து.

**அழிவின் பிரதிநிதித்துவம்**

இந்தநிலையிலே தமிழர் தாயகத்தில் நிலைபெற்று நின்று சதிராடிய இனவாதப் பேராயுதங்கள் கீழ்மைக் குணம் தரித்து கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிகழ்த்திய இன அழிப்பு போர் நீண்ட சிதைவுகளை தந்துள்ளது. பூரணத்துவமாக எழுதிப் பதியப்பட வேண்டிய இலக்கண இலக்கிய படைப்பாக்கங்களின் தனித்துவமான பக்கங்களை உயரிய எரிபற்றுநிலை கொண்டு சாம்பலாக்கியுள்ளது. குறிப்பாக தமிழர்கள் கொண்டிருந்த தனித்தன்மை வாய்ந்த கலாசாரம், தனித்துவமான நடத்தைக்கோலம், பண்பியல்புகளில் நீண்ட உடைவுகள் ஏற்பட்டுள்ளன. தமிழர் பிராந்தியங்களை இலக்கு வைத்து திட்டமிட்ட வகையிலான சமூக பிறழ்வு நிலைகள் விதைக்கப்பட்டுள்ளன. வேண்டத்தகாத சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நிகழ்கின்றன.

**பேதமை தரும் 'போதை'**

உண்மையில் நாட்டின் எப்பாகத்திலும் இல்லாத அளவுக்கு தரைப்படை, கடற்படை என இரு பெரும் படைப்பிரிவுகளின் பாதுகாப்பு அரண்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களை சூழ்ந்து கட்டமைக்கப்பட்டுள்ளன. மக்களின் அன்றாட செயல்வினைகள் 24 மணிநேரமும் கண்காணிப்பு நிலைக்குள் பின்னப்பட்டுள்ளன. ஆனாலும் "பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விடும்" செயற்காரியமாக 'போதை' என்ற அரக்கனின் சுதந்திரமான உலவுகை நடந்தேறி வருகிறது. தமிழ் சமூகத்தை சீர்குலைக்கும் மிக முக்கிய பிரச்சினையாக உருவெடுத்து நிற்கிறது. அன்றாட வாழ்வியல் வெளி தாண்டி ஜனநாயக விழுமியங்களை பற்றிப் பிடித்து அதனையும் ஆட்டிப் படைக்கும் மிகப் பெரும் சக்தியாகவும் போதைப்பொருள் பாவனை ஊழ்வினைகளை உவந்திருக்கிறது.


**கடமைகளின் பிறழ்வு**

சிறுவர்கள், பெரியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என அனைத்துத் தரப்பினரையும் ஒரு சிறு வலைப்பின்னலாக போதை எனும் அரக்கன் பின்னிப் பிணைத்து வைத்திருந்து காரியமாற்றுகின்றமை கவலை தரும் விடயம். குறிப்பாக, ஒரு உணவுப் பொருளையோ அல்லது அத்தியவசிய மருந்துப் பொருளையோ சந்தைப்படுத்துகின்ற போது, நம்நாட்டு உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்ற அல்லது பிற நாடுகளில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்கின்ற போது பிரத்தியேகமான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவற்றின் விற்பனை, பாவனை என்பன தொடர்பில் அரச நியமங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. 'சந்தை விலை, ஏற்றுமதி வரி, இறக்குமதி, வரி, நுகர்வு' என அரச கட்டுமானங்களின் நியதிச் சட்டங்கள் பிரயோகம் பெறுகின்றன. ஆனால் போதைப் பொருள்களின் பரிமாற்றமும் நுகர்வும் கட்டுப்பாடுகள் இன்றி எங்கும் பரம்பலடைந்துள்ளன. அவற்றின் விற்பனையும் பரிமாற்றமும் தங்குதடையின்றி இடம்பெற்று வருகிறது.

வீதியில் மயக்கமுற்று வீழ்ந்து கிடப்பவனை பரிசோதித்தால் என்ன, கத்தியைத் தூக்கிக் கொண்டு அயலவனை ஓட ஓட விரட்டுபவனை பிடித்துப் பரிசோதித்தால் என்ன, பாடசாலைகளில் முரண்பாடு கொள்ளும் மாணவர், மாணவியர், ஆசிரியர், அரச உத்தியோகத்தர்களை அணுகினால் என்ன அனைவருமே போதைக்கு அடிமையாகி இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலமை உருவாகி இருக்கிறது. இத்துணை ஆதாரங்களை வைத்துக் கொண்டு போதை என்ற கருவிகளை இயங்குநிலை பெறச் செய்பவர்களை இனங்கண்டு கொள்ள முடியாமல் போனமை சாபக்கேடு. இத்தகு நிலைக்கு இலங்கை காவற் துறையினரும் இராணுவத்தினரும் துணைபோகின்றனரா...? போதியளவு தடயங்கள், ஆதாரங்கள், மூலங்கள் நாளாந்தம் கிடைக்கின்ற போதும், ஒரு சுற்றோட்டமாக நிகழ்ந்தேறுகின்ற போதையின் அதீத ஊடாட்டங்களையும், ஊட்டங்களையும் ஏன் கட்டுப்படுத்த முடியாமல் போனது...? அரச இயந்திரம் இதற்கு முண்டுகொடுக்கிறதா...?

**விழிப்புணர்வு வேண்டும்**

தமிழர்கள் விழிப்படைய வேண்டும். இதிலிருந்து மீண்டு கொள்வது பற்றி சிந்திக்க வேண்டும். தனித்து ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், மகஜர்கள் கையளிப்பு என போதைக்கு எதிரான கடமை வெளியை குறுக்கிக் கொள்ளாமல் நிரந்தரமான தீர்வுகளை நாடிப் பயணிக்க முன்வர வேண்டும்.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீண்டு வரும் சாதி!

வரணியில் உள்ள ஆலயம் ஒன்றில் மண் அள்ளப் பயன்படும் ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் தேர் இழுக்கப்பட்டது என்கிற செய்தியைத் தொடர்ந்து தமிழர்கள் மத்தியில் உள்ள சாதி முறைமை குறித்த கதையாடல்கள் சமூக வலைத் தளங்களில் பலமாக ஒலிக்கின்றன. புலத்திலும் அதன் சலசலப்பைக் கேட்க முடிகின்றது.

ஆலய வீதியின் ஓரிடத்தில் காணப்படும் இடக்குமுடக்கான வளைவில் வடம் கொண்டு தேரை இழுக்க முடியாது என்பதால், இயந்திரம் கொண்டு அதனை இழுக்க முடிவு செய்ததாகவும், ஆலயத்தை வணங்கும் அனைத்துத் தரப்பு மக்களும் இணைந்தே அந்த முடிவை எடுத்ததாகவும், இது ஒரு சாதியப் பிரிப்பு நடவடிக்கையின் அங்கம் அல்ல என்றும் ஆலய நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்படுகின்றபோதிலும், தேரை இயந்திரம் இழுத்துவரும் ஒளிப்படங்கள் வெளியானதைத் தொடர்ந்து சாதி பற்றிய விவாதங்கள் மீண்டும் ஒரு தடவை மடை திறந்திருக்கின்றன.

இன்றும்கூடப் பல ஆலயங்களிலே சாதிப் பாகுபாடு இருப்பதைக் கண்கூடாகக் காணலாம் என்று சைவ மகா சபையும் தெரிவித்திருக்கிறது. அந்த நிலமையை மாற்றுவதற்குப் ஏ்வரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சபையின் பொதுச் செயலாளர் தனது வருத்தத்தையும் தெரிவித்திருக்கிறார்.

தமிழர்கள் மத்தியில் வேரோடிப் போயிருக்கும் சாதியம் போர்க் காலங்களில் கொஞ்சம் அடங்கிப் போயிருந்த நிலையில், போருக்குப் பின்னரான காலத்தில் மீண்டும் தளிர்த்துத் தலையெடுக்கிறதா என்கிற கேள்வியை இந்த விவாதங்களும் செய்திகளும் எழுப்புகின்றன. சாதிகள் இல்லையடி பாப்பா என்றார் மகாகவி பாரதி. ஆனால், அவர் காலத்திற்குப் பின்னும் சாதியை விட்டுவிடாமல் இறுக்கப் பற்றிப் பிடித்துக்கொண்டு திரிகின்றது தமிழ் இனம்.

போர்க் காலங்களில், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாதிய ஒழிப்பு என்பது உளச்சுத்தியோடான அரசியல் கொள்கையாக இருந்தது. அதனால் சாதியம் தமிழர்கள் மத்தியில் கொஞ்சம்கட்டுக்குள்இருந்தாலும், அதனைஅவர்களாலும் முற்றில்மாக அழித்துவிட முடியவில்லை. புலிகளுக்குப் பின்னரான காலத்தில் பண்பாடு, மரபு, பாரம்பரியம் என்கிற பெயர்களில் சாதி மீண்டும் மெல்ல மெல்லத் தன்னை இனங்காட்டி வருகின்றது.

மீண்டும் அறிமுகமாகியுள்ள தொகுதிவாரித் தேர்தல் முறைமை, இந்த சாதியத்துக்கு உரம் இட்டுத் தண்ணீர் பாய்ச்சியிருக்கிறது. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் பல வேட்பாளர்கள் சாதிய அடிப்படையிலேயே முன்னணி அரசியல் கட்சிகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்படி மறுக்கப்பட்ட சில பகுதிகளில் சுயேச்சையாக நிற்பதற்கும், வெல்வதற்கும், சாதியமே பெரும் பங்காற்றியது என்பதையும் மறந்துவிட முடியாது.

இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் ஓர் இனம், தனக்குள் இருக்கும் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட மறுப்பதும், 21ஆம் நூற்றாண்டிலும் சாதியத்துக்குத் தீனிபோட்டு வளர்ப்பதும், ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடு. வளர்ந்த நாகரீக சமூகம் ஒன்று செய்யும் செயலல்ல. நீதியான, நியாயமான, சமத்துவமான வாழ்வு அனைவருக்கும் கிடைப்பதற்கானதாகவே தமிழர்களின் விடுதலைப் போராட்டம் முன்னகர்த்தப்படவேண்டும். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் இந்த நேர்மையான அரசியல் சிந்தனை அனேகமாக எல்லா இயக்கங்களிடமும், கட்சிகளிடமும் வெளிப்பட்டன. ஆனால் இன்று, சாதியத்தை வெளிப்படையாக எதிர்த்துச் செயற்படவோ குரல்கொடுக்கவோ முடியாதவைகளாக அவை வாக்கு வேட்டை அரசியலுக்குள் குறுகிப் போயுள்ளன.

சமூக அக்கறையுள்ள அமைப்புகளே இந்தச் சாதி எதிர்ப்பு நடவடிக்கைகளில் அதிக அக்கறையும் வேகமும் செலுத்தவேண்டும். வரணி ஆலயத்தில் நடந்த சம்பவம் சாதிய ரீதியான முடிவுகளின் அடிப்படையில் எட்டப்பட்டதாக இல்லாமல்கூட இருக்கலாம். ஆனால், சாதியம் தமிழர்கள் மத்தியில் ஒரு புற்றுநோயாகப் பரவிக் கிடப்பது பற்றிய விவாதத்தை அது கிளப்பிவிட்டிருப்பது காலத் தேவை! இனியும் சாதியால் பிளவுண்டிராமல் நாம் அனைவரும் மனிதர்களாக ஒன்றிணைவதற்கான வழிவகைகளை உரிய தரப்புகள் ஆராய்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம்.

# கவலைக்கும் பரிகாசத்துக்குமுரிய இலங்கை அரசியல் செயற்பாடுகள்

**கடந்த 7ஆம் திகதிய 'டெயிலிமிரர்' பத்திரிகையில் வெளியான அரசியல் கருத்து குறித்த பத்தியின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது**

தமிழில்- ஆனந்த்

தனிநாடு கோரி மூன்று தசாப்தகாலமாக போர் புரிந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (பலநாடுகளினால் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டவர்கள்) கூட எத்தனையோ சந்தர்ப்பங்களில், இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர். இந்த நிலையில் அந்த நீண்டகாலப் போர் முடிந்து நாடு தற்பொழுது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை, அரசியல் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, நாட்டிலுள்ள சகல கட்சிகளும் தங்களுக்கிடையேயான பேதங்களை மறந்து ஒன்றாய் அமர்ந்து கூடிப்பேசி நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டிய காலகட்டமிது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதொரு விடயம்தான்.

**உறுதிநிலை அற்றதாக இலங்கையின் அரசியலும் பொருளாதாரத் தன்மையும்**

இலங்கை தற்பொழுது, அரசியலிலும் சரி, பொருளாதாரத்திலும் சரி ஒரு உறுதித் தன்மையுடன் இல்லை என்பது தெளிவாகப் புரியுமொன்று. அற்ப காரணங்களுக்காக அரசியல் விளையாட்டில் ஈடுபட்டுள்ள இலங்கையிலுள்ள அரச தரப்பு மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அனைவரும் தங்களை நிர்க்கதியாக விட்டுவிட்டார்கள் என சாதாரண பொதுமக்கள் அச்சத்துடனேயே வாழ்கிறார்கள். ஒரு முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த அரசியல் நாடகத்தில், தினமும் ஒன்று அல்லது இரண்டு பாகங்கள்அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. யார் எந்தக் கட்சியிலிருக்கிறார்க ளென்பதும், ஒரு கட்சியில்எத்தனைஉறுப்பினர்கள்உள்ளனர் போன்ற என்ற விடயம்கூடத் தெளிவாக இல்லாத ஒரு குழப்பநிலை நிலவுகின்றது. பரிதாபத்திற்குரிய வாக்காளர்களோ ஏதாவது ஒரு அதிசயம், அற்புதம் நடந்து எங்கள் அரசியல் தலைவர்கள் விழித்தெ ழுந்து இந்த நாட்டின் அரசியலில் மாற்றமொன்றைக் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் கடவுளைப் பிரார்த்தித்தபடியிருக்கிறார்கள்.



**எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்று செயற்படும் கூட்டு எதிரணி**

உண்மையிலேயே எங்கள் தலைவர்கள் இந்த நாட்டை நேசிப்பவர்களாக இருந்தால், அல்லது இந்த நாட்டின் எதிர்கால சுபீட்சம் குறித்து அக்கறை காட்டி, நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்ல விரும்பினால், அவர்கள் அனைவரும்கூடி நாட்டின் பிரச்சினைகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வொன்றை எட்டமுனைய வேண்டும். அரசுக்குள்ளேயே பலதரப்பட்ட உட்பூசல்கள் தலைவிரித்தாடும் நிலையில், கூட்டு எதிரணியினரோ, எரிகிற நெருப்பில் எண்ணை ஊற்றுவதுபோல நாட்டைக் குழப்புவதற்காக தொழில் சங்க நடவடிக்கைகள், பல்கலைக்கழக மாணவர்கள், மருத்துவர்கள் போன்றவர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்கள் போன்றவற்றை சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தூண்டுதலளித்து முன்னெடுக்க வைப்பிக்கின்றனர். இந்த நடவடிக்கைகள் எல்லாம் எந்த அளவுக்குப் பொதுமக்களையும், அதிலும் குறிப்பாக ஏழை மக்களை எவ்வளவு தூரம் மனஉளச்சலுக்கு, பாதிப்பிற்கு உள்ளாக்கும் ஏ்னபதனை எவருமே உணர்வதில்லை. அத்தியாவசிய சேவைகள் மட்டுமல்ல இந்தப் போராட்டக்காரர்களின் நடவடிக்கைகளால் பாதைகள் மூடப்பட்டு, போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டு ஏற்கனவே விரக்தி அடைந்திருக்கும். பொதுமக்களை அரசு மீது வெறுப்புக் கொள்ள வைக்க இத்தகைய செயற்பாடுகள் காரணமாகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சி முடங்கிப்போயிருக்கும் இன்றைய நிலையில், வாழ்க்கைச் செலவுகள் "ரொக்கட்" வேகத்தில் உயர்ந்து சென்றுகொண்டிருக்கின்றன. அதே வேளை அரசிடமிருந்து எந்தச் சலுகைகளும் கிடைக்காத நிலையில், குறைவில்லாமல் பெருமளவில் வரிகள் மட்டுமே நாட்டு மக்களது தலைகளில் சுமத்தப்படு கின்றன.

அதேவேளை இந்த நாட்டின் அரச தலைவரோ, தலைமை அமைச்சரோ, அல்லது கூட்டு எதிரணியின் தலைமையோ இந்தத் துரதிஷ்டவசமான அரசியல் சிக்கல்களிலிருந்து நாட்டை மீட்பதற்காக முத்தரப்பினரும் ஒன்றுகூடிக் கலந்துரையாடி எப்படியாவது இந்த அரசியல் சகதியிலிருந்து வெளியே வர முயலவேண்டும். அது இன்றைய காலத்தின் முக்கிய தேவை ஆகியுள்ளது. அதை விடுத்து ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் குறை கூறிக்கொண்டிருப்பதில் பயனேதுமில்லை. நாட்டுமக்களில் ஒரு தரப்பினர் இரவும் பகலும் அழுது புலம்பிக் கொண்டிருக்க, ஒருசிலர் கொலை வெறிபிடித்து அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

**நாடாளுமன்ற உறுப்பினர்களது நாகரீகமற்ற அரசியல் முன்னெடுப்புக்கள்**

கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, கட்சித் தலைவர்களுக்கும் கூட யார் யார் தங்கள் கட்சி உறுப்பினர்கள், யார் எதிர்க் கட்சி உறுப்பினர் என்பது குழப்பமான நிலையிலேயே உள்ளதாக எண்ண வைக்கின்றது. தலைமை அமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்ததனூடாக அரசிலிருந்தும், தன் பிரதி சபாநாயகர் பதவியிலிருந்தும் விலகி, அரசில் மட்டுமல்லாது இலங்கை கிரிக்கெட் சபையிலிருந்தும் வெளியேற்றப்பட்ட திலங்க சுமத்திபாலவின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்களிப்பில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக மொனராகல மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாராசிரியின் பெயரை ஐ.தே.கட்சி முன்மொழிய, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக, முன்னாள் அமைச்சர் சுதர்சினி பெர்ணான்டுபுள்ளேயின் பெயரை முன்மொழிந்துள்ளார். இந்த இரண்டு முன்னாள் அமைச்சர்களுமே, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர்கள் என்பது மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களுமாவார்கள். ஆனால் இப்போது அவர்கள் நாடாளுமன்றத்தில் அமர்ந்திருப்பதோ எதிர்க்கட்சி வரிசையில், பிரதி சபாநாயகர் பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது ஆனந்த குமாரசிரிக்கு சார்பாக 98வாக்குகள் கிட்டின. அவருக்கு எதிராகக் களமிறங்கிய சுதர்சினி பெர்ணான்டுபுள்ளே 53வாக்குகளைப் பெற்று தோல்வியைத் தழுவ, ஆனந்த குமாரசிரி பிரதிச் சபாநாயகராக தெரிவானார். இதுவோர் இரகசிய வாக்களிப்பாகையால் யார் எவருக்கு வாக்களித்தார்கள் என்பது தெரியவரவில்லை என்பது மட்டுமல்ல, 70நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. கூட்டு எதிரணியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் வாக்களிப்பு ஆரம்பமாகிய வேளையில் சபையை விட்டு வெளியேறியுள்ளனர். இதுதான் குழப்பக்காரர்களி னதும், கட்சித்தாவல்காரர்களினதும் செயற்பாடுகளாகும். இன்னும் எஞ்சியிருக்கும் 18மாதங்களிளாவது ஐக்கிய தேசியக் கட்சியும் மைத்திரிபாலவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட்டு, அதிகமான வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்து, வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கி நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதே இந்த நாட்டுமக்களது எதிர்பார்ப்பாகும்.

எஸ்.யேசுதாஸ்

# குடாக்கடலில் உயிர் பறிக்கப்பட்ட குருநகர் மீனவர்களது நினைவுகளை இரை மீட்டுவோம்

## குருநகர் மீனவர்களின் குருதியால் குடாக்கடல் சிவந்த துயர நாள்

(1986ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10 ஆம் திகதி அதிகாலை வேளையில் மண்டைதீவுக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த 31 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடலில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் 32ஆவது நினைவுநாள் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது)



**1986**ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10ஆம் திகதி "சந்தியோகுமையோரே, விடியப்போகும் இண்டைய நாளிலை நல்ல உழைப்பைத் தந்து எங்கள் குடும்பங்கள் இனிதே வாழ அருள்தாரும்" என்ற வேண்டுதலுடன் மங்கிய ஒளியில் தூங்கிக் கொண்டிருக்கும் தமது மனைவி, பெற்றோர், பிள்ளைகள், உறவுகளின் முகங்களைக் கண்ணில் வைத்தபடி கடல்தொழிலுக்கு தயாராகிக் கொண்டிருந்தனர் குருநகர் மீனவர் சமூக தொழிலாளிகள்.

அன்றைய தினம் தமக்கு நிகழப்போகும் கோர அனர்த்தத்தை அறியாத 31மீனவர்கள் பல எதிர்பார்ப்புக்கள், கனவுகள், இலக்குகளுடன் இருளின் மத்தியில் குருநகர் இறங்குதுறையில் கம்பீரமாகத் தரித்துநின்ற "தூயஒளி" படகில் கரைவலைத் தொழிலுக்காகப் புறப்பட்டனர். கடல் அலையையும், இருளையும் கிழித்துக் கொண்டு அதிகாலை வேளை தூயஒளி மண்டைதீவுக் கடல் பரப்பையடைந்தது. கரைவலை மடி இழக்கப் பலம் தேவை என்பதால் ஒரு படகில் அனேகர் செல்வது வழமை.

**கொலைவெறியுடன் கடற்படையினர் செயற்பட்டனர்**

குடாக்கடலில் மீன்பிடித்தடை விதிக்கப்பட்டமையால், ஆழ்கடலில் நீளக் கால் பதித்த மீனவர்கள், அச்சமின்றி சிறு கடலில் கரையோரத் தொழிலை தமது வாழ்வாதாரத்துக்காக மேற்கொண்டிருந்த வேளை அது. மண்டைதீவுக் கடற்படை முகாமிலிருந்து வேட்டொலிகள் கேட்டதையடுத்து சுறுசுறுப்படைந்த அப்பாவி மீனவர்கள் விரைவாக பாடு வளைத்துக் கொண்டு புறப்பட முயற்சித்தனர்.

கண்ணிமைக்கும் பொழுதில் கடற்படையினரின் அதிகவேக ரோந்துப் படகு சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைப் பொழிந்தபடி அவர்களைச் சூழ்ந்து கொண்டது. சிங்கள அரசின் கறுப்புச்சட்டையணிந்த கைக்கூலிக் குண்டர்கள் நிராயுதபாணிகளான அப்பாவித் தொழிலாளர்கள் மீது "செத்த பாம்மை" அடிக்கும் தமது வீரத்தைக் காட்ட ஆரம்பித்தனர்.

"ஐயா, எங்களை ஒண்டும் செய்யாதையுங்கோ. எங்களை நம்பியிருக்கிற குடும்பங்கள், சிறுவர்கள், மழலைகளுக்காக எண்டாலும் எங்களை விட்டிடுங்கோ. நாங்கள் என்ன தப்புச் செய்தனாங்கள்?" என்று அந்த மீனவர்கள் காலில் விழுந்து கெஞ்சக் கெஞ்ச கடற்படையினரோ, தமது கொலைவெறியை அரங்கேற்றினர். துப்பாக்கியாலும் கூரிய ஆயுதங்களாலும் சுட்டும் வெட்டியும் கொன்று குவித்தனர். உடல்களை உருக்குலைத்தனர்.

தந்தையின் கண்ணெதிரே தனையர்களும், பிள்ளைகள் முன்னே பெற்றவரும், நண்பர் மடியில் நண்பர்களுமாக, சிறுவர், முதியவர், இளையோர் அடங்கலாக 31பேரும் கொன்று குவிக்கப்பட்டனர். கடவுளே எங்களைக் காப்பாற்று, என்ற கூக்குரலும் அழுகுரலும் சோளகக் காற்றோடு கரைந்து போயின. துள்ளி எழும் அலைகள் என்ன செய்யும். இறந்தோரது குருதியால் சிவந்து சென்றன. பேரினவாதத்தின் இனப்படுகொலை ஊழித்தாண்டவத்தில் "தூயஒளி" இரத்தத்தைச் சுமந்தது. உப்புக்காற்றில் உரமேறி, உறுதி பெற்ற உழைப்பாளிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டு சாய்க்கப்பட்டனர்.

**அப்பாவி மீனவர்களது உயிர்கள் பறிக்கப்பட்டதேன்?**

ஆண்டாண்டு காலமாய்த் தாம் ஆண்டு வந்த கடலிலே மிருகத்தனமான தாக்குதலில் மாண்டுபோக இவர்கள் செய்த குற்றமென்ன? தமிழனாகப் பிறந்ததா? தமிழனாக வாழும் உரிமை கேட்டதா? தமிழ் மண்ணை, மொழியை நேசித்ததா? தமது கடலில் உழைக்கச் சென்றதா?

அப்பாவிகளைக் கொன்று கோட்டையைப் பிடித்துவிட்ட நினைப்பில் மார்தட்டி நின்ற படையினரை நோக்கி மற்றொரு படகு வருவதைக் கண்டதும் தப்பினோம் பிழைத்தோமென விசைப்படகு காற்றாகப் பறந்தது. ஏனெனில் அங்கு வந்தது வீரமறவர்களின் கடற்கலன். விடுதலைப் போராளிகளும் கடற்படையினரும் கலைபட்டு சுடுபட்ட காலம் அது. அவர்கள் இறந்த மீனவர்களின் உடல்களை குருநகர் சனசமூக நிலையத்திற்கு கொண்டுவந்தார்கள்.

இத்துயரச் செய்தி குருநகர் பகுதி மக்களை மட்டுமல்ல, தமிழ் மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. குருநகர் சோகத்தில் மூழ்கியது. மடி இழுக்கச் சென்றவர்கள் விடிவைத் தருவார்கள் என்றிருந்த உறவுகளின் எதிர்காலம் தவிடுபொடியானது. குருதிதோய்ந்த உடல்களை கண்ணீரால் கழுவி கட்டியணைத்து கதறியழுதனர். வீட்டுக்கு வீடு அழுகுரல்களும், வீதிக்கு வீதி மரண ஓலங்களும், மனதை உறையவைத்தன. வயிற்றுப் பிழைப்பிற்குச் சென்றோரை வதைத்துக் கொன்றுவிட்டு போராளிகளைக் கொன்றோமென அரசபடைகள் தம்பட்டம் அடித்தன.

திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இந்த இனப்படுகொலை நடந்தேறி இன்றுடன் 32வருடங்கள் நிறைவடைகின்றன. துயரம் நிறைந்த இருண்ட நாளின் நினை வேந்தல்கள் குருநகரின் பல இடங்களிலும் இன்று நடை பெறுவதோடு குருநகர் மக்கள் ஒவ்வொருவரும் அவர்களை நினைத்துஅஞ்சலித்து பிரார்த்திக்கின்றோம்.

**தமிழ்மக்களது உரிமைக்குரலை அடக்கி ஒடுக்குவதே படையினரது குறிக்கோள்**

தமிழ் மக்களின் உரிமை கோரலையும், சுதந்திர வேட்கையையும் நசுக்கி, அடக்கி, ஒடுக்குவதில் பேரினவாதிகளும் படையினரும் முனைப்புக்காட்டுவதையே இவ்வாறான மனிதக் கொலைகள் எடுத்தியம்புகின்றன. குமுதினிப்படுகொலை, நவாலிப்படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, முள்ளிவாய்க்கால் இன அழிப்புப் படுகொலை என்பவை இவற்றுக்குச் சான்றுகளாக உள்ளன. விடுதலைப் போராட்டக் காலத்தில் சந்தேகத்தின் பெயரால் மண்டைதீவில் கொல்லப்பட்ட குருநகர் மீன்பிடித் தொழிலாளர்களை மீனவப் போராளிகள் என அழைப்பதில் தவறில்லை. ஏனெனில் போராட்டப் படிகளைத் தாண்ட இத்தகைய சாவுகளும் வலுச்சேர்த்தன என்பது உண்மையாகும்.

இவ்வாறான இழப்புக்களை ஈடுசெய்யும் வகையில் தகுந்த தீர்வை வழங்கப் பின்னடித்து வரும் அரசை, சர்வதேச சமூகம் கண்டுகொள்ளாது, மௌனம் சாதிப்பது கவலைக்குரியதாகும். வாழும், ஆளும் உரிமையுடன் கூடிய அமைதித் தீர்வே அநியாயமாக உயிரிழந்தோரின் ஆன்மாக்களுக்கு இளைப்பாற்றியை, சாந்தியைத் தரும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

இன்றும்கூட தமிழ் மீனவர்களின் துயர்கள் இடர்கள் தீர்ந்தபாடில்லை. கடல்வள அபகரிப்பு, கடற்தொழில் பகுதிகளில் ஆக்கிரமிப்பு, அத்துமீறல்கள் தொடர்ந்து திட்டமிட்டு நிகழ்த்தப்படுகின்றன.

இன ஒடுக்குமுறையாளர்களினால் பொது மக்களுக்கு வலிந்து ஏற்படுத்தப்படும் உயிர் இழப்புக்கள், சொத்தழிப்புக்கள், உரிமை மறுப்புக்கள் விடுதலை உணர்விலிருந்து அந்தப் பொதுமக்களை அந்நியப்படுத்தும் என்பது தப்புக்கணக்காகும். மாறாக மேலும் மேலும் எழுச்சி கொண்டு உறுதியுடன் முன்செல்ல உத்வேகம் அளிக்கும் என்பதே வரலாறுகள் புகட்டும் யதார்த்தமான உண்மையாகும்.

தூயஒளி படகில் படுகொலை செய்யப்பட்டோரின் உடல்கள் மரியாள் சேமக்காலையில் ஒன்றாக வைக்கப்பட்டு பெரியதோர் கல்லறை அமைக்கப்பட்டுள்ளது. குருநகர் சனசமூக நிலைய அருகில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி 1995ஆம் அண்டு இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டபோதிலும், தற்போது எழுந்து நிற்கும் புதிய நினைவுத் தூபி அந்தக் குருநகர் மீனவர்களது மனிதப் படுகொர்லையை பறைசாற்றி நிற்கின்றது. நீங்காத துயர வலிகளைத் தந்த அரச பயங்கரவாதமும் இறந்தோரது தியாகங்களும் என்றும் மறக்க முடியாதவையே.

## ஆசிரியருக்கான கடிதம்

# சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியை புனரமைப்பது எப்போது?

வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஆனைக்கோட்டை உப அலுவலக எல்லைக்குள் அமைந்திருக்கும் சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதி குறைந்தது 30 வருடங்களுக்கு மேலாக எந்தவித திருத்தமோ, மீள்புனரமைப்போ செய்யப்படாமல் இருக்கின்றது.

இந்த வீதி உயர்ந்தும், பதிந்தும், குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. மழை நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்கின்றது. நீர்வழிந்தோடும் வாய்க்கால்கள் தூர்ந்து, நீர் வழிந்தோட முடியாத நிலை உள்ளது. வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட எல்லா வீதிகளும் செப்பனிடப்படும் நிலையில் இந்த ஐயனார் வீதி மட்டும் புறக்கணிக்கப்படுவது குறித்து இந்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள். கடந்த காலங்களில் பிரதேச சபையில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் கூட இவ்வீதி மின் திருத்தம் பற்றி எந்தவித அக்கறையும் கொள்ளாதது மிகவும் மனவருத்தத்திற்குரியது. தற்போது பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் புதிய உறுப்பினர்களாவது இவ்வீதியைப் பார்வையிட்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலாவது நிதி ஒதுக்கீடு செய்து இவ்வீதியை காலக்கிரமத்தில் புனரமைக்க ஆவன செய்யுமாறு சண்டிலிப்பாய் ஐயனார் வீதி பொதுமக்கள் சார்பாக மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*க.கனகசபை*
*சண்டிலிப்பாய்*

# உடற்பருமனும் உணவுப் பயன்பாடும்

## கவனத்தில் கொள்ள வேண்டிய செயல்வினைகள்

தேக ஆரோக்கியத்தில் பல்வேறுபட்ட ஆபத்தின் அறிகுறிகள் ஏற்படுவதற்கு உடற்பருமன் அதிகரிப்பு காரணமாக அமைகிறது. அந்தவகையிலே அதிக கவனத்துக்குரிய உறுப்புக்கள் வரிசையில் மூளை, இதயம், சதையி, நாளங்கள் மற்றும் கால் மூட்டு என்பன இடம்பிடித்துள்ளன. இவை முறையே பக்கவாதம் ஏற்படும் சந்தர்ப்பங்களை தவிர்த்தல், இதய நோய்களில் இருந்து தப்பித்தல், நீரிழிவிலிருந்து ஈரல் சிறுநீரகங்களை பாதுகாத்தல், நாளப்புடைப்பு மற்றும் மூட்டுவாத நோய்களில் இருந்து மீள்தல் என்ற அடிப்படைகளின் வழி அதிக அவதானம் கொள்ளப்படுகின்றன.

உயரத்துக்கு ஏற்ப உடற்பருமன் இருக்க வேண்டும். அதுவே நோயற்ற வாழ்வுக்கு அத்தியாவசியமானது. எனவே ஒவ்வொருவரும் தங்களுடைய உடற்பருமன் தொடர்பில் தெளிவும் கரிசனையும் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பெறுமானம் 'உடற் திணவுச் சுட்டி' (BMI) என அழைக்கப்படுகிறது. இந்தப் பெறுமானத்தை அறிந்து கொள்வதற்கு பின்வரும் கணிப்பீட்டு முறையை பின்பற்ற வேண்டும்.

### உடற் திணவுச் சுட்டி

$$\text{உடற் திணிவுச் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கிலோ கிராம்)}}{\text{உயரம்} \times \text{உயரம் (மீற்றர்)}^2}$$

இங்கு, உடற் திணவுச் சுட்டியை அறிந்துகொள்வதற்கு ஒருவர் தனது உடற்பருமனை கிலோகிராமில் அளவிட்டுக் கொள்ள வேண்டும். பின்பு தனது உயரத்தை மீற்றரில் அளவிட வேண்டும். தொடர்ந்து உடற் திணவுச் சுட்டிக்குரிய சமன்பாட்டினை பிரயோகித்து உடற்பருமனை உயரத்தின் வர்க்கத்தால் (உயரம் x உயரம் (மீற்றர்)$^{2}$) வகுத்துக் கொள்ள வேண்டும். தற்போது கிடைக்கப்பெறுகின்ற பெறுமானம் குறித்த நபரின் 'உடற் திணவுச் சுட்டி' ஆக அமையும்.

### நிறை மற்றும் உயர அளவீடு

நிறையை அளவிடும் போது பாதணியை அகற்றி சாதாரண உடையில் இருக்க வேண்டும். அதேவேளை உயரத்தை அளவிடும் போது பாதணிகள், தொப்பி மற்றும் முடியில் உள்ள இணைப்பு ஊசி போன்றவற்றை அகற்ற வேண்டும். உதாரணம்: ஒருவருடைய நிறை 50 கிலோகிராம் ஆகவும், உயரம் 150 சென்ரி மீற்றர்கள் ஆகவும் இருப்பின்,

$$\text{உடற் திணிவுச் சுட்டி (BMI)} = \frac{\text{50 கி.கி}}{1.5 \times 1.5 \text{(மீற்றர்)}^2}$$

$$= 22.2 \text{ (உடற் திணிவுச் சுட்டி)}$$

### உடற் திணிவுச் சுட்டியும் உடற்பருமன் ஒப்பீடும்

இங்கு; உடற் திணிவுச் சுட்டியின் பெறுமானம் 18.5 இற்கும் குறைவாக காணப்படின் அவர்கள் மந்தபோசனம் உள்ளவர்களாக கணிக்கப்படுவர். அதேபோன்று உடற் திணிவுச் சுட்டியின் பெறுமானம் 18.5 தொடக்கம் 25 இற்கு இடைப்பட்டதாக அமையின் உயரத்துக்கு ஏற்ற பருமன் உடையவராக கருதப்படுவர். உடற் திணவுச் சுட்டெண் 25 தொடக்கம் 30 இற்கு இடைப்பட்டதாக அமையும் போது உடற் பருமன் அதிகம் உள்ளவராக கொள்ளப்படுவர். இந்தப் பெறுமானம் 30 இனை விடவும் அதிகரிக்கும் போது கட்டு மீறிய உடற்பருமனை உடையவர்களாக அவதானம் கொள்ளப்படுவர்.

உடற் திணிவுச் சுட்டியின் பெறுமானம் சரியான அளவிடை வகுப்பில் இல்லாத போது, பொருத்தமான உணவு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். உடற் பயிற்சிகளில் ஈடுபடலாம். பிரதானமாக பதற்ற நிலையை தவிர்த்து கொள்வதற்கு சாதாரணமாக ஒரு முறையைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம்.




### மந்த போசனத்தன்மையில் இருந்து விடுபடுதல்

- சத்துள்ள உணவுகளை உள்ளெடுக்க வேண்டும்.
- மாப்பொருள் மற்றும் கொழுப்பு உணவுகளால் தேவையான சக்தியை பெற்றுக்கொள்ளலாம். (உதாரணம் - தானியவகை, கிழங்குவகை, மரமுந்திரிகை, நிலக்கடலை)
- புரதம் அடங்கிய உணவுகளை உள்ளெடுப்பதனால் உடல் என்பு மற்றும் தசைகள் விருத்தியடையும். இதன் மூலம் சக்திவாய்ந்த கட்டுடலை பெறலாம். (உதாரணம் - மீன், முட்டை, இறைச்சி, பால், பருப்பு, கடலை, கௌபி, பயறு, போஞ்சி, பயிற்றங்காய், சிறகவரை மற்றும் சோயா)
- மரக்கறி மற்றும் பழ வகைகளை அதிகளவில் உட்கொள்வதால் உடலுக்கு தேவையான விற்றமின்களும் கனியுப்புக்களும் கிடைக்கும். இது நோய் எதிர்ப்புச் சக்திகளாக செயற்படும்.
- சில உணவுத் தேர்வுகளில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும்.
  (உதாரணம்-சூடான மற்றும் குளிரான உணவு வகைகள்)
- மனப்பதற்றத்தை குறைத்துக்கொள்வதால் நிம்மதியான உறக்கம் மற்றும் உணவில் விருப்பத்தை அதிகரிக்கலாம்.
- உடலில் இருந்து ஏற்படுகின்ற சக்தி இழப்பைவிடவும் அதிக உணவை உண்பதால் உடற்பருமன் அதிகரிக்கும். எனவே பொருத்தமான நிறையை பெற்றுக்கொள்வதற்கு சக்தி இழப்புக்கு ஏற்றவிதமாக சக்தியை அதே அளவுக்கு ஈடுசெய்யும் உணவு வகைகளை உள்ளெடுக்க வேண்டும். குறிப்பாக கீழ்க்காணும் உணவுகளை உணவுப்பயன்பாட்டில் இருந்து குறைத்துக்கொள்ளவும்.
- கோதுமை மா சேர்ந்த மாப்பொருள் உணவு. (உதாரணம் - பாண், மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுகள், பிஸ்கட் வகைகள்).
- எண்ணெய் சேர்ந்த உணவுகள். (உதாரணம் - பொரியல் வகைகள், மாட்டிறைச்சி, சீஸ்)
- சீனி சேர்ந்த உணவு வகைகள். (உதாரணம் - சீனிப் பாணி, சக்கரை, வட்டிலப்பம், சொக்லேட்)
- துரித உணவு வகைகள். (உதாரணம் - பாணி அருந்துதல், சிற்றூண்டி வகைகள், கிழங்குப் பொரியல், கோலா போன்ற குடிபான வகைகள்)

### அதிகரிக்க வேண்டிய உணவு வகைகளும் செயற்பாடும்

- நார்ப்பொருள்கள். (உதாரணம் - வாழைப்பூ, முள்ளங்கி, பீக்கங்காய்)
- கீரைவகைகள். (உதாரணம் - பொன்னாங்காணி, அகத்தி, வல்லாரை)
- மரக்கறி வகைகள். (உதாரணம் - கரட், ராபு, கத்தரிக்காய்)
- தானியங்கள். (உதாரணம் - போஞ்சி, சிறகவரை, பயறு, கௌப்பி, கடலை)
- தவிடு நீங்காத தானியங்கள். (உதாரணம் - குரக்கன், சிவப்பரிசி)
- பிரதானமாக மூன்று வேளைகளும் உணவு உட்கொள்ள வேண்டும்.
- ஒருவேளை உணவு எடுக்காமல் மற்றைய வேளை உணவை அதிகமாக உட்கொள்ளும் போது நிறை அதிகரிக்கும். நிறையைக் கட்டுப்படுத்த முடியாது.
- மூன்று வேளை உணவுக்குப் பதிலாக சாதாரண மூவேளை உணவுடன் இடையே இரு சிறு உணவு வகைகளையும் எடுக்க வேண்டும். (உதாரணம் - நார் சேர்ந்த உணவு, பழம் மற்றும் தேநீர்)
- அதிகளவு நீரைப் பருகுதல்.
- மிகக்குறுகிய கால வரையறைக்குள் அதிகளவான நிறையைக் குறைத்துவிடக் கூடாது.
- வாரத்துக்கு அரை கிலோ தொடக்கம் ஒரு கிலோ வரையான நிறையைக் குறைக்கலாம்.





### சக்தியை இழப்பதன்மூலம் நிறையைக் குறைத்தல்

சக்தியை இழப்பதற்கான வழிமுறைகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

- தோட்டத்தில் வேலைசெய்தல் ஓய்வு நேரத்தில் தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்த்து அவசியமான வேலைகளில் ஈடுபடல். (உதாரணம் - தோட்டப்பயிர் செய்கை, பூமரங்கள் நாட்டல், பண்படுத்துதல்)
- குறுகிய தூரங்களை நடந்து செல்லல். மின்னுயர்த்திக்குப் பதிலாக படியில் ஏறிச் செல்லல்.
- வீட்டு வேலைகளை இயந்திர உபகரணங்களின் உதவி கொண்டு மேற்கொள்வதை தவிர்த்தல். (உதாரணம் - உடுப்புத் தோய்த்தல்)
- ஒரு வாரத்தில் மூன்று நாள்களாவது சக்தியை இழக்கும் வேலைகளை செய்தல் அல்லது உடற்பயிற்சியில் ஈடுபடல். (உதாரணம் - நடத்தல், விளையாடுதல், சைக்கிள் மிதித்தல், நீச்சல்)

எனவே, உடற் பருமன், உணவுப் பயன்பாடு என உடல் ஆரோக்கியம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது மாத்திரமன்றி, இந்த செயற்பாடுகளின் வழியே உரிய உடற் பருமனை அடைந்தாலும் உணவு மற்றும் உடல் ஆரோக்கியம் பேணும் நடைமுறைச் செயற்பாடுகளை தொடர்ந்தும் சமனிலையில் பேணிக்கொள்ள வேண்டும்.

*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*யாழ். போதனா மருத்துவமனை.*



சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

10.06.2018

கட்டுரை


வி.அருணாசலம்

# ரணிலின் '304' துரும்புச்சீட்டு விளையாட்டு

பேச்சு வழக்கில் நம்மவர்கள் 'கடதாசிக் கூட்டம் விளையாடுதல்' என்று சுட்டுகிற 'கார்ட்ஸ்' விளையாட்டில் பல நுட்பங்கள் உள்ளன. 'செஸ்' விளையாட்டில் இரண்டு நபர்களின் கெட்டித்தனம் மட்டுமே வெளித்தெரியும். ஆனால், காட்ஸ் விளையாட்டில் அப்படியல்ல. அது ஒரு குழு விளையாட்டு. கூட்டம்கூடி விளையாடுவதால் இதைக் 'கூட்டம்' என்றழைப்பதாகக் கொள்ளலாம்.

52கார்ட்கள் ஒரு பக்கெற்றுக்குள் இருக்கும். அவற்றைப் பயன்படுத்தி 52வகையான விளையாட்டுக்களை விளையாடிக் கொள்ள முடியும். அதில் ஒன்றுதான் '304' என்பதும். இதை நான்கு பேர் அல்லது ஆறு பேர் சேர்ந்து விளையாட முடியும். நான்கு பேர் விளையாடும் '304'ஐ எடுத்துக்கொண்டால், எதிர் எதிராகச் பங்காளிகள் அமர்ந்திருப்பர். அருகருகாக எதிராளிகள் அமர்ந்திருப்பர். கார்ட்களை அவரவருக்குப் பங்கிடுவதற்கு முதலில் அந்தக் கார்ட்களில் இருந்து நான்கு தாள்களைத் தனியாக எடுத்து அந்தச் சுற்றுக்குரிய கேள்வியை ஆரம்பிக்க வேண்டியவரிடம் எதிராளி கொடுப்பார். அந்த நான்கு தாள்களை வைத்து அவர் கேள்வியை ஆரம்பித்து வைப்பார். அந்தச் சுற்றுக்கான கேள்வியை நான்கு பேரும் கேட்கலாம். தனது கையிலிருக்கும் நான்கு தாள்களையும் வைத்துத் தனது பங்காளியிடம் எவ்வகைத் தாள்கள் இருக்கும், தன்னிடமுள்ள இனத்தின் பெரிய தாள்கள் இருக்குமா? இல்லையா? என்பதுபோன்ற பல வற்றையும் அனுமானித்து தம்மிடமுள்ளதாக எண்ணுகிற ஆதிக்கம் அல்லது பெறுமதி கொண்ட இனத்தாளில் துருப்புச் சீட்டைக் கவிழ்ப்பார். இதில் உள்ள நுட்பத்தை ஊகித்தறிகிற கெட்டித்தனம் உடையவராயின் அந்தச் சுற்றில் வெற்றிகொண்டுவிடுவார். ஆனால், தற்போதைய தலைமை அமைச்சர் அப்படிப்பட்டவரல்ல. இதையும் தாண்டியவர். வெற்றிபெறுவதற்கு வேண்டிய பெறுமதிமிக்க தாள்கள் தன்வசமில்லாமலேயே கன கச்சிதமாக இந்த விளையாட்டை விளையாடி வெற்றியும் பெற்று வருகிறார்.


தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 225நாடாளுமன்ற ஆசனங்களில் 47ஆசனங்களை மட்டுமே கையில் வைத்துக்கொண்டு 2015ஆண்டில் நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் போர் வெற்றி, அபிவிருத்திபோன்ற பெரிய காட்ஸ் தாள்களை ஏற்கனவே கையில் வைத்திருந்த மகிந்த ராஜபக்சவை வீழ்த்தினார். இது அவரது அரசியல் சாணக்கியத்தின் அசாத்தியத் துணிவையே காட்டிநிற்கிறது. அத்துடன் மேற்போந்த விளையாட்டில் ஒருவராக ரணிலை நிறுத்திப்பார்த்தால் வெற்றி பெறுவதற்குரிய பெறுமதி கொண்ட தாள்கள் கைவசமில்லாமலேயே அவர் பல வெற்றிகளைத் தனதாக்கி வருவதும் புரியும்.



**மூளை மாத்திரமே முதலீடு**

ஏற்கனவே நாற்பது தடவைகளுக்குமேல் பல தேர்தல்களில் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்க, இறுதிவரை தனது மூளையை மாத்திரமே அரசியல் முதலீடாகக் கொண்டிருந்தார். மேலே குறிப்பிட்டதுபோல பலவீனமான தாள்களே அவர் வசமிருந்தன. ஆனாலும் அவற்றை வைத்து வெல்ல எடுத்த முயற்சியாகவே மகிந்தவுக்கு எதிரான 'பொதுவேட்பாளர்' என்ற முடிவு அமைந்தது. இதன் மூலம் ரணில் பலவற்றைச் சாதிக்க நினைத்தார். சாதித்தும் வருகிறார்.

1 தனக்குச் சாதகமான ஒரு அரச தலைவரைப் பதவிக்குக் கொண்டு வருவது.
2 இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகியவற்றின் விருப்பத்துக்கு ஏற்ப மகிந்தவை மாற்றுவது. கையோடு மேற்படி நாடுகளிடமிருந்து அதிகளவு பணத்தை அபிவிருத்திக்காகப் பெற்றுக்கொள்வது.
3 தனது கட்சியை மீண்டும் நிலைநிறுத்துவதற்காக ஐக்கிய் தேசியக் கட்சியின் முழுவாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி சாராத மைத்திரிக்கு வழங்குவது.
4 தனக்குப் போட்டியாக வராதபடி 'ரதல்ல' (சிங்கள உயர் குலாம்) குடும்பத்தின் சாதிக்குக் குறைவான சாதியிலிருந்து ஒருவரைத் தெரிவு செய்வது.
5 குடும்ப அரசியல் பின்னணி இல்லாத ஒருவரை, அதுவும் வன்னிப் பகுதியில் இருந்து கொண்டுவருவது.(சிங்களவர்களின் பிரதேச வரையறைக்குள் அநுராதபுரம், பொலநறுவை போன்றவை வன்னி)
6 எவ்விதத்திலும் தன்னைமீறி முடிவுகளை எடுக்க முடியாத ஒருவரை நியமிப்பது.
7 சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து ஒருவரை உடைத்தெடுப்பதற்கு 'ரதல்ல' குடும்பத்தைச் சேர்ந்த தனது மைத்துனியான சந்திரிக்காவை வைத்து மைத்திரியைத் தெரிவு செய்தது.
8 மகிந்த அணியை நினைக்க முடியாத அளவுக்குத் திக்குமுக்காட வைத்தது.
9சிறுபான்மையினரான முஸ்லிம்களையும் தமிழர்களையும் தன்னைநோக்கித் திருப்பியது. அவர்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டியது.
10 மகிந்தவின் நேரடி எதிரியாகத் தான் இல்லாமல், மைத்திரியை முன்னே தள்ளிவிட்டது. மைத்திரிபால சிறிசேன என்ற நபரை அரச தலைவர் பொது வேட்பாளராக ரணில் தெரிவு செய்து இப்படிப் பல விடயங்களைச் சாதித்துவிட்டார்.



இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இணைந்து ஆட்சியமைப்பது பொதுவாக நடக்கக்கூடியது. ஆனால், இலங்கையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி" ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளின் ஆதரவாளர்களும் தமது கட்சிகளில், இறுக்கமான பற்றுடையவர்கள் தனது கட்சியைச் சேர்ந்தவர்களின் வாக்குகளைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு அளிக்குமாறு ரணில், முதல் தடவையாகக் கேட்டுக் கொண்டது என்பதெல்லாம் குறைந்த பெறுமானமுள்ள தாள்களை வைத்து '304' விளையாட்டை வென்றதற்கு ஒப்பானது. இதைரணில்என்கிறதனிமனிதனின்மூளையேசாதித்தது.

**கட்சியும் காசுப் பரிமாற்றங்களும்**

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நீண்ட காலமாக நிதி வழங்குவபராக பிரபல தொழில் அதிபரான தயா கமகே செயற்பட்டு வந்தார். அவருடைய முக்கிய வருமான மார்க்கமாக இருந்த அம்பாறை செவனகல சீனித் தொழிற்சாலையை மகிந்த ஆட்சியின்போது முடக்கியதன் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சிக்கான பண உதவி இல்லாது போயிற்று. இந்த நிலையில்தான் சிங்கப்பூர் குடி மகனான அர்ஜுன் மகேந்திரன் ரணிலுக்குக் கைகொடுத்தார்.

செவனகல சீனித் தொழிற்சாலையில் சீனி உற்பத்தியின் பின்னர் பெறப்படுகின்ற கழிவுகளில் இருந்து சாராயத்துக்கான ஸ்பிறிட் தயாரிப்பதன் மூலமே தயா கமகே அதிக இலாபம் அடைந்து வந்தார். இதே போன்றதொரு வடிசாலையையே அர்ஜுன் மகேந்திரனின் மருமகனான அலோசியஸ் கல்குடாவில் அமைத்து வருகிறார்.

மகிந்த ஆட்சியை மாற்றி, திறந்த பொருளாதாரக் கொள்கையில் அதிகம் ஆர்வமுள்ள அரசொன்றை அமைத்து அர்ஜுன் மகேந்திரனின் பிணைமுறி விவகாரத்தை அதிகளவு மேம்படுத்த நினைத்தனர். அர்ஜுன் மகேந்திரனின் மருமகனான அலோசியஸ் இதன் முக்கிய சூத்திரதாரியாக ரணிலுக்கு உதவினார். இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியை வளர்ப்பதற்கான நிதி மூலத்தைப் பெற முடிந்தது.

இலங்கை நாடாளுமன்றில் உள்ள 225உறுப்பினர்களில் 118பேருக்கு அர்ஜுன் மகேந்திரன் பணம் கொடுத்தார் என்ற செய்தி வெளிவந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிப் பேர்களுக்கு மேல் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அளவுக்கு அர்ஜுன் குடும்பத்தின் அல்லது மகேந்திரன் குடும்பத்தின் செல்வாக்கு இலங்கை அரசியலில் இருந்துள்ளது. இது அமெரிக்காவின் யூதர்களுக்கு இருக்கக்கூடிய அந்தஸ்துக்கு ஒப்பானது.

இந்த 118பேரின் பட்டியலை வெளியிடுமாறு மகிந்த அணி கோரி வருவதும், அரசதலைவர் மைத்திரிபாலவுக்குப் புதிய தலையிடியைக் கொடுத்துள்ளது. அர்ஜுன் அலோசியஸ் மகிந்த ராஜபக்சவின் காலத்திலேயே பிணைமுறி விவகாரத்தில் அதிகம் பிரபல்யம் அடைந்திருந்தார். அப்போதைய மத்திய வங்கி ஆளுநராகவிருந்த அஜித் நிவால் கப்ராலின் சகோதரியுடன் இணைந்ததாக இவரது வியாபாரம் காணப்பட்டது.

> இலங்கையின் அரசியல்வாதிகளுள் முக்கிய மானவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன. அவரிடம் ஒரு ரூபாகூட ஊழல் இருந்ததில்லை என்பர். அவருடைய மருமகனான ரணிலிடமும், ஊழல் காணப்படுவதாக இல்லை. பணமுறி விவகாரம் வேறு வழிகளில் பணம் தேடியதில் ரணில் தனக்கென்று நூறு ரூபா கூட எடுத்ததில்லை. அதனால் தான் இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்ட பின்னரும் ரணிலால் 'மிஸ்ரர் கிளீன்' என்ற நிலையில் மாற்றம் இல்லாது இருக்க முடிகிறது.

**முகம் திருப்பி அரசியல் நடத்துகிறார்கள்**

அண்மையில் சோபித தேரரின் நினைவு நாளில் இலங்கை மன்றக் கல்லூரிக்குச் சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றுவதற்கு முன்னர் உரை நிகழ்த்திய பௌத்த பிக்கு ஒருவர் 'சோபித தேரர் இலங்கை அரசியலில் எத்தகைய மாற்றம் ஏற்பட வேண்டும் என நினைத்தாரோ அது நல்லாட்சி அரசால் நிறைவேற்றப்படவில்லை. முன்னைய அரசைப்போல ஊழல்களும் அத்துமீறல்களுமே நிறைந்தி ருக்கின்றன' என்று சாரப்படப் பேசினார்.

அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்த அரச தலைவர் பின்னர் அது விடயமாக உரையாற்றத் தொடங்கினார். பின்னர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றி முடித்தார். இந்த விடயத்தைத் தொகுத்துப் பார்த்தால் 'ரோகண வத்தகே' என்ற சிங்களப் பாடகரின் 'கலியுக காலெட்ட உபன்ன' (கலியுக காலத்தில் பிறந்த) என்று தொடங்கும் பாடலை ஒத்ததாக இருந்தது. ரோகண வத்தகேயும் பந்துல விஜயவீரவும் (மாமா - மருமகன் என்று அழைக்கப்படுபவர்கள்) இணைந்து பாடுகின்ற பாடல் வரிகளான 'றைகம பத்தே அணிக்கா கம்பொல பத்தே' (ஒருவர் றைகம பக்கம் மற்றவர் கம்பளைப் பக்கம்) என இருவேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களாகக் காட்டி அவர்கள் கதைத்தபோது 'உங்க என்ன நடக்குது' 'அங்கு என்ன நடக்குது?' என்ற கேள்வி - பதில் பாடலைப்போல ரணில் விக்கிரமசிங்க ஒரு பக்கமும், மைத்திரிபால சிறிசேன மறுபக்கமும் முகம் திருப்பி அரசியல் நடத்தி வருகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

**ரணிலின் அசட்டுப் பேச்சு**

அரச தலைவரின் உரையில் ரணிலிடம் 47ஆசனங்களே இருந்தன. நான் அவரைத் தலைமை அமைச்சர் ஆக்கினேன். என்று குறிப்பிட்டார். '100நாள்கள் வேலைத்திட்டம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அது அவர்கள் போட்ட திட்டம்' என்று கூறியதன் மூலம் ரணிலும் சந்திரிக்காவும் தன்னை ஏமாற்றி விட்டார்கள் என்பதும், 'அரச வங்கிகளின் முதலீடுகளைத் தனியார் வங்கிகளுக்கு மாற்ற அவர்கள் போட்ட திட்டத்துக்கு நான் ஒத்துக்கொள்ளவில்லை' என்பதன் மூலம் அவர்களிடம் இருக்கின்ற பொருளாதாரத் திட்டம் என்ன என்பது தனக்குத் தெரியாமல் இருந்தது என்பதும் 'நான் ரதல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனும் அல்ல. அரசியல் பாரம்பரியமான குடும்பத்தைச் சேர்ந்தவனும் அல்ல' என்று கூறியதன் மூலம் தனது நிலையையும், 'மலேசியாவில் மகதீர் முகமத் பதவியேற்று மூன்று வாரத்தில் ஊழல் எவ்வாறு பிடிபட்டது இலங்கையில் மூன்று வருடங்கள் ஆகியும் எதுவும் நடக்கவில்லை' என்ற ஆங்கிலப் பத்திரிகையைக் காட்டி என்னை எங்கே செய்ய விட்டார்கள் எனவும் முற்றுமுழுதாகச் செய்த பிழைகள் எல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியையே சாரும்என்றும்அந்தக்கூட்டத்தில்முன்வரிசையில் அமர்ந்திருந்த சபாநாயகர் கருஜெயசூரியவை விழித்து மைத்திரி கூறியிருந்தார்.

இவ்வனைத்துக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஒரே ஒரு பதிலை வழங்கியிருந்தார். அதாவது தனது கட்சியின் உறுப்பினர்கள் எவரும் அரச தலைவரின் உரைக்குப் பதிலளிக்க முற்படவேண்டாம் என்பதே அது.

**'மிஸ்ரர் கிளீன்' ரணில்**

இலங்கையின் அரசியல்வாதிகளுள் முக்கியமானவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. அவரிடம் ஒரு ரூபா கூட ஊழல் இருந்ததில்லை என்பர். அவருடைய மருமகனான ரணிலிடமும் ஊழல் காணப்படுவதாக இல்லை. பணமுறி விவகாரம் வேறு வழிகளில் பணம் தேடியதில் ரணில் தனக்கென்று நூறு ரூபா கூட எடுத்ததில்லை. அதனால் தான் இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்ட பின்னரும் ரணிலால் 'மிஸ்ரர் கிளீன்' என்ற நிலையில் மாற்றம் இல்லாது இருக்க முடிகிறது. தனது அரசியல் தேவைக்காகப் பல இலட்சங்களையும் கோடிகளையும் வேறு யார் யாருக்கோ கொடுத்திருக்கிறார்.

தன்னைச் சுத்தப்பட வைத்திருக்கிறார். இதுவும் ரணிலைப் பொறுத்தவரை ஒரு 304 துரும்புச் சீட்டு விளையாட்டுத்தான். ஆனால் எல்லா வகையான நெருக்கடிகளின்போதும், அரச தலைவரின் தீர்வு ஒப்பாரி வைத்து அழுவதும் அமரத்துவம் அடைந்த சோபித தேரரிடம் 'நீங்கள் தான் மேலிருந்து இந்த அநியாயத்தைக் கேட்க வேண்டும்' என இறைஞ்சுவதுமாக இருக்க கிடைக்கின்ற சிறிய வாய்ப்புக்களைத் தவறவிடாது மேற்படித் துரும்புச் சீட்டு விளையாட்டை நுட்பமாக விளையாடி வெற்றி பெறுவதைப்போல தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.



உலகின் பல இடங்களில் ஆங்காங்கே மிகவும் ஆபத்தான எரிமலைகள் என்று அறியப்படும் எரிமலைகள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு கிராமத்தை. நகரத்தை அழிக்கக்கூடிய சக்தி இத்தகைய எரிமலைகளுக்குத் தாராளமாகவே உள்ளது. அத்தகைய எரிமலைகளில் ஒன்றுதான் பியுகோ. மத்திய அமெரிக்க நாடான குவாட்டமாலாவில் உள்ளது இந்த எரிமலை.
எல் ரொடயோ என்கிற கிராமத்தில்தான் இந்த எரிமலை அமைந்துள்ளது. கடந்த சில வாரகாலமாக க் குறைந்த அளவான புகையை வெளிப்படுத்திவந்த இந்த எரிமலை கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடித்துச் சிதறியது. எரிமலை வெடிக்கப்போகிறது என்பதைக் குவாட்டமாலா அரசு அறிந்திருக்கவில்லை. இதனால் மக்களுக்கு எவ்வித எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. எனவே எரிமலையின் சீற்றத்தால் 120 பேர் உயிரிழந்தனர். 200 பேரைக் காணவில்லை. இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பியுகோவின் சீற்றத்தை ஒற்றை வரியில் முடித்துள்ளன பல பன்னாட்டுச் செய்தி நிறுவனங்கள். இதன்படி 'எல் ரொடயோ கிராமம் கவுதமாலா வரைபடத்தில் இருந்து காணாமல் போயுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளன அவை.

**'பியுகோவின் பேயாட்டம் கொடூரம்...'**

# 'பியுகோ' எனும் அரக்கன்



மும்பையில் வைத்து இந்த ஒளிப்படத்தை எடுத்துள்ளது பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ்.
ரசிகர் ஒருவர் தமிழ்த் திரையுலக முன்னணி நடிகரான ரஜினிகாந்தின் ஒளிப்படத்தை முத்தமிடுகிறார். காலா படத்தைப் பார்த்த பின்னர்தான் அவர் இந்த ஆர்ப்பரிப்பில் ஈடுபட்டுள்ளாராம். "ரொயிட்டர்ஸ்க்கு எங்கள் தமிழக பெடியளின்ட பேஸ்புக் பக்கங்களோட பெரிசாத் தொடர்பில்லைத் தானே. அதாலதான் அது இந்த ஒளிப்படத்தை வெளியிட்டுள்ளது" என்கிறார்கள் வலைத்தளக் குசும்பர்கள்.

## காலா...



## ரவுண்ட் த வேர்ல்ட்

தொகுப்பு
பிரகாஸ்

## ஐ.எஸ்.ஐ.எஸ். புத்துயிர்ப்பா?

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு சிரியாவில் மீண்டும் புத்துயிர்ப்படைய வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது. ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடுபட்டுள்ளது. சிரியாவின் பெரும்பாலான இடங்கள் மீட்கப்பட் டுள்ளன.
குறிப்பாக சிரியத் தலைநகர் டமஸ்கஸ் மீட்கப்பட்டமையானது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு விழுந்த பலத்த அடி என்று கருதப்படுகிறது. எனினும் கடந்த இரு வாரங்களில் சுமார் மூன்று தடவைகள் டமஸ்கஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல்கள் ஐ.எஸ்.ஐஎஸ். அமைப்பு அங்கு புத்துயிர் பெறுகிறதா என்கிற சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது. டமஸ்கஸின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆயுததாரிகள் மக்களுடன் மக்களாக உள்ளார்களா என்கிற கோணத்தில் தேடுதல்களும் விசாரணைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.


**'சிரியாவின் சோகம் தொடர்கதையா...?'**



## கிம் ஜோங் - ட்ரம்ப் சந்திப்பு இந்த வாரம்

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்-அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இடையிலான சந்திப்பு இந்த வாரம் நடைபெறவுள்ளது.
அணுவாயுங்களைக் கைவிடுவதற்கு வடகொரியா சம்மதித்தமை, அதன் பின்னரும் அமெரிக்கா - வடகொரியா இடையே வார்த்தை மோதல் ஏற்பட்டமை, வடகொரியா - சீனா இடையிலான பேச்சு, தென்கொரியா - வடகொரியா - அமெரிக்கா முத்தரப்புப் பேச்சு என்று பல படிநிலைகளைத் தாண்டி இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது. சிங்கப்பூரிலே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்புக்காக ஒட்டுமொத்த சிங்கப்பூரினதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. உலக வரைபடத்தில் இருந்து வடகொரியா அழிக்கப்படும் என்று அமெரிக்காவும், அமெரிக்கா சாம்பராக்கப்படும் என்று வடகொரியாவும் மாறிமாறி எச்சரித்துவந்த நிலையில், தற்போது இந்த இரண்டு நாடுகளும் தத்தமது பகைகளை மறந்து இணக்கமாவது பாராட்டப்பட வேண்டியதுதான்.
அணுவாயுதங்களைக் கைவிட வேண்டும் என்று உலக நாடுகளை அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றமையும் பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் அந்த நாடு தானும் விதிவிலக்கல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**'மிகமிக முக்கிய சந்திப்பல்லவா இது...'**



## ஒரு நாளில் 25 மணி நேரம்




ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள் என்கிற கணக்கு மாற்றம்பெற்று ஒரு நாளில் 25 மணித்தியாலங்கள் என்று மாறவுள்ளது என்கிறார்கள் ஆராச்சியாளர்கள். கடந்த சில நூற்றாண்டுகளாகவே பூமி சுற்றும் அளவு ஆண்டுக்கு ஆண்டு இரண்டு மில்லி நொடிகள் அதிகரித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் தற்போது பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்ள 24 மணிநேரத்தை எடுத்துக்கொள்கிறது. இந்த நிலையில், இந்த இரண்டு மில்லி நொடிகள், இன்னும் 6.7 மில்லியன் ஆண்டுகளில் ஒரு நிமிடமாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கணக்கின் அடிப்படையில், இன்னும் சுமார் 200 மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர் இது ஒரு மணி நேரமாக மாறுமாம்.

**'கொஞ்ச வருசமாப் போய்ச்சுது...'**

கட்டுரை

ஐ.சாந்தன்



# சூழல் பாதுகாப்பும் நுகர்வுக் கலாசாரமும்

கடந்து சென்ற ஜூன் 5ஆம் திகதி உலக சூழல் தினம். எமது சூழலைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வையும் செயற்பாட்டையும் ஊக்குவிப்பது அதன் நோக்கம். எமது சூழலை எவரிடமிருந்து எதனிடமிருந்து. பாதுகாப்பது?

எம்மிடமிருந்துதான் என்பது நகைமுரணான விடயம்; எம்முடைய சூழல் விரோத செயற்பாடுகளிலிருந்து.

இன்று உலகளாவிய பெரு வணிக முனைப்பானது இலாபமொன்றையே நோக்காகக் கொண்டு நுகர்வுக் கலாசாரத்தை உலகெங்கும் வளர்த்து வருகிறது. இந்த நுகர்வுக் கலாசாரமானது வசதிகள், ஆடம்பரங்கள், பற்றிய தேவைகளைச் சுற்றியே பெரிதும் கட்டமைக்கப்படுவது கண்கூடு.

பெரு வணிக நிறுவனங்களின் விற்பனையையும் அதன் பெறுபேறாய் இலாபத்தையும் பெருக்குவதற்கான வழிமுறையாக விளம்பரங்கள் மூலம் வெகுசனங்கள் மூளைச்சலவை செய்யப்படுகிறார்கள். அநாவசியமான வசதிகள், ஆடம்பரங்கள் மீது மக்களின் நாட்டம் ஈர்க்கப்படுகிறது.

இவற்றின் விளைவாக அந்தப் பண்டங்களின் உற்பத்தியும் அதிகரிக்கிறது. இந்த உற்பத்தி அதிகரிப்பு உலகின் வளங்களை அளவு கணக்கின்றிச் சுரண்டுவதைத் தொடர் நிகழ்



வாக்குகிறது. உலக சூழல் பாதிப்பில் பெருமளவு இந்தப் பெரு வணிக முனைப்புகளின் இலாபம் நோக்கிய செயற்பாடுகளாலேயே ஏற்படுவது புலனாகிறது. (வசதிகள், மற்றும் ஆடம்பரங்களின் அதிகரித்த நுகர்வின் பக்க விளைவுகளாக, போலி அந்தஸ்து மனப்பாங்குகள் வளர்க்கப்படுதல், மக்களின் சேமிப்பைக் கரைத்துக் கடன் திட்டங்கள் மூலம் அவர்களைக் கடனாளிகளாக்குதல் போன்றவையும் அரங்கேறுகின்றன. இது மறுபுறம்.)

உலகின் சூழலைப் பேணுமுகமாக முன்மொழியப்பட்ட '3 ஆர்' வழிமுறைகளையும் (3R-குறைத்தல், மீள் பயன்பாடு, மீள் சுழற்சி) அல்லது '5 ஆர்' வழிமுறைகளையும் (5R -மீள் சுழற்சி, குறைத்தல், மீள் பயன்பாடு, தவிர்த்தல், திருத்தல்) இந்த நுகர்வுக் கலாசார விளம்பரங்கள் தவிடு பொடியாக்கியுள்ளன.

குடை, செருப்புத் தைப்பவர்கள், உடைகளைச் சரி செய்யும் தையற்காரர்கள் போன்ற பலர், போன இடம் தெரியவில்லை. பயன்பாட்டுப் பொருள்களில், புதிய 'மொடல்' வந்ததுமே சரிவர வேலை செய்து கொண்டிருந்த முந்தியதை வீசிவிட்டுப் புதியவற்றை நாடுதல் நாகரிகமாகி விட்டது.


இன்றைய சூழலில் வீடுகள், வாகனங்கள் மற்றும் பயன்பாட்டுப் பொருள்கள் போன்றவை தேவைகள், வசதிகள் என்பவற்றைத் தாண்டி ஆடம்பரச் சின்னங்களாகவே பெரிதும் உருவாகியுள்ளன. போதாக்குறைக்கு எதிர்மறை விளைவுகளையும் அவை உண்டாக்குகின்றன. கொழும்பின் வாகனப்பெருக்கம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.


முன்னர் பஸ்ஸில் இருபது நிமிடத்தில் போய் விடமுடிந்த ஓரிடத்துக்கு இப்போது காரில் இரண்டு மணித்தியாலங்கள் ஆனாலும் போகமுடியாத வாகன நெரிசலைப்பார்த்து அழுவதா? சிரிப்பதா? என்று தெரியாதிருக்கிறது. ஒருவர் அல்லது மிஞ்சினால் இருவர் மட்டுமே பயணித்துக்கொண்டிருக்கும் ஓர் ஊர்தியின் எரி பொருள் எவ்வளவு வீண்? இந்த வேடிக்கைக்கு மேலதிகமாகக் காற்று மாசு, அந்நியச் செலாவணி வியர்த்தம், மனித நேர வீணடிப்பு என்பவை வேறு.

ஆடம்பர கட்டட நிர்மாணங்க ளின்போது ஏற்படும் நீர், மரம், உலோகங்கள் மற்றும் மூலப்பொருள்களின் விரயமானவை சூழலில் உண்டாக்கும் தாக்கம் குறைத்து மதிப்பிடக்கூடியதன்று.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில்கூட, எமக்கே உரித்தாயிருந்த எளிமை, அடக்கம், சிக்கனம் என்பவை இல்லாதவையாகிவிட்டன. 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்கிற விழுமியம் மறைந்தாயிற்று.

நுகர்வுக் கலாசாரத்தை வளர்த்தபடி, சூழல் பாதுகாப்பைப் பற்றியும் பேசுவது பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுதற்கொப்பானது.





# முகநூல் கவிதை

கவிதை


வேலணையூர் தாஸ்

இந்த உலகம் கவிதைகளால் நிரம்பி
இருக்கிறது
மழையெழுதும் ஈரக் கவிதைகளால்
நிரம்பியிருக்கிறது குளம்
தினமும் மீன்கள் அதை வாசிக்கின்றன
காற்றின் கவிதைகளை மூங்கில்கள் இசை
கூட்டிப் பாடுகின்றன
வானமோ நட்சத்திரங்களை இடம்மாற்றி,
முகில்களைத் திருப்பி அடுக்கிப் புதுக்கவிதை
செய்கிறது

நிலவும் விடுவதாயில்லை மஞ்சள் எழுத்திலே
காதலின் மந்திரங்களைக் கவிதைகளாய்
எழுதுகிறது
காடுகளின் கவிதைகளை ஆயிரமாயிரம்
மின்மினிகள் படிக்கின்றன,
இருள் எழுதும் இரகசியக் கவிதைகளை
ஒளியிலே படிக்க முடிவதில்லை என்பதுதான்
கவலை
நெருப்பெழுதும் கவிதைகளிலும்
படிப்பதற்கு எதுவும் எஞ்சுவதில்லை
பறவைகள் தாம் எழுதும் கவிதைகளை
மாலையில் பாடிப் பார்க்கின்றன
மாடும் தன்கன்றை அழைப்பதைக் கவிதை
மொழியாகவே
கொண்டிருக்கிறது
சூரியன் காலையில் செய்த கவிதைக்கு
உஷை நாணிச் சிவக்கிறாள்
அவன் மாலையில்
பிரிவெழுதிப்போகிறபோது
மாலைக்காதலி சாயா கோபத்தில் எரிகிறாள்.

இயற்கை மட்டுமா...?
எங்கள் தமிழ்க் கவிஞர்கள்...?

போரின்போதும் வெற்றியின்போதும்
தோல்வியின்போதும் காதலின்போதும்
பிரிவின்போதும் தம் சாவின்போதும் தவிர்ந்த
எல்லாப்போதுகளிலும் கவிதை எழுதிக்கொல்
கிறார்கள்...!
ஆனாலும் என்ன?
இப்போதெல்லாம்
முகநூல் 'கவி'தைகளுக்குத்தான்
விருது கொடுக்கிறார்கள்



## முன்னுரையாகச் சில குறிப்புக்கள்

இந்தத் தொடர் 2002ஆம் ஆண்டு எழுதி முடிக்கப்பட்டது, 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிறை வாழ்வை அனுபவித்த ஒருவரின் உண்மைக் கதையிது.

இந்தக் கதையில் வரும் சம்பவங்கள் உண்மையானவை. அவற்றை உண்மையென உறுதிப்படுத்துவதற்கு அந்தக் காலகட்டத்தில் சிறைக்குள் இருந்தவர்களும் அவர் தம் குடும்பங்களும் சாட்சிகளாகும்.

எழுதப்பட்டு 16 வருடங்கள் கடந்த நிலையில் எதையும் தற்போதைய சூழலுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்ய முடியாது. ஆனால், 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் உண்மை வரலாறு இது என்பதால் அப்போதிருந்த சூழலைப் பிரதிபலிக்கும் ஓர் ஆவணமாக இதைப் பார்க்கலாம்.

'தாஸ் மாஸ்ரர்' என்ற புனைப்பெயரைக் கொண்ட இதன் ஆசிரியர் ஒரு பட்டதாரி மட்டுமல்ல. சிங்களம். ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி உள்ளவர், இதன் காரணமாகப் பல்வேறு சிறை அதிகாரிகளையும். சிங்களக் கைதிகளையும். மூத்த தமிழ் கைதிகளையும் சந்தித்த சமயங்களில் பெற்றுக்கொண்ட தகவல்களை அன்றாடம் குறித்து வைத்தும், வெளியில் அனுப்பியும் அவர் விடுதலை செய்யப்பட்டபின் அவற்றைத் தொகுத்து இது எழுதப்பட்டது.

கைதிகள் பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகளால் எவ்வாறு துன்புற்றார்கள் என்பதும், சிறைக்குள் ஒவ்வொரு நாளையும் எவ்வாறு கழித்தார்கள் என்பதையும் பிள்ளைகளின் ஏக்கம், உறவுகளின் இறப்புக்கள். நோய். முரண்பாடுகள். ஆக்கப் பணிகள். உணவு தவிர்ப்புகள், தமிழ் அரசியல்வாதிகளின் கைதிகள் சார்ந்த அணுகுமுறைகள் போன்ற பல்வேறு சுவையான விடயங்கள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன,

---

*2000 ஆம் ஆண்டு கண்டியில் வைத்துக் கைது செய்யப்பட்ட 'தாஸ் மாஸ்ரர்'. 2002ஆம் ஆண்டில் கொழும்பில வைத்து விடுதலை செய்யப்பட்டார். இவரை விடப் பல வருடங்கள் சிறையில் இருந்தவர்கள் கூடச் சிறைக்குள் எப்படித் தமிழ் அரசியல் கைதிகள் வாழ்ந்தார்கள்? எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தார்கள்? என்பன உள்ளடங்கிய எந்தவொரு பதிவுகளையும் செய்யவில்லை. ஒரு வகையில் இவரது சிறைவாழ்வு தமிழ் மக்களுக்கு ஓர் அரிய ஆவணத்தைத் தந்துள்ளது என்றும் சொல்லிக் கொள்ள முடியும்.*



01

தொடர்

·தாஸ் மாஸ்ரர்

# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்?

**2000** ஆம் ஆண்டு ஒக்டோபர் 18ஆம் திகதி.
மாலை 5.30 மணி.

மழை நன்றாகப் பெய்து ஓரளவு ஓய்வுக்கு வந்தது. ஆனாலும் தெருவில் நடந்தால் நனையக் கூடிய மழை. கிட்டத்தட்ட 15கைதிகளைச் சேர்த்துப் பிணைக்கப்பட்ட ஒரு பெரிய சங்கிலியில் கைவிலங்கு போடப்பட்ட நிலையில் நான் சிறைச்சாலை பஸ்சில் இருந்து இறக்கப்பட்டேன்.

பொறுப்பாக வந்த அந்தச் சிறைச்சாலை அதிகாரி (இன்ஞ்சார்ஜ்) குள்ளமான. மொட்டையானவர். "இவன் எல்.ரீ.ரி.ஈ. கவனம். ஸ்பெசல்" என்று மற்றச் சிறைச்சாலை ஊழியர்களுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டே வந்தார். என்னை ஒரு 'பயங்கரவாதி' யாகவே முழுசிப் பாத்தார். எனக்கு எதுவுமே புரியவில்லை. அவற்றைப் புரிந்துகொள்ளும் நிலையில் நான் இருக்கவுமில்லை.

சாம்பல் நிறத்திலான மிகப்பெரிய உயரமான கதவுகள், இராட்சதக் கேற்றுக்கள் எனலாம். எப்போதோ அடித்த சாம்பல் நிறச் சாயம் அழுக்காகி அழுதுவடிந்து கொண்டிருந்தது. விருந்தாளிகளை வரவேற்காத முகம்போல. அதனுள் சிறிய கதவு திறக்கப்பட்டது. நாங்கள் அனைவரும் ஒவ்வொருவராக எண்ணி உள்ளே விடப்பட்டோம்.

ஊத்தையும். மணமும் நிறைந்த சிறிய அறையொன்றுக்குள் நிற்கவிடப்பட்டோம். என்னைப் புறம்பாக நிற்கச் சொன்னார்கள்.

என்னிடம் வந்த ஒரு கையில்லாத கைதிக்குக் குற்றம் தீர்க்கப்பட்டதால் அவன் அணிந்திருந்த சாறமும் சேட்டும் கழற்றப்பட்டுப் பழைய பழுப்பேறிய காற்சட்டையும். கையும் கழுத்துமில்லாத மேல் அங்கியும் உடுத்திக் கொள்ள அவனுக்கு வழங்கப்பட்டது. 'கெதியாக் கழட்டி மாத்தடா. (...)" என்று சிங்களத்தில் தூசணமும் சொல்லி வெருட்டினார் இன்னொரு சிறைக்காவலர்.

நான் ஒரு சொப்பிங் பாக்குக்குள் ஒரு சில அவசியமான உடுப்புக்களைச் சுருட்டி வைத்துக்கொண்டு சிலையாக நின்றேன். ஒவ்வொருவராகக் கூப்பிட்டு இறுதியில் எனது பெயரை அரைகுறையாகக் கூப்பிட்டனர். நான் அதுபற்றி ஒரு முடிவு எடுக்கும் முன்பு என்னைக் கூட்டிக்கொண்டு வந்தபோது பொறுப்பாக இருந்தவர் "உன்னைத் தான்ரா(...)" என்று தூசணம் சேர்த்து அழைத்தார். அந்த நிமிடமே நினைத்தேன். நான் வரக்கூடாத இடத்துக்கு வந்துவிட்டேன் என்று.

அது இலங்கையின் மத்திய மலைநாட்டின், நகரான கண்டியிலுள்ள போகம்பரைச் சிறைச்சாலை. இது பிரித்தானியர் இலங்கையை ஆண்ட காலத்தில், கிட்டத்தட்ட 175ஆண்டுகளுக்கு முன் (1876ஆம் ஆண்டில்) கட்டப்பட்டதென்பதைப் பின்னர் அறிந்து கொண்டேன்.

தற்போது கண்டி நகரின் மரபுரிமைகளுள் ஒன்றாகப் (யுனெஸ்கோவின் கீழ்) பேணப்பட்டுவரும் இந்தச் சிறைச்சாலை அதியுயர் பாதுகாப்பு என்ற தேவைக்காகக் கட்டப்பட்டது. கடும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு அந்தத் தண்டனையை நிறைவேற்றும் இடமாக இருந்தது. 2014ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி இந்தச் சிறைச்சாலை மூடப்பட்டு, கைதிகள் புதிதாக அமைக்கப்பட்ட பல்லேகல சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். கைதிளற்ற அந்தப் போகம்பரைச் சிறைச்சாலை பின்னர் சுற்றுலா மையமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறைச்சாலை பிரான்சின் பாஸ்ரில் சிறைச்சாலையை ஒத்த வகையில் நிர்மாணிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

"நீ இதற்கு முன் சிறையில் இருந்திருக்கின்றாயா?" இது என்னைப் பதிவு செய்தவர் கேட்டது.

"இல்லை" என்றேன். அவரது விசாரணை முடிந்தபின் நான் அணிந்திருந்த உடுப்புக்கள், பையில் வைத்திருந்த உடுப்புக்கள் எல்லாவற்றையும் தடவித் தடவிச் சோதனையிட்டார்கள். பின்னர் உள்ளே இருக்கும் இரும்புக் கதவைத் திறந்து மீண்டும் ஆள்களை எண்ணி உள்ளே எடுத்தார்கள். எம்மைப் பொறுப்பேற்ற இன்னொரு சிறைச்சாலை ஊழியர் நீண்ட முற்றத்தினூடாக அனைவரையும் கூட்டிச் சென்றார். மழையில் நனைந்து கொண்டே போனோம்.



என்னைக் அழைத்துச் சென்ற ஊழியர், அங்கு 'டி' என்று ஆங்கிலத்தில் குறிப்பிட்டிருந்த பிரத்தியேகப் பிரிவுக்குக் கூட்டிச் சென்று, "இவர் எல்.ரீ.ரி.ஈ. இவரை விசேடமாகக் கவனி" என்று சொல்லிப் பொறுப்புக் கொடுத்துவிட்டுப் போனார்.

அங்கு பொறுப்பாக இருந்த சிறைச்சாலை ஊழியர் மீண்டும் ஒரு தடைவ எனது உடுப்புக்களையும், பொக்கற்றுக்களையும் தடவிப் பார்த்து எனது அடையாள அட்டையையும், ஒரு வெள்ளி மோதிரத்தையும் பிரதானலில் அருகில் கொடுக்க வேண்டும் எனக்கூற, இன்னோர் ஊழியர் மீண்டும் பிரதான வாசலை நோக்கி என்னைக் கூட்டி வந்தார். அங்கு கடமையில் இருந்த, வயதான ஒருவர், "என்னடா! போகும்போது இதைத் தரத்தெரியாதா?(...)" என்று தூசண அர்ச்சனை செய்தார். நான் இதற்கு முன்பு சிறைச்சாலைக்குச் சென்றதில்லை. வேறு யாரை யும் பார்க்கச் சென்றவனும் இல்லை. சிறைச்சாலை நிர்வாகம் சாதாரண வரையறைக்குள் இல்லை என்பது மட்டும் புரிந்து கொண்டேன். சில வேளை தீங்கியல் கைதிகளுடன் நீண்ட காலம் பழக்கப்பட்டதால் இவ்வாறு நடந்து கொள்கிறார்களோ? என்றும் நினைத்துக் கொண்டேன்.

(சிறைக்கு வருபவ்ன் கெட்டவன் என்ற கருத்து நிலை பொதுவாகவே அவர்களிடம் ஆழமாக இருப்பதை அங்கு அவதானிக்க முடிந்தது).

மீண்டும் என்னை 'டி' பிரத்தியேகப் பிரிவுக்கு அழைத்துச் சென்றார் அந்த அதிகாரி. அப்போது இரவு ஏழு மணியை அண்மித்திருந்தது. மழை பெரும் மழையாகப் பெய்யத் தொடங்கியிருந்தது. அந்தப் பெரிய கட்டடத்தில் எங்கு போவது என்று எனக்குத் தெரியவில்லை. அப்போது பொறுப்பாகவிருந்த சிறைஅதிகாரி (சிறைச்சாலை நிர்வாக ஒழுங்கு பற்றிப் பின்னர் குறிப்பிடு கிறேன்) தமிழைக் கொச்சை கொச்சவாகக் கதைத்தார்.

"ஓர், பெயர் நீ எல்.ரீ.ரி.ஈ தானா?"

என்றெல்லாம் கேட்டார். எல்லாவற்றுக்கும் மௌனமே எனது பதிலாக இருந்தது. 'டி' பிரிவிலுள்ள பெரிய அறைக்குள் என்னைப் போகும்படி திறந்து விட்டார்கள். அங்கு ஏற்கனவே மூன்று பேர் இருந்தார்கள். ஒருவர் தமிழராக இருந்து முஸ்லீமாக மாறியவர். மற்றவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அந்த அறையில் மங்கலான மின் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சிறுநீர் கழிப்பதற்கான தகர வாளிகளும். இரவுச் சாப்பாடும் பிளாஸ்ரிக் தண்ணீர்க் கோப்பைகளும் கிடந்தன.

என்னை அந்த மூவரும் விசாரித்தார்கள். ஒரு பிளாஸ்ரிக் பாய் தந்தார்கள். ஒரு பக்கத்தைக் காட்டி இதில் படுத்துக்கொள்ளுங்கள் என்றார்கள். நான் எனது காட்சட்டையைக் கழற்றிச் சறத்தை மாற்றிக் கொண்டேன். இருவர் மாறி மாறித் தமது தலையை மசாச் செய்து கொண்டார்கள். மற்றவர் ரி.எம். சௌந்தரராஜன், சீர்காழி ஆகியோர் பாடிய பக்திப்பாடல்களையும், புதுவை இரத்தினதுரை இயற்றிய விடுதலைக் கீதங்களையும் பாடினார். அவர் அந்தச் சூழலைப் பற்றி எதுவும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர் சிறைக்கு வந்து ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டதாம். பூசா சிறைச்சாலையில் (காலி நகருக்கு அண்மையிலுள்ளது) இருந்து கண்டிக்கு வழக்குக்காக வந்திருந்தார்.

எனக்கு அடுத்தது என்ன? என்று தெரியவில்லை. வீட்டுக்காரைத் தொடர்பு கொள்ள முடியாத நிலை. இதற்குள் இருந்து என்ன செய்வது? என் மனைவி, மகளைப் பற்றிய கவலை. எனக்கு இப்படி ஒரு நிலை வந்துவிட்டதே? என நினைத்து வேதனைப்பட்டேன்.

நான் சிறியவனாக இருந்த காலத்தில் ஈழநாடு பத்திரிகையில் வருகின்ற (கோகிலாம்பாள் கொலைவழக்கு - கோகிலாம்பாள் ஒரு பிரமாணப் பெண். தன் கணவரைக் கொலை செய்து எருக்குவியலுக்குள் புதைத்தாகக் குற்றம் நிரு பிக்கப்பட்டு போகம்பறை சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்தவள்) பற்றிய பாடல் தான் ஞாபகத்துக்கு வந்தது.

"போறாளே
போறாளே கோகிலம்பாளே போகம்பறைச் சிறைச்சாலை போறாளே"

அதே போகம்பறைச் சிறைக்குள் நானுமா? அழுதேன். பாடிக்கொண்டிருந்த மற்றவர் எனது அரவம் கேட்டு என்பக்கம் திரும்பிப் பார்த்தார். மொட்டைத் தலையுடைய வலித்த உடல். நறுக்காகப் பேசினார். வ்ார்த்தையில் கனிவு இருக்கவில்லை. "அண்ணா அழாதேங்கோ நானும் முதல் நாள் இப்பிடி அழுதனான். இதுக்குள்ள வந்த பிறகு அழுகிறதில பயன் இல்லை. இது பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்கு. லேசாக் கழர முடியாது. லோயரைப் பிடிச்சு வெளியில போற அலுவலைப் பார்க்க வேணும்" என்றார். அவர் கூறியது ஆறுதலாக இருந்தாலும் "லேசில கழர ஏலாது" என்ற வசனம் கவலையை மேலிடச் செய்தது. இரவு 8.30 மணிபோல சாப்பிடத் தொடங்கினோம். எனக்குச் சாப்பாடு கிடைத்ததா? என்று பொறுப்பாகவிருந்த சிறை அதிகாரி கேட்டார். "வேண்டாம்" என்றேன். பின்னர் நண்பர்கள் சாப்பிட்டபோது எனக்கும் தந்தார்கள். சாப்பிட மனமில்லாது இருந்தது. சாக வேண்டும்போல.

தண்ணீருக்கு வெளியே இழுத்துப்போட்ட முதலையைப் போன்ற ஓர் இயலாமையை உணர முடிந்தது. இரவு மழையாக இருந்ததால் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியிருந்தது. மற்றவர்களுக்கு முன்னால் தகர வாளியில் சிறுநீர் கழிப்பது அசௌகரியமாக இருந்தது. ஆன்றிரவு அதற்கு மேல் எதுவும் தெரியவில்லை. நீண்ட நேரம் விழிந்திருந்து விட்டு அப்படியே உறங்கிவிட்டேன்.

(தொடரும்)

# வெறும் பகல்

கவிதை

கை.சரவணன்



மண் பொசுங்கும்
கொடு வெயிலில்
நீண்டு செல்கின்ற
தனித்த தெரு
முழுமையையும்
அந்தரித்தலைந்து அளந்து
திரிகிறது.

நின்றாறச் சிறுபுள்ளியளவு
நிழல் மையத்தை
அது தேடுகிறதா?

அண்ணத்திலொட்டிய
நாவுக்கு
சிறு துண்டு நீரையூற்ற
தேடுகிறதா?

உடல் கசகசத்து
ஆடைசொட்டும்
வியர்வையைக்
காயவிட
சிறு கொடிதான்
தேடுகிறதா?
கேட்க ஒரு
சீவனுமுலவாத பொட்டல்
தெருவில்
அலைந்தலைந்து
அந்தரித்துப் போகிறது.

அது எதைத்தான்
தேடுகிறது
பொசுக்கும் கொடுவெயில்
எக்காளிக்குமப் பொழுதில்?

கீற்று முகிலின்
சிறுதுளிகூட
போய்மறைந்த பொழுதில்
நின்றாற முடியாத
நெடுந் தெருவில்
நானுந்தான்


அலைவுற முடிகிறது.
முடிவுகள் ஏதுமற்று

அறிந்த மிருகம் அறியாத கதை

# 'லாமா'வை விட்டுவிடலாமா?

கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்



ஒட்டகங்கள் பற்றிப் பார்த்தோம். 'பாலைவனக் கப்பல்' என்று பெயரெடுத்து, பாலைவனத்து மக்களுக்கு எல்லாமும் என்ற வரப்பிரசாதமாக அது அமைந்திருப்பதைக் கண்டோம். சத்தான பால், சுவையான இறைச்சி, பனிப்புயலில் பாலைவனப் பயணம், பொதிகள் சுமக்க ஒரு தோழன், போர்ப்படையில் ஒரு வீரன் என்று பன்முக முக்கியம் பெறுகின்ற ஒட்டகத்தைப்போல், தென் அமெரிக்க இந்தியர்கள் வாழ்வில் 'லாமா' என்ற மிருகம், ஒரு குடும்ப நண்பனாக இணைந்திருக்கின்றது.


**ஒட்டகக் குடும்பத்து அங்கத்தவர்**

தென் அமெரிக்காவின் அந்தீஸ் மலைப் பிரதேசத்தில் வாழ்கின்ற 'இன்கா' இனத்தவர்கள் உட்பட, அமெரிக்க இந்தியர்கள் ஒட்டகக் குடும்பத்தைச் சேர்ந்த இந்த லாமாவைப் பலவழிகளிலும் பயன்படுத்துகிறார்கள். தமது வீடுகளில் வளர்க்கும் இந்த லாமாக்களுக்கு ஏரி இல்லாதது தான் இவற்றை ஒட்டகங்களிலிருந்து வேறுபடுத்துகின்றது. மற்றைய விடயங்களில் இது இன்னோர் ஒட்டகந்தான். இதனுடைய உரோமம் கொண்டு ஆடை நெய்கிறார்கள். இறைச்சி உணவாகின்றது. பால் அருந்துகிறார்கள். மலைப் பாங்கான இடங்களில், பொதிகளை இலாவகமாக முதுகில் காவிக்கொண்டு செல்கின்றன இவை. நீண்ட கால்கள் கொண்ட நன்கு வளர்ந்த லாமாக்களின் உயரம் கிட்டத்தட்ட ஆறு அடிகள் வரை இருக்கும். எடை 127இக்கும் 204இக்கும் இடைப்பட்ட கிலோக்களாக இருக்கும். பிறந்த கன்றுகளின் எடையை 14கிலோக்கள் வரை மதிப்பிடலாம். ஒட்டகத்தை விடப் புத்திசாலியான மிருகம் என்று இதைச் சொல்கிறார்கள். தனது உடல் எடையின் 30வீதமான அளவை இதனால் சுமந்து கொண்டு பயணிக்க முடியும். 45தொடக்கம் 60கிலோக்கள் எடை கொண்ட பொதிகளைச் சுமந்து கொண்டு சராசரி 30 கிலோ மீற்றர்கள் தூரம் வரை இவற்றால் பயணிக்க முடியும்.

**எச்சில் துப்பும் குணம்**

மனிதர்கள் எச்சில் துப்புவது புதினமல்ல. ஆனால் மிருகங்கள் துப்புவதை அறிந்திருக்கிறீர்களா? இந்த லாமாக்களுக்கு யாராவது எரிச்சலூட்டினால், உடனே துப்பும் சுபாவமுடையன என்ற தகவல் உங்களுக்கு ஆச்சரியம் அளிக்கலாம். இவற்றின் மீது அதிக எடை ஏற்றினால், நகராது, படுத்துவிடும். தனக்கு எரிச்சலாக இருக்கிறது என்பதை வெளிப்படுத்தத் துப்பும். காலை நிலத்தில் உதைக்கும். மெலிதான உடல்வாகும், குட்டைவாலும்,

> 2007ஆம் ஆண்டின் ஒரு கணக்கெடுப்பின்படி தென் அமெரிக்காவில் 7 மில்லியன் லாமாக்களும், அல்ப்பாக்காக்களும் இருந்துள்ளன. (அல்ப்பாக்காக்கள் என்பது லாமா குடும்பத்தில் ஓர் இனத்தின் பெயர்) ஐக்கிய அமெரிக்கா, கனடாவில் ஒரு லட்சம் லாமாக்கள் உள்ளன.



சிறிய தலையும், பெரிய கூரான காதுகளையும் கொண்ட மிருகந்தான் லாமா! இந்த லாமாக்களில் பெரும்பான்மையானவை தென் அமெரிக்க இந்தியர்களால்தான் வளர்க்கப்படுகின்றன. குறிப்பாக பொலீவியா, பேரு, ஈகுவடோர், சிலி, ஆர்ஜென்ரீனா ஆகிய நாடுகளில் இந்த மந்தைகளை நிறையக் காணலாம். ஒட்டகத்தைப்போல, தண்ணீர்த் தாகத்தைத் தாங்கும் திறன், காலநிலையை எதிர்க்கும் திறன் ஆகியன இந்த மிருகங்களை மோசமான காலநிலை கொண்ட 'அந்தீஸ்' பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் சிறந்த போக்குவரத்து மிருகமாக அங்குள்ளவர்களுக்கு இனங்காட்டியுள்ளது.

**கர்ப்ப காலம் 11 மாதங்கள்**

பொதுவாகக் கோடைகாலப் பிற்பகுதியில் தொடங்கி, இலையுதிர் காலம் வரை இதன் இனவிருத்தி இடம்பெறுவதுண்டு. இந்தக் காலநிலை நவம்பரிலிருந்து மே மாதம் வரையிலான காலமாக அங்கு இருக்கும். 11 மாதங்கள் வரையில் தாயின் வயிற்றுக்குள் இருந்து பின்பே குட்டி வெளி உலகைப் பார்க்கிறது. ஒரு தாய் ஒரு குட்டியையே ஈனுவதுண்டு. பொதுவாக இவை வெள்ளை நிற மிருகங்களாக இருப்பினும், கறுப்பு, பிறவுண் அல்லது இரண்டும் கலந்த நிறங்கள் கொண்டவையாகவும் காணப்படுவதுண்டு.

**தோற்றமும் பரவலும்**

லாமாக்கள் வடஅமெரிக்காவின் நடுப்பகுதியில் உள்ள சமவெளிப்பகுதிகளில் 40மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்கலாம் எனக் கருதுகிறார்கள். இவை 3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தென் அமெரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் இடம் பெயர்ந்தன என்றும், பனியுகத்தின் முடிவில் இவை வட அமெரிக்காவிலிருந்து அழிந்துவிட்டன என்றும் அறியப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் ஒரு கணக்கெடுப்பின்படி தென் அமெரிக்காவில் 7 மில்லியன் லாமாக்களும், அல்ப்பாக்காக்களும் இருந்துள்ளன. (அல்ப்பாக்காக்கள் என்பது லாமா குடும்பத்தில் ஓர் இனத்தின் பெயர்) ஐக்கிய அமெரிக்கா, கனடாவில் ஒரு லட்சம் லாமாக்கள் உள்ளன. இங்குள்ளவை தென் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. இவை ஒருபோதும் காட்டு விலங்குகளாக இருந்ததில்லை என்கிறார்கள். 'இன்கா' இனத்தவர்கள் காலத்துக்கு முன்பே இவை, சுமை தூக்கும் விலங்குகளாக, மனிதர்களால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்கான வரலாற்று ஆதாரங்கள் இருக்கின்றன.

**ஒரு லாமாவிலிருந்து 3.5 கிலோ உரோமம்**

இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை, லாமாக்களின் உடலில் இருந்து உரோமம் வெட்டி எடுக்கப்படுகின்றது. ஒரு மிருகத்திலிருந்து சராசரியாக 3 தொடக்கம் 3.5 கிலோ எடை கொண்ட உரோமத்தை வெட்டி எடுத்துக்கொள்ள முடிகிறது. இதன் உரோமம் துப்புரவாக்கப்படும்போது, கழிவுகள் களையப்பட்டு, ஆரம்ப எடையில் சுமாராக 66தொடக்கம் 84 வீதமான உரோமமே எஞ்சுவதுண்டு. கம்பளம் பின்னுவதற்கும், கயிறு பின்னுவதற்கும் இவற்றைப் பயன்படுத்தி வருகின்றார்கள். ஆடை உற்பத்தி நிறுவனங்கள், வெளி ஆடை உற்பத்திக்காக இவற்றைப் பயன்படுத்தி வருகின்றன. இதனுடைய மலத்தை, ஒட்டகத்தின் எருவைப்போல, எரிபொருளாகப் பயன்படுத்துகிறார்கள்.

**தெய்வ வழிபாட்டில் சாவடிப்பது**

ஒட்டகக் குடும்பத்தில் வரும் லாமாக்களில், அந்தீஸ் பிரதேசத்துக்குரிய 4வேறுபட்ட இனங்கள் வேறுபட்ட பெயர்களுடன் காணப்படுகின்றன. ('ல்லாமா', 'அல்பக', 'குவாணாகோ', 'விக்யூனா') இவற்றில் லாமாதான் அளவில் பெரிய இனம். இவற்றை இந்த மலைப் பிரதேசத்தின் 2ஆயிரத்து 300 மீற்றர்கள் உயரத்துக்குக் கீழ் காண்பது அரிது! முதல் இரண்டு இனங்கள் சாதுவானவை. மற்றைய இரண்டு இனங்களும் மலைப்பகுதிகளில் தன்னிச்சையாக வாழ்கின்றன. இங்கு எப்படி ஆடுகள் தெய்வ வழிபாட்டில் வெட்டிச் சரிக்கப்படுகின்றனவோ அதுபோலவே, தென் அமெரிக்க இந்தியர்களின் புராதன அய்மாறா, குயெச்சுவா சமயச் சடங்குகளின்போது, பூமிக்குரிய கடவுளான பச்ச மம்மாவுக்கு லாமாவைப் பலி கொடுப்பதுண்டு.

சிறுகதை

# மரபணு

ஓஷோ சிறிரதி

ஓர் அழகிய விடியற்காலை.

இரவு முழுவதும் வேலை செய்து விண்மீன்கள் களைத்து வானப்போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு உறங்கச் சென்றுவிட்டன. ஆனால் ஜெயவர்மனுக்கு இன்னும் தூக்கம் வரவில்லை. அவன் இருந்த மனோநிலையில் தூக்கம் சிறையைப்போல் தென்பட்டது. அதனால் விழித்திருப்பதே தனது சுதந்திரத்தைத் தக்க வைப்பதற்கான ஒரே வழி என அவன் மனம் பதைபதைத்தது. இன்று அவன் வாழ்வில் ஒரு முக்கிய நாள். ஏன்?

அவன் வாழ்வின் கடைசிநாளாகக்கூட இது இருக்கலாம். சூரியனுக்காகக் காத்திருக்க அவனுக்குப் பொறுமையோ, நேரமோ இருக்கவில்லை.

அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் முழுகி முடித்துத் தனக்குப் பிடித்த அந்த நீல மேற்சட்டையையும் கோட், சூட்டையும் போட்டுக்கொண்டு தனது மடிக்கணினியை எடுத்து அவசர அவசரமாகத் தனது காரின் மறுஇருக்கையில் எறிந்துவிட்டுக் காரைச் செலுத்த ஆரம்பித்தான்.

கணப்பொழுதில் அந்தக் கார் வீதி முனையைக் கடந்து திரும்பியது. அவன் வீட்டில் மின்குமிழ்களும், மின்விசிறிகளும் அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தன. ஆனால் அவன் மீண்டும் வருவானா?

ஜெயவர்மன், இளவயதிலேயே மூலக்கூற்று உயிரியலில் சாதனைகள் பல செய்த விஞ்ஞானி. ஐன்ஸ்டைன் சொல்வார் "மர்மத்தைப் பற்றிய உணர்வே ஒரு மனிதன் அடையக்கூடிய ஆகச் சிறந்த அழகான, ஆழமான அனுபவமாகும். அதுவே மதத்திலும். அதுபோல் கலை மற்றும் விஞ்ஞானத்தின் எல்லாத் தீவிர முயற்சிகளிலும் உள்ளிருக்கும் தத்துவமும் ஆகும்."


ஜெயவர்மன் விஞ்ஞானத்தின் எல்லைக்குச் சென்ற வீரன். அதனால் மெய்ஞானத்தில் அவன் காலடிவைத்தே ஆகவேண்டும். அவன் மிகுந்த அன்பு கொண்டவன். இந்தச் சமூகத்தின் துயரங்களைக் களையறுக்கத் தனது உயிரையும் கொடுப்பான். ஆனால் துன்பப்பட வேண்டும் என்ற முடிவை மக்களே எடுக்கின்றார்கள் என்பதைத்தான் அவனால் சகித்துக்கொள்ள முடிவதில்லை.

அவன் வாழ்ந்தது இந்த அகன்ற பிரபஞ்சத்தின் இன்னொரு முனை. பூமாதேவியின் உடலில் ஓர் அங்கம். ஆனால் அந்தப் பூமாதேவியை அங்கம் அங்கமாய் துண்டு துண்டாய் வெட்டி நாடு என்று அழைப்பர். அதை அவன் பொருட்படுத்துவதில்லை. அவனுக்கு முக்கியம் மனிதர்கள்.

அன்பு. அந்த அன்பை விரயமாக மண்மேல் கொட்டுவதை அவனால் பொறுக்கமுடிவதில்லை.

எல்லைகள் இருக்கும் வரை எல்லைகளுக்காகப் போர்கள் நடக்கும். "எனது நண்பனை நான் நம்புகிறேன் ஆனால் ஒரு பாதுகாப்புக்காகத் துப்பாக்கியும் என்னிடம் இருக்கட்டும்" என்று கூறினால், அதன் அர்த்தம் என் நண்பனை நான் நம்பவில்லை என்பதே. போர்கள் வேண்டாம் என்றால் எல்லைகள் அழிக்கப்படவேண்டும். ஆனால் அதற்கு யாரும் உடன்படமாட்டார்கள். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்று வாழும் இந்த மக்களுக்கு எவ்வாறு வழிகாட்ட முடியும் என்று அவன் மனம் விரக்தி அடைந்திருந்தது.

அவன் வாழும் நாட்டில் இரண்டு இனங்களுக்கு இடையே நீண்டகாலமாக ஒரு போர். வரலாற்றில் நையப்புடைத்த கதை. அந்தப் போரை வைத்தே அரசியல்வாதிகள் அரசியல் செய்துவந்தனர். நரிகளாய்ப் பிறந்தபோது செய்த தந்திரம் மனிதராய்ப் பிறந்த பின்பும் அவர்கள் விடயத்தில் எடுபடத்தான் செய்தது. ஆனால் ஜெயவர்மன் இப்பொழுது கண்டுபிடித்திருக்கும் இந்தக் கண்டுபிடிப்பு இவர்களின் அரசியலுக்கு ஆபத்தாய் அமையக்கூடியது. அதனால் அவன் உயிருக்கு எந்த நேரமும் ஆபத்து.



> ஓஷோ, ஜெயவர்மனின் ஆன்மீகக் குரு. ஓஷோவின் ஆச்சிரமம். பெயரில் மட்டும் தான் சிரமம் இருந்தது. மற்றப்படி கிருஷ்ணணைப்போல் வாழ்வைக் கொண்டாடும் இடம். வறுமையும் பிச்சைக்காரர்களும் நிறைந்த அந்த நகர வீதிகளைத் தாண்டி ஆச்சிரமத்தின் வாயில் கதவுகளை அடைந்தான். இருட்டான அறைக்குள் திரைச்சீலை களைத் திறந்ததும் சூரியன் சிறகடித்து வருவது போல் கதவின் உட்பக்கம் முதல் பார்த்த அனைத்திலும் முரணான செழிப்பும் கொண்டாட்டமும் காணப்பட்டன.

அவனுக்கு வயது வெறும் இருபத்தியிரண்டு. ஆனால், அவன் தான் இறப்பதைப் பற்றி அஞ்சவில்லை. ஏன் பிறந்தோம் என்றுகூட அறியாமல் இறப்பதற்குத்தான் அஞ்சினான்.

000

காலை ஒன்பது மணிக்கு நகர மண்டபத்தில் அவன் தனது கண்டுபிடிப்பை மக்களுக்கும் ஊடகங்களுக்கும் அறிவிக்கப்போகிறான். இப்பொழுது மணி ஆறு. இன்னும் மூன்று மணிநேரம், நூற்றெண்பது நிமிடங்கள், பத்தாயிரத்து எண்ணூறு விநாடிகள். அவன் தாய், தந்தை கிராமத்தில்.

அவன் காதலி இன்னும் உறங்கிக்கொண்டுதான் இருப்பாள். அவர்களிடம் பேசினால் நிச்சயம் அழுதுவிடுவான். தனது கண்டுபிடிப்பை அறிவிக்கும் தீர்மானத்தையும் நிறுத்திவிடலாம். அதனால் அவர்களிடம் பேசவோ, அவர்களைச் சந்திக்கவோ அவன் விரும்பவில்லை. அவர்களையும் இந்த இயற்கையையும் நினைத்து நினைத்து அவன் இரவு முழுவதும் அழுது தீர்த்தான். வீதியோரம் விளையாடிக்கொண்டிருந்த ஒரு சிறுவனை அழைத்துத் தனது திறன்பேசியைக் கொடுத்தான். தனது பேர்சில் இருந்த பணத்தை வீதியோரம் ஒரு பெண்பிள்ளையோடு பிச்சை எடுத்துக்கொண்டிருந்த தாயிடம் கொடுத்துவிட்டு அவர்கள் காலைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டான். பிறகு காரை விரைவாக ஓஷோவின் ஆச்சிரமத்துக்கு விட்டான்.

ஓஷோ, ஜெயவர்மனின் ஆன்மீக குரு. ஓஷோவின் ஆச்சிரமம். பெயரில் மட்டும்தான் 'சிரமம்' இருந்தது. மற்றப்படி கிருஷ்ணணைப்போல் வாழ்வைக் கொண்டாடும் இடம். வறுமையும் பிச்சைக்காரர்களும் நிறைந்த அந்த நகர வீதிகளைத் தாண்டி ஆச்சிரமத்தின் வாயில் கதவுகளை அடைந்தான். இருட்டான அறைக்குள் திரைச்சீலைகளைத் திறந்ததும் சூரியன் சிறகடித்து வருவதுபோல் கதவின் உட்பக்கம் முதல் பார்த்த அனைத்திலும் முரணான செழிப்பும் கொண்டாட்டமும் காணப்பட்டன. அனைவரும் ஒருவரோடு ஒருவர் சிரித்துப் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தனர். காற்றில் ஆடிய மரங்களின் ஓசையோடு அவர்கள் சிரிப்பொலி கலந்தது.

ஒவ்வொரு மரமும் மற்ற மரங்களோடு அரட்டை அடிப்பதுபோல் இருந்தது. அந்த மரங்களுக்கு இடையில் மாறி மாறிப் பறந்த குருவிகளைப்போல் மனிதர்கள் முத்தங்களைப் பரிமாறிக்கொண்டனர். வேர்களைவிட இறுக்கமான தழுவல்கள் உயிருக்கு நீர் பாய்ச்சின. ஆயிரம் கோபியர் மட்டும் அல்ல ஆயிரம் கிருஷ்ணர்களும் வாழும் நவீன பிருந்தாவனம் அது. தனது கண்டுபிடிப்பை நாட்டுக்கு உரைத்த பின் உயிரோடு இருந்தால் தன் காதலியோடு இங்கு வந்து வசிக்க ஜெயவர்மன் நினைத்திருந்தான்.

அவனை ஓஷோவின் அறைக்குள் அழைத்து சென்றனர். திரைச்சீலைகள் மிகவும் சுத்தமாகத் துவைக்கப்பட்டு மாட்டப்பட்டிருந்தன. அனைத்தும் மிகவும் ஒழுங்காக அந்தந்த இடத்தில் அடுக்கப்பட்டிருந்தன. அந்த அறையைக் கற்கள் கொண்டு கட்டினரா. இல்லை புத்தகங்கள் கொண்டு கட்டினரா? எனச் சந்தேகம் வரும் அளவுக்குச் சுவர் முழுதும் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. ஓஷோவை விமர்சிப்பவர்கள் அவரிடம் இருந்து கற்றுக்கொள்ளக் குறைந்தது ஒரு நல்ல பழக்கமாவது உண்டு. அது அவரது வாசிப்புப்பழக்கம்.

'குளிர்மலை தன் வாசன்' என்று சிவனைப் பாடுவார்கள். அந்த இமயமலையைவிட்டு இங்கு வந்ததாலோ என்னவோ அறை முழுதும் குளிரூட்டி பனிபோல் பொழிந்து கொண்டிருந்தது.

ஓஷோவுக்கு முதுகில் ஒரு வலி இருப்பதால் அவருக்கென்று ஒரு பிரத்தியேகமான சாய்ந்த கதிரையை அவர் சீடர்களும் செய்துகொடுத்திருந்தனர். அந்தச் சிம்மாசனத்தில் கால்களின் மேல் கால்களைப் போட்டுக்கொண்டு, உள்ளங்கைகளை மடியில் ஒன்றின் மேல் ஒன்று வைத்துக்கொண்டு கண்களை மூடித் தியானத்தில் இருந்தார் ஓஷோ.

சலவைப் பவுடர் விளம்பரத்தில் வருவதுபோல் அவர் வேட்டியும் முழுநீள ஜிப்பாவும் மாசற்ற வெள்ளை ஜோதியாகக் காட்சியளித்தன. கார்மேகங்களும் பொறாமைப்படும் கருகரு என்ற நிறத்தில் நீண்ட தாடியும் அடர்த்தியான மீசையும் இருந்தது. சகஸ்ராரம் இருக்கும் இடத்தைச் சுற்றி ஒரு முடிகூட இல்லாமல் 'மொட்டை பாஸ்' போல் இருந்தார்.

ஆனால் செவிகளுக்கு மேலும் பின்கீழ் தலையில் இருந்தும் கங்கைபோல் சடாமுடி படர்ந்திருந்தது. ஒரு செருப்பு வெறுமையாகவும் மறுசெருப்பு இன்னும் பாதத்துக்குக் கீழேயும் இருந்தது. அவர் கால்களில்விழுந்து முத்தமிட்டான் ரவி வர்மன். முத்தத்தின் ஈரம் கண்களையும் சலனம் செய்திருக்கலாம் ஓஷோ,கண்களைத் திறந்தார்.

"மன்னிச்சிருங்க மாஸ்ரர். உங்கட தியானத்தைக் குழப்பீற்றன்போல கிடக்கு"

அகண்ட ஓர் அண்டக்கொட்டாவியை விட்டுவிட்டு ஓஷோ பதிலளித்தார்.

"நான் நித்திரைதான் கொண்டண்டு இருந்தன்..."

ஜெயவர்மன் உயிர்ப் பயத்தை மறந்து ஆத்மார்த்தமாக ஓஷோவுடன் சேர்ந்து சிரித்தான்.

"...ஆனால் எனக்கு நித்திரை. இறப்பு. தியானம் எல்லாம் ஒன்றுதான்"

சிரிப்பைத் தொடர்ந்து மௌனம் சிறிது நேரம் தன் பங்குக்கு அறையை நிரப்பியது. அதைக் கேட்டுவிடலாம் என முடிவுசெய்தான். ஆனால் இவன் கேள்வி கேட்கும் முன்னே அவர் விடையொன்றைக் கொடுத்தார்.


'ஜப்பானில் வாழ்ந்த எகிடோ என்ற சற்குரு மிகவும் கண்டிப்பான ஓர் ஆசிரியர். அதனால் மாணவர்கள் அவரைப் பார்த்துப் பயந்தனர்.

43

கட்டுரை

ராஜேஸ்மணாளன்

# உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இலங்கைப் பூங்காக்கள்



போரால் வடக்கு துவம்சம் செய்யப்பட்டாலும், தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான இலங்கை இயற்கை எழில் மிக்க ஒரு நாடு என்பதை எவருமே மறுக்க முடியாது. மலைகள், ஏரிகள் என்று இயற்கை அழகு கொட்டிக் கிடக்கும் குட்டி ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தைப்போல குட்டித் தீவான இலங்கையிலும் இயற்கை அழகு குவியலாகக் கொட்டிக் கிடக்கின்றது. மலை, பச்சைக் கம்பளம்போல அதை மூடிய தேயிலைச் செடிகள், மலையிலிருந்து கொட்டும் நீர்வீழ்ச்சி, அழகிய பட்சியினங்கள், கம்பீரமான காட்டு மிருகங்கள், நீண்டு வளர்ந்த கரையோர மூங்கில்களுடன் ஆறுகள், எழில் கொஞ்சும், பரந்து விரிந்த கடற்கரைப் பரப்புடன் கூடிய ஆழக் கடல்கள் என்று அழகு நம்மை ஆட்கொள்கின்றது.

**பூங்காக்களும் சுற்றுலாத்துறையும்**

2017ஆம் ஆண்டுக்கான அறிக்கையில், யால தேசியப் பூங்கா இதுவரை காலமும் இல்லாதவாறு, மிக அதிக வருமானத்தை ஈட்டியிருப்பதாக இலங்கை உல்லாசப் பயணத்துறை அமைச்சு ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. இலங்கையில் வில்பத்து பூங்காவுக்கு அடுத்த இரண்டாவது பெரிய பூங்காவாக யால தேசியப் பூங்கா இருக்கின்றது. வனஜீவராசிகள் அமைச்சின் சமீபத்தைய அறிக்கையின்படி, 700.58 மில்லியன் ரூபா வருமானத்தை 2017ஆம் ஆண்டில் ஈட்டியிருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒரு தேசியப் பூங்கா பெற்ற அதிஉச்ச வருமானத் தொகை இது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2இலட்சத்து 7ஆயிரத்து 927உள்ளூர்வாசிகள் உட்பட, 3இலட்சத்து 97ஆயிரத்து 122பேர் இங்கு வந்து போயிருப்பது ஒரு சாதனை என்கிறார்கள்.

இந்தப் பூங்காவில்தான் உலகிலேயே மிக அதிகமான சிறுத்தைகள் காணப்படுவதாகக் கூறுகிறார்கள். ஆனால் இவை அழிவின் பாதையில் சென்று கொண்டிருப்பதாக அஞ்சப்படுகின்றது. 2015ஆம் ஆண்டில் எடுத்த ஒரு கணிப்பின்படி, 650க்கும் 950க்கும் இடைப்பட்ட சிறுத்தைகளே இங்கு உலாவுகின்றன என்று சொல்கிறார்கள். இலங்கையின் தென் பகுதிக்கும், ஊவாப் பிரதேசத்துக்குமிடையில் 900சதுர கிலோ மீற்றர் பரப்பளவை அடக்கியதாக இந்தப் பூங்கா அமைந்துள்ளது.

**வில்பத்து, மின்னேரியா தேசியப் பூங்காக்கள்**


இலங்கையில் குறிப்பிடத்தக்க இன்னொரு தேசியப் பூங்காவாக, வில்பத்து திகழ்கின்றது. இது இலங்கையின் வடமேற்குக் கரையோரப் பகுதியில் உள்ளது. காட்டுக் கோழிகள், மயில்கள், இன்னும்பல அழகிய பறவைகளுக்கும், புள்ளி மான்களுக்கும், குரைக்கும் மான்களுக்கும், வெயில் குளிப்பில் ஈடுபட்டிருக்கும் முதலைகளுக்கும் இந்தப் பூங்கா பிரசித்தமானது. மேற்குக் கரையோரம் புத்தளம் ஊடாகவும், வட மத்திய பிரதேசம் ஊடாகப் பயணிக்கும்போது அனுராதபுரம் வழியாகவும் இந்தப் பூங்காவைச் சென்றடைய முடியும். பெப்ரவரி மாதமும், ஒக்ரோபர் மாதமும் இந்தப் பூங்காவைக் கண்டுகளிக்க சிறந்த காலப்பகுதிகள் எனக் கணிக்கிறார்கள்.

மின்னேரியாத் தேசியப் பூங்காவானது, இலங்கையில் பொலநறுவை மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ளது. இது காட்டு யானைகளின் கூட்டத்தைப் பார்வையிடும் ஒரு சுற்றுலாத்துறைப் பகுதியாகப் பிரசித்தி பெற்றுள்ளமையால், இங்கு வருடந்தோறும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வண்ணம் உள்ளனர். பெருமளவாக, மே மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரை இந்தப் பூங்காவை அதிக சுற்றுலாப் பயணிகள் சென்று பார்வையிடுகின்றனர்.

உலகிலேயே ஆசிய யானைகள் கூடும் பெரியளவிலான இடம் மின்னேரியாப் பூங்கா என்பது குறிப்பிடத்தக்கது. கோடை காலங்களில் வெளியிடங்களில் இருந்தும் சில யானைக்கூட்டங்கள் உணவு தேடி வந்து போகும் இடமாகவும் மின்னேரியாப் பூங்கா விளங்குகின்றது. இங்கு 300க்கும் அதிகமான யானைகளை, ஒரே தடவையில் பார்வையிடும் வாய்ப்புக் கிடைக்கின்றமையானது சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இங்கு 170வகையான பறவையினங்களையும், 24வகையான பாலூட்டிகளையும், மற்றும் 25வகையான ஊர்வன ஜீவராசிகளையும் கண்டுகளிக்க முடியும். இத்தகைய சிறப்பைக் கொண்டிருப்பதனாலேயே, சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டுதோறும் இங்கு அதிகரித்த வண்ணம் உள்ளது.

**திருகோணமலை - புறாமலை**

புறாத்தீவு தேசியப் பூங்காவை உள்ளூர் வழக்கில் புறாமலை என்கிறார்கள். இலங்கையிலுள்ள இரண்டு கடல்சார் தேசியப் பூங்காக்களில் ஒன்று. இந்தப் பூங்கா கிழக்கு மாகாணத்திலுள்ள நிலாவெளி கடற்கரையிலிருந்து 1கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இந்தத் தீவின் பெயர் அங்கு வாழும் பாறைப் புறாவின் பெயரால் ஏற்பட்டது. இந்தத் தேசியப் பூங்கா இலங்கையிலுள்ள சிறந்த பவளப் பாறைகள் சிலவற்றைக் கொண்டுள்ளது. 2003ஆம் ஆண்டில் இது தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டது.



**ஆதாம் பாலம் கடல்சார் தேசிய வனம்**

இது ஆதாமின் பாலம் சுற்றுவட்டாரத்தில் இலங்கையின் வடக்கில் அமைந்துள்ள ஒரு தேசிய வனம் ஆகும். இது மன்னார் தென் மேற்கிலிருந்து கிட்டத்தட்ட 30கிலோ மீற்றர்கள் தூரத்தில் அமைந்துள்ளது. 2015ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசு நெடுந்தீவு தேசிய வனம், சுண்டிக்குளம் தேசிய வனம், மடு வீதி தேசிய வனம் என்பவற்றுடன் இதையும் தேசிய வனமாக இருக்க வேண்டும் என்று அறிவித்தது. ஆதாமின் பாலம் 22 ஜூன் 2015ஆம் ஆண்டு அன்று, 18ஆயிரத்து 990 ஹெக்டேயர்கள் பரப்பளவுடன் தேசிய வனமாக அறிவிக்கப்பட்டது.

**சுண்டிக்குளம், நெடுந்தீவு தேசிய வனங்கள்**

வட இலங்கையில் அமைந்துள்ள ஒரு தேசிய பூங்கா சுண்டிக்குளம். இது கிளிநொச்சியின் வடகிழக்கில் ஏறக்குறைய 12கிலோ மீற்றர்கள் தூரத்தில் அமைந்துள்ளது. நெடுந்தீவு தேசிய வனம் என்புது நெடுந்தீவுப் பகுதியில் அமைந்துள்ள ஒருதேசிய வனம் ஆகும். இது யாழ்ப்பாணம் தென் மேற்காகக் கிட்டத்தட்ட 35கிலோ மீற்றர்கள் தூரத்தில் அமைந்துள்ளது.

**ஹற்றன் சமவெளி**

இது இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட தேசிய வனப் பூங்காவாகும். இது 3ஆயிரத்து 159 ஹெக்டயர்கள் பரப்பளவைக் கொண்டதுடன், சராசரியாக 2ஆயிரத்து 130 மீற்றர்கள் (7000 அடி) உயரமானது. 1969ஆம் ஆண்டு முதல் வனவிலங்கு சரணாலயமாக காணப்பட்ட இது, 1988ஆம் ஆண்டு முதல் தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டது. இங்கு புல் நிலங்களும் என்றும் பசுமையான (பசுமை மாறா) மலைக்காடுகளும் காணப்படுகின்றன. இது நுவரெலியா நகரில் இருந்து 32கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ளது. இது இலங்கையில் மிக உயரமானதும் தனிமைப்படுத்தப்பட்டதுமான மேட்டுநிலமாகும். இங்கு 14இனங்களைச் சேர்ந்த பாலூட்டி விலங்குகளும், 16தொடக்கம் 20வரையான ஈரூடக வாழி இனங்களும், 6ஊர்வன இனங்களும், 98பறவையினங்களும், 2 மீனினங்களும், 20வகையான வண்ணத்துப் பூச்சியினங்களும் காணப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 98பறவையினங்களில் 21இனங்கள் இலங்கைக்கே உரியவையாகக் கணக்கிடப்பட்டுள்ளன. பல பறவைகள் வேறுநாடுகளில் இருந்து குளிர்காலத்தைக் களிக்க வருபவையாகும். இங்கு யானைகள் காணப்பட்டபோதும் 1800ஆம் ஆண்டு காலப்பகுதியிள் பெருமளவில் இவை பிரித்தானியர்களால் சுட்டு வீழ்த்தப்பட்ட தால் இன்று அருகிவிட்டன. இங்கு 4ஆயிரம் சாம்பர் மான்கள் வசிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. காட்டுப் பன்றிகள், சிறுத்தைகள் என்பன இங்கு காணப்படும் ஏனைய பெரிய பாலூட்டிகளாகும். இலங்கைக்கே உரிய கரடிக் குரங்கு, புள்ளிப் பூனைகள் என்பனவும் இங்கு காணப்படுகின்றன.

இப்படி வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று நாற்றிசைகளிலும் பரவிக் கிடக்கும் தேசியப் பூங்காக்கள் இந்தத் தீவுக்கு அழகும் வளமும் சேர்ப்பவை. இந்த நாட்டில் வாழந்து கொண்டு, நாம் எந்தப் பூங்காங்களுக்குச் சென்று வந்திருக்கிறோம்? இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதுபோல, நம் மடியில் கிடக்கும் அழகுகள் நமக்குத் தெரிவதில்லை. தூரத்துப் பச்சைகளை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கிறோம்.

## கதை 6

# காணாமல் ஆக்கப்பட்ட கதை....

யார் யாரோ
ஒற்றைக்கால் கொக்காக
காத்துக்கொண்டிருக்கிறார்கள்
தெருவோரங்களில்
பதாகைகளையும் படங்களையும்
ஏந்தியபடி யாருக்காகவோ
அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்
யார் யாரோ வந்து
படங்களை ஏந்திநிற்கும் ஜடங்களோடு
படமெடுத்துப் போகிறார்கள்..
இன்னும் சிலர் தெய்வீகமாய்த்
தோன்றித் தேற்றிப்போகிறார்கள்...
அந்தப் படங்களுக்குள்
என் முகமும் கலர் மங்கிப்போய் இருக்கலாம்
கவனமாகப் பாருங்கள் அது நான்தான்...
அவர்கள் காட்டும் அடையாளங்கள்
போதவில்லையா?
இதோ என் அடையாளங்களைச்
சரிபாருங்கள்..
தமிழெனும் தாய் என்
மூத்த தாய் என்று
அப்பு அடிக்கடி சொல்வார்
தன்மானம் என்கூடப் பிறந்ததென்று
மார்தட்டிச் சொல்வார்
மூத்த குடியென்றும்
மூவுலகும் காத்த குடியென்றும்
முழக்கமிட்டுச் சொல்வார்
அடையாளங்களை
சரிபார்த்துக்கொள்ளுங்கள்..
கண்டுபிடித்தால் அவர்களின் கரம்
சேர்ப்பியுங்கள் இல்லையென்றால்
என் படத்துக்கு ஒரு
மாலையைப்போட்டுவிடச் சொல்லுங்கள்...



கவிதை

சி.சிவசேகரன்

கட்டுரை

வினோஜா நாதரூபன்



# வெளவால்களும் எதிரொலியால் இடமறிதலும்

மரங்கள் செறிந்த பகுதிகளே வெளவால்களின் வாழ்விடங்களாகக் காணப்படுகின்றன. அவற்றின் இனத்தைப் பொறுத்து, அந்த மரங்களுக்கு ஊடாக மணித்தியாலத்துக்குப் பத்திலிருந்து பதினைந்து கிலோமீற்றர்கள் வேகம் வரையில் பறந்து செல்கின்றன. அவை பூச்சிகளைப் பிடிக்கவேண்டும் என்றால் பூச்சிகள் இருக்கும் இடத்தை மிகச் சரியாகக் கண்டறியவேண்டும். அனேகமாக நாம் கேள்விப்பட்டிருக்கிற செய்தியான 'வெளவால்களுக்குக் கண் தெரியாது' என்பது ஒரு பொய். அவற்றுக்குக் கண் தெரியும். (இப்படித்தான் பல சமயங்களில் பிறரிடம் குறை இருப்பதாக நினைக்கிறோம், ஆனால் நமக்குத்தான் அறிவு இருந்திருக்காது.) ஆனால் அவற்றின் பார்வை மிகவும் தெளிவானதல்ல. மிகவும் குறைந்த ஒளியில் மட்டுமே அவற்றால் பார்க்க முடியும். எனவே வேட்டையாட அவை கண்களை நம்பியிருப்பதில்லை. இதற்கு அவை 'எதிரொலி இடமாக்கம்' எனும் முறையைப் பயன்படுத்துகின்றன. ஆனால் எதிரொலி இடமாக்கத்தைப் புரிந்துகொள்ளும் முதல் நாம் எதிரொலியைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**நீர் மேல் கோலங்கள்**

இன்று இரவு, உங்கள் வீட்டில், ஒரு பெரிய பேசினுக்குள், நீரை நிரப்பி, அந்த நீர் சலனமற்றுச் சாந்தியடையும் வரைக் காத்திருங்கள். நிலையாக இருக்கும் அந்த நீர்ப் பரப்பின் நடுவில் நெற்றியில் குங்குமம் இடுவதுபோல் இலேசாக விரலை அழுத்திவிட்டு எடுங்கள். இப்பொழுது நீர் அலைகள் உருவாகும். பேசினின் கீழ் பரப்பில் அந்த அலைகளின் நிழல் விழும். மின்குமிழ் வெளிவிடுகிற ஒளியின் உதவியுடன் அந்த நிழல்களைக் கவனியுங்கள். அவை வட்டமாக, மெதுவாக விரிந்து சென்று பேசினின் கரையில் பட்டுத் தெறித்து மீண்டும் உள்நோக்கி வரும். இதைத் 'தெறிப்பு' என்போம். இது அலைகளின் முக்கிய இயல்பாகும். இதைப்போல் முறிவு, குறுக்கீடு, விளிம்பு, விளைவு என்று முழுவதுமாக நான்கு முக்கிய இயல்புகள் எந்த வகையான அலைக்கும் இருக்கும்.



**எதிரோலி என்பது...**

காற்று மூலக்கூறுகளின் அதிர்வால் உருவாவன ஒலி அலைகள் பற்றிக் கடந்த வாரக் கட்டுரையில் பார்த்ததை மீட்டிக்கொள்ளுங்கள். காற்றில் தவழும், கண்ணுக்குப் புலப்படாத, நீர் அலைகள்போல் இவற்றைக் கற்பனை செய்யுங்கள். ஆனால் நீர் அலைகளுக்கும் ஒலி அலைகளுக்கும் மிக முக்கியமான ஒரு வித்தியாசம் உண்டு. அது பற்றிப் பின்னொரு நாள் பார்ப்போம். இப்பொழுதுக்கு இப்படியே கற்பனை செய்யுங்கள். மேல் பார்த்த நீர் அலைகளைப்போலவே இந்த ஒலி அலைகளும் பொருள்கள் மீது பட்டுத் தெறிப்படையும். அவ்வாறு தெறிப்படைந்து நம்மைத் திரும்பி வந்தடையும் ஒலி அலைகளையே நாம் எதிரொலி என்கிறோம்.

**"யாரும் இல்லாத் தனி அரங்கில் ஒரு குரல்போலே..."**

மலையில் நின்று நீங்கள் கத்துகிறீர்கள். எதிரொலி கேட்கிறது. ஒலி எதிர்ப்பக்கத்தில் இருக்கும் மலையில் பட்டுத் தெறிப்படைந்து உங்களை மீண்டும் அடைந்ததென்று முடிவு செய்கிறீர்கள். ஆனால்,

1) அந்த மலை எவ்வளவு தூரத்தில் உள்ளது?
2) அதன் வடிவம் என்ன?

இவற்றையெல்லாம் வெறும் எதிரொலியை வைத்துச் சொல்ல முடியுமா? இந்த இடத்தில் இன்னும் சில கேள்விகளையும் கேட்கிறேன்.

3) எதிரொலியைக் கேட்க வேண்டும் என்றால் ஏன் நாம் துறவிபோல் மலைக்குப்போக வேண்டும். கர்மயோகிபோல் எமது படுக்கையறையிலேயே அதைக் கேட்க முடியாதா?

சித்தார்த் நடித்த காவியத்தலைவன் திரைப்படத்தில் ஒரு பாடலில், காதலனைப் பிரிந்திருக்கும் காதலி "யாரும் இல்லாத் தனி அரங்கில் ஒரு குரல்போலே நீ எனக்குள்ளே" என்று பாடுவார். இந்த உவமையை இரண்டு விதங்களில் புரிந்துகொள்ள முடிகிறது. காதலும் சரி தியானமும் சரி நமக்குள் ஓர் அழகிய தனிமையை உருவாக்கும். அந்தத் தனிமையின் மௌனத்தில் மட்டுமே மிகவும் மெல்லிய குரலைக் கேட்க முடியும். இது ஒரு காரணமாய் இருக்கலாம். இன்னொரு விதமாய் நோக்கினால் காதலனைப் பிரிந்தவள் கற்பனையில் காதலனோடு கதைக்கிறாள். இந்தச் செயற்பாடு ஒலியையும் எதிரொலியையும் ஒத்தது. ஆள்கள் குறைந்த அரங்குகளில் அதிகமாக எதிரொலி கேட்கும். அதனாலும் இந்த உவமையைப் பயன்படுத்தியிருக்கலாம். சரி இதை விட்டுவிட்டு நாம் கட்டுரைக்குள் வருவோம்.

**'எதிரொலி இடமாக்கம்' என்றால் என்ன?**

வெளவால் தனது மூக்கின் வழியாக ஓர் ஓசையை எழுப்பும். இந்த ஓசை வெறும் மூன்று மில்லி விநாடிகள் மட்டுமே நீடிக்கும். (ஒரு மில்லி விநாடி என்பது, ஒரு விநாடியை ஆயிரமாகப் பிரித்தால் அதில் ஒரு பங்கு) இந்த ஓசை, ஒலி அலைகளாகக் காற்றில் பயணிக்கும். அந்த ஒலி அலைகள் ஒரு பூச்சியில் பட்டுத் திரும்பி வெளவாலை வந்தடையும்போது வெளவால் தான் பிடிக்கவிருக்கிற பூச்சி தன்னிடம் இருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கின்றதென்பதைக் கணித்து விடும்.

**அது எப்படி?**

இப்பொழுது உங்கள் மகனிடம் மோட்டார் சைக்கிளைக் கொடுத்து ஒரு மணி நேரம் ஓடி விட்டுத் தர வேண்டும் என்று சொல்கிறீர்கள். அவன் சராசரியாக மணிக்கு நாப்பது கிலோமீற்றர்கள் வேகத்தில் ஓட்டுவான் என உங்களுக்குத் தெரியும். அவன் ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்தவுடன், அவன் எங்கு வரை போயிருப்பான் என நீங்கள் கணிக்க முடியும். அவன் சென்ற தூரம், நேரத்தை வேகத்தால் பெருக்கினால் கிடைக்கும். நாற்பது கிலோமீற்றர்கள். இது போய்வருவதற்கு. எனவே அவன் போவதற்கு இருபது கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள இடம் ஒன்றுக்குத்தான் சென்றிருக்க வேண்டும்.

ஒலி அலைகள் காற்றில் மணித்தியாலத்துக்கு ஆயிரத்து இருநூற்று முப்பத்தைந்து கிலோமீற்றர்கள் வேகத்தில் பயணிக்கும். தான் எழுப்பிய ஓசையின் எதிரொலி தனது கூர்மையான காதுகளை வந்தடைய எடுக்கும் நேரத்தை வெளவாலின் மூளை மிகச்சரியாக அளந்துவிடும். அதை வைத்துக்கொண்டு பூச்சி இருக்கும் தூரத்தைக் கணிக்கவும் வெளவாலால் முடியும். கவனிக்க...? அதற்கு இயற்பியலோ கணிதமோ தெரியாது. தன் உள்ளுணர்வை நம்பிச் செயற்படுகின்றது. இந்தவகையில் வெளவால் கணிதமேதை சீனிவாச இராமானுஜனைப் போன்றது. அவரும் முறையாகப் படிக்கவில்லை. அவர் கண்ணை மூடினால் கணிதச் சமன்பாடுகள் கவிதைபோல் தோன்றும். அவருக்கே அவை சரியா? பிழையா? என்று தெரியாது. இது இராமானுஜனை அவமதிக்கும் உவமை அல்ல. மிருகங்களும் சரி, குழந்தையும் சரி, உண்மையான ஞானியும் சரி, தம் அறிவைவிட உள்ளுனர்வையயே நம்புகிறார்கள். (வெளவால் ஒரு படிக்காத மேதையா?)எனவே இரை இருக்கும் தூரத்தை அறிந்த வெளவால், எதிரொலி வந்த திசையில் பயணித்து இரையை வேட்டையாடிவிடுகிறது. இவ்வாறு தான் தாண்டவம் திரைப்படத்தில் கண்பார்வை அற்ற விக்ரமும் எதிரிகளை வேட்டையாடுவார். இந்த எதிரொலி இடமாக்கத்தைத் தாம் பயணிப்பதற்கும் வெளவால்கள் பயன்படுத்தும். ஆனால் வெளவால்களால் இந்தத் திறமையை வெறும் ஐந்து மீற்றர்களுக்குள் மாத்திரமே பயன்படுத்தமுடியும். அதற்கு மேற்பட்ட தூரங்களில் எதிரொலியின் சத்தம் நன்கு குறைந்துவிடும்.

**காதுகளால் பார்க்க முடியும்**

பிறரை அன்பு செய்ய வேண்டும் என்று எமக்குப் போதிக்கப் பட்டுள்ளது. அதனால் நாமும் அன்பு செய்ய யோசிக்கிறோம். இதயத்தில் இருந்து செய்ய வேண்டிய அன்பை தலையிலிருந்து (மூளை) செய்ய முயற்சிப்பதால்தான் சேவை வேலையாகத் தெரிகிறது. இதயத்தின் வேலையைத் தலை செய்ய முடியாது. ஆனால் கண்ணின் வேலையைக் காதுகளால் செய்ய முடியும். வெளவால்களோடு ஒப்பிட்டால் "இது என்ன பிரமாதம், இத விட ஒரு ஸ்பெஷல் ஐயிற்றம் இருக்கு" என்று வடிவேல் பாணியில் சொல்லும் அளவுக்கு அமைந்துள்ளது டொல்பின்களினதும் திமிங்கலங்களினதும் எதிரொலி இடமாக்கம். ஏனென்றால் அவற்றால் எதிரொலியை வைத்துத் தமது சுற்றாடலின் வடிவத்தையே மிகவும் துல்லியமாக மனக்கண் முன் உருவாக்க முடியும். ஆனால், வெளவால்களால் அனேக முயற்சியின் பின்பே இதைச் செய்ய முடியும்.

> 'வெளவால்களுக்குக் கண் தெரியாது' என்பது ஒரு பொய். அவற்றுக்குக் கண் தெரியும். (இப்படித்தான் பல சமயங்களில் பிறரிடம் குறை இருப்பதாக நினைக்கிறோம், ஆனால் நமக்குத்தான் அறிவு இருந்திருக்காது.) ஆனால் அவற்றின் பார்வை மிகவும் தெளிவானதல்ல. மிகவும் குறைந்த ஒளியில் மட்டுமே அவற்றால் பார்க்க முடியும்.

**விடைகள்**

கட்டுரை குறிப்பிட்ட முதல் இரண்டு கேள்விக்கும் விடைகள் கிடைத்துவிட்டது. மற்றைய இரண்டு கேள்விகளின் விடைகளைப் பார்ப்போம்.

3) நான் முன்பு கூறியதுபோல் ஒலி மணித்தியாலத்துக்கு ஆயிரத்து இருநூற்று முப்பத்தைந்து கிலோமீற்றர்கள் வேகத்தில் பயணிக்கும்.

படுக்கையறையில் சுவர்கள் சில மீற்றர்கள் தூரத்திலேயே இருக்கும். ஆரம்ப ஒலிக்கும் எதிரொலிக்கும் இடையேயான நேர இடைவெளி மிகக்குறைவு.

அதனால் எம்மால் இரண்டையும் பிரித்தறிய முடியாது. மலைகளுக்கிடையில் அதிக தூரம் இருப்பதால் ஆரம்ப ஒலிக்கும் எதிரொலிக்கும் இடையில் கணிசமானளவு நேர இடைவெளியிருக்கும்.

நீண்ட அரங்குகளிலும் இவ்வாறே. சாதாரணமாக எதிரொலியைக் கேட்க வேண்டும் என்றால் தெறிப்படையும் இடம் ஆரம்ப ஒலியின் உற்பத்திப் புள்ளியிலிருந்து 17.2 மீற்றர்களில் இருக்க வேண்டும்.


4) ஆள்கள் நிறைந்த அரங்குகளில் ஒலியை ஆடைகள் உறிஞ்சிவிடும். கொங்கிறிட் தரையில் டெனிஸ் பந்தை எறிந்தால் அது பட்டுத் தெறித்து மேல் வரும். அதையே மணலில் எறிந்தால்?

தெறிப்படையாமல் மண்ணில் புதைந்துவிடும். பந்தின் சக்தியை மண் உறிஞ்சிவிடும். அதுபோலவே ஒலிச் சக்தியை ஆடைகள் உறிஞ்சிவிடும் அவ்வளவுதான்.

கவிதை

வேலணையூர் தனு

# மழையோடு ஒரு நிமிடம்



மழைத்துளிகள் மடல் எழுதியுள்ளன
ஒவ்வொரு துளிகளும் வேறுபட்டவை
முத்தம் தந்து செல்கின்றன சில
சத்தம் இன்றித் தழுவிக்கொள்கின்றன பல

உன் காதல் வருகைக்கு
கம்பளம் விரிக்கின்றன
காற்றில் கமழும்
மண்வாசனை...
உன் தழுவலுக்காய்
தயாராகின்றது
மலரிதழ்கள்
இன்னும்
உன் வருகைக்கு
வளமூட்டுகின்றன
வானத்தவிலும்
வண்ணக் கமராக்களும்

அதோ!
புற்களின் மேலே தண்ணீர்ப் பூக்கள்

நீ
தன்னலமில்லாதவன்
தனித்துவமானவன்
மாடிவீட்டுக்கும் ஓலைக் குடிலுக்கும்
மத்தியஸ்தம் கற்பிப்பவன்
மகத்துவமானவன்

மழையைக் கிரகிக்காதவன்
இனியும்...., இம்
மண்ணுக்குத் தேவையில்லை
மழையை விரும்பாதவன்
வாழ்வில்....
மன்னிப்புக்கு இடமில்லை

மழைக்காய் ஓரிடம்
மனதுக்குள் கொடுங்கள்
மழை....,
மனிதத்துவமானது
இனி...,
மனிதன் மழையாக வேண்டியதுதான்.

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்

# கடவுளே நீ நிம்மதியாயிருக்கிறியா?



எங்களைப் பற்றி ஆராவது குறைவாச் சொல்லிப்போட்டால் போச்சுது. சுர்ர் எண்டு கோவம் பத்தியெரிஞ்சுண்டு வரச் சண்டித்தனத்துக்குப் போகுடுவம். சொந்தப் புத்தியுமில்லை. சொல்வழி கேக்கிறதுமில்லை. அதுதான் நிலைப்பாடு.
பக்தி விசயத்திலை எங்கட சைவ ஆக்கள் இதுக்கு நல்ல உதாரணம். சொந்தப் புத்தி கொஞ்சமும் இல்லை. சொல்வழி கேக்கிறதும் கிடையாது. ஐயர்மார் சொல்லுறது தான் வேதம் எண்டு சொல்லுற பக்தர்கள் கள் தான் நாங்கள். அவைக்கும் ஆகமவிதியளோ சடங்குகளுக்கான சரியான வழிமுறையளோ விளக்கமோ ஒண்டும் தெரியாது. ஆகத் தெரிஞ்சது கண்ட பாவனையிலை கொண்டை போடுகிற வழிதான். ஒரு விசயம் மட்டும் அவைக்கு நல்லாய்த் தெரியும். அதென்னண்டா தாங்கள் கடவுளின்ர பேராலை எதைச் சொன்னாலும் சரி, செய்தாலுஞ்சரி, கேக்க ஆளில்லை எண்டதும், சொல்லுறதைச் செய்ய ஆளிருக்கெண்டிறதும் மட்டும்தான்பாருங்கோ. அதைவிட பரிபாலனசபை, நிர்வாகக்குழு, ஆதீனகர்த்தாக்கள், அவையிவையெண்டிருக்கிற வெளிவிலாசப் பேர்வழியள் அடிக்கிற கூத்துகள் கொஞ்ச நஞ்சமே? குருக்கள் எதைச்சொன்னாலும் நடைமுறைப்படுத்துகிற ஆக்கள்தான் அவை. அனேகமா தங்கட தனிப்பட்ட சோலியளை முடிச்சுவிட்ட (துங்கட படிப்பு, உத்தியோகம், பிள்ளைகுட்டியளின்ர படிப்பு, கலியாணம்) எல்லாம்கடந்த ஆக்கள்தான் அவை.
அதுக்காக ஆசை துறந்தவையெண்டு நீங்கள் நினைச்சா அது பிழை. அப்பிடி நீங்கள் நினைக்கிறது சரியாயிருந்தா கோயிலுகளிலை ஊழல் மோசடியள் நடக்கிறதும், அடிபட்டு நீதிமன்றத்திலை சாமியைச் சாட்சிக்குக் கூப்பிடுகிறதும் நடந்திருக்காதெல்லோ? அப்பிடியில்லையே? அவையிலை கனபேர் உலகம் தெரியாத ஆக்களாயிருக்கிறது. இருக்கிற பெருச்சாளியளுக்கும் ஐயர்மாருக்கும் வலுகொண்டாட்டம். இப்பிடியான் கூட்டத்துக்கு சமூகச் சிந்தனை இருக்குமெண்டு நினைக்கிறியளோ? ஒண்டும் கிடையாது.

☆☆☆☆

ஐயர்மாராலை மேய்க்கப்படுகிற ஆக்கள் தான் உபயகாரர். பக்தியிருக்கோ இல்லையோ, இருக்கெண்டு காட்டவும் தங்கட 'பவரை'க்காட்டவும் ஒருக்காலும் உபயகாரர் தயங்கமாட்டினம் கண்டியளோ. காணி வித்து, மனிசியின்ர தாலியை வித்து, கடன்பட்டு, எண்டு விலாசமெழுப்புற வைக்கு, இப்ப வெளிநாட்டுக் காசு இல்லையெண்டா வருமானத்தை வெளிப்படையாச் சொல்லமுடியாத திடீர்ப்பண்க்காரருக்கு நிர்வாகமும் ஐயர்மாரும் உசுப்பேத்தினா சும்மா இருப்பினமோ?
தினமும் சத்தம்போட்டு ஊரைக்குழப்புகிற லவுட்ஸ்பீக்கர்களுக்கு மேலதிகமாய் எட்டுத்திக்கும் இருக்கிற சனத்துக்கு காதுகிழியக்கிழிய பக்தியை மண்டையைப்பிளந்து திணிக்கிறது. (காசைக் கரியாக்கிறது இது தான் எண்டு நினைக்கிறன்) இந்தியாவிலையிருந்து பாட்டுக்காரரைக் கொண்டு வந்து கண்ட கண்ட குப்பைச் சினிமாக் கலாச்சாரத்தைக் கொட்டுறதும் அன்னதானமெண்ட பேரிலை சோம்பேறிக் கூட்டமொண்டைப் பராமரிக்கிறதும் எண்டு இவை செய்கிற வேலையள் என்ன கொஞ்ச நஞ்சமே? கேட்டாப் பக்தி, நேர்த்திக் கடன் அது இது வெண்டு கேக்கிற ஆளுக்குப் பைத்தியப்பட்டம் குடுக்கிற ஆக்களும் உவங்கள்தான்.
பக்தி எண்டு சொல்லிப் பாடுபடுகிற கனபேர் திருவிழாக் காலங்களிலை தான் கோயிலுக்கே வருகினை எண்டுறதைக் கனபேரிலை கண்டிருக்கிறன். நேர்த்திக் கடனெண்டு உவை அடிக்கிற கூத்து இருக்கே.. என்னண்டு அதைநான் சொல்லுறது? முள்ளிலை தோலைக் கொழுவி அந்தரத்திலை தொங்கிக் கொண்டு 'செல்பி' எடுக்கிறதுக்கும், படத்துக்குப் போஸ் குடுக்கிறதும் பக்தியின்ர பரவசம்தானாம். தேங்காய் அடிக்கிறதிலையும், தேரை வடம்பிடிச்சு இழுக்கிறதிலையும் இளசுகளின்ர காதலரசியல்தான் அருவருத்துக் கிடக்கெண்டு சதாசிவத்தார் புலம்புகிறது பிழையே? சைவத்தை வளக்கிறம், காப்பாத்திறம் எண்டு குழறிக் கூத்தாடுகிற பேக்கூத்துகளுக்குக் குறை விருக்கே என்ன?

> சமயத்தை வளக்கிறம் எண்டு காவியோட சுத்துகிற எத்தினை பேர் சுயஅறிவோடை திரியினமெண்டு ஆராவது கணக்குப் பாத்தனிங்களோ? அப்பிடிப் பாத்திருந்தா சமய ஒழுக்கம் குறையிறதுக்கான காரணத்தைக் கண்டிருப்பியள்.

☆☆☆☆☆

சம'பத்தை வளக்கிறம் எண்டு காவியோட சுத்துகிற எத்தினை பேர் சுயஅறிவோடை திரியினமெண்டு ஆராலும் கணக்குப் பாத்தனிங்களே? அப்பிடிப் பாத்திருந்தா சமய ஒழுக்கம் குறையிறதுக்கான காரணத்தைக் கண்டிருப்பியள். சமயத்தை மாத்துகிறாங்கள், சனத்தை மாத்துகிறாங்கள், எண்டெல்லாம் கொதிக்கிற ஆக்கள் அதுக்கு மாத்து வழியள் பற்றியேதாலும் யோசிச்சாவது இருக்கினமோ எண்டால், இல்லை. இந்தச் சின்ன யாழ்ப்பாணத்துக்குள்ளயே வடிவாய் ஆருக்கும் தெரியாமலிருக்கிற அமைப்புக்குச் 'சர்வதேச.........., எண்டுபேர் வைச்சிருக்கினம். இதைப் பாத்து சிரிக்கிறதோ? அழுகிறதோ?
கோயிலுகளிலை கடவுளின்ர பேரால செய்யிற அநியாயச் செலவுகளையும் ஆடம்பரக்கூத்துகளையும் நிப்பாட்டி,
அதுக்காகச் செலவழிக்கிற காசை முதலீடாக மாத்தித் தொழிற்சாலையளை ஏற்படுத்தினா உள்ளூர் உற்பத்தியோட வேலை வாய்ப்பும் உருவாகுமல்லே? இந்து கலாச்சார அமைச்சுக்கு அமைச்சர், பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர்கள், அலுவலர்கள் எடுப்புகள் எண்டு என்ன பிரயோசனம்? ஊரிலை வேலையில்லாமத் திரிஞ்ச கொஞ்சத்தைப் பிடிச்சுப் பூணூல் போட்டதையும், வருச விழாக்களை இந்திய குப்பாடியளைக் கொண்டு வந்து (புனிதத் தலங்களெண்டு அவையே சொல்லி அங்கயே) கூத்தடிச்சதையும் விட்டால் சொல்லுறதுக்கெண்டு ஏதாலுமிருக்கே? சொல்லுங்கோவன்.
அதுதான் முதலிலையே சொன்னனானெல்லே? சொந்தப் புத்தியும் இல்லை. சொல்லுறவன் புத்தியைக் கேக்கிறதும் இல்லை. என்ன செய்ய? கடவுளே காப்பாத்தப்பா எண்டு நாங்கள் கத்த, நான் தான் கடவுள் என்னை. முதல்ல காப்பாத்துங்கோ எண்டு சொல்லிக்கொண்டு அந்தாளும் (கடவுள்) வந்து நிற்கிற நிலைதான் இப்ப பாருங்கோ. இனியாவது யோசிச்சா நல்லாயிருக்குமல்லே? (யோசிக்கிறதுக்கு மூளை வேணுமே,
அப்ப எங்களாலை எப்பிடி அது முடியும்?)
ஆனா ஒண்டு நான் சொன்னதைவிட்டிட்டு, உவர் ஐயர்மாருக்கெதிராக் கதைக்கிறார், இந்து மதத்தை மட்டும் சாட்டுறார் எண்டு தூக்கிப் பிடிக்கிற புத்தி இப்ப உடன எல்லாருக்கும் 'வேர்க்' பண்ணத்தொடங்கியிருக்கும் பாருங்கோ. அப்ப உங்களை என்ன செய்யிறது. நல்லவேளை கல்லாய் இருக்கிறதாலை அந்த மனுசன் தப்பிவிட்டுது.

இந்தவாரக் கருத்தாளர்

# கவிதை என்பது...



கவிஞர்
**சோ.பத்மநாதன்**

இலக்கியவகைகளில்கவிதைக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. மிகவும் தொன்மையான வடிவமாயினும், இன்றும் அது உயிர்ப்புடன் இருக்கிறது. கவிஞர்களாக ஆசைப்படுவோரே இளைய தலைமுறையில் அதிகம்.

சொற்றொடர்களை முறித்துப் போடுவதாலோ, உருவகங்களை அடுக்குவதாலோ கவிதை படைக்க முடியாது.

கவிஞனுக்கு - கலைஞனுக்கு -வாழ்க்கை பற்றிய ஒரு பார்வை - ஒரு தரிசனம் இருக்க வேண்டும். நாம் எல்லோரும் காணுகிற காட்சிகள், சம்பவங்கள் ஒன்றுதான்.

ஆனால், கவிஞன் அதைக் காட்டுகிற போது, "அட! இது நமக்குத் தோன்றாது போயிற்றே!" என்று வாசகனுடைய மனம் சொல்ல வேண்டும்.

இருபது வருடங்களிருக்கலாம். காலையில், குளித்துவிட்டு வரும்போது வானொலியில் ஒரு கவிதை கேட்டது. எழுதி வைக்க நேரமிருக்கவில்லை. ஆனால் மனதில் பதிந்து விட்டது.

***தினமும் வந்துபோயும்***
***கடைசி வரை தன் காதலைச்***
***சொல்லவே இல்லை அலை!***
***சொல்லும் என்று காத்திருந்து,***
***காத்திருந்து எழுந்து செல்லவே***
***இல்லை கரை!***

நாம் எல்லோரும் காணுகிற சாதாரண நிகழ்ச்சி. ஆனால், கவிஞன் அதற்கு ஒரு கலை வடிவம் தருகிறான். அலையும் கரையும் காதலனும் காதலியுமாக, எமது மன அரங்கில் உலாவுகிறார்கள். கவிஞனுடைய கற்பனை எமக்குள் ஒரு சிலிர்ப்பை - வியப்பை - ஏற்படுத்துகிறது. இந்த வியப்பு அம்சம் கவிதைக்கு முக்கியம்.

"ஒரு மிகை வெளிப்பாட்டால் கவிதை ஆச்சரியத்தை ஏற்படுத்த வேண்டும்" என்றான் 'கீற்ஸ்'.
(poetry should surprise by a fine excess" - keats)

"பாட்டினைப்போல் ஆச்சரியம் பார் முழுதும் இல்லை" என்றான் பாரதி. மேற்கிலாயினும் கிழக்கிலாயினும் கவிஞர்கள் ஒரே மாதிரித்தான் சிந்திக்கிறார்கள்.

***"பறவைகள் சத்தமின்றிப்***
***பறப்பதைப்போல்***
***சொல் கடந்து வரவேண்டும் கவிதை***
***நிலவெழுந்து வருவதுபோல்***
***காலத்தின் அரவமின்றி***
***வரவேண்டும் கவிதை!"***
என்றான் 'ஆர்ச்சிபோல்ட் மக் லிஷ்' - (Archibald Mac Leish)

கவிதை சொல்லுகிற செய்தியைவிட சொல்லாத செய்திக்கு வலு அதிகம். அது ஏற்படுத்தும் தாக்கம் பெரிது. அதன் சுவை புதிது.

உச்சி வெயிலில் நடந்த களைப்போடு, தாகத்தோடு வருகிறான் காளமேகம். எதிரே ஓர் ஆய்ச்சி. மோர் விற்பவள். அவளை மறித்து மோர் வாங்கிப் பருகுகிறான். பருகி முடியும் வேளையில்தான் மோரில் அதிக நீர் கலந்திருக்கிறாள் அவள் என்பதை உணர்கிறான் கவிஞன். அவளை ஏசவில்லை. மோரைப் பார்த்துப் பேசுகிறான்.

"நீ வானவெளியில் இருக்கும்போது உனக்கு முகில் என்று பேர். தரையில் இறங்கியபின் உனக்கு நீர் என்று பேர். இந்த ஆய்ச்சியின் கையில் வந்தபின் உனக்கு மோர் என்று பேர். பரவாயில்லையே மூன்றுபேர் சம்பாதித்து விட்டாய்!"

***காரென்று பேர் படைத்தாய்***
***ககனத்துறும்போது***
***நீரென்று பேர் படைத்தாய் நெடுந்தரை***
***யில் வந்ததன்பின்***
***வாரொன்று மென்முலையார் ஆய்ச்சியர்***
***கை வந்தபின்***
***மோரென்று பேர் படைத்தாய் முப்பேரும்***
***பெற்றாயே!***

மோரில் நீர் அதிகம் என்பதைக் கவிஞன் குறிப்பால் உணர்த்தி விட்டான்.

கவிதை செறிவாகச் சுருக்கமாக இருக்கும். மிகப் பழங்காலத்து மந்திரங்கள் கவிதை வடிவில் அமைந்திருந்தன. இதனாற்போலும், "மந்திரம்போல் வேணுமடா வார்த்தை" என்று பாரதி அவாவுகிறான்.

எங்கள் காலத்து உதாரணமொன்று சொல்ல விரும்புகிறேன். முள்ளி வாய்க்கால் பேரழிவு பற்றிப் பேசாதார் யார்?

இரண்டு வாரங்களுக்கு முன் உலகமே அதை நினைத்துக் கண்ணீர் உகுத்தது. நிறைய எழுதி விட்டார்கள். ஆனால், கவிஞர் சேரன் எழுதிய மூன்று வரிகள் மந்திரமாக - மகா வாக்கியமாக - நின்று நிலைக்கும்.

***நீரற்றது கடல்***
***நிலமற்றது தமிழ்***
***வேரற்றது உறவு***

இதுதான் கவிதையின் மந்திர சக்தி. அது ஆக்கபூர்வமாக ஈழத்துக் கவிஞர் சேரனுக்கு வாய்த்திருக்கிறது.

இளைய தலைமுறைக் கவிஞர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

***"கவிதையின் அழகுக்குச் சில***
***கட்டுப்பாடுகள் உள.***
***பறவைக்குச் சிறகுகள்போல இந்தக்***
***கட்டுப்பாடுகள்.***
***சிறகுகள் தம் கனத்தால் பறவையைக்***
***கீழே இழுப்பதில்லை.***
***அவை பறவையை விடுதலையை நோக்கி***
***மேலே உந்துகின்றன"***
இது கவியரசர் தாகூர் சொன்னது.
இந்தக் கூற்றுக்குச் செவி சாயுங்கள்.

---

சிரிப்பு

செ.செல்வராஜா

# தொழ தொள...

வேட்டிதான் இராசன் எப்போதும் உடுத்துவது. அண்மைக்காலமாக நீளக் காற்சட்டைக்கு மாறிவிட்டார். எங்காவது பயணம் செய்யும் போதும், உறவினர்களது நன்மை தீமைக்குச் செல்லும்போதும் அந்த 'லோங்ஸ்'தான். கொஞ்ச நாள்கள் ஒரு மாதிரியாக இருந்தது. இப்பொழுது பழக்கத்துக்கு வந்துவிட்டது.

மகளுக்குக் கல்யாணம் பேசி ஓர் இடமும் சரி வரவில்லை. "உங்கை என்ன முகட்டைப் பார்த்துக்கொண்டிருக்கிறியளோ? தங்கச்சிக்குக் கலியாணத்தைக் கெதியாகச் செய்து வையுங்கோ" எண்டு மகன் வெளிநாட்டிலிருந்து ஒரே வதைத்தபடிதான். தங்கச்சியை முடிச்சுக் குடுத்தால்தான், தான் பார்த்து வைச்சிருக்கிற பிள்ளையை வெளி நாட்டுக்குக் கெதியாக எடுக்கலாம் எண்டது அவற்றை 'பிளான்.'

000

புறோக்கரும் வாறார்.. போறார். ஒண்டும் சரி வந்தபாடில்லை. எங்கடை பக்கத்து வீட்டுப் பரமற்றை பிள்ளைக்கும் பேச்சுக்கால் நடந்து, சீதன பாதனமும் 'ஓ.கே'. பொடியனுக்கும் பிள்ளையைப் பிடித்துப் போயிற்று. ஆனால், ஒரு நாள் பொடியன்ரை தமக்கைக்காரி பிள்ளையின்ரை தகப்பனைச் சந்தையிலை கண்டிருக்கிறா. அவர் மரவள்ளிக் கிழங்கு விற்கக்கொண்டு போனவர். செம்மண் படிஞ்ச சாறமும், வெறும் மேலும், அவவுக்கு அவ்வளவு பிடிக்கேல்லை. தம்பியாரின்ரை 'பிறன்ஸ்' ஆரும் வீட்டுக்கு வந்தால், அவர் உப்பிடி நிண்டால், தன்ரை தம்பிக்கு மதிப்பில்லையெண்டு சொல்லி, அதாலை அந்தக் கலியாணம் குழம்பிப் போச்சுது. இது கதைக்காகச் சோடிச்சதில்லை. உண்மையான சம்பவம்.

000

சோத்துக்கை கை வைக்கேக்கை, அது சேத்திலை இருந்துதான் வந்தது எண்டது விளங்கிறதில்லை. அதுவும் இந்த 'வெளிநாடு' வந்தபிறகு, துப்புரவாக விளங்காது. பரமற்றை மகளின்ரை கல்யாணம் குழம்பினமாதிரித் தன்ரை தங்கச்சியின்ரை கல்யாணம் தடைப்படாமலிருக்க வேணுமெண்டதுக்காக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தகப்பனை ஒரு மாதிரி 'லோங்சு'க்குள்ளை இறக்கியாச்சுது. சும்மா சொல்லக் கூடாது 'லோங்ஸ்' அவருக்கு நல்ல எடுப்பாத்தான் இருக்குது.

அவருக்கும் என்ன அவ்வளவு வயசில்லை. வாற ஆவணிக்கு ஐம்பத்தொண்டாகுது. இப்ப மெக்கானிக் எடுபிடி உதவி வேலைக்கும் போறதில்லை. வெளிநாட்டில இருந்து காசு வருகுது. பிறகென்ன வேலை வில்லட்டி?

▲ ▲ ▲

கூடப்படித்த நண்பர் ஜெயக்குமார், பல வருசங்களுக்குப் பிறகு இராசனைக் கண்டார். வேட்டியிலை அவரைப் பார்த்த ஜெயக்குமாருக்கு 'லோங்சிலை' பார்க்கேக்கை வலு ,லட்சணமாய்தான் இருந்தது. ஜெயக்குமார் சாதாரண உத்தியோகத்திலை ஒரு மாதிரிச் சேர்ந்திட்டார். அந்த நாள் தொடக்கம் அவர் 'லோங்ஸ்'தான்.



கதையோட கதையாய் இராசனிடம், ஜெயக்குமார் "உம்முடைய இடுப்பளவு என்ன?" எனக் கேட்டார். அவருக்கு ஒரு 'றெடிமேட் லோங்ஸ்' ஆரோ 'பிறசன்ற்' பண்ணினவை. அது அவருக்குக் கொஞ்சம் பெருத்துப் போயிற்று. 'சைஸ்' சரி யெண்டால் அதை இராசனுக்குக் கொடுப்பமெண்டுதான் வஞ்சகமில்லாமல் ஜெயக்குமார் கேட்டவர். தான் வேட்டி உடுத்ததைக் குத்திக்காட்டத்தான் அவர் இடுப்பு 'சைஸ்' கேட்கிறாரோ என இராசனின் மனதுள் ஒரு குறுகுறுப்பு.

'இடுப்பு 'சைஸ்' இருபது என்றால் என்ன? இருபத்தைந்து என்றாலென்ன? முப்பதென்றாலென்ன? நாற்பதென்றால்தான் என்ன? அதுக்கு மேல போனாலும் என்ன? வேட்டி உடுத்துறதெண்டால், நாலுமுழம், அல்லது எட்டுமுழம்தான். அது ஏற்றத்தாழ்வின்றி சகலருக்கும் சமன். அதிலை அனுசரித்து அணிவது அவரவர் கெட்டித்தனம். ஒருத்தரும் இடுப்பு 'சைஸ்' கேட்கிறதில்லை....அதுதான் எங்கடை தனிப்பெரும் கலாசாரம். இவர் இடுப்பு 'சைஸ்' கேட்க வந்து விட்டாரென மனதுள் பொருமினார்" இராசன். பொருமினாரென்ன பொங்கியெழுந்தார் என்றே சொல்லலாம்.

'லோங்ஸ்' அணிந்த புதிதில், நல்லூர் முருகன் கோவிலில் முருகனைத் தொழ வழமைபோல கைகளிரண்டையும் தோளுக்கு மேல் உயர்த்திய போது, தொள தொள வென்றிருந்த 'லோங்ஸ்' அப்படியே வழவழவென்று கழன்று இடுப்புக்கு கீழ்ழே இறங்கியதுதான் இராசனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. எரிச்சலை ஊட்டியது.

அதன்பின்பு, ஆடையகத்துக்குச் சென்று வலு கவனமாக இடுப்பு அளவு எடுத்துத் தைத்து அணிந்தார். பின்னர் மெல்ல மெல்ல 'றெடிமேட் லோங்ஸ்' எடுப்பது வழமையாகியது. இடுப்பு 'சைஸ்' 40 அளவுடைய 'லோங்ஸ்' வலு கச்சிதமாக இராசனுக்குப் பொருந்தியது.


"இடுப்பு 'சைஸ்' என்ன மச்சான்?" என மீண்டும் ஜெயக்குமார் கேட்டதும் கொதிப்பின் உச்சத்துக்கே சென்று விட்டார் இராசன்.

"இரண்டு நாள்கள் மலச்சிக்கல் ஏற்பட்டு 'ரொய்லற்றுக்குப்' போகாவிட்டால் இடுப்பு 'சைஸ்'42. கள்ளுக்குடிச்சிட்டு வந்து, அது ஒத்துக் கொள்ளாமல் ஒருகண்ட சீருக்கு வயித்தாலை போனால் இடுப்பு சைஸ் 38, உடல் நிலை சரியாகவிருந்து, 'கொலஸ்ரோல், சுகர்' கட்டுப்பாட்டிலை இருந்தால் இடுப்பு 'சைஸ்' 40. இப்படிப் பல மாதிரி. நான் என்னத்தைச் சொல்ல?" தனது எரிச்சலை இராசன் வெளிப்படுத்த, வேட்டியிலையிருந்து லோங்ஸ்சுக்கு மட்டுமல்ல, ஆளின் குணமும் மாறிவிட்டதென அப்பால் அகன்றார் ஜெயக்குமார்.

சிரிப்பு

மிருசுவில் தமிழ்தாசன்

# சித்தன்



சித்தன்! இவன் முத்தனுமில்லை! பக்தனுமில்லை. சொல்லப்போனால், ஒரு பித்தன். அதிலும் வாயில் சொட்டுக் கள்ளுத் தண்ணியை ஊற்றிவிட்டானென்றால், மகாபித்தன். மொத்தத்தில் சித்தன்போக்கு சிவன்போக்கு. அவ்வப்போது கூலி வேலைகளுக்குப்போனாலும் உழைப்பதை ஊதாரித்தனமாகக் குடியிலேயே செலவு பண்ணிவிடுவான்.

அன்றும் வழமைபோல தலைதூக்க முடியாத மதுபோதையில் வீதியால் வந்துகொண்டிருந்தான். துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்பதுபோல சித்தனைக் கண்டால், தூர விலகினர் அவ்வூர்வாசிகள். அவனுடைய சுபாவமறிந்து ஊரவர்கள் ஒதுங்கிப்போவதைத் தனக்குச் சாதகமாக்கி அடாவடிகளில் ஈடுபடும் சித்தன் உண்மையிலே ஒரு விசித்திரப் பிறவியாகவே காணப்பட்டான்.

அளந்து பார்த்தால், ஆள் நாலரை அடிகூடத் தேறாது. காக்கையின் கருமை நிறத்தைத் தோற்கடிக்கக்கூடிய கறுப்பு நிறமேனி. வாய் நிறையப் பற்கள். அத்தனையும் பழுப்பும், காவி பிடித்தும் இருக்க, எண்ணையைக் கண்டிராத கேசம், தாடியும், மீசையும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாகக் கூட்டுக் குடும்பம் நடத்தின.

“போடு புள்ளடி புறாவுக்கு நேரே. வாழ்க தமிழ்க் கட்சி”

தேர்தல் முடிந்து பல மாதங்கள் ஆகியும் அதை மறந்து மதுபோதையில் ஏதேதோ உளறிக்கொட்டிய சித்தனுக்கு அரசியலில் அகரமே தெரியாது. ஒரு வெறும் முட்டாள். இருந்தும் பருகிய கள்ளின் பெருமையைப் பறைசாற்றிக் கொள்வதற்காக வாயில் வந்தவைகளை எல்லாம் வார்த்தைகளாக்குவதே அவனுக்கு வாடிக்கை. அது மட்டுமல்ல வழியில் சந்திக்கும் அப்பாவிகளை இனம்கண்டு அவர்களுடன் வீண் தகராறுகள் பண்ணிக் கொள்வதில் அவனுக்கு ஏதோ பெருமைபோலும்.

சண்டை சச்சரவு என்றுபோனாலும் அவனுடைய இந்த நாற்பது வருடகால வாழ்க்கையில் யாருக்காவது அடித்ததாக எதுவித பதிவுகளுமில்லை. இன்னும் உண்மையைக் கூறுவதென்றால், வீண் கோளாறுகள் பண்ணி யாரிடமாவது அடிவாங்கிக் கொண்டுபோவதே சித்தனுக்கு இறை சித்தமாயிருந்தது. உருட்டி, உருட்டி அடித்தாலும் விரட்டி, விரட்டி அடித்தாலும் அவைகளெல்லாமே அவனுக்கு எருமை மாட்டில் விழுந்த மழைத்துளிகள்போலவே இருக்கும். சூடு, சொரணை, வெட்கம், மானம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவனுக்கு வேண்டியதெல்லாம் குடித்த கள்ளுக்கு ஏதாவது ஆரவாரங்கள் பண்ணி நாலு பேருக்குத் தன்னைக் காட்டிக்கொள்ளவேண்டும் என்பதே.

என்ன கஷ்ட காலமோ! அன்றைக்குக் கடைக்காரக் கனகண்ணை சித்தனின் கண்களில் பட்டுவிட்டார். இனிச் சித்தன் என்ற இந்தக் காண்டை முள்ளைத் தாண்டிப்போவதென்பது அவரைப் பொறுத்தவரையில் ஓர் இமாலயச் சாதனையாகத் தான் இருக்கப்போகின்றது.

“என்ன கனகப்பா! உம்மடை கடையில ‘இன்று கடனில்லை’ என்று ஏதோ எழுதிப் போட்டுக் கிடக்குது. இண்டைக்குக் கடனில்லையெண்டால் நாளைக்குத் தருவியே?”

அகட விகடம் பண்ணுவதற்குப் பிள்ளையார் சுழி போட்டாயிற்று. இன்றுதான் கனகருக்குச் சனி மாற்றம் சரியாக வேலை செய்யப்போகின்றதுபோலும்.

“அப்பிடியில்லையடா சித்தன்! இண்டைக்குக் கடனில்லையெண்டு கிடக்குதெல்லோ. நாளைக்கு வந்து பாத்தாலும் இண்டைக்குக் கடனில்லை எண்டுதான் கருத்து”

“அப்ப விளக்கமாய் போட்டைப் போடவேண்டியது தானே? இண்டைக்குக் கடனில்லை, நாளைக்குமில்லை, நாளண்டைக்குமில்லை எண்டு நீளமாய் எழுதிப்போடுறதை விட்டிட்டு, கண்டறியாத ஒரு கடையும் ஒரு போட்டும்”

“…விளங்கயில்லைப் பாஷை… ஓ!”

சித்தன் கொழுவத் தொடங்கிவிட்டான். கனகருக்குக் குலப்பன் அடிக்கத் தொடங்கியது. அதே சமயம், அவர் செய்த பாவ புண்ணியமோ! என்னவோ! விறகுக் காலை விநாசித்தம்பியின் சைக்கிளைக் கண்டதும், “நானும் வாறன்ரா பொடியா!”

விழுந்து முறிந்தாலும் பரவாயில்லை இந்தச் சித்தன் என்னும் பித்தனின் சிக்கலுக்குள்ளால் நழுவி ஓடிவிட வேண்டும் என்பதற்காக வேகமாக வந்த விநாசியின் சைக்கிளில் வேகமாய்த் தொற்றிக்கொண்டார்.

நல்லவேளை. கண்டமொன்று கழிந்து விட்டது. சித்தனுக்கோ குடித்த கள் வீண் என்று ஆகிவிட்டது போன்றதொரு வெறுமை நிலை. அவனைப் பொறுத்தவரையில் குடித்தால் யாருடனாவது சச்சரவுப்பட வேண்டும்.

> தேர்தல் முடிந்து பல மாதங்கள் ஆகியும் அதை மறந்து மதுபோதையில் ஏதேதோ உளறிக்கொட்டிய சித்தனுக்கு அரசியலில் அகரமே தெரியாது. ஒரு வெறும் முட்டாள். இருந்தும் பருகிய கள்ளின் பெருமையைப் பறைசாற்றிக் கொள்வதற்காக வாயில் வந்தவைகளை எல்லாம் வார்த்தைகளாக்குவதே அவனுக்கு வாடிக்கை.

சித்தன் எந்தவிதமான தொழில்களிலும் கைதேர்ந்தவன் இல்லை. காரணம் அவன் ஒரு கை சோர்ந்தவன். வாரித்தம்பியாரின் நடுவிலான் நடேசபிள்ளையிடம் முண்டுக்குப்போக, அவன் சித்தனின் வலது கையைப் பிடித்து ஈரத்துணியைப் பிழிந்ததுபோல முறுக்கோ முறுக்கென்று முறுக்கிவிட கை எலும்புகள் கண்ணாடிக் காப்புக்களாக உடைந்து நொருங்கியதால் சித்தனின் கை சோர்ந்து விட்டது. ஆனால், வாய் மட்டும் தெருநாயாகக் குரைத்துக்கொண்டேயிருக்கும்.

“டேய் சிவராசா! ஒரு போத்தில் கள்ளுத்தா! காசு கொஞ்சம் குறையுது. இந்தா இதிலை பத்து ரூபாய் கிடக்குது மிச்சம் எண்பத்தஞ்சையும் நாளைக்குத் தல்லாம். சரியே?”

கொழுவல் ஒன்றுக்கு அத்திபாரமிட்டான் சித்தன். ஆனால், சிவராசனோ கோபத்தை அடக்கியபடி சமயோசிதமாக நடந்துகொண்டான். கள்ளைப் பருகி விட்டுக் கள்ளுக் கடையைவிட்டு விலகினான் சித்தன். இன்னமும் அவன் எதிர்பார்த்த சண்டை - சச்சரவுகள் கிட்டவேயில்லை. இது சித்தனுக்கு ஒரு ஏமாற்றம் தான். நன்றாக இருட்டி விட்டது. வேறுவழியின்றித் தனது வீட்டை நோக்கி நடந்தான். அதிகமாகப் பருகியிருந்த கள்ளு இப்போது தனது உக்கிரத்தைக் காட்டத் தொடங்கச் சித்தனால் நடக்க முடியவில்லை. தலை கவிழ்ந்தபடி மனேச்சர் மகேந்திரனின் தெருப்படலைக்கு முன்னே குந்திவிட்டான் சித்தன்.

“அப்ப அண்ணை சனிக்கிழமை அடிப்பமே?”

“வேண்டாமடா! திங்கள்கிழமை அடிப்பம்” மகேந்திரனும் அண்ணன் சிவகுருவும் அவர்களின் வீட்டில் இருந்தபடியே இப்படிப் பேசிக்கொண்டதைச் சித்தனின் செவிகள் செப்பமாக உள்வாங்கிக் கொண்டன.

“ஓகோ! அடிக்கப் போகினமாமோ!” துள்ளியெழுந்தன் சித்தன்.

“இஞ்சை மனேச்சர் சனியும் வேண்டாம் திங்களும் வேண்டாம். நானிஞ்சை நிக்கிறன். இப்பவே அடியுங்கோ! நான் நிக்கிறன் அடிச்சுப்போட்டு விடுங்கோ! வேறை கதை வேண்டாம்”

“எட சித்தன்! நாங்கள் உனக்கேன் அடிக்கப்போறம். சூடு அடிக்கிறதைப் பற்றிக் கதைச்சுக் கொண்டிருக்கிறம் நீ பேசாமல்போடா”

மகேந்திரன் முடிந்தமட்டும் சொல்லிப் பார்த்தான் அவனோ அடிவாங்காமல் போவதில்லை என்பதுபோல அடம்பிடித்தான். வேறு வழி தெரியவில்லை. சிவகுரு ஓங்கி ஒரு குத்து விட்டான். சித்தனின் பொன் மூக்கு உடைந்து குருதி சிந்தத் தொடங்கியது. தடவிப் பார்த்தான் சித்தன்.

“காயமே இது பொய்யடா” என்றபடி அடி காயத்தைத் தடவியபடி போய்க்கொண்டிருந்தான். இது மட்டுமா அவன் உடலில் எத்தனை அடிகாயங்கள். அவனோ இவைகளைச் சட்டை பண்ணுவதேயில்லை. சித்தனுக்கு வேண்டியதெல்லாம் குடியும் கும்மாளமுமே. குடித்து விட்டுத் தெருச் சண்டையிட்டுச் சித்தனைப்போல அவமானப்படுகிறவர்கள் எத்தனையோபேர் எமது மண்ணில் இருக்கத்தானே செய்கிறார்கள்?

# அலைகடல் ஓசையாய்!

கடலோரம் சிறு குடிசை
ஏழையவன் மாளிகையாம்…!
கடலன்னை மடிதனிலே…
மீனவனின் வாழ்விடமாம்..!

கடலை நம்பி வலை விரித்து
கண் விழித்துக் காத்திருப்பாள்..!
கண்ணாளன் வரவை எண்ணி
கண்ணீருடன் அவன் மனையாள்..!

ஏக்கத்திலே தொடரும் - இந்த
எளியவர்கள் வாழ்க்கை வட்டம்..!
விடியல் தினம் கண்டதுண்டு
இவன் வாழ்வில் விடியல் ஏது…?

அள்ளித்தந்த கடல் தாயும்…
அள்ளிச் செல்லும் கலிகாலம்..!

சீற்றம் கொண்டால் காலநிலை
ஏழை மகன் என்ன செய்வான்..?

அன்னியனின் அடாவடிகள்
கடல் நடுவில் அரங்கேறும்..!
உடல் வருத்தி உயிர் பிழைத்து
கரை சேர்தலே போராட்டம்…!

கனவுகள் பல சுமந்த படி
கட்டுமரம் கடலில் செல்லும்..!
அலைகடல் ஓசையாய் - நித்தம்
ஒலிக்கிறது மீனவன் குரல்…!

கவிதை

வேலணையூர் ரஜிந்தன்



தொடர்கதை

கே.எஸ்.ஆனந்தன்



# நின்னைச் சரணடைந்தேன்

அத்தியாயம் 17

“சுவேதா! என் வாழ்க்கையிலே நான் எவ்வளவோ அனுபவிச்சனான். ஆனா, இப்ப நான் அனுபவிக்கும் இந்தச் சுகம், இதில் இருக்கும் ஆனந்தம் அப்போதிருந்ததில்லை. நான் திருமணம் செய்ய வேண்டும் என நீயும் ரவியும் என்னை வற்புறுத்தினீர்கள். நான் நன்கு யோசித்தேன். அவனைத் திருமணம் செய்து கண்டது என்ன? எனக்கு எல்லாமே வெறுத்த நிலையில் தான் இந்த முடிவுக்கு வந்தேன். அப்பாவிடம் கூறினேன். சம்மதம் தந்தார். உனக்குச் சொல்லாமலே இதை ஆரம்பிச்சன். நாளடைவில நீயும் ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்ய ஆரம்பிச்சாய். இன்று என் மனதில் வேறு சிந்தனைகளே கிடையாது. எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறன் தெரியுமா?” நீண்ட பிரசங்கமே செய்து முடித்தாள் உஷா.

“உஷா! யார் யாருக்கு எப்படி நடக்க வேண்டும் என்று இறைவன் எழுதினானோ அப்படித்தான் நடக்கும். நீ மகிழ்ச்சியா இருக்கிறியே அதுவே எனக்கு சந்தோஷம்”

“அங்க பார் சுவேதா. உணவு முடிந்ததும் அவர்கள் ஒன்று சேர்ந்து ஆடிப் பாடி மகிழ்வதை? மகிழ்ச்சியுடன் துள்ளிக்குதிக்கிறார்கள். இவர்களை நான் பெற்று எடுத்த செல்வங்களாகவே நினைக்கும்போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்றும் அடிக்கடி சொல்லுவா. ஒரு பேரப்பிள்ளை இருந்தாலாவது உனக்குச் சரி எங்களுக்கும் சரி ஆறுதலாயிருக்கும். அதற்கும் கொடுப்பினை வேண்டும் என்று அம்மா அடிக்கடி சொல்லுவா. இப்ப ஒரு மழலைப்பட்டாளமே பாட்டி, பாட்டி என்று அம்மாவைப் படாதபாடுபடுத்தும் போது அம்மா மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறா. அதைப்பார்த்து நான் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றேன்”

“உஷா நீ இப்படி மாறுவாய் என்று நான் சிறிது கூட நினைச்சுப் பாக்கயில்லை. இத்தனை பிள்ளைகளும் உன்னை ‘அம்மா’ என்று அழைக்கும்போது எனக்குக் கூடப் பொறாமையாருக்கு”

கூறிக்கொண்டிருக்கும்போது உஷாவின் ‘மொபைல்’ சிணுங்கியது. எடுத்துக் “ஹலோ” என்றாள்.

“ஹலோ நான் சித்தங்கேணியில இருந்து சிவனேஸ்வரி பேசுறன். என்னுடைய மகளின்ர பிறந்த நாள் நாளைக்கு. உங்கள் சிறுவரில்லப் பிள்ளைகளுக்குச் சில அன்பளிப்புகள் தரவிரும்புறம். எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள். அன்பளிப்புக்களை ஏற்பீர்களா?”

“நீங்கள் நேரில வரமுடிந்தால் நல்லம். மற்றவை நேரில் தெரிவிக்கிறன்”

“சரி நாலு மணிக்கு வாறம்”

‘‘நல்லது வாருங்கள்’’ கூறிவிட்டு, “சுவேதா! சிலர் தங்கள் பிள்ளைகளின் பிறந்தநாள் என்று இனிப்பு அது இது என்று கொண்டு வந்து கொடுத்துப் பிள்ளைகளின் உடலாரோக்கியத்துக்கு உலை வைத்துவிடுகிறார்கள். வேண்டாம் என்றாலும் தவறாக நினைப்பார்கள். அவர்களை நேரில் அழைத்து இவர்களுக்குத் தேவையானவற்றைக் கூறி, முடிந்தால் செய்யுங்கள் என்பேன். இது தவறா?”

“நல்லது. இதையே ஒரு கட்டுப்பாடாக வைத்துக்கொள். கண்டவர்களும் கண்டதையும் கொடுத்து பிள்ளைகளின் ஆரோக்கியத்தை கெடுத்து விடுவார்கள். உணவைத் தவிர வேறு எதையாவது கொண்டு வந்து கொடுக்கும் படி கூறிவை உஷா.

“அப்படித்தான் செய்கின்றேன். அவர்களது படிப்புக்கு தேவையானதை, உடைகள் என்று கொடுத்தால் வாங்கலாம். தீன்பண்டங்கள் என்றால் மறுத்துவிடுவேன்.

“நல்லது உஷா நேரம்போட்டுது. நான் வெளிக்கிடுறன்” விடைபெற்றாள் சுவேதா.

0000

இரவுப் படுக்கை.

ரவியைக் கட்டியணைத்துக்கொண்டு “ரவி நான் ஒரு விடயம் சொல்கிறேன் கோபப்படக்கூடாது”என்றாள்.

“சுவேதா! எதற்கு நான் கோபப்படுவேன்? ஏன் நீ இப்படிப் பீடிகை போடுகிறாய்?” என்று கன்னத்தைக் கிள்ளினான் ரவி.

“நீங்கள் கோபப்பட மாட்டீர்கள் என்று தெரியும். இருந்தாலும் ஒரு முன் எச்சரிக்கைக்காகச் சும்மா கேட்டன்”

“நீ இண்டைக்கு உஷா வீட்டுக்குப் போனியா?

“ஓம். ஏன் கேட்கிறீங்கள்”

“அங்க போய் வந்தால் தான் இப்படிப் புதிதாய் ஏதாவது கேட்பீர். அதுதான்”

“உண்மைதான் ரவி! அந்தக் குழந்தைகள் உஷாவின் அம்மாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டு பாட்டி, பாட்டி என்று குதித்துக் கும்மாளம் போட்டதைப் பார்த்தன். அம்மாவுக்கும் பேரப்பிள்ளைகளின் ஆவல் நாளுக்கு நாள் வலுத்துக் கொண்டு வருகிறது. என்னைக் சில கேள்விகள் கேட்டால் என்ன சொல்லுறது என்று தெரியவில்லை.

“அதற்கு என்ன செய்யலாம் என்று நீயே சொல்லன்”என்றான்.

“நாங்கள் ஒரு பிள்ளையைத் தத்தெடுத்தால் என்ன?”

“சுவேதா! உனக்கோ எனக்கோ வயதாகி விட்டதா என்ன? எங்களுக்கு குழந்தை பிறக்காது என்று யாராவது கூறினார்களா? பொறுத்தார் பூமி ஆள்வார் என்று கேள்விப்பட்டதில்லையா? என்னைப் பொறுத்த மட்டில் எனக்கு நம்பிக்கையிருக்கு. இறைவன் எங்களுக்கு ஒன்று தராமலா போவான். எதிலும் அவசரப்பட்டால் பிறகு பல கஷ்டங்கள் சேர்ந்து வரும்”

“இதில் என்னங்க கஸ்ரம்? ஒன்றை எடுத்து வளர்ப்பம். எங்களுக்கு ஒன்று வந்தால் சேர்த்து வளர்க்கலாம். தானே?”

“என்ன இருந்தாலும் இது நல்லதாகத் தெரியவில்லை.”

“எங்களுக்குக் குழந்தை வராமல் போய் விடாது” என்று அவன் நம்பிக்கை ஊட்டியவற்றைக் கேட்டுக்கொண்டே தூங்கி விட்டாள்.

“சுவேதா! சுவேதா!” என்று அழைத்தான். அவள் எழுந்திருக்கவில்லை.

“நீயே குழந்தைத் தனம் மாறாமலிருக்கிறாய். உனக்குக் குழந்தை வேறு வேணுமா?” என்று கூறிவிட்டு அவனும் தூங்கிப்போனான்.

நீங்கள் குழம்பிப்போகாதீர்கள். இது நினைவலைகள். படத்தில் ‘நினைவுக்கட்டம்’ வருமே அப்படி.

இது நடந்து முடிந்து இரண்டு மாதங்களின் பின்பு தான் சிவகாமி நோய்வாய்ப்பட்டாள். அதுவே அவளுடைய வாழ்வின் கடைசி அத்தியாயமாகிவிட்டது. அவள் உயிர் பிரியும் முன் பேரக்குழந்தைகள் பற்றிப் புலம்பியவை, சுவேதாவின் மனதை மிகப் பாதித்துவிட்டன.

0000

பெற்ற தாயையோ, தகப்பனையோ அவர்கள் மன உணர்வுகளையோ புரிந்து கொள்ளாது தங்கள் சுகங்களை மட்டுமே சிந்தித்திருக்கும் சகோதரிகளைச் சுவேதா வெறுத்திருந்தாள். வீட்டுக்கு வந்த சகோதரிகளிடம் முகம் கொடுத்துப் பேசாமல் அறைக்குள் படுத்திருந்தாள்.

வாழ்க்கையில் நாம் எதை அதிகம் விரும்புகின்றோமோ அதுவே சில வேளைகளில் துன்பத்தையும் சஞ்சலத்தையும் கொண்டு சேர்த்து விடுகின்றது.

“பேரக் குழந்தையை விரைவில் நீ பெறுத்தா சுவேதா? சாகிறதுக்கு முதல் நான் அவர்களைத் தூக்கித் திரிந்து அவர்களின் மழலைப் பேச்சைக் கேட்டு, குறும்புத்தனங்களைப் பார்த்து ரசித்துவிட்டு நிம்மதியாகப் போவேன். யசோதாவின் பிள்ளைகள் போனில் இங்கிலீஸ் கதைக்குதுகள்.” என்று தாய் கதைத்தது ஞாபகத்துக்கு வந்ததால் தான் குழந்தை ஒன்றை எடுத்து வளர்த்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. ரவி கூறிய விடயங்கள் அவளுக்குப் பிடித்தமில்லாததால் மௌனமாகத் தூங்கிவிட்டிருந்தாள்.

000

காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வந்திறங்கிய சுவேதாவின் செவிகளில் பாரதியாரின் ‘சின்னஞ்சிறு கிளியே-கண்ணம்மா செல்வக் களஞ்சியமே’ என்ற பாடல் இன்ப கீதமாய் ஒலிக்க அவசரமாக வீட்டுக்குள் நுழைந்தாள். சாய்வு நாற்காலியில் படுத்திருந்த படி பாடிக்கொண்டிருந்தான் ரவி சங்கர். அவளுடைய பெண் உள்ளம் தாய்மையின் பூரிப்பிலே சொக்கிப்போயிருந்தது. "அதோ பார் கண்ணம்மா அம்மா வந்திட்டா’’ என்று அவன் கூறியதும் குழந்தை திரும்பிப் பார்த்து சிரித்தது.

“அப்பாவும் மகளும் கூத்தடிக்கிறீங்களா? இதோ நானும் வந்திட்டன்”என்று கூறிக் குழந்தையைத் தூக்கிப் பஞ்சுக் கன்னத்தில் மாறி மாறி முத்தமிட்டாள். குழந்தை அழுதுகொண்டே ரவியிடம் போகத் திமிறியது.

“ஏன் செல்லம் அம்மாவோடை கோபமா” என்று கூறிவிட்டுக் குழந்தையை ரவியின் மார்பின் மீது இருக்க வைத்தாள்.

“ஏய்! என் செல்லக்குட்டி அப்பா பாட்டு பாடினால் தான் சிரிப்பாளாம் பாரேன். இந்த அம்மாவுக்கு பாடத் தெரியாது. இல்லையா கண்ணம்மா” என்றான்.

“யாருக்குப் பாடத் தெரியாது. சின்னக் கண்ணம்மா நான் பாட்டுப்படித்தால் என்னிடம் வருவாய் தானே?” என்றாள்.

குழந்தை சிரித்தது.

“சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ்சியமே என்னைக் கலி தீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வைத்தாய்”என்று கையை நீட்டினாள் சுவேதா. குழந்தை அம்மாவிடம் தொற்றிக்கொண்டது.

“பார்த்தீர்களா ரவி அம்மா மீது தான் அவளுக்குக் கொள்ளைப் பிரியம் இல்லையா செல்லம்”என்று கன்னத்துடன் கன்னம் வைத்து அணைத்துக் கொண்டாள்.

சாய்வு நாற்காலியை விட்டெழுந்து அவர்கள் இருவரையும் சேர்த்து கட்டித் தழுவி கன்னத்தில் முத்தமிட்டான். “உளம் தான் கள்வெறி கொள்ளுதடி உன்னைத் தழுவிடவே உன் மத்தமாகுதடி”என்று சுவேதாவின் கன்னத்தில் தனியாக முத்தமிட்டான்.

“சீ இது என்னப்பா? யாராவது பார்த்தாலும் குழந்தையை வைத்துக்கொண்டு’’ என்றாள்.

“சரி நீ இவளை வைத்துக்கொஞ்சு நான் போகின்றேன்” என்றுகூறிவிட்டு அவன் வேகமாகத் திரும்பிச் சென்றான்.

“ரவி ரவி "என்று அழைத்தவாறு துள்ளி எழுந்தாள். அவளால் எழுந்திருக்க முடியவில்லை. ரவி அவளை அணைத்தவாறு தூங்கியிருந்தான்.

அவள் சுயவுணர்வடைந்தபோது தான் இதுவரை நடந்தவை யாவும் கனவு என்று உணர்ந்தாள். கனவில் கூட இன்பமும், துன்பமும் கலந்து வந்ததை நினைத்து அழுவதா, சிரிப்பதா என்று தெரியாமல் அவனுடைய மூக்கை பிடித்து ஆட்டினாள். அவன் துயில் கலைந்து எழுந்து.

“நீ தானா?” என்றான்.

“இந்த நேரத்தில் வேறு யார் வந்து உங்கள் மூக்கில் கை வைக்க முடி யும்?” என்றாள்.

“என் மகனுக்கு உரிமை இல்லையா?”

“உங்கள் மகனா?”

“ஓ. நான் அவனுடன் விளையாடினேன். இறக்கி கீழே விடும்படி அழுதான். கீழே அழுக்கு இறங்கக்கூடாது. என்று தூக்கி மேலே பிடிச்சன். என் முகத்தில் “சீச்சா” அடிச்சான். என்னடா இது என்று கேட்டன். குனிந்து மூக்கைப் பிடித்து இழுத்தான். அந்த நேரம் பிடித்தது நீயா?’ என்று கேட்டான்.

“அப்படி என்றால் ஐயாவும் கனவு கண்டாரா?”

“ஏன் சுவேதா நீயும் கனவு கண்டாயா? என்ன கனவு” நடந்ததைக் கூறினாள்.

“உனக்குப் பெண், எனக்கு ஆண். பார்த்தாயா சோடியை?”என்றான்.

“ஆசையைப் பார் ஆசையை. ஒன்றுக்கே வழியக் காணோம் சோடியாம் சோடி” என்று மூக்கைப் பிடித்து இழுத்தாள்.

“சுவேதா! நாம் சிலரைப்போல குழந்தை இப்போதைக்கு வேண்டாம் என்று தள்ளிப்போடவில்லை. எங்களுக்கு குழந்தை வேண்டும் என்று கடவுளுக்குத் தெரியாதா? நிச்சயமாகக் குழந்தைவரும். நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் எங்களுக்கு என்ன தரவேண்டும் என்பது எம்மைப் படைத்து ஒன்று சேர்த்து விட்டவனுக்குத் தான் தெரியும். நிச்சயம் தருவான் நம்பியிருப்பம்”என்றான்.


“எங்களிடம் குறைபாடிருந்தால்...?” என்று கேள்வியைத் தொடுத்தாள் சுவேதா.


“உனக்கும் சரி எனக்கும் சரி எந்தக் குறைபாடும் கிடையாது”

“அப்புறம் என்ன?”

“எதிலும் பூரண நம்பிக்கையுடன் செயற்பட்டால் அது நிச்சயம் வெற்றியளிக்கும்” என்று கூறியவன் அவளை இழுத்துத் தனது மார்போடு இறுக அணைத்துக் கொண்டான்.

(தொடரும்)




## இரண்டு நெருப்புப் படங்கள்

# 'ஜூராசிக் வேர்ள்ட் : வ்பலேன் கிங்டொம்'

டைனோசர்கள்-மனித இனங்களுக்கு இடையிலான களத்தைச் சம காலத்துடன் ஒன்றாக்கிக் கற்பனை கலந்து உலவவிடும் ஒற்றைப் புள்ளியை மையமாக்கிப் பின்னப்பட்ட சுவாரசியமான அறிவியல் புனைவுச் சாகசக் கதைகளே அடுக்கடுக்கான 'ஜூராசிக்' படங்கள். இவற்றின் அண்மை வெளியீடாக ஜூன் 22 ஆம் திகதிய திரைக்கு வருகிறதாம் 'ஜூராசிக் வேர்ள்ட் வ்பலேன் கிங்டொம்'.



**கதை**

2015ஆம் ஆண்டில் வெளியான 'ஜூராசிக் வேர்ள்ட்' கதை நிகழ்வின் நான்கு ஆண்டுகள் ஓட்டத்துக்குப் பின்னர் இந்தப் படத்தின் கதை அமைகிறது. 'ஜூராசிக் பார்க்' கின் நிர்வாகியான கிளாரியும் அவருடையகாதலனும்டைனோசர் பயிற்சியாளருமான ஓவெனும் மீண்டும் அந்தக் கற்பனைத் தீவுக்குப் பயணம் செய்கிறார்கள். தீ கக்குவதற்குக் காத்திருக்கும், ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் எரிமலைகளால் அழிவின் விளிம்பிலிருக்கும் அந்தத் தீவில் எஞ்சியிருக்கும் அப்பாவி டைனோசர் குட்டிகளைக் காப்பாற்றுவது அவர்களின் நோக்கம். அப்போது அதுவரைக் கண்டிராத பயங்கர, பிரம்மாண்டமான புதிய கலப்பின டைனோசர்களை அவர்கள் எதிர்கொள்கிறார்கள். மறுபக்கம் தீவின் எரிமலைகள் உயிர் பெற்று நெருப்புக் குழம்பை உமிழத் தொடங்குகின்றன. அச்சுறுத்தலான டைனோசர்கள் மற்றும் குமுறும் எரிமலை இவற்றுக்கு மத்தியில் மனிதர்கள் தமது திறனால், அடுத்த படத்துக்கான எதிர்பார்ப்பை விதைப்பதே அழியத் தொடங்கும் 'ஜூராசிக் பார்க்'கில் நிகழும் இறுதிச் சாகசமாக, அமைகின்ற மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

இது, 'ஜூராசிக் பார்க்' படங்களின் வரிசையில் ஐந்தாவது படம் மற்றும் ஜூராசிக் வேர்ள்ட் தொகுப்பின் இரண்டாவது படம். இதன் தொடர்ச்சி 2021ஆம் ஆண்டு ஜூனில் வெளியாகும் என 'யுனிவர்சல் பிக்சர்ஸ்' நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தப் படத்துக்காக முந்தைய டைனோசர்களுக்கு மாற்றாகப் பயமுறுத்தும் 'இந்தோராப்டர்' என்ற புதிய ரக டைனோசர்களை 'அனிமட்ரானிக்ஸ்' மற்றும் 'சி.ஜி.ஐ' தொழில்நுட்பக் கலவையால் களமிறக்கிக் கதிகலங்க வைக்கிறார்கள். 'கிறிஸ் ப்ராட்', 'பிரைஸ் டாலஸ் ஹாவர்ட்' உள்ளிட்ட பலர் நடித்திருக்கும் இந்தத் திரைப்படத்தை ஜே.ஏ. பஜோனா இயக்கி உள்ளார். படத்தின் நிர்வாகத் தயாரிப்பாளர் ஜூராசிக் பார்க் பிதாமகரான 'ஸ் ரீபன் ஸ்பீல்பெர்க்'.



# 'ஸ்கைஸ்கிறாப்பர்'

ஆயுததாரிகளால் ஆட்கொள்ளப்படும் வானுயர்ந்த கட்டடங்கள். அவர்கள் ஏற்படுத்தும் இடர்கள். அதில் உயிரைப் பணயம் வைத்து நாயகன் நிகழ்த்தும் சாகசங்கள் ஆங்கிலப் படங்களில் பார்த்துச் சலித்தவைதான். 'த டவரிங் இன்பார்னோ' (1974), 'டை ஹார்ட்' (1988) ஆகிய படங்களிலும் பார்த்திருக்கிறோம். இந்த வரிசையில் ஜூலை 13 அன்று திரைக்கு வருகிறது 'ஸ்கைஸ்கிறாப்பர்'. இதை இயக்கியிருக்கிறார் 'றவ்சொன் எம் தர்பெர்'.

**கதை**

ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் நகரத்தின் புர்ஜ் கலிபாவை விட உயரமான கட்டடமாக, 240 தளங்களுடன் வானளாவு உயர்ந்த புதிய கட்டடம் ஒன்று ஹாங்காங்கில் உருவாகிறது. கட்டடத்தின் தலைமைப் பாதுகாப்பு அலுவலராக அமெரிக்காவின் உளவுத்துறையில் பணிபுரிந்த முன்னாள் அதிகாரியான ட்வைன் ஜோன்சன்(றொக்) பொறுப்பேற்கிறார். போர்க்களத்தில் ஒரு காலை இழந்த இவர், இதே கட்டடத்தில் மனைவி குழந்தைகளுடன் தங்கித் தனது பணியைத் தொடருகிறார். கடடடத்தின் பாதுகாப்பு ஓட்டைகளைக் கண்டறிந்து நிர்வாகத்திடம் இவர் முறையிட்டதை முதலாளிகள் கவனத்திலெடுக்கவில்லை. அந்தக் கட்டடத்துள் ஊடுருவும் தீவிரவாதிகளால் 96ஆவது தளத்தில் மூளும் தீ கட்டடம் முழுதும் வேகமாகப் பரவுகிறது.

பழியை ஜோன்சன் மீது சுமத்தி பொலிஸ் விரட்டுகிறது. மறுபக்கம் தீ பரவிக் கொண்டிருக்கும் கட்டடத்துக்குள் தீவிரவாதிகளுக்கு எதிரான ஜோன்சனின் மோதல் தொடங்குகிறது. இதற்கிடையே எரியும் தளத்தில் சிக்கிய தனது குடும்பத்தையும் காப்பாற்ற முயலுகிறார். இப்படிப் பல அபாயகர முனைகளுக்கு இடையே ஒரு காலை இழந்த கதாநாயகனாக ஜோன்சன் ஆடும் வெட்டாட்டத்தை முப்பரிமாணத் தொழில்நுட்பத்துடன் நமக்குப் படையல் வைப்பதே கதை.

**பாத்திரங்கள், இசை**

'ஸ ரீவ் ஜப்லொன்ஸ்கி' இசையமைக்க, 'றொக்', 'நேவ் கம்ப்பெல்', 'ஷின் ஹான்', 'ரோலண்ட் மொல்லர்', பப்லோ ஷ்ரீவ்பேர்', பைறொன் மான்' உள்ளிட்டோர் பலர் உடன் நடிக்க, நாயகன் ட்வைன் ஜான்சன் படத்தயாரிப்பிலும் இணைந்திருக்கிறார். 'றவ்சொன் எம்'தர்பெர்' எழுதி இயக்கிய இந்தத் திரைப்படத்தை 'யுனிவேர்சல் பிக்சர்ஸ்' நிறுவனம் வெளியிடுகிறது.

# இன்க்ரிடிபிள்ஸ் -2

மார்வெல் மற்றும் டி.சி கொமிக்ஸ் தயாரிப்புக்கள் சாகச மனிதர்களை முன்நிறுத்தித் திரையாக்குபவை. இவ்வகையில் படத்தில் அனைவருவமே 'சுப்பர் ஹீரோக்களாக' இருந்தால்..? அப்படியொரு அதிரடித் திரைப்படமாக வெளியாக உள்ளது 'இன்க்ரிடிபிள்ஸ்2'.

2004ஆம் ஆண்டு 'பிக்ஷர் அனிமேஷன் ஸ்டுடியோஸ்' நிறுவனத்தின் தயாரிப்பாக வெளியான 'த இன்க்ரிடிபிள்ஸ்' திரைப்படத்தை எழுதி இயக்கியவர் பிராட் பேர்ட். இவர் அறுபதுகளில் வெளியான தனது சிறுவயதுக் 'கொமிக்ஸ்' கதைகளின் பாதிப்புடன், மத்திம வயது குடும்பஸ்தனாகத் தனது சொந்த அனுபங்களையும் கலந்து குதூகலமான சாகசத் திரைப்படத்தை உருவாக்கியிருந்தார். கணினி 'அனிமேஷன்' கதாபாத்திரங்களாக உலா வரும் மிஸ்ரர் இன்க்ரிடிபிள் அவருடைய மனைவி எலாஸ்டிகேர்ள், இவர்களின் மூன்று சூரத்தனமான குழந்தைகள் எனச் சுப்பர் ஹீரோ குடும்பத்தின் சுவாரசியமும் அவர்களின் சண்டைப் பராக்கிரமுமாகப் படம் வெளியானது. வசூலில் சாதனை படைத்ததுடன் கொமிக்ஸ் தொடர்கள், வீடியோ விளையாட்டுகள், உணவு ரகங்கள் என இப்போதுவரை சந்தையில் இந்தக் கதாபாத்திரங்கள் இடம் பிடித்திருக்கின்றன.

அந்த முதல் பாகம் வெளியாகி 14வருடகால இடைவெளியில் இப்போது 'இன்க்ரிடிபிள்ஸ்2' திரைப்படம் ஜூன் 15ஆம் திகதி அன்று வெளியாக இருக்கிறதாம். முதல் பாகம் முடிந்த இடத்திலிருந்து கதை தொடங்குகிறது. 'அனிமேஷன்' திரைப்படம் என்பதால் இத்தனை வருடத்தில் வளர்ந்திருக்கும் தொழில்நுட்ப பாய்ச்சலைச் சரியாகப் பயன்படுத்தி 'ஐமேக்ஸ்', முப்பரிமாணம் உட்பட பல்வேறு நவீன பதிப்புகளில் படம் வெளியாகின்றதாம். எலாஸ்டிகேர்ள் கதாபாத்திரத்துக்குக் கூடுதல் முக்கியத்துவம், குடும்பத்தின் கடைக்குட்டி குழந்தைக்குச் சண்டைக் காட்சிகள், வில்லன் 'த அண்டர்மைனர்' அறிமுகம் என இந்தப் பாகத்தில் பல புதிய சுவாரசியங்கள் காத்திருப்பதாகக் கதைகள் அடிபடுகின்றன. பிராட் பேர்ட் எழுதி இயக்க, அனிமேஷன் கதாபாத்திரங்களுக்கு ஹொலிவூட் பிர பலங்களான ஹோலி ஹன்டர், க்ரைக் நெல்சன், சாமுவேல் ஜாக்சன் உள்ளிட்டோர் குரல் வழங்கி உள்ளனர். 'டிஸ்னி' வெளியீடாக வரும் இந்தப் படம் திரையில் சாதனை படைக்குமா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.



தொகுப்பு
அனார்கலி



# தென்கிழக்கு திசையில் இருந்து



## களைகட்டுகிறது நோன்பு!

தென்கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்கள் நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்துக்காகத் தயாராகி வருகின்றன. தற்சமயம் இந்தப் பிரதேசங்களில் பெருநாளையொட்டிய வியாபாரங்கள் மிக 'மும்மரமாக இடம்பெற்று வருகின்றன.
குறிப்பாக உடுதுணி வியாபாரத்தில் ஈடுபடும் கடைகள் முஸ்லிம் மக்களால் நிரம்பி வழிகின்றன. அதேவேளை இந்த முறை சந்தை, வீதியோரப் புடவை வியாபாரிகளின் தொகையும் அதிகரித்து, அவர்களது வியாபாரமும் களை கட்டி வருகின்றது. அத்துடன் எதிர்வரும் லைலத் துல்கத்ர் இரவு சிறப்பு வணக்க ஏற்பாடுகள் பள்ளி வாசல்களில் இடம்பெறும்.
நோன்புப் பெருநாள் தொழுகையை, பெருநாள் தினத்தன்று பள்ளிவாசல்களிலும், திறந்த வெளிகளிலும்நடத்துவதற்கான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

***'முப்பது நாள்கள் நோன்பிருந்து கொண்டாடும் பெருநாள் அல்லவா இது!'***

## புதியதோர் உறுப்பினர் நியமனம்!

அம்பாறை மாவட்டத்துக்குப் புதிதாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியப்பட்டியல் (ஐ.தே.க) நாடாளுமன்ற உறுப்பினர் நவவி, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடமே அம்பாறை மாவட்டத்துக்கு இந்த நியமனத்தை வழங்கியுள்ளது.
கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு 33ஆயிரம் வாக்குகள் கிடைக்கக் (சொற்ப வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்த) காரணமாக இருந்தவரும், தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தருமான கலாநிதி எஸ்.எம்.முகம்மட் இஸ்மாயிலே மேற்படி வெற்றிடத்தை நிரப்பத் தெரிவாகியிருக்கிறார்.
இவர் தற்போது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.



***சம்மாந்துறையைச் சேர்ந்த கலாநிதி இஸ்மாயிலின் இந்த நியமனம், தேசியப் பட்டியல் என்ற போர்வையில் பம்மாத்து அரசியல் நடத்திய ஒரு சில முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு ஒரு சூடுதான்!***

## பெண்கள் உரிமை!

"கல்முனை மாநகர சபையில் பதினொரு பெண்கள் உறுப்பினர்களாக இருந்தும் எமது பிரதிநிதித்துவமும், உரிமையும் பேணப்படவில்லை"
கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பெண் உறுப்பினர் ஆரிக்காகாரியப்பர் இவ்வாறு கவலை வெளியிட்டார்.
கல்முனை மாநகர சபையின் இந்த அமர்வில் தெரிவு செய்யப்பட்ட மூன்று குழுக்களிலும் பெண்கள் பிரதிநிதித்துவம் பேணப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியே உறுப்பினர் ஆரிக்காகாரியப்பர் தனது கவலையை வெளியிட்டார்.

***பெண் உரிமைக் கோசம் இது!***

## அனுபவப் பகிர்வுச் சுற்றுலா!

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் 'சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்' திட்டத்தின் கீழ் இடம்பெறவிருக்கும் அனுபவப் பகிர்வுச் சுற்றுலாவில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சமய இணக்கக் குழு, மற்றும் உபகுழுக்களில் இருந்து 30பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.
எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை 'ஹிக்கடுவ பீச்' விடுதியில் இந்த அனுபவப் பகிர்வுச் சுற்றுலா நிகழ்வு இடம்பெறவிருக்கிறது.
காலி, நுவரெலியா மாவட்டங்களின் சமய இணக்கக் குழுக்களும் இதில் இணைந்து கொள்ளவுள்ளன. மூவினத்தைச் சேர்ந்தவர்கள் இதில் அடங்குவர்.

***எப்படியோ நல்லிணக்கம் ஏற்பட்டால் சரிதான்!***



## முன்னுதாரணமான இப்தார் நிகழ்வு!

இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு ஒன்று நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது. மூவினத்தையும் சேர்ந்தவர்கள் பெருமளவில் ஒருங்கே கலந்து கொண்ட இந்த இப்தார் நிகழ்வைக் குறித்த வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.
வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் சஹீலா ராணி இஸடீன் தலைமையில் நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வில் பிரதிச் சுகாதார அமைச்சர் எம்.பைஸால் காசிம் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார். வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் என மூவினங்களையும் சேர்ந்த பெருமளவானோர் இந்த இப்தாரில் கலந்து கொண்டனர்.

***'நாட்டுக்கு அவசியமான முன்னுதாரண நிகழ்வு இது'***

## வருடாந்த வியாதி

முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்பிப்பாளரும், தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம். எம்.எச்.எம்.அஷ்ரபின் முயற்சியால், நிந்தவூரில் தொழில் பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இதைப் பெரும்பான்மையினரின் பிரதேசமொன்றுக்கு நகர்த்த முயன்ற 'பின்கதவு' முயற்சி ஒன்று அம்பலத்துக்கு வந்துள்ளது. ஒவ்வொரு வருடமும், நிந்தவூரிலுள்ள இந்த மாவட்ட அலுவலகத்தையும், அதனுடன் இணைந்த மாவட்டத் தொழில்பயிற்சி நிலையத்தையும் இங்கிருந்து குறித்ததொரு பிரதேசத்துக்குக் கொண்டு செல்வதற்குத் திரைமறைவு முயற்சிகள் நடப்பதும், அதற்கு எதிர்ப்புக்கணைகள் தொடுக்கப்பட்டு தடுக்கப்படுவதும் வழக்கமாகும். இந்த முறை இத்தகைய நகர்த்தல் முயற்சியை அறிந்ததும், முன்னாள் இராஜாங்க அமைச்சர்எம்.ரிஹஸனலி, அமைச்சர் ரிஷாத்துடன் இணைந்து கொதித்தெழுந்துள்ளார். விஞ்ஞான தொழில் நுட்ப, திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சருக்கு எழுத்துமூலம் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



***இனி அடுத்த வருடம் மீண்டும் வரும்போல இந்த வியாதி!***



## திடீர்ச் சோதனைகள்!

கல்முனைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் சுகாதாரமான உணவு வகைகள் பொதுமக்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் நோக்குடன் உணவு உற்பத்தி நிலையங்கள், உணவகங்கள், விடுதிகள் திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.
பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், தத்தமது அலுவலகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சகிதம் இந்தத் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.
புனித நோன்புக் காலத்தை முன்னிட்டு தற்காலிக உணவு வகைகள் தயாரிப்போரும், விற்பனை செய்வோரும் அதிகரித்துள்ள நிலையில் இந்த உணவுப் பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

***'உணவுச் சுகாதார ஒழுங்கு விதிகளைப் பேணுவோம்!***

கட்டுரை

# கருணாநிதி

## மாக்சிஸவாதியா? நாஸ்திகவாதியா? முதலாளியா?

முருகேசு சச்சிதானந்தம்

தமிழ் நாட்டில் கோபாலபுரம் என்றதும் பலருக்கும் ஞாபகம் வருவது அது கலைஞர் கருணாநிதியின் ஊர் என்பதே. 95ஆவது பிறந்த தினத்தை ஜூன் மூன்றாம் திகதியன்று கொண்டாடியிருக்கிறார் கருணாநிதி. இவரை ஒரு தமிழ் மேதை என்பதா? அரசியல்வாதி என்பதா? மார்க்சிஸ வாதி என்பதா? நாஸ்திகர் என்பதா? முதலாளி என்பதா? என்று தேடிப்பார்த்தால், அவர் ஒரு குழப்பமான மனிதராகவும், குழப்பமான குடும்பப் பின்னணியை உருவாக்கியவராகவுமே அடையாளப்படுத்தப்படுகிறார். அத்துடன் தனது தமிழ்ப் புலமையால் தன்னைச் சூழ்ந்திருக்கிற குழப்பங்களை மறைப்பதில் கெட்டித்தனம் மிக்கவர். அதைக் கொண்டு மற்றவர்களை மதி மயக்கி விடுவதிலும் கைதேர்ந்தவர்.

### மக்கள் மத்தியில் பிரபலம் தேடிய முறை

தந்தை பெரியாரின் மூட நம்பிக்கைளுக்கு எதிரான கருத்துக்களால் கவரப்பட்ட இவர், தனது இலக்கியப் படைப்புக்கள் திரைப்பட வசனங்கள் மூலமாக அந்தச் சிந்தனையை மக்கள் மத்தியில் திணித்தவர். நாஸ்திகம் என்பது கடவுள் இல்லை என்று வாதிடுபவர்களை உள்ளடக்குகிறது. இவர்கள் கடவுளை வெறுத்தாலும் மனிதர்கள்பால் அன்புள்ளவர்களாக இருப்பார்கள். மார்க்சிஸம் என்பது 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' என்பதை வலியுறுத்துகிறது. கருணாநிதி பிராமணியத்தின் கோட்பாடுகளை நிராகரித்தவர். சாதி ஒழிப்பு, பெண் சமத்துவம்போ[illegible]திருத்தக் கருத்துக்களையுடைய ஈ.வே.ரா பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர். இன்றுவரை திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சியில் தலைவராகச் செயற்பட்டு வருகிறார்.

### இப்போது பெயருக்கு மாத்திரம் பெரியார்

இந்திரா காங்கிரஸின் முக்கிய நபராகவும், 'படிக்காத மேதை', 'தென்னாட்டுக் காந்தி' என வர்ணிக்கப்பட்டவருமான காமராஜர் 1953ஆம் ஆண்டில் தமிழ் நாட்டு முதலமைச்சராகத் தெரிவானார். அவர் மிக எளிமையாக வாழ்ந்து சாதித்தவர். அவர் தனக்காக எந்தச் சொத்தையும் சேர்த்து வைத்திருக்கவில்லை. இறுதிவரை வாடகை வீட்டிலேயே வாழ்ந்தார். அவர் இறக்கும்போது அவரிடம் இருந்த பணத்தொகை நூற்றியைம்பது ரூபாய்கள் மட்டுமே. இத்தகைய தலைவர் ஒருவரை அரசியலில் தோற்கடித்த திராவிடக் கழகம், காமராஜரைவிட முன்னோக்கான சேவைகளை மக்களுக்கு வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறில்லை. கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணாவின் சிந்தனை வயப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டு கட்சிகளும் பெரியாரின் சிந்தனையின் பாற்பட்ட கட்சிகளாக இருந்தபோதிலும், இந்தக் கட்சிகளால் பெரியாரின் சிந்தனை அரசியல் மயப்படுத்திய ஒரு கட்டமைப்பை மக்களுக்கு வழங்கமுடியாது போனமை துயரமே. இவர்களின் கட்சிப் பெயர்களில் மாத்திரமே இன்றைக்குப் பெரியார் வாழ்கிறார்.

### கருணாநிதி வெட்டி வீழ்த்தியவை...?


'கலைஞர் கருணாநிதி'யின் இலக்கியப் பணியில் தமிழ் மன்னர்கள் பற்றிய பல காவியங்களும், சிறுகதைகளும், திரைக்கதை வசனங்களும் எழுதப்பட்டபோதிலும், சோழர் ஆட்சியின் பின் தமிழர்கள் இழந்தவற்றை இன்றுவரை மீளப் பெறமுடியாத நிலையிலேயே தமிழ்நாடு உள்ளது.

1969ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா இறந்ததன்பின் முதல்வர் ஆன கருணாநிதி, 1971ஆம் ஆண்டுகள் வரை முதல் தடவையும், 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1976ஆம் ஆண்டுவரை, 1989ஆம் ஆண்டு தொடக்கம் 1991ஆம் ஆண்டு வரை, 1996ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டுவரை, 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டுவரை என ஐந்து தடவைகள் தமிழ் நாட்டு முதலமைச்சராகப் பதவி வகித்திருந்தார். இந்த ஐந்துதடவைகளும்தன்னையும்தனதுபிள்ளைகளையும் முன்னேற்றுவதிலேயே கருணாநிதி அதிகம் பாடுபட்டார். தனக்கென ஒரு தொலைக்காட்சி அலைவரிசையை உருவாக்கிப் பல பிரபல நபர்களைக் கொண்டு தனது வீர, தீரங்களைப் பாராட்டவும் வைத்தார். அந்த வகையில் பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சி ஒரு மிகப் பெரிய வர்த்தக நிறுவனம் போலவே இயங்கி வந்திருக்கிறது. அது சார்ந்த அடிமட்ட மக்கள் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளான நிலையிலேயே உள்ளனர்.

### வியாபாரமும் கருணாநிதி குடும்பமும்

சாராயம் தொடக்கம் 'ஷம்பு'ப் பக்கெற் வரையான வியாபாரத்தில் கருணாநிதி குடும்பம் இறங்கியது. கட்சித் தொண்டர்களின் கடைகளில் அவர்களின் உற்பத்திப் பொருள்களை மட்டுமே விற்க வேண்டும் என்ற நிபந்தனையும் போடப்பட்டது. 1990ஆம் ஆண்டுக்குப் பின்பு இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட திறந்த பொருளாதார முறைமை, கருணாநிதி குடும்பத்துக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்தது. தமிழ்நாட்டில் கொம்யூனிசச் சிந்தனை செல்வாக்குப் பெற்றிராததன் காரணமாக, இந்தியாவின் வேறு மாநிலங்களில் இருந்தும் முதலீட்டாளர்கள் தமிழ் நாட்டுக்கு வந்து முதலீடுகளைச் செய்தனர். இந்த வாய்ப்பு கொம்யூனிசச் சிந்தனையைக் கொண்ட கேரளத்துக்கோ, மேற்கு வங்க மாநிலத்துக்கோ இருக்கவில்லை.

1990ஆம் ஆண்டுக்குப் பின்பான வியாபார முயற்சிகளில் கருணாநிதி குடும்பம், தாம் நினைத்ததைச் செய்து முடிக்கும் அளவுக்கு வளர்ந்திருந்தது. மக்களின் சிந்தனை மாற்றமின்றி இருந்தமையே இதற்கான காரணமாகும். இந்த மக்களின் மேம்பாட்டுக்காகக் கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களில் காத்திரமாக எதுவும் நடந்துவிடவில்லை.



தந்தை பெரியாரின் மூட நம்பிக்கைளுக்கு எதிரான கருத்துக்களால் கவரப்பட்ட இவர், தனது இலக்கியப் படைப்புக்களிலும் திரைப்பட வசனங்களிலும் அந்தச் சிந்தனையை மக்கள் மத்தியில் திணித்தவர். நாஸ்திகம் என்பது கடவுள் இல்லை என்று வாதிடுபவர்களை உள்ளடக்குகிறது. இவர்கள் கடவுளை வெறுத்தாலும் மனிதர்கள்பால் அன்புள்ளவர்களாக இருப்பார்கள். மார்க்சிஸம் என்பது 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' என்பதை வலியுறுத்துகிறது.

### மனைவி - பிள்ளைகள்

கருணாநிதியின் இரண்டு மனைவிகளை உத்தியோகபூர்வமாக வைத்திருந்தார். ராசாத்தி அம்மாள், தயாளு அம்மாள் ஆகிய இருவருக்கும் தமிழில் வேறு அர்த்தங்களையும் கொடுத்தார். ஒருவர் மனைவி எனவும், மற்றவர் துணைவி எனவும் புதிய விளக்கம் ஒன்றையும் கொடுத்திருந்தார். இவ்விருவரது பெயர்களிலும் பல முதலீடுகள், நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இந்த மனைவிக்கும், துணைவிக்கும் பிறந்த பிள்ளைகளான ஸ்ராலின், கனிமொழி, அழகிரி, முத்து, தமிழரசு, செல்வி ஆகியவர்களும் சொத்துச் சேர்ப்பதிலும், ஊழல் செய்வதிலும், சட்டங்களை மீறுவதிலும் அடிதடி, வன்முறை என்பவற்றிலும் தனியுரிமை பெற்றவர்களாகவே தமிழ் நாட்டில் காணப்படுகின்றனர்.

கருணாநிதியை ஒரு மனிதநேயமுள்ளவராக, சிறந்த முதலமைச்சராக, ஒரு சிந்தனைவாதியாக எந்தக் கோணத்தில் நின்று நோக்கினாலும் அவர் தமிழ்நாட்டுத் தமிழர்களின் மேம்பாட்டுக்காக அல்லாது, தனக்கும் தனது குடும்பத்துக்குமாக வாழ்ந்தார் என்பதையே உறுதிப்படுத்த முடிகிறது.

கருணாநிதியின் புதல்வர்களும், புதல்விகளும், இரு தாய்மாரது பிள்ளைகளாக இருப்பதால், கருணாநிதி உயிருடன் இருக்கும்போதே சொத்துக்களுக்காக அடிபடும் நிலையும், ஒருவரை ஒருவர் தள்ளிவைக்கும் நிலையும், யார் தகப்பனாருடன் நெருங்கியிருப்பதாகக் காட்டிக் கொள்வதிலுமே போட்டி நிலவுகின்றது.

இன்னோர் வகையில் பார்த்தால் கறுப்புப் பண விடயத்தில் ஜெயலலிதா, சசிகலா ஆகியோருக்கு எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல கருணாநிதியும் அவரது பிள்ளைகளும்.

### மக்களுக்கு விமோசனமில்லை

இந்த இரண்டு திராவிடக் கட்சிகளாலும் களைத்துப்போனது தமிழ்நாட்டு ஏழைமக்கள்தான். எல்லாற்றுக்கும் மேலாக ஈழத்தமிழர் மீது மிகவும் உருக்கமான அறிக்கை விட்ட கருணாநிதி தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த காலகட்டத்திலேயே(2006-2011) 2009ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு முகம் கொடுக்கவேண்டி ஏற்பட்டது. அவரது பெயரில் உள்ள 'கருணை' செயலில் இருக்கவில்லை. அவர் சிலவேளை அந்தச் சாவு அவலத்தையும், ஒரு பேரிலக்கியமாக வரைந்து தனது தமிழ்ப் புலமையைக் காட்டக்கூடும்.

கருணாநிதி எழுதியதற்கும் பேசியதற்கும் மாறாகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார். அவர் உண்மையாகத் தமிழ் மக்களுக்காக உழைத்திருந்தால், இந்தத் தொன்னூற்றைந்து வயதில் மிகப் பெரிய சமூக மாற்றங்களை தமிழ் நாட்டில் ஏற்படுத்தியிருக்க முடியும். அந்த வகையில் பார்க்கும்போது கருணாநிதியின் இலக்கியப் பண்பே ஆழமானதாக இருந்தாலும், அவரது சமூகப் பணி மிகவும் பிற்போக்கானதே.

கருணாநிதி தனது தொன்னூற்றைந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு (28.5.2018) காலின் மேல் கால்போட்டு அமர்ந்திருந்தது குற்றம் எனக் கொள்ளப்பட்டு தெய்வேந்திரன், பிரபாகரன் ஆகிய இரண்டு தலித் இளைஞர்களை அடித்துக் கொலை செய்திருக்கிறார்கள் சிவகங்கைச் சாதிமான்கள். இவ்வாறான அசிங்கங்களைத்தான் கருணாநிதியின் ஆட்சி தமிழ்நாட்டில் உருவாக்கியிருக்கிறது.

1952ஆம் ஆண்டில் வெளியான பராசக்தி திரைப்படம் கலைஞரின் எழுத்துக்கும் சிந்தனைக்கும் கிடைத்த பெரு வெற்றி. சாதாரண மக்களை விழிப்படையச் சொய்வதும், சிந்திக்க வைப்பதும் இந்தத் திரைப்படத்தின் நோக்கமாக இருந்தது. ஆனால், கருணாநிதி பதவிக்கு வந்தபின் அவை எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மக்களைத் தொடர்ந்து பிற்போக்கான நிலையில் வைத்திருக்கவே அவர் வழி செய்தார். இதனால் அவரது குடும்பத்தால் பலகோடி ரூபாய்களைச் சம்பாதிக்கவும் முடிந்தது.


கருணாநிதி அரசியலுக்கு வருவதற்கு முன்பு இருந்த நிலைக்கும், அரசியலுக்கு வந்ததன் பின் இருக்கின்ற மன நிலைக்கும் அதிக மாற்றங்கள் இருந்ததற்குக் காரணம், பணம் சம்பாதிப்பதில் அவருக்கிருந்த ஆர்வம் தான்.

திராவிடக் கழகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட காமராஜர் இறக்கும்போது வெறும் நூற்றியைம்பது ரூபாவுக்குச் சொந்தக்காரராக இருந்தார் என்றால், கருணாநிதி இறக்கும்போது அவருடைய சொத்து மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாய்களாகவே இருக்கப்போகிறது. இத்தகைய ஒரு சம்பாதிப்பை உண்மையாகவே தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட ஒருவரால் தேடியிருக்க முடியாது. அவ்வாறு பார்த்தால் கலைஞர் கருணாநிதி ஒரு நாஸ்திகனும் அல்ல, ஒரு மாக்சிஸவாதியும் அல்ல, ஒரு சீர்திருத்த வாதியும் அல்ல, ஒருநல்ல அரசியல் வாதியும் அல்ல, ஒரு மிகச் சிறந்த முதலாளித்துவ வாதி என்றால் அது பொருந்தி நிற்கும்.

# ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள் 13

தொகுப்பு
செ.மகேஷ்

1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு, வெளியிட்டு வைக்கப் பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.



மௌனம் கலைகிறது கல்வி கற்பதற்காகப் பாடசாலையில் சேர்பவர்கள் சிறிது காலத்தின் பின் ஏன் இடை விலகுகின்றனர்? தனியாள் வேறுபாடு, தேவை போன்றவற்றைக் கவனிக்காமல் ஒரே மாதிரியான கல்வியை அலுப்பூட்டும் வகையில் கற்பிப்பதும் இதற்குக் காரணமாக இருக்குமோ?

மாணவரின் நிலையில் நின்று முக்கியமான கல்விப் பிரச்சினையொன்றை ஆராய்கிறார் .அன்று யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் முறைசாராக் கல்விக்குப் பொறுப்பாக இருந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ் சுப்பிரமணியம் பிற்காலத்தில் வலயக் கல்விப்பணிப்பாளராகவும் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப் புலத்தில் சிறந்த கல்விச் செயற்பாடுகளால் நன்கு அறியப்பட்டவருமாகத் திகழ்ந்த இவர் எழுதிய 'மௌனம் கலைகிறது' எனும் கட்டுரை அன்றைய விளக்கு சஞ்சிகையில் பதிப்பானது. அதை இன்றும் எமது கல்விச் சமூகம் வாசிப்பதன் மூலம் தமது செயல்பாடுகளில் புதுமையைப் புகுத்த முயலும் என எதிர்பார்க்கலாம்.

**'ரியூசனுக்குப் போ!'**

நான் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எனக்கு ஐந்து சகோதரர்கள் உள்ளனர். எனது பெற்றோர் அதிகம் படிக்காதவர்கள்.

ஒரு தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆண்டு பதினொன்றில் நான் படிக்கிறேன். பத்து வருடங்களுக்கு மேலாகக் கணக்குப் படித்திருக்கிறேன். ஒவ்வொரு வருடமும் வரும் நூற்று முப்பது பள்ளி நாள்களிலும் நாளொன்றுக்கு நாற்பது நிமிடங்களுக்குக் குறையாமல் படித்திருக்கிறேன். கணக்குப் படிக்க நான் நிறைய நேரத்தைச் செலவு செய்கிறேன் இருந்தாலும் எனக்குக் கணிதத்தில் சராசரி நாற்பது புள்ளிகள்தான் கிடைப்பது வழக்கம். ஆனால், கணக்கு வாத்தியார் மாறும்போது புள்ளிகள் கொஞ்சம் ஏறும். சிலவேளைகளில் இறங்கும் இதற்கு நான்தான் காரணமோ அல்லது கணிதம் என்றால் அப்படித்தானோ தெரியாது. எனது கணித அறிவைப் பார்த்து என்னுடைய கணக்கு வாத்தியாரும் அதிபரும் 'ரியூசனுக்குப் போ!' என்று சொல்லுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அப்பாவும் அம்மாவுங் கூட அப்படித்தான் சொல்லுகிறார்கள். ஆனாலும் எங்கடை குடும்பநிலை இதற்கு இடங்கொடுக்கிறதாக இல்லை.

**நாங்கள் மௌன சாமிகள்**

எங்களின் வகுப்பில் நான் மாத்திரமல்ல, என்னைப்போல் நிறையப்பேர் இருக்கிறார்கள். எங்களுக்குக் கணக்குப் படிக்க விருப்பம், ஆனாலும் வாத்தியார் எங்களைப் பார்த்து 'மொக்குகள், மூளையில்லாததுகள்' என்று அடிக்கடி ஏசுகிறார். நாங்கள் சிந்திக்கத் தெரியாத அஃறிணை இனம் என்று அவர் சொல்லாமல் சொல்லுகிறார் என்று எங்களுக்கு விளங்குகிறது. ஆனால் இதை யாரிடம் சொல்லலாம்? சொன்னால் அவர்களும் எங்களை மொக்குகள் என்றே உறுதிப்படுத்தி விடுவார்கள் என்ற பயம் அதனால் யாருக்கும் சொல்லுவதில்லை. நாங்கள் மௌன சாமிகள். ஏசினால் தலையைக் குனிந்து கொண்டிருப்போம். எங்களால் வேறென்ன செய்யமுடியும். சமீபத்தில் பத்திரிகையில் வாசித்த செய்தி ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. 'யாழ்ப்பாணத்தில் தரம் ஒன்றில் சேருகின்ற 20ஆயிரம் பிள்ளைகளில் அரைவாசிப் பேர்தான் சாதாரணதரம் வரைக்கும் படிப்பைத் தொடருகிறார்கள். மீதிப் பேர் பாடசாலையை விட்டு இடையில் விலகிப்போய் விடுகிறார்கள். இதனால் அடிப்படை அறிவைப் பெறாதவர்களின் தொகை அதிகரித்து, சமூக அபிவிருத்தி ஏற்படுவது தாமதமாகிறது. இந்த இடைவிலகல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்'

**பத்திரிகைச் செய்தி உண்மையே..!**

படிப்பைத் தொடருகின்ற 10ஆயிரம் பேரில் ஏறத்தாழ 4ஆயிரம் பேர்தான் உயர் வகுப்புக்களுக்குப் போகிறார்கள். அவர்களுள் 1ஆயிரத்து 200 பேர்வரை பரீட்சையில் சித்தியடைகிறார்கள்.

அவர்களுள் 400 அல்லது 500 பேர்தான் பல்கலைக் கழகத்தில் சேரும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

பத்திரிகைச் செய்தியில் சிறிதும் பொய்யில்லை.

என்பதை நான் உறுதியாகச் சொல்லுவேன். எங்களுடைய பள்ளிக் கூடத்தில் என்னோடு ஆண்டு ஒன்றிலே சேர்ந்தவர்கள் 50பேர். ஆண்டு பதினொன்றில் 25பேர்தான் இப்பொழுது இருக்கிறோம். அவர்கள் ஏன் விலகி னார்கள் என்பது எனக்குத் தெரியும். பள்ளிக் கல்வி அவர்களைச் சிறிதும் கவரவில்லை. அது வெறுப்பூட்டியது. அவர்களுடைய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதைப் பற்றிப் பள்ளியிலுள்ள எவருமே யோசித்துப் பார்க்கவில்லை அதற்குப் பொருத்தமாகக் கல்வி வழங்கப்படவில்லை.

அவர்களைவிடப் பொருளாதாரத்தில் நாங்கள் மேம்பட்டிருந்தாலும் எல்லோருக்குமுள்ள அப்படைப் பிரச்சினை ஒன்றுதான். எங்களுடைய தேவை என்ன என்பதை அறிய வாத்திமார் முயல்வதில்லை. எங்களிடமும் சில கெட்டித்தனங்கள் திறமைகள் இருக்கின்றன. அவற்றை இனங்கண்டு வளர்ப்பதற்கும்அவர்கள்முன்வருவதில்லை. எங்களுக்குத் தேவையற்ற விஷயங்களை எங்களிடம் திணிக்கப் பார்க்கிறார்கள். பாடமாக்கச் சொல்லி நெருக்குகிறார்கள். பாடமாக்கி இருக்கிறோமா? என்பதை அறியச் சோதனை நடத்துகிறார்கள். பாடமாக்குவதற்கு எங்களுக்கு அக்கறையில்லை. தேவையில்லாத விஷயங்களை நாங்கள் ஏன் பாடமாக்க வேண்டும்?

பாடமாக்காதபடியால் போதிய புள்ளிகளை நாங்கள் பெறுவதில்லை. அதனால் நாங்கள் 'மொக்கர்' என்ற முடிவுக்கு அவர்கள் வருகிறார்கள். அதை நாங்கள் சுட்டிக் காட்டினால் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதனால் நாங்கள் பேசாமல் இருக்கிறோம் நாங்கள் மௌன சாமிகள்.

**'பள்ளிக்கு வந்தபிறகு தான் மொக்கானோம்'**

பல்கலைக்கழகத்துக்குப் போய்ப் படிக்க வேண்டும் என்ற ஆசை எங்களுக்குமுண்டு. ஆனால் இதை வாய்விட்டுச் சொன்னால் அவர்கள் சிரிப்பார்கள். ஏனென்றால் அவர்களின் தீர்ப்பின்படி நாங்கள் மொக்குகள், பின் தங்கியவர்கள் மெல்லக் கற்பவர்கள் பல்கலைக் கழகத்துக்குப் போகாமல் நாங்கள் பெற்றுக் கொள்ளும் பட்டங்கள் இவை.

நாங்க்ள் பிறக்கும்போது அப்படித்தான் பிறந்தோமா? பிறந்த பிறகுதான் இப்படியானோமோ? அல்லது பள்ளிக்கூடத்துக்குப் போனதின் பின்தான் மாறினோமோ? என்பது தெரியாது. ஆனால் என்னை 'மொக்கு' என்று கணக்கு வாத்தியார் ஏசுகிறதிலிருந்து எனக்கு விளங்குகிறது! நாம் பள்ளிக்கு வந்தபின்னர்தான் மாறி இருக்க வேணும். என்னுடைய வீட்டில் அப்புவோ? அம்மாவோ? என்னை 'மொக்கு' என்று ஏசுவதில்லை.

நாளாந்த வாழ்க்கையில் வீட்டில் ஏற்படுகின்ற சில பிரச்சினைகள், சிக்கல்களை அவர்களோடு சேர்ந்து நான் விடுவிக்கிறேன். என்னிடம் சில திறமைகள் இருப்பது அப்புவுக்கும் அம்மாவுக்கும் தெரியுமாக்கும். இப்போது எனக்கிருக்கும் பிரச்சினை, நான் தற்செயலாக உயர்தர வகுப்புக்குத் தகுதி பெறாவிட்டால் பள்ளியைவிட்டு விலக வேண்டியிருக்கும் என்பதுதான். இவ்வளவுநாளும் வீட்டாரின் தயவில் வாழ்ந்தவன் நான் பள்ளியை விட்டால் இனி நான் அப்படித் தொடர்ந்து இருக்க இயலாது.

**'உடம்பு வளர்ந்தால் மட்டும் மனுசனில்லை'**

தனித்து வாழக் கூடிய வல்லமை வேணும் என்று அப்பு இடைக்கிடை சொல்லுவார். அம்மாவும் என்னைப் பார்த்து 'ஒரு மனிதனாக வாறதுக்குப் பார்! அதுக்காகப் படி!' என்று சொல்லுகிறா, அம்மாவிடம் அன்றைக்குக் கேட்டேன் 'ஏனம்மா என்னைப் பார்க்க மனுசனாகத் தெரியவில்லையோ?' அதற்கு அவ சொன்னா 'உடம்பு வளர்ந்தால் மட்டும் மனுசன் என்று அர்த்தமில்லை. மனிதனாக வாறதுக்குப் பார்!' என்று வாத்தியார் சொல்லாததை அம்மா சொன்னது எனக்குப் புதினமாக இருந்தது. அன்றைக்கு ஒருநாள் பல்கலைக் கழகத்திலிருந்து எங்கடை பள்ளிக்கூடத்துக்கு வந்தார். ஆசிரியர்களின் கூட்டத்தில் பேசினார். எல்லாருக்கும் இருக்கவேண்டிய அடிப்படை அறிவைப்பற்றிப் பேசினார். அவருடைய பேச்சை நானும் கேட்டேன்.

ஒருவன் தன் நாளாந்த வாழ்க்கையில் எதிர் கொள்ளும் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் சம்பந்தமான பிரச்சினைகளை விடுவிக்க வேண்டும். நீட்டல், நிறுத்தல், முகத்தல் அளவுகளைப் பயன்படுத்திக் கடைகளிலே பொருள்களை வாங்கவும், விற்கவும் கூடியவனாக இருப்பதோடு கணக்குகளைப் பதிந்து வைக்கக் கூடியவனாகவும் இருக்க வேண்டும். காணிகளின் பரப்பளவுகளைக் கணித்து விற்க வாங்கக் கூடியவனாக இருக்க வேண்டும். வங்கியில் கணக்குகளை வைக்கவும் வட்டிகளைக் கணக்கிடவும் கூடியவனாக இருக்க வேண்டும். விவசாய தொழில் முயற்சிக்குத் தேவையான பொருள்களைக் கணிக்கவும், கொள்வனவு செய்யவும், உற்பத்தி விற்பனை விலையைத் தீர்மானித்துச் சந்தைப்படுத்தக் கூடியவனாகவும் இருக்க வேண்டும்.

வீடுகட்டத் தேவையான பொருள்களையும் கூலிகளையும் கணக்கிடக் கூடியவனாகவும் இருக்க வேண்டும். நாளாந்த வருமானத்தைத் திட்டமிட்டுச் செலவு செய்யவும் கணக்கு வைக்கவும் தெரிந்திருக்க வேண்டும். நேர காலத்தை அறிந்து திட்டமிட்டுச் செயற்படக் கூடியவனாக இருக்க வேண்டும். பல்வேறு கணிதக் காட்டுருக்களை வரையவும், செய்யவும், விளங்கவும், விளக்கவும் கூடியவனாக இருக்க வேண்டும். திட்டப் படங்களையும், நிலக்கிடைப் படங்களையும் விளக்கவும் வரையவும் கூடியவனாக இருக்க வேண்டும். விஞ்ஞான ரீதியில் கணிதப் பிரச்சினைகளை விடுவிக்கும் அறிவுடையவனாக இருக்க வேண்டும். இவற்றைச் சரியான முறையில் மாணவர்களுக்குக் கற்பிப்பதால் இடைவிலகலை நிறுத்தலாம் என்று அவர் சொன்னார்.

**வரவேற்கிறார்கள் ஆனால் செயற்படுகிறார்களில்லை**

அவருடைய கருத்தை எல்லா ஆசிரியர்களும் பாராட்டினார்கள். கைதட்டி வரவேற்றார்கள். ஆனால், தொடர்ந்தும் தேவையில்லாத பழைய விஷயங்களைத்தான் எங்களுக்குப் படிப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். பேராசிரியரைப்போல அம்மா இல்லாவிட்டாலும் கிட்டத்தட்ட அவர் சொன்ன விஷயங்களைத்தான் அம்மாவும் அடிக்கடி எனக்குச் சொல்லி இருக்கிறா. அதிகம் படிக்காத படியாலைதான் வாழ்க்கைக்குத் தேவையானவை எவை என்பதை அவவாலை தெரிந்துகொள்ள முடிந்ததோ என்று நான் நினைத்தேன்! அம்மா சொல்லுகிறபடி நான் ஒரு மனுசனாக வர முடிவு செய்து போட்டேன். ஆனால் அம்மாவும் அந்தப் பேராசிரியரும் சொன்ன விஷயங்களை நான் ஆரிட்டப் போய்ப் படிப்பது? இதுதான் இப்ப பிரச்சினை.

**எனக்கு ஒரு வாத்தியார் வேணும்**

எனக்கு ஒரு வாத்தியார் முக்கியமாக ஒரு கணக்கு வாத்தியார் தேவை. அவரிடம் நான் நிறையப் படிக்க வேணும். ஒரு மனிதனாகச் சமூக வாழ்வு வாழும்போது ஏற்படக்கூடிய கணக்குப் பிரச்சினைகளை விடுவிக்கக்கூடிய முறையில் அவரிடம் நிறையப் படிக்க வேணும். இவற்றைத் தெரிந்து கொண்டேனென்றால், இவற்றுக்கான திறன்களைப் பெற்றுக் கொண்டேனென்றால் பிறகு வாற பிரச்சினைகளை நானே படிச்சு விடுவித்துக் கொள்வேன் என்ற நம்பிக்கை என்னிடமுண்டு. பள்ளிக்கூடத்திலிருந்து இடைவிலகுகின்ற மாணவர்களின் நிலையும் தேவையும்கூட இதுதான்.

ஆனால் வாத்தியாரைக் கண்டுபிடிக்கிறதுதான் கஷ்டமாக இருக்கிறது. நான் தினமும் போய்வரும் வழியில் இருக்கிற பிள்ளையாருக்கு முன்னால் தோப்புக் கரணம் போட்டுக் கும்பிட்டு வருகிறேன். அவர் நல்ல ஒரு கணக்கு வாத்தியாரை என்னிடம் அனுப்புவார் என்று நம்பி இருக்கிறேன். சிலவேளை இப்ப இருக்கிற கணக்கு வாத்தியாருக்கு அவர் நல்ல புத்தியைக் கொடுத்தாலும் கொடுப்பார். எப்படியாவது நான் ஒரு மனுசனாக வரத்தான் வேணும். அம்மாவின் ஆசை மட்டுமல்ல, என்னுடைய ஆசையும் இதுதான்.

(தொடரும்)





குறும்படப்பார்வை

சி.ப.வேந்தன்

# 'சேம் கைன்ட் ஒவ் எமோன்' மற்றும் 'டியர் மம்'





## 'கதையற்ற' இரண்டு கதைகளின் கனதி இரண்டு குறும்படங்கள் பற்றிய பார்வை

"குறும்படத்துக்கும் ஆவணப்படத்துக்கும் இடையே இருக்கும் மலையளவு வேறுபாடுகூட பலருக்குத்தெரியாது. அதையும் மீறித் தமிழில் வெளிவரும் குறும்படங்கள் எய்ட்ஸ், தீண்டாமை, வாந்திபேதி, சாதி, மதம் போன்ற கருத்துக்கள் சொல்லாத படத்தைக் குறும்படமாகவே எடுத்துக் கொள்ளமாட்டார்கள். வெளிநாட்டுக் குறும்படங்கள் மற்றும் ஆவணப்படங்களைப் பார்த்து நான் பெரிதும் ஈர்க்கப்பட்ட காலம் ஏன் தமிழில் இம்மாதிரி குறும்படங்கள் இல்லையென ஒரு வருத்தம் இருந்துகொண்டே இருந்தது.' கேபிள் சங்கர்.

சத்தம் என்பது இசை என்றால் பேசுவது கூட இசைதான் என்பது மாதிரியான வியாக்கியானங்கள் எழுப்புவதை விடுத்து ஒவ்வொன்றுக்குமிடையிலான வித்தியா சங்களைப் புரிந்துகொள்ளுதல் என்பது எம்மிடையே உள்ள தேவையாயிருக்கிறது. படைப்பாளி என்பவன் முதலில் குழப்பங்களிலிருந்து விடுபட்டவனாயிருத்தல் வேண்டும். விடுபடுதலே அவனுடைய முதல் தகுதியாகவும் இருக்கிறது. இன்றைய நமது திரைசார் கலைஞர்கள் மத்தியில் குறைந்தளவு எண்ணிக்கையானவர்களைத் தவிர்த்து மிகுதிப்பேர் பெருங்குழப்பங்களோடு படைப்பை அணுகுவதால் அதன் தன்மை வேறு பரிணாமம் அடைந்துவிடும் ஆபத்து ஏற்பட்டுவிடுகிறது. திரைக்கலை எனும் பெரும் சக்தி அவர்களுள் ஏற்படுத்திவிட்டிருக்கும் வியப்பைப் பற்றி ஆராயாமல் அதே வியத்தலுடன் படைப்பை அணுகும்போது அந்த மாற்றுப் பரிணாமத்திலிருந்து தன்னுடைய படைப்பை அவனால் காப்பாற்றமுடியாது போய்விடுகிறது. முதலில் சினிமாவை அணுகும் முறையைக் கற்றுக்கொள்வதே அவர்களின் தேவையாகவும் இருக்கிறது.

பிரமாண்டங்களோடு படைப்பை அணுகும் விபத்தைத் தவிர்த்து கூர்மையான பார்வையோடு அணுகப்பட்டிருக்கும் இரண்டு குறுந்திரைப்படங்களில் ஒன்று 'சேம் கைன்ட் ஒவ் எமோஷன்' என்ற கேரளக் குறும்படம். ஒரு நாய்க்குட்டியோடு பயணித்திருக்கும் இந்தப் படத்தைத் தனது கூர்மையான பார்வைப் பரப்பால் சாத்தியப்படுத்தியிருக்கிறார் இயக்குநர். படத்தொகுப்போடு கதை எழுதி இயக்கியிருக்கிறார் மித்ரன், நடித்திருக்கிறார்கள் லிட்டில் ஜோச் மற்றும் பப்பு (நாய்க்குட்டி). திரைக்கதை பரத். ஒளிப் பதிவு கோபி விஜய்.

### சேம் கைன்ட் ஒவ் எமோஷனின் கதையற்ற கதை

ஒரு பூங்காவில் ஆங்காங்கே ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், காதல் ஜோடிகள், குடும்பங்கள் எனப் பல மனிதர்கள் அங்குமிங்குமாய் அமர்ந்தும் நடமாடிய வண்ணமுமாய் இருக்கிறார்கள். இளைஞன் ஒருவன் தூரமாய் உள்ள இருக்கை ஒன்றில் அமர்ந்து பிஸ்கட் சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றான். தூரமாய் குட்டி நாய் ஒன்று தனது ஊனமான கால்களால் அரைந்துகொண்டு இரண்டு கால்களால் இழுத்து இழுத்து வந்துகொண்டிருக்கிறது. அதைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் அதைத் தமது கால்களால் எத்திவிட்டுச் செல்கின்றனர். துடித்தபடி தூரமாய் விழுந்த நாய்க்குட்டி மீண்டும் எழுந்து பூங்காவின் நடைபாதைக்கு வருகிறது. அங்கே இருக்கையில் அமர்ந்திருந்த பல சிறுவர்கள் அதைத் தடியால் அடித்துத் துரத்துகின்றனர். அங்கிருந்து நகர்ந்த நாய்க்குட்டி அங்கிருக்கும் பல இடங்களுக்கும் தனது இயலாத கால்களால் பசியுடன் அரைந்து அரைந்து திரிகிறது. இறுதியாகத் தனியாக அமர்ந்திருக்கும் இளைஞனிடம் வருகிறது. அவன் காலடியில் வந்து நின்று அவனைப் பார்க்கிறது. அதன் பசியை உணர்ந்துகொண்ட அந்த மனிதன் தன்னிடமிருக்கும் பிஸ்கட் பொதியிலிருந்து பிஸ்கட்டை ஒவ்வொன்றாகப் போடுகின்றான். பசி மேலீட்டால் அந்த நாய் வேகவேகமாக அவற்றை உண்கிறது. இறுதியாக அந்த இளைஞன் எழுந்து தன்னுடைய ஊனமான கால்களை மெல்ல நிலத்தில் ஊன்றியவாறு வளைந்து வளைந்து நடந்து செல்கிறான். அவனுக்குப் பின்னால் அந்த நாய்க் குட்டியும் இரண்டு கால்களால் அரைந்து அரைந்து செல்வதோடு படம் நிறைவடைகின்றது.

### கேள்விகளை எழுப்பும் படம்

மேலோட்டமாகப் பார்த்தால் வெறும் ஒரு வார்த்தையில் இந்தப் படத்தின் கதையைக் கூறிவிட முடியும். ஆனால், படம் தந்து போகும் அனுபவத்தை இதைவிட ஒரு முழு நீளப்படத்தில் கூட சொல்லிவிடலாம். ஒரு வார்த்தையின்றி, இசையின் பெருமளவான பங்கின்றி ஒரு நாய்க்குட்டியை மாத்திரம் முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு படத்தை எடுத்திருக்கும் இயக்குநரின் துணிச்சல் பாராட்டுக்குரியது.

பொதுவாக விலங்குகளை நடிக்க வைத்துக் கதைதையக் கொண்டு நகர்த்துவது என்பது மிக மிகக் கடினமான ஒன்று அதை மிக இலாவகமாக நாய்க்குட்டியை அதன்போக்கிலே உலவவிட்டு(பல இடங்களில்) பதிவாக்கியிருப்பது படத்தை இயல்பாக்க உதவியிருக்கிறது. அது நாய்க்குட்டியின் நடிப்பாக இல்லாமல் அதன் யதார்த்த வாழ்வாக இருப்பது அந்தப் பாத்திரத்தின் பங்களிப்பைச் செவ்வனே செய்ய வைத்திருக்கிறது. உணர்வோடு தொடர்புபடுத்தி எடுக்கப்படும் படத்துக்கு ஒளிப்பதிவும், வண்ணமும் எப்படி இருக்கவேண்டுமோ அதை மிகச்சரியாக உணர்ந்து சட்டகங்களையும், இயற்கை ஒளியையும் பயன்படுத்தியிருப்பது படத்துக்கு மேலும் அழகு சேர்க்கிறது.

படம் முழுவதிலும் காணக்கிடைக்காத இசைமௌனத்தின் குறியீடா? அல்லது தொழில்நுட்பக் கோளாறோ? என்பது தெரியவில்லை எதுவாயினும் இருந்தாலும் படத்தில் அதுவும் ஒரு முக்கிய பாத்திரமே.

ஒரு சிறு சம்பவம். அதைக் காட்சிப்படுத்தியிருப்பதில் சிலாகித்துக்கூற என்ன இருக்கிறது. என யாரும் கேட்டால் அது பொதுவான பார்வை. ஆனால் படத்தில் மனித குலத்துக்கு முன்னால் எழுப்பப்பட்டிருக்கும் மனிதாபிமானம்(சரி விலங்காபிமானம்) பற்றிய பெரிய கேள்வி ஒன்றே போதும். பலகோணங்களில் பார்வைகளைத் தூண்டிவிட.

ஓர் உயிரினத்தின் பசியைக்கூடப் புரிந்துகொள்ள முடியாத மனிதனது பரிணாமம் அல்லது பண்பின் மீது கேள்வி எழுகிறது. அதன் மீது சந்தேகம் வருகிறது. அடுத்து ஓர் உயிரினத்தை மதிக்காக மற்றும் ஊனமுற்ற அதன் பலவீனத்தை உணர்ந்துகொள்ள முடியாத பொதுப்புத்தியின் மீது வெட்கம் வருகிறது. இவையெல்லாவற்றையும் விட, எல்லாமும்(சராசரி பூரணத்துவமுடைய) சரியாகப்பெற்ற உயிரினத்தை (மனிதனையும் சேர்த்து) விட ஏதேனும் குறைகளோடுள்ள உயிரினங்களால் மாத்திரமே இன்னுமொரு குறைபாடுடைய உயிரினத்தைப் புரிந்துகொள்ள முடியுமா? எனும் வினாவையும் தோற்றுவிக்கிறது. ஆக இந்தப் படத்தில் ஒரு மிகப்பெரிய அரசியல் பேசப்பட்டிருக்கிறது. அது ஒவ்வொருவர் பார்வைக்கும் வேறுவேறாக இருக்கும் என நம்பலாம்.

### 'டியர் மம்'இன் கதையற்ற கதை


ஆஸ்திரேலியாவில்; வசதியானவர்கள் நிறைந்த ஓர் இஸ்லாமியக் குடியிருப்புத் தொகுதி. மகன்(இளைஞன்) வீட்டில் இருக்கும் விலையுயர்ந்த நவீன மோட்டர் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே செல்ல ஆயத்தமாகிறான். அப்போது அங்குவரும் தாய் அவனைப் போகவேண்டாம். உன்னுடைய சாரத்தியத்தில் நம்பிக்கையில்லை. மனதுக்குப்படுகிறது. விபத்து நேரும் எனக்கூறித் தடுக்கிறாள். அதைச் சட்டை செய்யாது அவன் புறப்பட்டுத் தனது நண்பனிடம் செல்கின்றான். நண்பன் அவனுடைய மோட்டர் சைக்கிளைப் பற்றி புகழ்ந்து பேசுகிறான். இரவு மகன் திரும்பி வரும்போது தனது கைத்தொலைபேசியில் வரும் குறுந்தகவலைப் பார்த்தவாறு வருகின்றான் அப்போது எதிரே வரும் வாகனம் மோதிவிட விபத்துக்குள்ளாகிறான். மருத்துவமனையில் படுக்கையில் இருக்கும் மகனைத் தாய் பார்க்கிறாள். பின்னர் அவனுடைய உடைந்த கால்களை மீண்டும் இயக்குவதங்காகப் போராடி வெற்றி பெறுகிறாள் என்பதைப் படம் பேசுகிறது.

### படமல்ல பாடம்

விபத்து, எச்சரிக்கை என்பவைகளை விட ஒரு தாய்க்கும் மகனுக்குமான பிணைப்பைப் பேசுவதே படத்தின் நாதமாக இருக்கிறது. 'எல்லா நேரத்திலும் நான் உன்னோடு இருப்பேன்' எனும் பொருள்பட மகனுக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் தாய்மையின் எல்லையைக் காட்டியிருப்பது அழகு. வெறும் நான்கு நிமிட படத்தில் நான்கைந்து களங்களைப் பல துண்டுக் காட்சிகளால் காட்சிப்படுத்தியிருப்பது படத்தை நகர்த்த வெகுவாக உதவியிருக்கிறது.

புதிய படைப்பாளிகளுக்குப் பால பாடங்களைக் கற்பிக்கும் குறும்படமாக இவ்விரண்டு திரைப்படங்களும் அமைந்திருக்கின்றன. கனதியான கதை, அழகான நடிகர்கள்;, பாடல்கள், தேர்ந்தெடுக்கும் களங்கள், இசை, உடை, கலை எனப் பெருமெடுப்பில் பேசியும் செலவழித்தும் ஒரு குறும்படத்துக்கான ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்திக்கொண்டிருக்கும் இங்குள்ள படைப்பாளிகள் நிச்சயம் இந்த இரண்டு படங்களையும் பார்த்தேயாக வேண்டும். படமாக்கும் உத்தியையும், கதைசொல்லும் திரைப்பாணியையும் சரிவரக் கற்றுக்கொள்வதுதான் இன்றிருக்கின்ற எமது படைப்பாளிகளுக்கான முதல் தேவையாக இருக்கிறது. அதனோடு இதுபோன்ற படங்களைத் தேர்ந்தெடுத்துப் பார்ப்பதும் கூட.

# உப சபாநாயகர் தேர்தலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும்



கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரருமான திலங்க சுமதிபால அதற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருந்தார். அதையடுத்து அவர் எதிர்க்கட்சி வரிசையில்போய் அமர்ந்ததுடன், தனக்கு வழங்கப்பட்டிருந்த நாடாளுமன்றத்தின் உப சபாநாயகர் பதவியிலிருந்தும் விலகினார். அது காரணமாகப் புதிய உப சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை எழுந்தது. அதன்பின்பு தான் அடுத்த கூட்டம் ஆரம்பமானதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, உப சபாநாயகர் தெரிவில் தங்கள் சக்தியைப் பயன்படுத்த முற்பட்ட சம்பவம் உருவானது. அதன்பின்பான அரசியல் நிலைமை தோன்றியது.

### இரண்டு கட்சிகள் போட்டியில்

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் சபாநாயகராகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் உப சபாநாயகராகவும் இருக்கவேண்டும் என்று ஏற்கனவே இணங்கப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனைத் தெரிவு செய்யத் தயாராகினர். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடும் எதிர்ப்பின் காரணமாக அங்கஜனின் பெயர் கைவிடப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். அங்கஜனின் பெயர் கைவிடப்பட்ட நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஆனந்த குமாரசிறியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பெர்னாண்டோ புள்ளேயும் போட்டியிட்டனர். அப்போது உப சாபாநாயகர் பதவி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே வழங்கப்படவேண்டுமெனவும், ஆனந்த குமாரசிறி போட்டியிடக் கூடாதெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடுமையாக வாதிட்டார். உப சபாநாயகராக எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் நியமிக்கப்படமுடியாதெனக் கூறி கூட்டமைப்பின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து இருவருடைய பெயர்களும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, ஆனந்த குமாரசிறி 44மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, திருமதி சுதர்சினி பெர்னாண்டோ புள்ளேக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டபோதும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. மக்கள் விடுதலை முன்னணியும் வாக்கெடுப்பின்போது வெளிநடப்புச் செய்துவிட்டது.

### எவர் சபாநாயகரானாலும் மக்களுக்குப் பயனில்லை

எவர் உப சாநாயகராக வந்தபோதிலும் தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளில் எந்தவித மாற்றங்களோ, நன்மைகளோ இடம்பெற்றுவிடப்போவதில்லை என்பது உண்மை. ஆனால் இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை காட்டிய அக்கறையும், எடுத்த நிலைப்பாடும் தமிழ் மக்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

### முதலாவது கேள்வி

உப சபாநாயகராக அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்படுவதை ஏன் எதிர்த்தார்கள்?

அதற்கு இரண்டு காரணங்கள் இருக்க முடியும். ஒன்று - அவரைவிடச் சிறந்த ஒருவரை நியமிக்க முடியுமான ஒரு வாய்ப்பு இருக்கின்றமை. அடுத்தது அவர் தமிழ் மக்களால் எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளமுடியாத இன விரோதியாகச் செயற்படுபவர் அல்லது செயற்படக்கூடியவர்.

இந்த இரண்டு காரணங்களுமோ அல்லது இந்த இரண்டில் ஒன்றோ வலுவான, ஆபத்தான அளவில் இருப்பதாகத் தெரியவில்லை.

முதலாவது காரணத்தை எடுத்துப்பார்த்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அங்கஜனை நிராகரித்தபோது அவருக்குப் பதிலாகத் தங்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒருவரை முன்னிறுத்த வேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

அங்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஆனந்த குமாரசிறியோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சுதர்சினி பெர்னாண்டோ புள்ளேயோ தமிழ் மக்களின் அபிலாசைகளை ஏற்றுக்கொண்டவர்களோ அல்லது தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடியவர்களோ அல்ல!



### தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்!

பெர்னாண்டோ புள்ளே குடும்பத்தினர் மூன்று, நான்கு தலைமுறைகளுக்கு முன் தமிழர்களாகத் தமிழ் பேசி வாழ்ந்தவர்கள் தான். ஆனால், அவர்கள் தற்சமயம், தமிழ் தெரியாத சிங்களம் பேசும் தமிழர்களாக மாறிவிட்டனர். அவர்களின் மொழி, கலாசாரம் என்பன முழுமையாகச் சிங்கள மயப்பட்டுவிட்டன. அது மட்டுமன்றித் சுதர்சினியின் கணவரான முன்னாள் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர். இப்படியான நிலையில் த.தே. கூட்டமைப்பு சுதர்சினிக்கு ஆதரவு வழங்குவதங்குக் காரணம் எதுவும் இருக்க முடியாது. ஆனால் கடந்த மூன்று வருடங்களாக ஆட்சியிலிருக்கும் தேசிய முன்னணி அரசுடன் பலவித விட்டுக் கொடுப்புக்களுடன் செயற்பட்டுவரும் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், சுதர்சினிக்கு ஆதரவாகத் தலைமை அமைச்சருடன் நேரடியாகவே முரண்பட்டார்.

அப்படியிருப்பினும் உப சபாநாயகர் போட்டியில் களம் இறங்கிய மற்றைய இருவரும் தமிழ் மக்களுக்குச் சார்பாகச் செயற்பட்டதுமில்லை, செயற்படுவார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது. எனவே அங்கஜனை நிராகரித்த எதிர்க் கட்சித் தலைவர், சுதர்சினிக்கு ஆதரவாக வாதிட்டமையின்; காரணத்தைத் தமிழ் மக்களால் இலகுவில் புரிந்து கொள்ள முடியாது என்பது உண்மை.

அடுத்த காரணம் அங்கஜன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்தவர் என்பதாயிருக்கலாம். திருமதி சுதர்சினி பெர்னாண்டோ புள்ளையும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த வர்தான் என்பதை மறந்துவிட முடியாது.

### அங்கஜனின் அடாவடிகள் மக்களைப் பாதித்திருக்கவில்லை

அங்கஜனின் தந்தையார் தேர்தல் காலங்களில் சில வன்முறைகளில் ஈடுபட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. சாவகச்சேரியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மற்றொரு வேட்பாளரைத் துப்பாக்கியால் சுட்டு அச்சுறுத்தியமை, முன்னாள் மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராஜாவின் வாகனத்தை அடித்து நொருக்கியமை, மாகாணசபை உறுப்பினர் உதயராசாவைக் கடத்திக் கொண்டுபோய் தடுத்து வைத்துத் தாக்கியமை போன்ற குற்றச்சாட்டு க்கள் அவர்மேல் சுமத்தப்பட்டன. இவையாவும் வெற்றிலைச் சின்னக் காரர்களுக்கிடையே நடந்த மோதல்களே தவிர இவற்றால் பொது மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

அங்கஜனோ, அவரின் அணியினரோ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்டவர்களை வீதி வீதியாகவும், வீட்டு முற்றங்களிலும் சுட்டுப் போட்டார்களென்றோ, வெள்ளை வானில் இளைஞர்களைக் கடத்திக் காணாமல் செய்தார்கள் என்றோ, இராணுவத் துணைப்படையாய்ச் செயற்பட்டு மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்றோ, ஊடகவியலாளர்களைக் கொலை செய்தார்கள் என்றோ, ஊடக நிறுவனங்கள் மேல் தாக்குதல்கள் நடத்தினார்கள் என்றோ இதுவரை எந்தவித குற்றச்சாட்டுக்களும் பதிவாகவில்லை.

### ஈ.பி.டி.பியுடன் இணைந்தவர்கள் அங்கஜனை ஆதரிக்காமை ஏன்?

நல்லிணக்க ஆணைக்குழுவிலும், பரணகம ஆணைக்குழுவிலும், பொது மக்கள் இப்படியான குற்றங்களில் ஈ.பி.டி.பியினர் ஈடுபட்டதாகவே சாட்சியமளித்திருந்தனர்.

ஆனால், பல உள்ளூராட்சி சபைகளில் ஈ.பி.டி.பியுடன் இணைந்து ஆட்சியமைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நேரடியாகத் தமிழ் மக்கள் மேல் எந்த அநீதிகளையும் மேற்கொள்ளாத அங்கஜன் உப சபாநாயகராக வரக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தது ஏன்?

48 வருடங்களின் பின் ஒரு தமிழர் உப சாநாயகராக வரவிருந்ததை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாமற் செய்துவிட்டதென அங்கஜன் கவலைப்பட, சுதர்சினி தனக்கு அதரவாக வாதாடியமைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நன்றி தெரிவித்துள்ளார். இருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் தமிழ் பேசும் தமிழர், மற்றவர் சிங்களம் பேசும் தமிழர்.

எப்படியிருப்பினும் கூட்டமைப்பினர் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது வெளியேறிவிட்டனர். இவர்கள் எந்தப் பக்கம் வாக்களித்தாலும், வாக்களிக்காவிட்டாலும் உப சபாநாயகர் தெரிவில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்திவிட முடியாது.

## ஈழத்துப் படைப்பாளர் வரிசையில்...

# இரசிகமணி கனக செந்திநாதன்




இரசிகமணி கனக செந்திநாதன் ஈழத்தின் முன்னோடிப் புனைகதை ஆசிரியர்களில் ஒருவர். யாழ்ப்பாணம் - குரும்பசிட்டியில் 1916ஆம் ஆண்டில் பிறந்த இவருடைய இயற்பெயர் செவ்வேழ். இவர் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் எனப் பல்துறைகளில் தனது எழுத்துத் திறமையை வெளிக்காட்டியவர். 'கரவைக்கவி கந்தப்பனார்' என்ற புனைபெயரில் ஈழத்துப் பேனா மன்னர்களை அறிமுகம் செய்தவர். 'யாழ்பாடி', 'உபகுப்தன்' ஆகியனவும் இவரது புனைபெயர்கள். தன்னுடைய கடைசிக் காலம் வரை எழுதிக் கொண்டும், வாசித்துக் கொண்டும் இருந்ததால், 'நடமாடும் நூல்நிலையம்' என ஈழத்து இலக்கிய உலகில் பேசப்பட்டவர். ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

**எழுத்துலகில்**

சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம், கட்டுரை முதலான பல்துறைகளில் இவர் எழுதினார். ஏராளமான நூல்களை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். யாழ். இலக்கிய வட்டத்தை உருவாக்கி, வளர்ப்பதிலும் பெரும் பங்காற்றினார். ஈழகேசரி பத்திரிகையில் இவரது ஆக்கங்கள் பல வெளிவந்தன. 25சிறுகதைகளையும் 4 நாவல்களையும், 12 நாடகங்களையும் இவர் எழுதியுள்ளார். இவற்றை விட அறிஞர்கள் பற்றிய நான்கு வரலாற்று நூல்கள், மூன்று விமர்சன நூல்கள், பல கட்டுரை நூல்களையும் எழுதினார். 'ஒரு பிடி சோறு' என்ற இவரது சிறுகதை ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. 1964ஆம் ஆண்டில் கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கம் இவருக்கு 'இரசிகமணி' என்று பட்டம் வழங்கியது. 1969ஆம் ஆண்டில் அம்பனை கலைப் பெருமன்றம் 'இலக்கிய செல்வர்' என்ற பட்டம் வழங்கியது.

'வெண்சங்கு' இவரது சிறுகதைத் தொகுதி. 'வெறும்பானை', 'விதியின் கை' என்பன இவரது நாவல்கள். 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்பது இவரது ஆய்வு நூல். 'ஒருபிடி சோறு' (நாடகம்). சிறுகதைகள், நாவல்கள், நாடகம், விமர்சனம், கட்டுரை முதலான பல துறைகளில் எழுதியவர். 'ஒரு பிடி சோறு' என்ற இவரது சிறுகதை ரஷ்ய மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது.



## வழிகாட்டுவோம்

## சேமிப்போம்...



அபிநயா கடந்த இரண்டு வாரங்களாகக் கடுமையான பணிகள் சிலதில் ஈடுபட்டிருந்தாள். அதனால்தான் உங்களுக்குரிய கதையில் அவள் சிலகாலங்கள் இல்லாமல் போயிற்றாள். ஐந்தாம் தரத்தில் படிக்கின்ற அவளுடைய அறிவைக் கண்டு சிலிர்த்துப் போகாதவர்கள் இருக்கவில்லை. அவள் அனைத்திலும் முன்னுதாரணமாகவே நடந்து வருகிறாள். அவை எம் அனைவருக்கும் தேவையானவைதான். இன்றைக்கு நாம் அபிநயா மூலம் அவள் கையாளும் நற்பழக்கம் ஒன்று பற்றி அறிவோம்.

அன்று வெள்ளிக் கிழமை.

பாடசாலைக்குப்போன அபிநயாவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அன்றைக்குப் பாடசாலையில் சில புதிய முகங்கள் நின்றிருந்தன. காலைப் பிரார்த்தனை நிறைவுற்றது. மேடைக்கு வந்த அதிபர் அந்தப் புதிய முகங்களை அறிமுகப்படுத்தினார். அவர்களை வங்கி ஊழியர்கள் என்றும், சிறுவயதிலிருந்தே உங்களிடம் சேமிப்புப் பழக்கத்தைத் தோற்றுவிப்பதற்கும், உங்களுடைய பெயரில் சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றைத் திறப்பதற்குமாக அவர்கள் வந்திருப்பதாகச் சொன்னார். இப்போது உங்கள் வகுப்பறைக்கு ஒருவராக அவர்கள் வருகை தருவார்கள் என்றும், வகுப்பாசிரியரின் உதவியுடன் நீங்கள் கணக்கொன்றைத் திறந்து கொள்ளுமாறும் உரையாற்றினார். அத்துடன் அவர்கள் முன்னறிவிப்பின்றி வந்ததுவிட்டதால், இன்று கணக்கை ஆரம்பிப்பதற்குப் பணம் எடுத்து வராதவர்கள், அடுத்த வாரம் சேமிப்புக்காக அவர்கள் வரும்போது கணக்கை ஆரம்பிக்கும்படியும் கூறிமுடித்தார்.

அபிநயாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

முன்னர் ஒருபோதும் அவள் பணம் சார்ந்த எந்தவொரு விடயத்தையும் கையாண்டதில்லை. அது அவளுடைய தாய், தந்தைக்குரியதாகவிருந்தது. ஆனால், பணத்தின் பெறுமதி பற்றியும், வாழ்வில் அதன் தேவை பற்றியும் ஓரளவுக்கு அறிந்திருக்கிறாள். ஆனாலும் அவளுடைய வாழ்க்கை வட்டத்துக்குள் பணம் சார்ந்த செயற்பாடுகள் சற்றுத் தூரமாகவே இருந்தன. பணத்தைவிட எவ்வளவோ அத்தியவசியத் தேவைகள் இருக்கும்போது இந்தப் பணத்தை மாத்திரம் ஏன் நாம் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே அவளுக்குள் எழுந்தது.

"நீரைச் சேமிக்கலாம், சிக்கனமாகப் பயன்படுத்தலாம். இயற்றகை தருகின்ற அரிய பொருள் அது. பணம்போல மனிதர்களால் அதை உற்பத்தி செய்துவிட முடியாது. உணவு வகைகளையும் கொட்டாமல், சிந்தாமல் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மின்சாரம் உட்பட்ட சக்தி மூலங்களையும் அப்படிப் பயன்படுத்தினால், எதிர்காலத்தினருக்கும் பயன்படும். முத்திரைகளைச் சேகரித்தல், பயன்படுத்திக் கழித்துவிட்ட பொருள்களைப் பயன்படுத்தி கலைப் பொருள்களைச் செய்தல் என்று எத்தனை வகையான சேமிப்புக்களும், வீண் விரயங்களைத் தடுக்கவேண்டிய காரியங்களும் இருக்கின்றனவே ஏன் இவர்கள் தாம் உருவாக்கியிருக்கிற பணத்தை மாத்திரம் சேமிக்கப் பழக்குகிறார்கள்."

என்று சிந்தித்தாள். வீட்டுக்குச் சென்று தந்தையிடம் அதற்கு விளக்கமும் கேட்டாள்.


"சேமிப்புப் பழக்கம் தேவையானதுதான். பணத்தை மாத்திரம்தான் சேமித்து அந்தப் பழக்கத்தை வளர்க்க வேண்டும் என்கிற அவசியமில்லை. நீங்கள் கூறுவதுபோல அனைத்து வளங்களையும் சேமிப்பதில் சிறுவர்கள் அக்கறை காட்ட வேண்டும்" என்று அவளின் தந்தை அபிநயாவுக்குப் பதில் கூறினார். அத்துடன் மகளைப் பாராட்டவும் செய்தார்.



அ.தர்சினி பிரியா,
தரம் - 3,
யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்.



கேதீசன் அக்ஷிதா,
வளர்மதி முன்பள்ளி,கொக்குவில்




கடவுளை வணங்குவோம்
கடவுளை வணங்குவோம்
கடவுளை வணங்கியே
கடமையைத் தொடங்குவோம்

எங்களைக் காப்பவர்
எல்லாம் வல்லவர்
எங்கும் உள்ளவர்
எங்களின் ஆண்டவர்

கவலைகள் நீங்கிட
கவுளை நாடுவோம்
அவனருள் பெற்றுமே
இன்பமாய் வாழுவோம்

■ வேலணையூர் சுரேஷ்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிறரை நம்பி எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதல் உழைப்பு அவசியம். சராசரி பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** வளர்ச்சிக்கான திட்டங்களை தீட்டுவீர்கள். நண்பரின் ஆலோசனையால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும்.

**மிதுனம்:** நற்செயலில் ஈடுபட்டு பெருமிதம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் உயரும்.

**கடகம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். புதிய இனங்களில், திடீர் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** முக்கிய பணி ஒன்றை மறந்திடுவீர்கள். குடும்ப உறுப்பினர் நினைவுபடுத்தி உதவுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும்.

**கன்னி:** பூர்வபுண்ணிய நற்பலன் துணை நிற்கும். தொழில், வியாபாரம் வியத்தகு வளர்ச்சி பெறும்.உபரி பணவருமானம் வந்து சேரும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

**துலாம்:** போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில்,வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். இலாபம் சீராக இருக்கும்.

**விருச்சிகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். செயல்களில் பொறுப்புணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி உருவாகும்.

**தனுசு:** இரக்க குணத்தால் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது.

**மகரம்:** தொல்லை கொடுத்தவர், இடம் மாறிப் போகிற சூழ்நிலை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வருமானம் திருப்தியளிக்கும்.

**கும்பம்:** உங்கள் மனதில் ஆன்மிக எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் தாராள முன்னேற்றம் உருவாகும்.பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்:** வழக்கத்திற்கு மாறான பணி உருவாகி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். நிலுவைப்பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும்.

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | | 8 | | |
| | | 6 | | | 1 | | 3 | |
| | 4 | | | 2 | | | | |
| 3 | | | | | 6 | | 7 | |
| | | 7 | | | | 5 | | |
| | 5 | | 7 | | | | | 1 |
| | | | | 3 | | | 9 | |
| | 1 | | 4 | | | 2 | | |
| | | 4 | | | | | | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 1 | 8 | 7 | 5 | 9 | 4 | 2 |
| 4 | 2 | 8 | 9 | 6 | 3 | 5 | 7 | 1 |
| 5 | 9 | 7 | 2 | 4 | 1 | 8 | 3 | 6 |
| 8 | 1 | 2 | 6 | 9 | 4 | 3 | 5 | 7 |
| 9 | 3 | 5 | 1 | 8 | 7 | 6 | 2 | 4 |
| 7 | 4 | 6 | 5 | 3 | 2 | 1 | 9 | 8 |
| 1 | 5 | 3 | 7 | 2 | 8 | 4 | 6 | 9 |
| 2 | 8 | 9 | 4 | 5 | 6 | 7 | 1 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 1 | 9 | 2 | 8 | 5 |

நேற்றைய விடை



# காலா படத்துக்கு பெருகும் ஆதரவு

பெரிய எதிர்பார்ப்புகளுக்கு இடையே நேற்று முன்தினம் வெளியான காலா திரைப்படத்துக்கு சமூக வலைதளங்களில் ஆதரவு பெருகுகிறது.

ரஜினிகாந்த் நடிப்பில் ரஞ்சித் இயக்கத்தில் நேற்று வெளியான படம் காலா. இந்த படத்தை ரஜினியின் மருமகனும், நடிகருமான தனுஷ் தயாரித்துள்ளார்.

ரஜினியின் அரசியல் வருகைக்கு பின் வெளியாகும் படம் என்பதால் பெரிய எதிர்பார்ப்பு நிலவியது.

சமீபத்தில் தூத்துக்குடி சென்றிருந்த ரஜினி பேசிய கருத்துகள் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில். படத்தில் அதிகமான போராட்டக் காட்சிகள் இருப்பதாக செய்தி வந்து பரபரப்பைக் கூட்டியது.

படத்தில் ரஜினி அடித்தட்டு மக்களின் நில உரிமைக்காக போராடும் நபராக நடித்துள்ளார். தமிழ் சினிமாவில் அதிகம் பேசப்படாத நில அரசியலை மையமாக வைத்து கதை அமைந்துள்ளது. ரஞ்சித் பேசிய அரசியல் நடப்பு காலத்துக்கான அரசியல் என்று சமூகவலைதளங்களில் ஆதரவு பெருகி வருகிறது. எதிர்புக்களுக்கும் பஞ்சமில்லை.

# சும்மா ஆடுங்க பாஸ்!



வாழ்க்கையில் குழந்தையாய் இருக்கும் காலகட்டம் ஒரு இனிமையான **பூப்பந்தாட்டம்**.

பள்ளி வாழ்வு ஒரு மயிலாட்டம். கல்லூரி வாழ்வு என்பது **குத்தாட்டம்.**

காதல்(கள்) வரும் காலம்தான் **கைப்பந்தாட்டம்.**

கல்யாணமான பின் நடப்பதென்னவோ **கால்பந்தாட்டம்**.

குழந்தை பிறப்பும் வளர்ப்பும் என்ன நடக்குமோ எப்படி இருக்குமோ என்று தெரியாத **சீட்டாட்டம்.**

தொழில் என்பது எந்தப் பக்கமும் சாயாமல் கவனமாய் ஆடும் **கரகாட்டம்.**

மொத்தத்தில் ஒட்டுமொத்த வாழ்க்கையோ நம் ஆசையையும் கனவையும் வைத்து விளையாடும் ஒரு **சூதாட்டம்.**




# twitter

@Bullet_Ram
நம்மளவிட கறுப்பா ஒருத்தர பாக்கும்போதுதான் மனசே நிம்மதியா இருக்கு)

ஆரூரான்!! @
தைலம் தேய்ச்சி வர்ற எரிச்சல விட

இந்த போன்ல நெட்டு வேலை செய்யாத போது வர்ற எரிச்சல் தான் மிக கொடுமையானது.....

தோழியின் கிறுக்கல்!!
பழைய மொபைலும் பவர் பேங்கும், புதுசா திருமணம் ஆன ஜோடியும் ஒரே மாதிரி தான்!! பிரிக்கவே முடியாது!!!

சுட்டிப்பொண்ணு@
பேசிக்கொண்டே இருந்தால் உன்னைப் பற்றி மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள்; மௌனமாக இருந்தால் நீ மற்றவர்களைப் பற்றி அறிந்து கொள்வாய்!


கருத்து கந்தன்@
துணிக்கடையில் எவ்வளவு தேடினாலும் அருகில் இருக்கும் பெண்ணின் கையில் இருப்பதே சிறந்த புடவை!



## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 160 | 140 | 140 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 50 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 120 | 100 | 140 |
| பாகல் | 240 | 180 | 180 | 180 |
| க.கிழங்கு | 100 | 60 | 100 | 60 |
| பெ.வெங்காயம் | 90 | 120 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 100 | 140 | 160 |
| பூசணி | 40 | 60 | 30 | 30 |
| தக்காளி | 160 | 180 | 120 | 180 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 60 |
| கீரை | 40 | 40 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 35 | 40 |
| ப.மிளகாய் | 120 | 100 | 180 | 90 |
| புடோல் | 120 | 120 | 80 | 60 |
| கோவா | 140 | 80 | 100 | 80 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 280 | 180 | 240 | 160 |
| லீக்ஸ் | 280 | 180 | 280 | 240 |
| தேங்காய் | 70 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 110 | 100 | 80 |
| தேசிக்காய் | 140 | 140 | 160 | 200 |
| வல்லாரை | 20 | 35 | 20 | 20 |
| கறிமிளகாய் | 160 | 120 | 160 | 80 |
| கரட் | 320 | 100 | 280 | 280 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 120 | 120 |

## தொப்பையை குறைக்கும் அன்னாசிப் பழம்



தொப்பையைக் குறைப்பதற்காக பலரும் பல்வேறு முயற்சிகளை எடுத்தும் அது எந்த விதமான பயனும் இன்றி கவலையில் இருப்பார்கள்.
உங்களின் தொப்பையை 10 நாள்களிலேயே குறைத்து, சீரான உடலமைப்பை பெறுவதற்கு தினமும் அன்னாசிப் பழத்தைச் சாப்பிடுங்கள்.

**அன்னாசிப் பழத்தின் நன்மைகள்**

அன்னாசிப் பழத்தில் பொட்டாசியம், கல்சியம் மங்கனீஸ் மற்றும் மினரல் போன்ற உடலுக்கு ஆரோக்கியமான முக்கிய சத்துக்கள் அதிகமாக நிறைந்துள்ளன.
அன்னாசிப் பழத்தில் உள்ள மினரல் சத்துக்கள் நம் உடலில் ஏற்படும் வளர்ச்சிதை மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், இதயம் தொடர்பான பிரச்சினைகள் வராமல் பாதுகாக்கிறது. அன்னாசியில் கொழுப்புச் சத்துகள் குறைவாகவும், நார்ச்சத்துகள் அதிகமாகவும் இருப்பதால், இவை பித்தக் கோளாறுகள், ஜீரணக் கோளாறுகள் உடலில் ஏற்படும் வீக்கம், தொப்பை குறைத்தல் போன்ற பிரச்சினைகளை தீர்த்து வைக்கின்றது.

**தொப்பை குறைக்கும் முறை**

அன்னாசிப் பழத்தை சிறிய துண்டுகளாக நறுக்கி, அதனுடன் நான்கு தேக்கரண்டி ஓமத்தை தூளாக்கி, அன்னாசி பழம் மற்றும் ஓமத் தூளை ஒன்றாகச் சேர்த்து கலந்து, அதில் ஒரு கிளாஸ் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வைக்க வேண்டும். பின் அதனை இரவு முழுவதும் ஒரு பாத்திரத்தில் வைத்து மூடி வைக்க வேண்டும்.
மறுநாள் காலையில், அதை வடிகட்டி அதனுடைய சாறு எடுத்து வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இந்த முறையை தினமும் காலையில் பத்து நாள்கள் தொடர்ந்து குடித்து வந்தால் தொப்பை விரைவில் குறைந்து விடும்.
மிளகு இரசம் செய்யும் போது அதில் அன்னாசி துண்டுகளை சேர்த்து செய்து தினமும் இந்த அன்னாசி இரசத்தை ஒரு கிளாஸ் அருந்தி வந்தால், உங்களில் உடல் எடை ஒரே வாரத்தில் மூன்று கிலோ வரை குறைந்து விடும்.

## இது புதுசு



பெண்களுக்கான சாறி வகைகள் சில சந்தையில் அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 500 | 400 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 900 |
| பாரை | 600 | 500 | 700 | 1100 |
| சுறா | 500 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 500 | 450 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | 600 |
| ஓரா | 400 | 500 | 500 | 500 |
| திரளி | 200 | 200 | 300 | 200 |
| நகரை | 200 | 250 | 400 | – |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 400 | 400 |
| திருக்கை | 300 | 300 | 500 | 400 |
| மதனம் | 200 | 300 | 300 | – |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 200 | 300 | 500 | 300 |
| வாளை | 150 | 300 | 400 | – |

# மருத்துவக் குணமுடைய நெருஞ்சில்



பாதையோரங்கள், புல்வெளிகள், தரிசுநிலங்கள், வயல்கள், வரப்புகள் என எங்கெங்கும் சின்னஞ்சிறு வடிவில் படர்ந்து கிடப்பவை நெருஞ்சில். பாதங்களை பதம்பார்க்கும் முள்ளுடன் இருப்பதால் வேண்டாத விருந்தாளியைப் பார்ப்பதுப் போல, இதைப் பார்த்து பழகிவிட்டோம். கோபமுள்ள இடத்தில்தான் குண மிருக்கும் என்பது போல, முட்கள் உடைய இந்த சின்னஞ்சிறிய செடிக்குள் இருக்கும் மருத்துவக் குணம் மகத்தானது.
விதைகள் மூலமாக இனப்பெருக்கம் செய்து, நிலங்களில் படர்ந்து வளரும் இதன் வேர், அதிக ஆழம் வரை செல்லும். இதில், சிறு நெருஞ்சில், யானை நெருஞ்சில், செப்பு நெருஞ்சில் என மூன்று வகைகள் இருக்கின்றன. சிறு நெருஞ்சில் செடி. ஐந்து இதழ்களைக் கொண்ட மஞ்சள் நிற பூக்களுடன் காணப்படும். இந்தப் பூக்கள் சூரியனின் திசை நோக்கித் திரும்பும் தன்மையுடையவை. புளிய மர இலையைப் போல், ஆனால், அளவில் அதை விட சிறிய இலைகளை உடையவை. காய்கள், நிலக்கடலைப் பருப்பு அளவில் எட்டு முதல் பத்து கூரிய நட்சத்திர வடிவ முட்களுடன் இருக்கும். யானை நெருஞ்சில். இலை பெரியதாகவும், காயானது சிறுநெல்லி அளவிலும் இருக்கும். செருப்பு நெருஞ்சில் இலைகள் சிறியதாகவும், மிளகு அளவிலான முள்கள் இல்லாத காய்களுடன் மூன்று இதழ்களைக் கொண்ட சிவப்பு நிற பூக்களுடன் இருக்கும். இவை அனைத்துக்குமான மருத்துவக் குணங்களில் பெரிய வித்தியாசம் ஏதுமில்லை.

**பல நாடுகளிலும் பயன்பாடு**

நெருஞ்சில் இலையில் இரும்புச்சத்து, கல்சியம், பொஸ்பரஸ் போன்றவை இருக்கின்றன. பாலியல் பிரச்சினைகளையும், சிறுநீரகக் கோளாறுகளையும் நீக்கும் அருமருந்தாக உள்ளது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே ஆயுள்வேதத்திலும், சீன மருத்துவத்திலும் பயன்படுத்தப்படும் பெருமை வாய்ந்தது நெருஞ்சில். இன்றைக்கும் சீனாவில் சிறுநீரகம் தொடர்பான நோய்கள், கல்லீரல் பாதிப்புகள், சரும நோய்கள், குருதிநாள பாதிப்புகள், இதயநோய்களுக்கு முக்கிய மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. பல்கேரியாவில், பாலியல் வேட்கையை அதிகப்படுத்தவும், குழந்தையின்மைப் பிரச்சினைக்கும் நெருஞ்சிலைப் பயன்படுத்துகின்றனர். கிரேக்க நாடுகளில், சிறுநீர் பிரச்சினைகளுக்கும், மனநிலை சார்ந்த பிரச்சினை களுக்கும் இதைப் பயன்படுத்துகின்றனர்.

**சிறுநீரகம் சீராகும்!**

சிறுநீரகக் கோளாறுகளுக்கு நெருஞ்சில் நல்ல மருந்து. சிறுநீரகப் பாதைகளை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். 'அன்யூரியா' எனப்படும் சிறுநீர் தடைப்பட்டு வலியுடன் வெளிவரும் நோய்க்கு, நெருஞ்சில் சேர்த்த 'கோக்சூராதிக்ருதம்' நல்ல மருந்து.
சிதைந்த நெருஞ்சில் முள் 50 கிராம், கொத்தமல்லி விதை 5 கிராம் ஆகியவற்றை 500 மில்லி நீரில் இட்டு சுண்டக் காய்ச்சி, காலைமாலை இருவேளையும் 60 மில்லி அளவு குடித்து வந்தால் கல் அடைப்பு, சதையடைப்பு, நீர்க்கட்டு, நீர்எரிச்சல் போன்றவை குணமாகும். நெருஞ்சில் விதை, வெள்ளரி விதை இரண்டையும் சமஅளவு எடுத்துப் பொடி செய்து, அதிலிருந்து 2 கிராம் எடுத்து, இளநீரில் கலந்து குடித்து வந்தால், கல் அடைப்பு குணமாகும். இதன் இலையை நீரிலிட்டு காய்ச்சி வடிகட்டி, கற்கண்டு சேர்த்துக் குடித்து வந்தால்… சிறுநீரில் குருதி கலந்து போகும் பிரச்சினையைக் குணமாகும்.

**சூடு தணிப்பான்**

இரண்டு நெருஞ்சில் செடியை வேருடன் பிடுங்கி, ஒரு பிடி அருகம்புல் சேர்த்து, அதில், ஒரு லீற்றர் நீர்விட்டு, அரை லீற்றர் அளவுக்கு வரும் வரை சுண்டக் காய்ச்ச வேண்டும். இதை காலை, மாலை இருவேளையும் 50 மில்லி அளவு, மூன்று நாட்கள் குடித்து வந்தால், உடல்சூடு தணியும். கண்எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், சொட்டுசொட்டாக சிறுநீர் போதல் ஆகியவை குணமாகும்.

**கர்ப்பப்பைக் கோளாறுகளுக்கும் மருந்து**

நெருஞ்சில் வேரை, எலுமிச்சைச் சாறு சேர்த்து அரைத்து குடித்து வந்தால், பூப்படையாத பெண்கள் பூப்பெய்துவார்கள். 50 கிராம் நெருஞ்சில் இலையில் அரை லீற்றர் தண்ணீர் சேர்த்து, அதைப் பாதியாக காய்ச்சி, தினமும் சிறிதளவு குடித்து வந்தால் பெண்களுக்கான கர்ப்பப்பைக் கோளாறுகள் சரியாவதுடன், குழந்தைப் பேறு உண்டாகும்.

**ஆண்மை அதிகரிக்கும்!**

நெருஞ்சில் முள்ளை பசும்பாலில் வேகவைத்து, உலர்த்தி தூள் செய்து வைத்துக் கொண்டு, அதில், 2 கிராம் எடுத்து பாலில் கலந்து, காலை, மாலை இருவேளைகளும் பருகிவந்தால், ஆண்மைபெருகும். நெருஞ்சில்இலையை வெள்ளாட்டுப் பாலுடன் சேர்த்து, காய்ச்சி வடிகட்டி, தேன் சேர்த்துக் குடித்து வந்தால், ஆண்மை அதிகரிக்கும். நெருஞ்சில் வேர், கீழாநெல்லி வேர் இரண்டையும் சமஅளவு எடுத்து அரைத்து, இளநீரில் கலந்து குடித்து வந்தால், மஞ்சள் காமாலை நோய் குறையும். சிறுநீரகக் கோளாறுகளுக்கான அறுவை சிகிச்சைகளுக்கு அவசியமில்லாமல், பல ஆயிரங்களை மிச்சப்படுத்தும் நெருஞ்சிலை நெஞ்சில் இருத்துங்கள், வாழ்வு வளமாகும், மருத்துவச் செலவுகள் மட்டுப்படும்.

# மரபணு


*(27ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நாளின் மணியை அறிவிக்கும்படியான கோயில் மணியை அடிக்கும் பணியிலிருந்த மாணவன் ஒரு தடவை அந்த மணியை அடிக்க மறந்துவிட்டான். காரணம் வாயிற் கதவைக் கடந்துசென்ற ஓர் அழகான பெண்ணைப் பார்த்துக் கொண்டிருந்ததால். அந்த மாணவனுக்குத் தெரியாமல் அவன் பின் எகிடோ நின்றுகொண்டி ருந்தார். தனது கைத் தடியால் எகிடோ மாணவனை அடித்தார். அந்த அதிர்ச்சி மாணவனின் இதயத்தை நிறுத்திவிட்டது. அவன் இறந்துவிட்டான்.

தனது சற்குருவ்க்கு உயிரை எழுதிக்கொடுக்கும் வழமை வெறும் சம்பிரதாயமாகத் தாழ்ந்துவிட்டதால், பொது மக்கள் எகிடோவை இழிவுபடுத்தினர். ஆனால் இந்தச் சம்பவத்துக்குப்பின் எகிடோ தன்னையறிந்த பத்து வழித்தோன்றல்களை உருவாக்கினர். இது அசாதரணமான உயர்ந்த எண்ணிக்கை. இத்தகைய நிகழ்வுகள் சென்னுக்கும் சென் சற்குருக்களுக்கும் தனித்துவமானவை. ஒரு சென் குரு மட்டுமே தனது சீடர்களை அடிப்பார். சில வேளைகளில் அந்தச் சீடன் அடியால் இறப்பதும் நடக்கும்.

பார்ப்பவர்களுக்கு இது மிகவும் கொடூரமானதாகவும், வன்முறையாகவும், பைத்தியக்காரத்தனமாகவும் தெரியும். மதம் சார்ந்தவர்களால் எப்படி ஒரு சற்குரு தன் சீடனைக் கொல்லும் அளவுக்கு மிகவும் கொடூரமாக இருக்க முடியும் என்று புரிந்துகொள்ள முடியாது. ஆனால், உடன்படுபவர்கள் வேறுவகையில் உணர்கின்றனர்.

அவர்களுக்கு நன்றாகத் தெரிவது யாரும் எப்பொழுதும் கொல்லப்படுவதில்லை என்பது. உள்ளிருப்பது நிரந்தரமானது. அது தொடர்ந்து தொடர்ந்து சென்றுகொண்டேயிருக்கும். அது உடல்களை மாற்றலாம், ஆனால் அது வெறும் வீடுகளின் மாற்றமே, வெறும் ஆடைகளின் மாற்றமே, வெறும் வாகனங்களின் மாற்றமே. பயணி தொடர்ந்து தொடர்ந்து சென்றுகொண்டேயிருப்பான், எதுவும் இறப்பதில்லை. இறப்பின் கணம் தன்னையறிதலின் கணமாகவும் அமையலாம். இரண்டும் மிகவும் ஒரேமாதிரியானவை.



நாப்பத்தெட்டு நிமிடங்கள் ஓஷோவுடன் இணைந்து தியானத்தில் இருந்தான் ரவிவர்மன். இந்த நாப்பத்தெட்டு நிமிடங்களை அடைய 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமம்' என்று எங்கும் அலைந்துவிட்டான்.

ஓஷோவிடம் விடைபெற்றுக்கொண்டு நகரமண்டபத்துக்குப் புறப்பட்டான்.

ஒலிபெருக்கி ஒரு முறை ஓங்கி ஒலித்து அணைந்தது. அவன் பேசுவதற்குமுன் மண்டபத்தில் இருந்த அனைவரையும் கண்களால் ஒரு முறை நோட்டம்விட்டான். ஆழமான ஒரு மூச்சை இழுத்துவிட்டு அவன் முதல் வார்த்தையை, முதல் குண்டைக் குறிபார்த்தான். பேசத் தொடங்கினான். சிவப்பு மின்னல் மின்னியது. இடியாவது இரக்கம் பார்த்துச் சில கணங்கள் மௌனஅஞ்சலி செலுத்தும். ஆனால், துப்பாக்கி இரக்கமற்றது. விஞ்ஞானம் கண்டுபிடித்த துப்பாக்கியாலேயே விஞ்ஞானம் மீண்டும் ஒரு முறை அரசியலுக்குப் பலியாக்கப்பட்டது.

ஜெயவர்மனின் உடலும் மனமும் தரையில் விழுந்தன. ஆனால் விழும்முன் தான் பதிவு செய்துவைத்திருந்த ஒலி நாடவை ஒலிக்கச்செய்தான்.

"வணக்கம்

நீண்ட நாள்களாக எம் நாட்டில் இரண்டு இனங்களுக்கு இடையில் போர் நிகழ்கிறது. என் மரபணு ஆராய்ச்சியில் நான் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளேன். இந்த இரண்டு இனங்களும் வேறு வேறு இனங்கள் அல்ல. அழிந்துபோன ஒரு பழைய இனத்தின் பிள்ளை இனங்கள்தான் இவையிரண்டும்.

அவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால்கூட நாம் ஒன்றை மறக்கக்கூடாது. என்றும் நாம் ஓர் இனம் மட்டும்தான். மனித இனம்."

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 526

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | | 12 | | | ■ | |
| | ■ | 13 | | | ■ | 14 | ■ |
| ■ | 15 | | | ■ | 16 | | 17 |
| 18 | | ■ | 19 | | | ■ | |
| 20 | | | | ■ | 21 | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. தலைமை அமைச்சரை இப்படியும் அழைப்பர்'
4. அரைவாசி
6. வேகம்
7. ஒரு பூபமரம்
8. பெண்கள்
10. வயலுக்கு இது மிகவும் அவசியம்
11. வறுமை
13. விற்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையில் விலை தொடர்பில் செய்யப்படும் மத்தியஸ்தம்
15. வாழ்வியலில் முக்கியமானதொரு துறை.
16. விருந்தினன்
18. நீர்நிலைக்குள் இருக்கும் சேற்றுப்பகுதி
19. கூற்றுபவன்
20. பிரயாணம்
21. தோள்ப்பட்டை

### மேலிருந்து கீழ்

1. சிறப்பானது
2. அழித்தல்
3. அறிவு
4. பாதையின் இடையில் இரு பகுதிகளை இணைப்பது
5. இந்தியாவில் ஓர் மாநிலம்
7. தீட்டும் கருவி
9. தங்கு
10. சிறுதானிய வகைகளுள் ஒன்று
12. வாசனை தரும் சரக்கு
14. தொன்மை
15. கருமையான
16. இதற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
17. உறுதியான தன்மை
18. மகிழ்ச்சிக்குரிய நிகழ்வுகளை இப்படிக் குறிப்பிடுவர்

---

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 524 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பக்குவம் (4)சகா (6)மழு (7)சுடர் (8)சமர்க்களம் (11)மாலை (12) கைலாகு (14)பாயம் (15)சரி (16)தக (17)அதிதி (19)கம்பன் (21)சைவன் (23)சிறுமி (24)சினை

**மேலிருந்து கீழ்**

(1)பஞ்சமாபாதகம் (2)குமர் (3)வழுக்கை (4)சடம் (5)கார் (7)சுளகு (9)மலையகம் (10)கலாநிதி (13)பெரியன்னை (17)அன்று (18)திசை (20)பசி (22)வசி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=

பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.526**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (20.06.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

---

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 524 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

செல்வி.பா.சுபா,
இல.459, பிரதான வீதி
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு**

ந.இராசமூர்த்தி,
இல.44, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**

காமதேனு
குமாரகுலசிங்கம்,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு**

அ.அம்சா,
யா/பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**

வாகினி கிருபாகரன்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

ந.செல்வராணி,
சிவன் வீதி,
காரைநகர்.

வேலு முருகமூர்த்தி,
திருக்கேதீஸ்வரம் (கோயில்),
மன்னார்.

த.நித்தியகலா,
களபாவோடை மத்தி,
ஏழாலை.

சொற்சிலம்பம் போட்டி இல.526 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 24.06.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 524 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**10.06.2018 முதல் 16.06.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சுக்கிரன், குரு, சந்திரனால் அளப்பரிய நற்பலன் கிடைக்கும். மனதில் உத்வேகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும். பணவரவு சீராகும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் மறைமுகமாக கெடுதல் செய்வர். கவனம் தேவை. உறவினர்களின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். மனைவி சிறு விஷயங்களிலும் உதவுவார். தொழில், வியாபாரத்தில் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவது நல்லது. பணியாளர்கள் பணி இலக்கை பூர்த்தி செய்து சலுகை பெறுவர். பெண்கள் தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்

## இடபம்

சுக்கிரன், ராகு, சந்திரன் நற்பலன் வழங்குவர். புதிய முயற்சியால் பணி சிறப்பாக நிறைவேறும். அறிமுகம் இல்லாதவர்க்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம். பிள்ளைகள் உங்கள் சொல் கேட்டு செயல்படுவர். நண்பரிடம் கடனாக பொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் உதவி கிடைக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரிசெய்ய வேண்டும். பணியாளர்கள் பணியிடத்தின் சூழல் உணர்ந்து செயல்படவும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்கக் கூடாது. மாணவர்கள் நண்பருடன் படிப்பு தவிர மற்ற விவாதம் பேச வேண்டாம்.

## மிதுனம்

சுக்கிரன், குரு, சந்திரனால் நன்மை வந்து சேரும். மனதில் குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு. நண்பரின் ஆலோசனையால் உரிய வழிகாட்டுதல் கிடைக்கும். வாகன பராமரிப்பினால் பயணம் எளிதாகும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். வாழ்க்கை சுவாரஸ்யமாகும். மனைவி உங்கள் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலை தவறாமல் பின்பற்றவும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற நண்பர்களின் உதவி கிடைக்கும்.

## கடகம்

சுக்கிரன், சனி, சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். எதிர்கால தேவைகளுக்காக திட்டமிடுவீர்கள். உடன்பிறந்தவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாய்வழி உறவினர் அன்பு பாராட்டுவர். பிள்ளைகள் படிப்பு, வேலை வாய்ப்பில் மேம்படுவர். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். இளமைக்கால இனிய நினைவுகளை நண்பரிடம் சொல்லி மகிழ்வீர்கள். மனைவி உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை செழிக்கும். சேமிப்பு கூடும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் நிம்மதி நிறைந்த வாழ்வு பெறுவர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து அதிக மதிப்பெண் வாங்குவர்.

## சிங்கம்

பெரும்பான்மை கிரகங்கள் தாராள நற்பலன் வழங்குவர். மனதில் உறுதியும், உற்சாகமும் நிறைந்திருக்கும். பணியில் உருவான குறுக்கீடுகள் வந்த சுவடு தெரியாமல் விலகும். சகோதரர் கூடுதல் பாசம் கொள்வார். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகள் படிப்பு, செயல்திறனில் மேம்படுவர். ஆடம்பர பொருள் வாங்குவதை தவிர்ப்பதால் பணச்செலவு குறையும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை தேடித்தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அபரிமிதமாக வளர்ச்சி பெறும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டுக்கு இயன்ற அளவில் உதவுவர்.

## கன்னி

குரு, ராகு, புதன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். பணிகளில் திறமை பளிச்சிடும். உடன்பிறந்தவர் உறுதுணையாக செயல்படுவர். புதிய வாகனம் விரும்பியபடி வாங்குவீர்கள். பிள்ளைகளின் பிடிவாத செயல்களை சரி செய்வீர்கள். கடன் தொந்தரவு குறையும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் நல்ல செயல்களை புகழ்ந்து பேசுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து இலாப விகிதம் அதிகரிக்கும். பணியாளர்கள் எளிதாக பணி இலக்கு நிறைவேற்றுவர். பெண்கள் பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை உண்டாகும்.

## துலாம்

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரன் நற்பலன் வழங்குவர். குடும்ப தேவைகளுக்காக கடன் பெறுகின்ற சூழ்நிலை மாறும். பேச்சிலும், செயலிலும் புத்துணர்வு உண்டாகும். தாய்வழி உறவினர்களின் அன்பு நெகிழ்ச்சியை தரும். பிள்ளைகளின் நற்செயல் பெற்றோர்க்கு பெருமை சேர்க்கும். அளவான உழைப்பு, சீரான ஓய்வு உங்கள் உடல் நலத்தை பாதுகாக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் இருக்கும். மனைவியின் அதிக பாசத்தினால் மனதில் தைரியம் கூடும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூல சூழ்நிலை உருவாகும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர்.

## தனுசு

சூரியன், புதன், குரு அளப்பரிய நற்பலன் தருவர். மனம் ஒருமுகத்தன்மையுடன் இருக்கும். சமயோசித செயலால் பணி துரிதமாக நிறைவேறும். குடும்பத்தில் ஒற்றுமை வளரும். புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர் திறமை மிகுந்த செயலால் பாராட்டு பெறுவர். பூர்வீகச் சொத்தில் ஓரளவு வளர்ச்சி ஏற்படும். சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரம் செழித்து ஆதாயம் அதிகமாகும். பணியாளர்களுக்கு சலுகை வந்து சேரும். பெண்கள் விருந்தினர்களை உபசரித்து மகிழ்வர். மாணவர்கள் இலட்சிய மனதுடன் படிப்பில் ஈடுபடுவர்.

## விருச்சிகம்

கேது, செவ்வாய், புதன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். சூழ்நிலை உணர்ந்துபிறரிடம்பேசுவதுநல்லது. வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதல்படி நடந்து கொள்வர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். பகைவர் மனதிலும் உங்கள் மீதான நல்ல மதிப்பீடு உருவாகும். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் தியாகம் நிறைந்த மனதை புரிந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி வந்து சேரும். மாணவர்கள் நன்றாக படித்து பரிசு பெறுவர்.

## மகரம்

புதன், சந்திரனால் நற்பலன் உண்டாகும். சூழ்நிலை உணர்ந்து பேசுவது நன்மையளிக்கும். குடும்பத்தினரின் தேவையை சிக்கன செலவில் நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். பிள்ளைகள் ஆன்மிகத்தில் சிறந்து விளங்குவர். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு வேண்டாம். பணக்கடன் ஓரளவு அடைபடும். மனைவியிடம் குடும்ப விவகாரம் குறித்து பேச வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க விடாமுயற்சியும், உழைப்பும் தேவைப்படும். பணியாளர்கள் பணியிட சூழல் உணர்ந்து செயல்படவும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

## மீனம்

பெரும்பான்மை கிரகங்களால் அளப்பரிய நன்மை உண்டாகும். அன்றாட செயல்களில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். பொதுவிஷயங்களில் ஆர்வம் கூடும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர் படிப்பு வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். பகைவரால் உருவான கெடுசெயல் பலமிழக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி கூடுதல் அன்பு கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து பணம் சேமிப்பாகும். பணியாளர்கள் அதிக தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள் கலையம்சம் நிறைந்த வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் நன்றாக படித்து நண்பருக்கு உதவுவர்.

## கும்பம்

சுக்கிரன், ராகு, குரு, சனீஸ்வரர் சிறப்பான பலன் தருவர். சமூக நிகழ்வுகளை தெளிந்த மனதுடன் அணுகுவீர்கள். உங்கள் மீதான மற்றவரின் பார்வை மதிப்பு மிகுந்ததாக இருக்கும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். பிள்ளைகளின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். பூர்வ சொத்தில் நம்பகமானவர்களை பணியமர்த்துவது நல்லது. நோய் தொந்தரவு குறையும். மனைவி உங்கள் எண்ணங்களுக்கு மதிப்பு கொடுப்பார். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாக்கவும். பணியாளர்கள் பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்தவும். மாணவர்கள் நன்றாக படித்து பரிசு பாராட்டு பெறுவர்.



கட்டுரை

பா.குமுதன்

# சூழலும் மனிதனும்



“வீடுகள் நெருக்கமாக, காற்றோட்டம் இல்லாமல், ஒன்றை ஒன்று கொண்டிருக்கின்றன. சுற்றிலும் குப்பை. தெருவுக்கு நடுவே சாக்கடை ஓடிக்கொண்டிருக்கிறது. இதில் தான் வீடுகளில் இருந்து வரும் எல்லாக் கழிவுகளும் அடைக்கலம் ஆகின்றன. தெருக்கோடியில் தண்ணீர் குளம்போல தேங்கிநிற்கின்றது” 1842ஆம் ஆண்டு பிரித்தானியாவின் லண்டன் நகரச் சுற்றுச் சூழலின் தன்மை பற்றி ‘எட்வின் சாட்விக்’ என்ற பிரித்தானிய அறிஞர் கூறியது இது. இன்றைக்கு லண்டன் நகர் மட்டுமல்ல. ஒட்டுமொத்த உலகின் நிலைமையும் மேற்கூறப்பட்டதை விட மிக மோசமாகக் காணப்படுகின்றது. எம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்தையும் சுற்றுச் சூழல் என்று கூறுகிறோம். கால மாற்றத்தால் உருவான வாழ்கை முறை மாற்றம், அதனால் ஏற்பட்ட நுகர்வுக் கலாசாரத்தின் பரிணாமத் தன்மை என்பன சுற்றுச் சூழலின் இருப்பைத் தீர்மானிப்பவையாக மாறிவிட்டன. இதைத்தான் இன்று கண்கூடாகக் காண்கின்றோம். மனிதர்களால் மாசுபட்டும், அழிந்தும் போகிறது சூழல். முற்று முழுதாகவே எமது செயற்பாடுகளின் பாதகத் தன்மையால் மாத்திரம் தான் நிலைகுலைந்து போயுள்ளது சூழல். இந்த யதார்த்த நிலமையை உணர மறுக்கும் கல் நெஞ்சம் படைத்த உயிருள்ள ஜடங்களாகப் பாதங்களை நகர்த்திச் செல்கின்றோம். பாதகங்களை எதிர்காலச் சந்ததிக்கு வழங்கிவிட்டு.

**சுற்றுச் சூழலின் அவசியம்**

உயிரினங்களின் பரிணாம வளர்சிக்கு ஊன்று கோலாய் அமைவது இயற்கைச் சூழலே. அதன் முக்கியத்துவம் கருதியே ஐக்கிய நாடுகள் சபை ஜூன் மாதம் 5ஆம் திகதியை உலக சுற்றுச் சூழல் தினமாக அறிவித்தது. ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளால் இது நினைவு கூரப்பட்டும் வருகிறது. இயற்கை தந்த பௌதீகச் சூழலோடு இசைந்துருவாக்கிய பண்பாட்டுச் சூழலுடன் இரண்டறக் கலந்ததே மனித நாகரிகத்தின் வளர்சி என்று கூறலாம். மனித இனம் தனது வாழ்தலுக்கான போட்டியில் எதையும் கொண்டு வந்து விடவில்லை. மாறாக இயற்கை சூழல் தருபவற்றை உருமாற்றி, தனக்கு ஏற்றாற்போல பயன்படுத்திக் கொள்கிறது. அதன் மூலம் தோற்றம் பெற்றதைப் பண்பாட்டுச் சூழல் என்று அழைக்கிறார்கள். நாம் வாழ்வதற்கு தேவையான காற்றிலிருந்து, நீர், உணவு, உடை, உறைவிடம் என அனைத்தையும் எமக்கு எந்த வித நிபந்தனைகளும் இல்லாமல் அள்ளி வழங்கும் அட்சய பாத்திரமாக இந்தச் சுற்றுச் சூழல் காணப்படுகிறது. இவற்றில் ஏதாவது ஒன்று தம்நிலையை இழந்தாலும் அதன் பிரதிபலிப்புக்கள் உலகின் அனைத்து உயிர்களின் மேலும் செல்வாக்குச் செலுத்தும். பாதிக்கும். இது எழுதப்படாத விதியாகவுள்ளது. இவ்வாறான சூழலின் முக்கியத்துவம் பற்றிய விழிப்பணர்வுகளை நாம் கொண்டிருக்கிறோமா? அதைப் பாதுகாப்பதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து பார்கிறோமா? என்ற கேள்விக்கான பதில் இல்லை என்றே அமைகின்றது.

**காற்று மாசடைதல்**

தற்போதைய கால கட்டத்தில் சுற்றுச் சூழலைப் பாதிக்கும் நேர்மறையான செயற்பாடுகளை நாமே மேற்கொண்டு வருகிறோம். இதை நாம் எல்லோரும் முதலில் ஏற்றுகொள்ள வேண்டும். சுற்றுச் சூழல் கட்டமைப்புகளில் முதன்மையானவையாகக் காற்று, நீர், நிலம், ஆகாயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அந்தவகையில் உலக உயிரினங்களின் இசைவாக்கத்துக்கு இன்றியமையாததாக இருப்பது சுத்தமான காற்று. இன்று அது மிக வேகமாக மாசடையும் நிலையைச் சந்தித்துக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். நவீன மயமாதல் மற்றும் கைத்தொழில் புரட்சியின் காரணமாக அதிகரித்த தொழிற்சாலைகள், அவை வெளியே தள்ளுகின்ற நைட்ரஜன், கந்தக ஒக்சைட்டுக்கள் போன்ற வாயுக்களின் அதிகரிப்பு. அதுபோல பெருகி விட்ட வாகனப் போக்குவரத்து, அவை வெளிவிடுகின்ற கார்பன் மொனொக்சைட், கைட்ரோ காபன் போன்ற வெப்ப வாயுக்கள் வளி மண்டலத்துடன் கலந்து காற்று மாசடைவுக்கு வழிசமைக்கின்றன. இதனால், புவி சூடாகிறது. இன்று அதன் பாதகத் தன்மையை அனுபவிக்க ஆரம்பித்து விட்டோம். உதாரணமாக இந்தியாவின் தலை நகரான புதுடில்லியில் காற்று மாசின் தீவிரத் தன்மை ஏற்படுத்திய பாதிப்புக்களைப் பற்றிக் குறிப்பிடலாம். அங்குள்ள மாசடைந்த காற்றால் மனிதர்கள் குணப்படுத்த முடியாத பல நோய்களுக்கு ஆளாகுவது மலிந்த விடயமாக இருக்கிறது.

**‘நெகிழி’ (பிளாஸ்ரிக்)பாவனை**

21ஆம் நுற்றாண்டில் மனித வாழ்வுடன் பின்னிப்பிணைந்ததில் நெகிழியும் ஒன்று. பருகும் நீரில் இருந்து(போத்தல்) உண்ணும் உணவுப் பொருட் பொதிகள் என மனித வாழ்வில் இருந்து பிரிக்க முடியாத இடத்தை ‘நெகிழி’ பெற்று விட்டது. எமது முதியோர்கள் துணியாலான பைகளயும், பனை ஓலைகளால் வேயப்பட்ட பெட்டிகள், கடகங்களையும் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் நாகரிக சமூகம் எதிர்மாறாகச் சிந்திப்பதுடன் இவற்றைப் பயன்படுத்தினால் தமக்கு கௌரவக் குறைச்சல் ஏற்பட்டு விடும் என்ற மனோநிலையில் இருக்கின்றது. அத்துடன் பயன்படுத்துபவர்களைக் கேலி செய்யும் சந்தர்பங்களும் இருக்கின்றன. பிளாஸ்ரிக் சார்ந்த பொருளோ அல்லது பொலித்தீன் பாவனைப் பொருள்களோ அவற்றின் பயன்பாட்டுக் காலம் மிகவும் சொற்ப நிமிடங்களாகவோ அல்லது சில நாள்களாகவோ தான் இருக்கிறது. ஆனால் அவை உக்கி அழிவதற்கு பல வருடங்கள் எடுக்கின்றன. அழிவதற்கிடையில் அவை பல தீமைகளை உருவாக்கி விடுகின்றன. நெகிழியின் காரணமாக ஆண்டொன்றுக்கு 10இலட்சம் பறவைகள் உயிரிழப்பதாகப் பன்னாட்டு ஆய்வொன்று கூறுகிறது. பிளாஸ்ரிக்கை அழிப்பதற்காகப் பலர் எரியூட்டுகிறார்கள். இதை எரித்தழிக்கும்போது இதிலிருந்து வெளியேறுகின்ற ‘டைஒக்சின்’ வாயு மனிதர்களுக்குப் புற்றுநோயை உண்டு பண்ணும் என்கிறார்கள். நிலத்தில் புதைத்தால் மண்ணை மலடாக்குவதுடன் நிலத்தடி நீரையும் பாதிக்கின்றது. கடலில் சேருவதால் பல நீர் வாழ் உயிரினங்கள் திமிங்கிலங்கள் போன்றன அழிகின்றன.

இவ்வாறாக எவ்வழியில் நோக்கினாலும் பாதகங்களைத்தந்துநிற்கிற பிளாஸ்ரிக்கைப் பகுத்தறிவுள்ள மனிதன் தனது அத்தியாவசியத் தேவையாகப் பயன்படுத்தி வருகிறான். சில ஆண்டுகளில் உலகின் அனைத்து பகுதிகளும் பிளாஸ்ரிக் கழிவுகளால் நிரம்பி வழியும் நிலை ஏற்படவிருக்கிறது. இதன் உச்சக்கட்ட பாதிப்புக்கள் தன்னை உதைக்கும்போதுதான் அதை உணர்ந்து மாற்றீட்டுப் பொருள் பாவனையின் முக்கியத்துவம் பற்றி நாம் சிந்திக்க முற்படுவோம் என்பது உறுதி.

**விழிப்புணர்வூட்ட வேண்டியது அரசின் கடமை**

இன்று அநேக மனிதர்களுக்குச் சுற்றுச் சூழலின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகள் போதாமல் இருப்பதும் சூழல் மாசடைவதற்கு ஒரு வித காரணமாயிருக்கிறது. இலவசக் கல்வியைப்போல இயற்கை பற்றிய பாதுகாப்பையும், பயன்படுத்தலையும் பற்றிய அறிவை இலவசமாகத் தனது நாட்டுக் குடிமக்களுக்குப் புகட்ட வேண்டியது அரசின் கடமை. இயந்திரமயமான வாழ்கைச் சூழலிலே இவற்றை எல்லாம் நின்று நிதானிக்க நேரம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் மனிதன், சூழல் மாசடைவு உலக இயக்கத்தையே நிறுத்தி விடும் என்ற ஆபத்தை உணர்ந்து கொள்ளத் தவறியுள்ளமை வருந்தத்தக்க விடயமே. இவ்விடத்தில் அரசின் பங்கு முதன்மையானதாகக் காணப்படுகிறது. சூழலின் முக்கியத்துவம் பற்றியும் அதை எதிர்காலச் சந்ததிக்குப் பத்திரமாக ஒப்படைக்கும் இன்றியமையாத கடமை பற்றியும் மக்கள் மத்தியில் எடுத்துரைக்க வேண்டிய பெரிய பொறுப்பு அரசின் கரங்களிலேயே தங்கி இருக்கிறது. இயற்கைச் சூழலை மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்காமல்விடுவது, வழங்கிய உரிமங்களைப் பறிமுதல் செய்வது, அதிகரித்த வாகனப் பாவனைக்குப் பதிலாகப் பொதுப்போக்குவரத்துச் சேவைகளை இலகுவாக்கி பயன்பாட்டுக்கு விடுவது, நீர் மாசடைவை தடுத்து அவற்றை கட்டுப்படுத்தும் விதமாக புதிய சட்ட முறைமைகளை உருவாக்கி துர நோக்குடன் செயற்படுத்துவது எனப் பல பொறுப்புக்கள் அரசிடம் இருக்கின்றன.

அத்துடன் சட்டங்களை இயற்றினால் மட்டும் தான் நாம் கட்டுப்பட்டுச் செயற்படுவோம் என்ற வக்கிரத்தை விடுத்து நாம் ஒவ்வொருவரும் எம்மால் முடிந்த அளவு சூழல்நேயச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். ■

---

## பாடங்கள் கர்பிக்கும் பாதுகைகள்


என் செருப்புகள்
தேய்ந்து தேய்ந்து இத்துப்
போய் விட்டன
இத்தனை நாள்களாக
என்னைச் சுமந்து
எனக்குச் சுகந்தந்த என்
சோடிச் செருப்புக்கள்
தேய்ந்து தேய்ந்து இத்துப்
போய்விட்டன

முள்கள், கற்கள் குற்றும்போது
வலிகள் அத்தனையையும்
தாமே தாங்கி
என்னைச் சுமந்த
செருப்புகள் அழுக்குகள்
என் கால்களில் படாது
அவதானமாகக் காத்த
செருப்புகள்
இத்துப்போய் விட்டன
‘பாதுகை’ என்று பெயரிடப்
பட்டதே
பாதுகாப்பதற்காகத்தானோ?

சோடி பிரிந்தால் உயிர்
வாழாதவை அன்றில்
பறவைகள் மட்டுமல்ல
அன்பு நிறை
செருப்புகளுந்தான்
தலையில் சுமந்து வந்து
பீடத்தில் வைத்துப் பூஜித்த
பரதன்போல
என் ஒவ்வொரு
செருப்புகளையும்
பூஜித்தபடியேதான்
விடை கொடுக்கிறேன்
அவை
கற்பிக்கும் பாடங்களுக்காக

கவிதை

நடராசா இராமநாதன்





## முள்ளிவாய்க்கால் குருதி

கறையான்கள் வாழும் புற்று
பாம்புகள் குடி கொண்டு
வருகின்றதோ!

வயல்களிலும் காடுகளிலும்
சேற்றிலும் துள்ளி திரிந்த
கால்கள்
குருதி கட்டி மரக்கட்டை
ஆனதோ!

என்கையைப் பற்றியிருந்த
அம்மாவைக்
காணவில்லை– கை மட்டும்
என் கையை ப்பற்றியிருக்க


பொஸ்பரஸ்சுகளும்
எரிகுண்டுகளும் எம் இனத்தை
சூறையாடிச் சென்றிருக்க
உயிரின் மதிப்பு– ஏனோ
அன்று மட்டும்
விடுகதையாகிப்போனது.

உயிர் பசியில் நடுங்க
உடல் வலியில் நடுங்க
பீரங்கி வாசலில்
கூடுவட்டி வாழும்
குருவியின்
நிலைதான் அன்று

குண்டுமழை பொழிந்து
கொண்டிருக்க
குருதி வெள்ளம் பாய்ந்து
கொண்டிருக்க
உடல் பாகங்கள்
பருத்திப் பஞ்சுகள்
ஆகின.

அன்று மட்டும்
குருதிகள்
விலைபேசப்படவில்லை
நிலத்தின் ஆழத்துக்குள்தான்–
அவை
சென்றிருக்கும்
முப்பது வருட வாழ்க்கையையும்
வரலாற்றையும் சுமந்து கொண்டு

கவிதை
தென்னவன்






# கபாலியின் நீட்சி

'மண் எங்கள் உரிமை' என்பதன் நிமித்தம் மக்களைப் போராட வைக்கும்ஒருதலைவனின்கதையே'காலா' எனலாம் ஒரு வரியில். ரஜினிக்கேயுரிய 'பில்டப்புகளில்'குறைவில்லாமலும்தனது சமயோசிதத்தால் சமநேரத்தில் அதைக் காட்டிக்கொள்ளாமலும் திரைக்கதையைப் பின்னியிருக்கிறார் இயக்குநர் ரஞ்சித். ஆனாலும் அது அவ்வளவுக்கு எடுபட்டிருப்பதாகத் தெரியவில்லை.

**கதை**

தாராவிப் பகுதியில் இருக்கும் குடிசைப் பகுதிகளை அப்புறப்படுத்திவிட்டு சொகுசான கட்டடங்கள் கட்டித் தருவதாக ஆசை வார்த்தை கூறுகிறது ஒரு நிறுவனம். அதற்குச் சிலர் இணங்க, அதன் ஆபத்தை அறிந்து முட்டுக்கட்டை போடுகிறார் ரஜினி. இதனால் தேர்தலில் நின்று தோல்வியைத் தழுவிய அரசியல்வாதி சம்பத் சில வில்லங்க வேலைகளைச் செய்ய, எந்தத் தவறும் செய்யாத ஓர் இளைஞனின் உயிர் பறிபோகிறது. ரஜினி இதற்கான விலையாக சம்பத்துக்கு பெரும் தண்டனையை அளிக்கிறார். இந்தச் சூழலில் தாராவியைக் கைப்பற்றத் துடிக்கும் அந்த நிறுவனத்தின் மூளையாக இருக்கும் நானா படேகர், ரஜினியைச் சந்தித்து எச்சரிக்கிறார். அந்த மோதல் வலுக்க, "ஒரு பிடி மண் கூட இந்தத் தாராவி மண்ணில் இருந்து எடுத்துக்கொண்டு போக முடியாது'' என்று ரஜினி சவால் விடுகிறார். ரஜினியைக் கொல்வதற்குச் சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. பிறகு தாராவி என்ன ஆனது? நானா படேகரின் கனவு நனவாகிறதா? ரஜினி என்ன ஆகிறார்? என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது மீதிக்கதை.

**பாத்திரங்கள்**

"ஸ்டைலிஷ்" ரஜினி படம் முழுக்க வசீகரிக்கிறார். உடல் மொழியிலும், பழைய காதலின் கதகதப்பை கண்களிலேயே காட்டும் நடிப்பிலும் அசர வைக்கிறார். நல்ல நடிகன் என்பதையும் நிரூபிக்கிறார். ஈஸ்வரி ராவ் இயல்பான நடிப்பை அள்ளி வழங்கி இருக்கிறார். அவர் ரஜினியிடம் ஊடல் கொள்ளும் காட்சிகளிலும், ரஜினி மீதான காதலையும், மகன்கள் மீதான பாசத்தையும் வெளிப்படுத்தும் காட்சிகளில் தேர்ந்த நடிப்பை வழங்கியிருக்கிறார். சமுத்திரக்கனி படம் முழுக்க முக்கிய வரும் முக்கிய கதாபாத்திரத்தில் அதகளப்படுத்தி இருக்கிறார். படத்தின் நகைச்சுவைக்கும் இவரே காரணம். இடையிடையே அவர் பேசும் வசனங்களுக்குக் கைதட்ட முடிகிறது.

ஆர்ப்பாட்டமில்லாத அழுத்தமான நடிப்பால் நானா படேகர் கவனத்தை ஈர்க்கிறார். ரஜினியுடன் பேசும் காட்சியில் அவரைத் தாண்டியும் வசனத்திலும், நடிப்பிலும் மிரட்டுகிறார்.

ரஜினியின் மகனாக விழித்தெழு இயக்கத்தின் தோழராக வரும் மணிகண்டனின் நடிப்பும் நன்று. இவருக்கு பிரகாசமான வாய்ப்பு வெளிச்சம் இனிவரும் காலங்களில் கிடைக்கும் என நம்பலாம். திலீபன் கொடுக்கப்பட்ட வாய்ப்பை மிகச் சரியாகப் பயன்படுத்தி ரஜினியின் தளபதியாகவே மாறியிருக்கிறார்.

தைரியமான பெண்ணாக உரிமைக்குரல் எழுப்பும் அஞ்சலி பாட்டீல், முன்னாள் காதலியாக மனதில் அன்பைச் சுமக்கும் ஹீமா குரேஷி, பொலிசாக வரும் அரவிந்த் ஆகாஷ், கலவரத்தைத் தூண்டிவிடும் பங்கஜ் திரிபாதி ஆகியோர் பொருத்தமான பாத்திர வார்ப்புகள். சம்பத் ராம், அருள்தாஸ், அருந்ததி, சாக்ஷி அகர்வால், சாயாஜி ஷிண்டே ஆகியோர் படத்தில் வந்து போயிருக்கிறார்கள்.

**இசை, கட்சித்தொகுப்பு, ஒளிப்பதிவு**

முரளியின் கமரா தாராவியின் முழு அழகையும் சூழலையும் கண்களுக்குள் கடத்துகிறது. சண்டைக் காட்சிகள், ஊடல் காட்சிகள், குடிசைப் பகுதிகள் என எல்லாவற்றிலும் முரளியின் உழைப்பு பளிச்சிடுகிறது. சந்தோஷ் நாராயணன் பின்னணி இசையைப் பின்னி எடுத்திருக்கிறார்.

நீட்டி முழக்க வேண்டிய காட்சிகளை கத்தரி போட்டு கச்சிதமாகக் கொடுத்த விதத்தில் ஸ்ரீகர் பிரசாத்தின் பங்கு அளப்பரியது. தாராவி பகுதியை அச்சு அசலாகக் காட்டியதில் கலை இயக்குநர் ராமலிங்கத்தின் பணியும் பாராட்டுக்குரியது. மகிழ்நன், ஆதவன் தீட்சண்யா, பா.இரஞ்சித்தின் வசனங்கள் படம் சார்ந்த அரசியலை மட்டும் நேர்மையாகவும் உண்மையாகவும் பேசுகின்றன.

**பாராட்டுக்களும் பலவீனங்களும்**

அடிமட்ட மக்களின் அரசியல், சுவர் அரசியல், புலம்பெயர் தமிழர்களின் பிரச்சினைகள் பேசிய இயக்குநர் பா.இரஞ்சித் இதில் நிலம் சார் அரசியலை அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறார். துணிச்சலான அவரது முயற்சிக்கு வாழ்த்துகள். ஆனால், படம் ஆவணப்படத்துக்கான அம்சங்களுடனேயே இருப்பது அலுப்பைத் தருகிறது. அதில் ரஜினி 'பில்டப்' நடிகர் என்பதைக் காட்டிலும், நல்லதொரு நடிகர் என்பதை இரஞ்சித் முன்னிலைப்படுத்தி, திரையில் வெளிப்படுத்திய விதம் இரசிக்க வைக்கிறது.

குடும்பம், அரசியல் இவற்றில் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது என முதல் பாதியில் இரஞ்சித் குழம்பியிருக்கிறார். அந்தக் குழப்பம் காட்சிகளின் இழுவையாக எதிரொலிக்கிறது. படத்தில் 'மெட்ராஸ்', 'கபாலி' என அவரது முந்தைய படங்களின் சாயல் இருப்பதும் கவனிக்கத்தக்கது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் 'மெட்ராஸ்' படத்தில் சுவரில் தீந்தையைத் தூக்கி வீசுவார்கள். 'காலா'வில் வெண்மையையே ஆடையாகக் கொண்டு அது தான் தூய்மை என்று இருக்கும் நபர் மீது கலர் சாயங்களை வீசி எறிந்து எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள்.

''கபாலி'யில் ரஜினி தன் மனைவியைத் தேடி வருவார். 'காலா'வில் ஹீமா குரேஷி தன் முன்னாள் காதலனைப் பார்க்க வருகிறார். அவர் வருவதற்கான நோக்கம் வெறொன்றாக இருந்தாலும் இதுவும் ஒரு முக்கியக் காரணமாக அமைந்துவிடுகிறது. 'மெட்ராஸ்' படத்தில் வருவதைப் போல இதிலும் கானா பாடல் பாடி, திடீரென்று டான்ஸ் ஆடி கவனம் ஈர்க்கும் ஹிப் ஹாப் இளைஞர்கள் இருக்கிறார்கள். ஆனால், அது 'காலா'வில் பொருந்தாமல் துருத்தி நிற்கிறது.

படத்தின் முக்கியமான காட்சிகளில் ரஜினி நடந்துகொண்டே இருப்பதும், மெதுவாக நகரும் காட்சிகளின் பில்டப்பும் படத்தின் தீவிரத் தன்மையக் குறைக்கி ன்றன. இன்னும் சொல்லப் போனால் ர ஜினியின் 'பில்டப்' காட்சிகள் முழுமையடை யாமல் தொக்கி நிற்கின்றன. எந்த இடத்திலும், காட்சியிலும் நாயகனின் புத்திசாலித்தனமோ, ஒப்புயர்வில்லாத வீரமோ வெளிப்படவே இல்லை.

ரஜினி நானா படேகருக்கான மோதலோ, எதிர்ப்போ, உரசலோ வலுவாக இல்லை. குடும்பத்தின் இரு ஜீவன்களை இழந்த பிறகும் ரஜினி எந்த வித எதிர்ப்பையும் இல்லாமல் சாதாரணமாகவே பேசிவிட்டுச் செல்வது நம்பும்படியாக இல்லை. படத்தின் மையப் புள்ளியான தாராவிக்கும் ரஜினிக்குமான உறவும், பிணைப்பும் சொல்லப்பட்ட விதத்தில் போதாமையே மிஞ்சுகிறது.

சுத்தம் தூய்மையை ஆதரிக்கும் திட்டங்கள், அதை எதிர்ப்பவர்கள் தேசத் துரோகிகள் என்று கட்டமைக்கப்படும் அரசியல், இராமன் காதை, இராவண காவியம், இராவணன் தலை துண்டிக்கப்பட்டால் ஆயிரம் தலைகள் முளைக்கும், பெரியார் சிலை என ரஞ்சித் சொல்லியிருக்கும் குறியீடு சார் அரசியல் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அது நம்பகத்தன்மையோடும் ஏற்புடையதாகவும் உள்ளது. கல்விதான் முக்கியம் என்று ரஞ்சித் படத்தில் முன்னெடுக்கும் இயக்கத்தின் மாற்று வடிவமும் வரவேற்கத்தக்கது. ஆனால் எல்லாமே ரஞ்சித்–ரஜினியின் முன்னைய படப் பாதிப்புடனேதான் இருக்கின்றன.

# போர்க்குற்றச்சாட்டை அரசு ஏற்றுக் கொள்ளாது

## நாடாளுமன்றில் விஜயதாச திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 10

போர்க் குற்றச்சாட்டில் இலங்கை இராணுவத்தைப் பன்னாட்டு நீதிமன்றத்தில் தண்டிக்கவோ, அல்லது பன்னாட்டுத் தரப்புக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளவோ எமது அரசு ஒருபோதும் தயாரில்லை. இராணுவத் தண்டிப்புக்குக் கதவுகளைத் திறந்துவிட்ட மகிந்த ராஜபக்ச அரசு இன்று எம்மை குறைகூறுவது வேடிக்கையானது. இவ்வாறு உயர்கல்வி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தேசிய பாதுகாப்பு நிதியம் திருத்தச் சட்டவரைவு குறித்த இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஆட்சியில் ஒருபோதும் இராணுவக் காட்டிக்கொடுப்பு இடம்பெறவில்லை. நான் நீதி அமைச்சராக இருந்தபோது ஐரோப்பிய நாடாளுமன்றப் பிரதிநிதிகள் மற்றும் ஜேர்மனிய இராஜதந்திரிகள், பிரதிநிதிகள் என்னைச் சந்தித்துக் கலப்பு நீதிமன்றம் அமைக்கவும், இராணுவத்தை விசாரிக்கும் நீதிமன்றப் பொறிமுறையை எவ்வாறு உருவாக்கப் போகின்றீர்கள், எப்போது, எந்த அடிப்படையில் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றது என்ற கேள்விகளைக் கேட்டனர். நாம் இராணுவத்தை ஒருபோதும் தண்டிக்கப் போவதில்லை, காட்டிக்கொடுக்கப் போவதில்லை. இராணுவத்தைக் கையாளும் விதத்தில் தெரேசா மே என்ன யுக்திகளைக் கையாண்டாரோ அதே கொள்கையைத் தான் நாமும் பின்பற்றப்போகின்றோம் என்பதை உறுதியாகத் தெரிவித்தேன். போர்க்குற்றம் என்ற குற்றச்சாட்டை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இராணுவத்தைத் தண்டிக்கபோவதாகக் கூறும் நபர்கள் கடந்த காலத்தில் இராணுவத்தைத் தண்டிக்கக் கதவுகளைத் திறந்தனர் என்பதை மறந்துவிடக் கூடாது. போர் முடிவுக்கு வந்து 48 மணித்தியாலம் கடக்க முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்தி நிலமைகளைக் கூறினார்கள். அதன்பின்னரே நாட்டில் தருஸ்மன் குழு செயற்பட ஆரம்பித்தது. அதன் பின்னரே இறுதிப் போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப் பட்டனர் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப் பட்டது. பன்னாட்டு விசாரணை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற அழுத்தமான கோரிக்கையும் அதன் பின்னரே எழுந்தது.

இதற்கு முன்னர் இலங்கையில் பன்னாட்டுத் தலையீடுகள் ஏற்படும் நோக்கில் ரோம் உடன்படிக்கை செய்துகொள்ள அழுத்தம் கொடுக்கப்பட்டபோது அப்போதைய தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க உடன்படிக்கையில் பாரதூரமான தன்மைகளைக் கவனத்தில் கொண்டு உடன்படிக்கையைக் கைச்சாத்திடாது நிராகரித்தார். எனினும் அதன் பின்னர் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் தான் பல்வேறு பன்னாட்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னரே பன்னாட்டுச் சமூகம் எம்மை நெருக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆரம்பித்தது.

எமது ஆட்சியில் இராணுவத்தின் மீதான பொய்யான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிராகரித்துப் பன்னாட்டுச் சமூகம் எம்மை ஏற்றுகொள்ளும் நகர்வுகளை முன்னெடுத்துள்ளோம். இனியும் நாம் எமது இராணுவத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அதில் எந்தச் சந்தேகமும் எழப்போவதில்லை - என்றார். (5.31)









கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி

# தமிழ்! அலட்சியப்படுத்தப்படும் அரச கருமமொழி

இலங்கை சுகாதாரத்துறையில் துணை மருத்துவவியல் பட்டதாரிகளை அரச சேவைக்குள் உள்ளீர்க்கப்படுவதற்கான திசைமுகப்படுத்தல்நிகழ்வு அண்மையில் பொறளையில் உள்ள வைத்திய ஆய்வு நிலையத்தில் இடம்பெற்றிருந்தது. திசைமுகப்படுத்தல் நிகழ்வின் ஆரம்ப வைபவம் உள்ளிட்டவை யாவருக்கும் விளங்கும் வகையில் ஆங்கில மொழியில் நடைபெற்றிருந்த நிலையில், ஏனைய சில விரிவுரைகள் சிங்கள மொழியில் மாத்திரம் இடம்பெற ஆரம்பித்தன. குறிப்பாகப் பொதுச் சேவைக்குள் நுழையும் புகுமுக உத்தியோகத்தர்கள் அறிந்திருக்க வேண்டிய தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாண நடைமுறைகள் தொடர்பான அறிமுகப்படுத்தல் என்பன சிங்கள மொழியிலேயே இடம் பெற்றிருந்தன. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களி லிருந்து வருகை தந்திருந்த பட்டதாரிகள் இதனால் சிக்கலை எதிர்கொண்டனர். இன்னும் சில விரிவுரைகள் மருந்தளவான ஆங்கில மொழிப் பயன்பாட்டுடன் நடந்தேறின. சில விரிவுரைக்ளில் தமிழ்ப் பட்டதாரிகளைத் திருப்திப்படுத்த ஆங்கிலப்பதங்கள் ஆங்காங்கே உட்புகுத்தப்பட்டு சமாளிக்கப்பட்டது. தமிழ் விரிவுரையாளர் ஒருவர் நிகழ்த்திய விரிவுரை மாத்திரம் மும்மொழியில் மிகச்சிறப்பாக இடம்பெற்றிருந்தது. ஏனைய விரிவுரையாளர்களுக்கு, தமிழ் பட்டதாரிகளின் வருகை தெரியப்படுத்தப்பட்ட போதிலும், மொழி பெயர்ப்பு வசதிகள் கூட ஏற்படுத்தப்படவில்லை.



> குறிப்பாகப்பொதுச்சேவைக்குள் நுழையும் புகுமுக உத்தியோகத்தர்கள் அறிந்திருக்க வேண்டிய தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணநடைமுறைகள்தொடர்பான அறிமுகப்படுத்தல் என்பன சிங்கள மொழியிலேயே இடம்பெற்றிருந்தன. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலிருந்து வருகை தந்திருந்த பட்டதாரிகள் இதனால்சிக்கலை எதிர்கொண்டனர்.

**தமிழ் புறக்கணிக்கப்பட்டது; சாட்டுக்கள் சொல்லப்பட்டன**

கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் நடந்த இந்தத் திசைமுகப்படுத்தல் நிகழ்வின் இறுதி நாளன்று, தமிழ்ப் பட்டதாரிகள் எதிர்கொண்ட குறித்த நெருக்கடி ஒழுங்கமைப்பாளர்களுக்கு செவ்;வனே தெரியப்படுத்தப்பட்டது. அதுவும் ஒழுங்கமைப்பாளர்கள் அழைத்த பிரதம விருந்தினருக்கு முன்னாலேயே விடயம் போட்டுடைக்கப்பட்டது. தமிழ் ஆங்கிலம்; தெரிந்த உத்தியோகத்தர் கிடைக்கவில்லை. அவசரம் அவசரமாக ஒழுங்குபடுத்தியதால் குறித்த பிரச்சினை கண்டுகொள்ளப்படவில்லை, அடுத்த முறை இதைச் சரி செய்கிறோம் என்றெல்லாம் சமாளித்தார்கள். தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது ஒருபுறம் இருக்க, ஆங்கில மொழியிலேனும் குறித்த விரிவுரையின் உள்ளடக்கங்கள் தமிழ் பட்டதாரிகளைச் சென்றடைவதை ஊக்கப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அரசமைப்பின் படி, மொழி உரிமையானது அடிப்படை உரிமையாகக் காட்டப்பட்டுள்ளது. இலங்கை அரசமைப்பில், மூன்றாவது அத்தியாயத்தின் 12(2) உறுப்புரையில் மொழி உரிமை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் இலங்கையின் அரசகரும மொழிகள் ஆகும்.

ஆங்கிலமானது இணைப்பு மொழியாகக் கொள்ளப்படுகிறது. 1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரச கரும மொழிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென அந்த ஆண்டிலேயே இது நிறுவப்பட்டுவிட்டது. அமைதியும் நல்லிணக்கமும் நிலவும் மும்மொழிச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், நிலவரம் என்னவோ ஆமை வேகத்தில் தான்.

இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிக்கொள்கையானது, ஒவ்வொரு குடிமகனும் தனக்குத் தேவையான சேவையை நிறுவனங்களிலிருந்து தனது சொந்த மொழியில் பெற்றுக்கொள்ள வகை செய்வதாகச் சொன்னாலும், நடைமுறை நிலைவரம் அவ்வாறில்லை.

**அரசகரும மொழிக்கொள்கை நடைமுறை ஆய்வு!**

அரச கரும மொழிக் கொள்கை நடைமுறை அமைச்சு மட்டங்களில் எவ்வாறு இருக்கிறது என்பது தொடர்பில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வின் அறிக்கை அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டிருக்கிறது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், அமைச்சுக்களில் இந்த மொழி உரிமை நடைமுறை பற்றியும் அதில் பின்பற்றப்படுகின்ற ஏனைய நடவடிக்கைகள் பற்றியும் ஆய்ந்தறியப்பட்டிருக்கிறது.

குறித்த ஆய்வில், 49 அமைச்சுக்களின் நடவடிக்கைகள் மொழிப் பயன்பாட்டை அடிப்படையாக வைத்துக் கண்காணிக்கப்பட்டிருக்கின்றன. அரச மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தலும் பிரதிபலித்தலும், நிர்வாகம் மற்றும் ஆவணப்படுத்தல், சேவை வழங்குதல், நிறுவன அர்ப்பணிப்பு மற்றும் உதவிப் பொறிமுறை போன்ற விடயங்கள் இந்த ஆய்வில் கவனத்துக்கு எடுக்கப்பட்டிருந்தன.

மேற்படி ஆய்வில், பெயர்ப்பலகைகள் ஆங்கிலத்தில் மட்டும் இருந்தாலும் அது அரசகரும மொழிக் கொள்கைக்கு முரணானது என்னும் வகையில் நோக்கப்பட்டிருக்கிறது.

நடத்தப்பட்ட ஆய்விலிருந்து பெறப்பட்ட சில முடிவுகள் பின்வருமாறு:

1. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 49அமைச்சுக்களில், 36அமைச்சுக்களில் மாத்திரம் வரவேற்பு கருமபீடம் காணப்படுகிறது. அதில், 26அமைச்சுக்களில் வரவேற்புக் கருமபீட சேவை, அரசகரும மொழிக்கு முரணாக இடம்பெறுவது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.
2. வரவேற்புக் கருமபீடத்தில் தமிழ் மொழியில் சேவையை வழங்க முடியாதபோது பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் தொடர்பில் இந்த ஆய்வில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. அதில், 33வீதமான சந்தர்ப்பங்களில் பதில் வழங்காத அல்லது சேவை வழங்கப்படாத நிலை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏனைய முறைகளாகத் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர் மூலம் சேவை வழங்கல், ஆங்கில மொழியில் உரையாடுதல், நேரடியாக குறிப்பிட்ட அலுவலகப் பிரிவுக்கு அனுப்பிச் சேவையை வழங்கல் என்பன நடைபெறுவதாக அறிக்கையிடப்பட்டிருக்கிறது.
3. நிர்வாகம் மற்றும் ஆவணப்படுத்தலுக்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 49அமைச்சுக்களிலும் ஒப்பீட்டளவில் தேவையான பௌதீக வளம் இருந்தும் போதுமான மனித வளம் காணப்படவில்லை எனக் கண்டறிந்திருக்கிறார்கள்.
4. ஆராயப்பட்ட 49அமைச்சுக்களில், 43அமைச்சுக்களே உத்தியோகபூர்வ வலைத்தளத்தைக் கொண்டிருக்க, அவற்றில் 79வீதமானவை அரசகரும மொழிக் கொள்கைக்கு முற்றிலும் முரணாகப் பேணப்படுகின்றமை வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.
5. அரசகரும மொழிப்பயன்பாட்டை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மொழித்திட்டம் ஒன்றைக் கொண்டிருப்பது தொடர்பில் ஆராயப்பட்டதில், 49அமைச்சுக்களில் 47அமைச்சுக்களில் அவ்வாறான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய திட்டத்தைத் தயாரிப்பதற்கான நிதி மற்றும் வள ஒதுக்கீடு எந்த அமைச்சிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

000

குறித்த ஆய்வில் அரச கரும மொழிக் கொள்கைக்கு அமைவாகப் பணிகளை முன்னெடுக்கும்படி ஆலோசனை கூறி ஆய்வை முடித்திருக்கிறார்கள்.

**தமிழ் மொழியில் தகவல்களைப் பெறுவதில் சிரமம்**

இலங்கைக் குடிமக்களான தமிழர்கள் தமது தாய்மொழியில் அரச அறிவிப்புக்களைப் பெறுவது இன்னமும் இழுபறிக்குரியதாகவே இருக்கிறது. வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்படும் தகவல்கள் தமிழர்களுக்குத் தாய்மொழியில் வழங்கப்படாத குறை, இன்னமும் திருத்தப்படவில்லை. தமிழ் மொழி பெயர்ப்பு இன்மை காரணமாகக் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளிவருவதில் தாமதம் நிலவியமையும் இங்கு நினைவு கூரத்தக்கது. அரச சேவையுடன் தொடர்புடைய படிவங்கள், பத்திரங்கள் என்பனவும் இன்னமும் தமிழ்மொழியை உள்வாங்காததால் தமிழ் மொழியில் காரியமாற்றுவது சிரமத்துக்குரியதாகவே தொடர்கின்றது.

**வலியுடன் சிரிக்க வைக்கும் பேரூந்துப் பெயர் பலகைகள்!**

மும்மொழி அல்லது தமிழ்மொழிப் பயன்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படும் அசட்டையைப் பேரூந்துகளின் பெயர்ப்பலகைகளில் தாராளமாகவே காணக்கிடைக்கிறது. அதுவும் பெரும்பாலும், பேரூந்துப் பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துக்களைக் காணக்கிடைத்தாலும் அவை இடப்பெயர்களைக் கொலை செய்த வகையில் அமைந்திருப்பதை அவதானிப்பது எமது வீதிகளில் சகஜம். இன்னும் சில சிரிப்பை வரவழைப்பவையாகவும் அமைந்துவிடுவதுண்டு.

**சிரமத்துக்குரியதாக அமையும் பொலிஸ்துறை தொடர்பாடல்கள்!**

தமிழ் மொழி தெரிந்த பொலிஸ் துறையினர் தமிழர் வாழும் பிரதேசங்களில் நியமிக்கப்படாமையால் பொலிஸ் துறையோடு தொடர்புடைய விடயங்களுக்காக அன்றாடம் பணவிரயமும் நேரவிரயமும் செய்ய நேர்வதாக வெதும்புபவர்கள் பலர். விளங்காத மொழியில் இருக்கும் வாக்குமூலங்களைக் கூட ஏற்கவேண்டிய பரிதாபம் பல இடங்களில் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. முறைப்பாட்டு இலக்கங்கள் மற்றும் தொடர்பாடல் முறைகள் அறிவிப்பு அரசகரும மொழிச்சட்டம் மீறப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்கள் தொடர்பில் அதாவது, தமிழ் மொழியில் எழுதப்படாத, தமிழ் மொழியில் தவறாக எழுதப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கான தொடர்பாடல் முறைமையைத் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு அண்மையில் அறிவித்திருக்கிறது.

இதன்படி தொலைபேசி மூலமான முறைப்பாட்டுக்கு வழமையான 1956 இலக்கம் வழங்கப்பட்டிருக்கிறது. சமூக வலைத்தளங்களான 'வட்ஸ் அப்;', 'வைபர்', 'ஐ.எம்.ஓ' வழியாக 0714854734 இலக்கத்தைத் தொடர்பு கொண்டு முறைப்பாட்டைச் செய்ய முடியும். முகநூல் வழியாக முறையிடுவதற்கு https://www.facebook.com/LanguageRIGHTS/ எனும் பக்கத்தைத் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

அரசகரும மொழியை நடைமுறைப்படுத்துவதில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள், சுற்றறிக்கைகளின் மேல் சுற்றறிக்கைகள் என நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டேதான் இருக்கின்றன. சமாந்தரமாகத் தமிழ் மொழி புறக்கணிப்பும் இடம்பெறவே செய்கிறது. இந்த நிலையிலிருந்து இலங்கையர் விடுபடுவதற்கு இன்னும் பல மைல்கள் பயணம் செய்யவேண்டும். அதற்குள் நமது தலைமுறை மூப்பு எய்திவிடும்!

# கடலட்டை பிடித்தல்

## எழுப்பப்படும் பிரச்சினைகள்!

கட்டுரை

ந.லோகதயாளன்

> குறித்த அட்டை பிடித்தல் தொழிலானது நிறுவனங்கள் முதல் தொழிலாளர்கள் வரையில் அதிகம் வருமானம் ஈட்டுகிற தொழிலாகவே காணப்படுகின்றது. இங்கு படகைச் செலுத்துகிற ஓர் ஓட்டிக்கு நாள் ஒன்றுக்கு 4ஆயிரம் ரூபா சம்பளத்தை பொறுப்பான நிறுவனங்கள் வழங்குவதோடு அட்டை பிடிப்பதற்காக ஒரு படகில் செல்லுகின்ற சுழியோடிக்கு 10 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம்-வடமராட்சி கிழக்குக் கடற்கரைப் பகுதியை அதிகளவில் ஆக்கிரமித்து, ஆயிரக் கணக்கில் தங்கி நின்று, தென் பகுதி மீனவர்கள் கடலட்டை பிடிப்பதால் உள்ளூர் மீனவர்களின் தொழில் பாதிப்படைவது தொடர்பில் கடந்த வாரத்திலிருந்து அதிக செய்திகள் வருகின்றன. அதன் நிமித்தம் போராட்டங்களும், பல கண்டனங்களும் கூட எழுந்து ஓய்ந்திருக்கின்றன. விடயம் 'கொழும்பு' வரையில் கொண்டு செல்லப்பட்டிருந்தது. குறித்த கடல் பகுதியில் பிற மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களே இந்தக் கடல் அட்டை பிடிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்போது 404 படகுகளுடன் தங்கி நின்று தொழில் புரிகின்ற ஆயிரத்து 612பேருக்குக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அங்கு கடலட்டை பிடிப்பதற்கான உத்தியோகபூர்வ அனுமதியை வழங்கியுள்ளதை அந்தத் திணைக்களம் சார் தகவல்கள் உறுதி செய்கின்றன.

அவ்விடத்தில் 12வரையான வாடிகளை அமைத்து அந்த மீனவர்கள் கடலட்டை பிடித்து வருகிறார்கள். அட்டை பிடிப்பதற்கு அவர்கள் உரிய அனுமதியைப் பெற்றிருந்தாலும் இதனால், உள்ளூரில் ஆயிரக் கணக்கான மீனவர்கள் பாதிப்படைவதோடு அந்தப் பகுதி சுகாதாரச் சீர்கேட்டுக்கும் உள்ளாகின்றது. இதனால், அந்தப் பகுதி மீனவர்கள் முதல் அரசியல்வாதிகள் வரைக்கும் பலர் அதை எதிர்க்கிறார்கள்.



### மூலம் தமிழ் முஸ்லிம்களே!

வெவ்வேறு மாவட்ட மீனவர்கள் அவ்விடத்தில் கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்டாலும், அவர்கள் உரிய அனுமதிகளைப் பெற்றிருக்கிறார்கள். உள்ளூரிலும் 5சங்கங்களின் அனுமதிகளைப் பெற்றிருக்கிறார்கள். அத்துடன், தனியாருக்குச் சொந்தமான நிலங்களில் தங்கியிருக்கிறார்கள். அயலில் உள்ள நிலங்களையும் அபகரித்துத் தமது தொழில் முயற்சியில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு தொழிலுக்காகத் தங்கி நிற்கும் இவர்கள் குறிப்பிட்ட 10நிறுவனங்கள் ஊடாகவே அந்த அனுமதியைப் பெற்றுள்ளனர். குறித்த அனுமதியைப் பெற்றுள்ள 10நிறுவனங்களில் 4நிறுவனங்கள் தமிழர்களுக்குச் சொந்தமானவை. இன்னும் 4நிறுவனங்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமானவை. இரண்டு நிறுவனங்கள் சிங்கள வர்களுக்குச் சொந்தமானவை. இதில் முஸ்லிம்களின் 'ஆர்.ஆர்.ஐ' நிறுவனம் மற்றும் 'அஸ்லான்' நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் சார்பாகவே அதிக படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன. அடுத்ததாகச் சுகன், சிறி கணேசன், சென்லூசியஸ், சிறி விநாயகர் ஆகிய 4தமிழ் நிறுவனங்கள் சார்பிலும், மூன்றாவது இடத்தில் சிங்கள நிறுவனமான 'சங்கா' நிறுவனம் சார்பிலும் தொழில் இடம்பெறுகின்றது. இதைப் படகு எண்ணிக்கையில் கூறுவதால் 283படகுகள் முஸ்லிம் நிறுவனங்கள் சார்பிலும் 96படகுகள் தமிழ் நிறுவனங்கள் சார்பிலும் 21 படகுகள் சிங்கள நிறுவனங்கள் சார்பிலும் தொழிலில் ஈடுபடுகின்றன. பிடிக்கப்படுகின்ற கடலட்டைகள் மூலமான வருமானம் இங்கு தங்கியிருக்கின்ற மீனவர்களுக்குச் சேராது. படகோட்டியும், சுழியோடியும் சம்பளத்துக்கு வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள்.





### தொழிலாளர்களில் தமிழர்கள் குறைவு

இங்கே இன ரீதியில் நிறுவனங்கள் இயங்குகின்ற நிலை இவ்வாறாக இருக்க, கடலில் சுழியோடி அட்டை பிடிக்கும் தொழிலாளர்களில் அதிகமாக முஸ்லீம்களும் சிங்களவர்களுமே உள்ளனர். தமிழ்த் தொழிலாளர்கள் காணப்படாமைக்கு, தமிழ் மீனவர்கள் இந்த அட்டை பிடிக்கும் தொழிலில் பரீட்சையமற்றவர்களாக இருப்பதே காரணம் எனக் கூறப்படுகின்றது.

குறித்த அட்டை பிடித்தல் தொழிலானது நிறுவனங்கள் முதல் தொழிலாளர்கள் வரையில் அதிகம் வருமானம் ஈட்டுகிற தொழிலாகக் காணப்படுகின்றது. இங்கு படகைச் செலுத்துகிற ஓர் ஓட்டிக்கு நாள் ஒன்றுக்கு 4ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பொறுப்பான நிறுவனங்கள் வழங்குவதோடு அட்டை பிடிப்பதற்காக ஒரு படகில் செல்லுகின்ற சுழியோடிக்கு 10 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுகின்றது.

### சட்டங்களை மீறிச் செயற்படுகின்றனர்

தமது சம்பளத்தில் தாக்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத் தினமும் அதிகரித்த தொகையில் கடல் அட்டை பிடிப்பதில் தொழிலாளர்கள் கவனம் செலுத்துகின்றனர். இதற்காகக் குறித்த தொழிலுக்குரிய சட்டங்களை மேற்படித் தொழிலாளர்கள் சாதாரணமாகவே மீறுகின்றனர். அதாவது குறித்த தொழிலைக் கடலின் கரையில் இருந்து 5கடல் மைல் தொலைவுவரை மேற்கொள்ள முடியாது. மாலை 6 மணிக்குப் பின்பு தொழிலில் ஈடுபட முடியாது. எந்தக் காரணம் கொண்டும் ஒளி பாய்ச்சித் தொழில் புரிய முடியாது. உள்ளிட்ட பல சட்ட ரீதியான தடைகள் உள்ளன. இருப்பினும் இவை அனைத்தும் மீறப்பட்டுத் தொழில் புரிந்து வருகிறார்கள். உள்ளூர் மீனவர்கள் பெரிதும் பாதிப்படைவதற்கும் இவையே காரணமாகவுள்ளன. அதாவது உள்ளூரில் பெறப்படவேண்டிய அனுமதியைக் கொழும்பில் வழங்கும் திணைக்களம் அவர்கள் மேற்கொள்ளும் சட்ட மீறல்களுக்கு நடவடிக்கை எடுப்பது கிடையாது. குறித்த திணைக்களம் உரிய சட்ட நடவடிக்கைகளை முழுமையாக, நேர்த்தியாக கடைப்பிடித்திருப்பின் உள்ளூர் மீனவர்கள் ஓரளவுக்காவது பாதுகாக்கப்பட்டிருப்பர். ஆனால் அதை மேற்கொள்வதற்குத் திணைக்களம் தவறிவிட்டது.

### உள்ளூரவர்களும் அனுமதித்திருக்கிறார்கள்

அங்குள்ள குறித்த நிறுவனங்கள் சார்பில் இவ்வளவு அதிக மீனவர்கள் எவ்வகையில் அங்கு தங்கித் தொழில் புரிய முடியும்? என்கிற சூழலில் உள்ள பின்னணியை ஆராய்ந்தால், இந்த நிறுவனங்கள் அந்தப் பகுதியில் தங்கி நின்று தொழில் புரிவதற்காக 5கூட்டுறவுச் சங்கங்கள் எழுத்து மூல அனுமதியை வழங்கியுள்ளதோடு ஒரு கிராமியச் சங்கமும் அனுமதி வழங்கியுள்ளது. கொழும்பு அனுமதியுடன் வந்தவர்கள் தங்குவதற்குச் சில தனியார்களும் தமக்குரித்தான இடங்களை வழங்கினர். இதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற இவர்களுடைய கடலட்டை பிடிப்பால் பிற மாவட்டத்தவர்களும், இந்த நாடும் பொருளாதாரத்தை ஈட்டிநிற்க, உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்பட்டதுடன், அந்தப் பிரதேசமும் சுகாதாரச் சீர்கேடானது. பின்னர் உள்ளூர் மீனவர்கள் போராட்டத்தில் குதிக்க அவர்களுடன் வெளியூர் மீனவர்கள் முரண்பட்டனர்.

### சட்டத்தை மீறுகின்ற படகுகள் கைது!

கடலட்டை பிடிக்கின்ற குறித்த பிரச்சினையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடற்றொழில் அமைச்சர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். ஆனாலும் தீர்வு எட்டாத காரணத்தால் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் மக்களால் முற்றுகையிடப்பட்டது. குறித்த பகுதியில் தங்கியிருந்து கடல் அட்டை மீன்பிடியில் ஈடுபடுவோர் மேற்கொள்ளும் அனைத்துச் சட்ட மீறல்களும் 3நாள்களுக்குள் கட்டுப்படுத்தப்படும் என யாழ். மாவட்ட நீரியல் வளத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் உத்தரவாதம் அளித்தார். போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. இதையடுத்து சுதாகரன் தலைமையிலான அலுவலகர்கள் குறித்த பகுதிக்கு அன்று மாலையே விரைந்திருக்கின்றனர். கடலட்டைத் தொழிலுக்கு அனுமதிக்கப்பட்ட விதிமுறைகளை மீறும் படகுகள் உடனடியாகக் கைது செய்யப்படும். என ஒவ்வொரு வாடிகளுக்கும் சென்று தெரிவித்திருக்கின்றனர். அத்துடன் உடனடியாகவே கடற்படையினருடன் தொடர்பு கொண்டும் சட்டத்தை மீறும் அத்தனை கடலட்டைப் படகுகளையும் கைது செய்யுமாறும் அறிவுறுத்தினார். இந்த நிலையில் எதிர்வரும் நாள்களில் குறித்த விடயம் தொடர்பில் நிகழப்போவது என்ன. என்ற எதிர்பார்ப்பே தற்போது உள்ளூர் மீனவர்கள் மத்தியில் எழுந்துள்ள மிகப் பெரும் கேள்வியாகவுள்ளது. அத்துடன் திணைக்களத்திடம் 404 படகுகளுக்கே இந்தப் பகுதியில் அனுமதி எடுக்கப்பட்ட நிலையில் 500படகுகள் வரையில் தொழில் புரிவதான குற்றச்சாட்டு உள்ளமை தொடர்பிலும் தற்போது கவனம் செலுத்தப்படுகின்றது.

*கட்டுரையாளர்-*
*மாநகரசபை உறுப்பினர்*

விளையாட்டு

பிரகாஸ்




கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் பங்குபற்றவுள்ள ஸ்பெய்ன் அணி தொடர் நடைபெறும் நாடான ரஷ்யாவுக்கு நேற்றுமுன்தினம் சென்றது.

# பிரென்ஞ்தொடர் நடாலுக்கானதா?

பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற பகிரங்க ரென்னிஸ் தொடர்கள்நான்கு உள்ளன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ்,இங்கிலாந்துஆகியநாடுகளின்தொடர்களேஅவை. இந்தத்தொடர்களில்ஒன்றைக்கைப்பற்றுவதேபெரும்பாடாக உள்ள நிலையில் பிரென்ஞ் தொட்ரை மாத்திரம் இதுவரை 10 தடவைகள்கைப்பற்றியுள்ளார்நடால்.மட்டுமல்ல11ஆவது கிண்ணத்தைக் கைப்பற்றக் கூடிய வாய்ப்பும் இந்த வருடம்நடாலுக்கு உள்ளது.

பிரென்ஞ் தொடர் களிமண்தரை ஆடுகளங்களில் நடைபெறும். களிமண் தரைகளின் ராஜா என்று அழைக்கப்படுகிறார்நடால். அத்தகைய ஆடுகளங்களில் அவர் வெளிப்படுத்தும் அபார திறனே அந்தப் பெயர்கொண்டு நடால் அழைக்கப்படுவதற்கான முதன்மைக் காரணம். பிரென்ஞ் தொடர் களிமண் தரையில் நடைபெறுகின்றமை நடாலுக்கு கூடுதல் சாதகம்.

இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் நடாலை எதிர்த்து டொமினிக் தியம் மோதுகிறார். தியம் சிறந்த வீரர் என்பதில் இருவேறு கருத்தில்லை. ஆனால் நடாலின் மின்னல் வேகத்துக்கு அவருக்குப் பரீட்சயமான களிமண் தரையில் வைத்து தியமால் ஈடுகொடுக்க முடியுமா என்றால், அது மில்லியன்டொலர்கேள்வியாகவே அமையும்.






# ஆயர் பணியில் 10 ஆண்டுகளை நிறைவு செய்கிறார் மட்டக்களப்பு, அம்பாறை ஆயர் ஜோசவ் பொன்னையா

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

மட்டக்களப்பு அம்பாறை மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசவ் பொன்னையா ஆண்டகை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு 10 வருடங்கள் (2008 - 2018) நிறைவாகின்ற வேளை ஆயரின் தொடர் பணி சிறக்க அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.



**இலங்கையிலுள்ள நான்கு தமிழ் மறைமாவட்டங்கள்**

இன்று இலங்கையில் யாழ்ப்பாணம் (1886), திரு கோணமலை (1893), மன்னார் (1981), மட்டக்களப்பு (2012) என்ற நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் உள்ளன. மட்டக்களப்பு - அம்பாறை மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசவ் பொன்னையா ஆண்டகை ஆயராக திருநிலை ப்படுத்தப்பட்டு 10 வருடங்கள் நிறைவாகின்ற வேளை மட்டக்களப்பு - அம்பாறை மறைமாவட்டம் பற்றியும் ஆயரின் பணி பற்றியும் இங்கு நோக்குவோம்.

திருகோணமலை மறைமாவட்டம் 1893ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி உருவாக்கப்பட்டது. ஆரம்பம் முதல் இயேசு சபையைச் சேர்ந்த ஆயர்களே (1898-1946) திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தை நிர்வகித்து வந்துள்ளனர். பழைய பதிவுகளின்படி சாள்ஸ் லவினி (1898-1913), கஸ்ரன் றொபிச்சர் (1917 - 1946) என்ற இரு இயேசுசபை ஆயர்கள் முதலில் திருகோணமலை மறைமாவட்டத்தை நிர்வகித்துள்ளனர்.ட் பின்னர் கலாநிதி இக்கினேசியஸ் கிளனி ஆண்டகை (1947-1974) திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தை நிர்வகித்தார். திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக 1967ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி முதல் 1972ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி வரை கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை பணியாற்றி பின்னர் யாழ் மறைமாவட்ட ஆயராக (1972-1992) பணியாற்றினார். யாழ். மறைமாவட்டத்தின் துணை ஆயராக (1968 -1972) பணியாற்றிய எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை 1972ஆம் ஆண்டில் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் வாரிசு ஆயராகி 1974ஆம் ஆண்டில் ஆயர் பணியேற்று 1983ஆம் ஆண்டில் பதவி விலகினார். தொடர்ந்து கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை (1983 -2012) ஆயராகப் பணியாற்றினார்.

**மட்டக்களப்பு மண்ணின் மைந்தர் பொன்னையா ஜோசப் ஆண்டகை**

119 வருடகால வரலாற்றினைக் கொண்ட திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்துக்கு 2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி மட்டக்களப்பு மண்ணின் மைந்தரும் அன்றைய திருகோணமலை மட்டக்களப்பு



மறைமாவட்ட குருமுதல்வருமான ஜோசவ் பொன்னையா அடிகளார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்றால் துணை ஆயராக நியமிக்கப்பட்டார். திருத்தந்தையின் இலங்கைகான தூதுவராக அன்று விளங்கிய கலாநிதி மரியோ செனாரி ஆண்டகை இந்த அறிவிப்பை வெளியிட்டார். 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் திகதி திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு அம்பாறை புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டது. மட்டக்களப்பு அம்பாறை புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்ட போது திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயரும் மட்டக்களப்பு மண்ணின் மைந்தருமான கலாநிதி ஜோசவ் பொன்னையா ஆண்டகை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக திருத்தந்தை 16ஆம் பெனடிற்றால் நியமிக்கப்பட்டார். அதுவரை இணைப் பேராலயமாக இருந்த புளியந்தீவு பனித மரியாள் ஆலயம் பேராலயமாகவும் உயர்த்தப்பட்டது. இந்த புதிய மட்டக்களப்பு மறைமாவட்ட உருவாக்கத்திற்கும் மட்டக்களப்பு மண்ணின் மைந்தரான ஒருவர் முதல் ஆயராக பொறுப்பேற்பதற்கும் வித்திட்ட திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை நன்றிடன் நினைவுகூரப்பட வேண்டியவர்.

**கலாநிதி ஜோசவ் பொன்னையா ஆண்டகையின் தூரநோக்கு பணி**

கலாநிதி ஜோசவ் பொன்னையா ஆண்டகை பார்ப்பதற்கு அழகானவர் பழகுவதற்கு இனிமையானவர் உழைப்பதற்கு ஆயத்தமானவர் உண்மையை உரைப்பதற்கு துணிவானவர் எல்லோரையும் அணைத்து செயற்படுவதில் அவருக்கு அவரே நிகர். அவர், மறைமாவட்டத்தை துணிவுடனும் தூர நோக்குடனும் கடந்த 10 ஆண்டுகள் வழிநடத்தியுள்ளார். திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் மறைந்த முன்னாள் ஆயர் கலாநிதி எல்.ஆர்.அன்ரனி ஆண்டகையால் 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர், 2006ஆம் ஆண்டு மறைமாவட்ட குரு முதல்வராக பொறுப்பேற்றார். இரண்டாண்டுகள் நிறைவில் திருத்தந்தை 16ஆம் பெனடிற்றால் துணை ஆயராக உயர்த்தப்பட்டு 2008ஆம் ஆண்டு மே மாதம் திருப்பொழிவு பெற்றார்.

ஆயர் ஜோசவ் பொன்னையா ஆண்டகை மட்டக்களப்பு அம்பாறை மறைமாவட்டத்தின் கத்தோலிக்க பாரம்பரியத்தைப் பேணுகின்ற தன்னாமுனை புனித சூசையப்பர் ஆலய பங்கைச் சேர்ந்தவராவார். பங்கு ஆலயப் புனிதர் சூசையப்பரின் பெயரையே கொண்ட இவர் மெய்யியல் கல்வியை தென்னிந்தியாவிலுள்ள திருச்சி புனித பவுல் குருத்துவக் கல்லூரியிலும் இறையியல் கல்வியை மேற்கு இந்தியாவிலுள்ள பூனே நகரில் அமைந்துள்ள பாப்பிறைக் குருமடத்திலும் பயின்று பட்டங்களைப் பெற்றார். மேற்படிப்புக்காக உரோமை நகர் சென்று அங்கு விவிலிய இறையியல் கற்கை நெறியை மேற்கொண்டு முதுகலை மானிப்பட்டத்தையும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையில் தன்னையொரு ஆராய்ச்சி மாணவனாக இணைத்துக்கொண்டு விவிலியத்தில் தூய பவுலின் கடிதங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டவர். தாண்டவன்வெளிப் பங்கில் பங்குத்தந்தையாகக் கடமையாற்றிய வேளையில் மிகப்பிர மாண்டமாக புனித காணிக்கை அன்னை ஆலயத்தினைக் கட்டி முடித்த பெருமை இவரையே சாரும். மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் அமைந்துள்ள சிறிய குருமட இயக்குனராகவும் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் ஒரு முதன்மை விவிலிய பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

கத்தோலிக்க கிறிஸ்தவ ஆசிரியர்களுக்கான தேசிய கல்வி நிறுவன கருத்தரங்குகளில் வளவாளராகவும் செயலாற்றியுள்ளார். பத்திரிகை துறையில் மறைமாவட்ட ஆங்கில தமிழ் மாதாந்த வெளியீடுகளாகிய எங்களுக்குள் மற்றும் வெட்டாப்பு ஆகிய செய்திப் பத்திரிகையின் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். தமக்கு பல பணிகள் இருந்தும் அதனிடையே தனது போதனை கற்பித்தல் பணி மூலம் பொது நிலையினருக்கு சிறப்பு விவிலிய கருத்தரங்ககளை நடத்துவதுடன் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தலைப்பில் புத்தகமாக வெளியிடுவதிலும் ஈடுபடுகின்றார். புனித நாட்டுப்பயணம் திருத்தூதர் பவுல் இறைவாக்கினர்கள் திருவெளிபாட்டு நூல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அதுமட்டுமன்றி பிரதி மாதமும் மறைமாவட்டத்திலிருந்து வெளிவரும் இதழான தொண்டன் சஞ்சிகையிலும் வெட்டாப்பு மாத




> 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் திகதி திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு அம்பாறை புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டது. மட்டக்களப்பு அம்பாறை புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்ட போது திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயரும் மட்டக்களப்பு மண்ணின் மைந்தருமான கலாநிதி ஜோசவ் பொன்னையா ஆண்டகை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக திருத்தந்தை 16ஆம் பெனடிற்றால் நியமிக்கப்பட்டார்.

பத்திரிகையிலும் அவரது ஆக்கங்கள் தொடர்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1980 - 1991 வரையுள்ள காலப்பகுதியில் புளியந்தீவு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் உதவி பங்குத்தந்தையாகவும் தொடர்ந்து மிகவும் கஷ்டப்பிரதேசங்களான வாகரை வீச்சுக்கல்முனை ஆயித்தியமலை புல்லுமலை போன்ற பங்குகளில் மிகவும் இக்கட்டான காலங்களில் சிறப்புப் பணியாற்றியுள்ளார்.

**ஆயரின் உயர் கல்விப் புலமை**

ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை ஒரு பங்கில் பணித்தள பணியாளராக பணியாற்றிக்கொண்டிருந்த போதே இளம் மாணவர்களுடன் இணைந்து பிரத்தியேக வகுப்புகளில் கலந்துகொண்டு பராதனைப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி மாணவனாக கற்று 1990ஆம் ஆண்டில் கலைப்பட்டதாரியாக மாறிக்கொண்டார். அதனைத் தொடர்ந்து விவிலியக் கல்வியில் ஆர்வமிக்கவராய் தனது மேற்படிப்பினை மேற்கொள்வதற்காக உரோமை நகர் சென்று இரண்டு ஆண்டுகள் விவிலிய இறையியல் கற்கை நெறியை உர்பான் பல்கலைக்கழகத்தில் கற்று முதுகலைமானிப்பட்டத்தை பெற்றுக்கொண்டு நாடு திரும்பினார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையில் தன்னையொரு ஆராய்ச்சி மாணவனாக உள்வாங்கிக்கொண்டு விவிலியத்தில் தூய பவுலின் கடிதங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஈடுபட்டவர் வெற்றியும் கண்டு தனது ஆராய்ச்சியினை செவ்வனே பூர்த்தி செய்து கலாநிதிப்பட்டத்தையும் பெற்றுள்ளார்.

**ஆயர் மன்றத்தின் பொறுப்புக்கள்**

மறைமாவட்டப் பணிகள் தனது கல்விப்போதனை பணிகள் ஒருபுறமிருக்க இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் ஓர் உறுப்பினராய் ஆயர் மன்றத்தின் ஆணைக்குழுக்களிலும் பொறுப்புக்களையேற்று பலதரப்பட்ட பணிகளையும் மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும். ஆயரின் பணியில் பத்து ஆண்டுகள் நிறைவுசெய்தாலும் அவரது பணிக்காலத்திற்குள் மேற்கொண்ட செயற்பாடுகளையும் நினைவு கூருவது சாலச்சிறந்ததாகும். கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருந்த வாகரை புனித பேதுரு ஆலயம், மாங்கேணி புனித சம்மனசுக்களின் இராக்கினி ஆலயம், புல்லுமலை புனித செபமாலை அன்னை திருத்தலம் போன்ற ஆலயங்கள் புதுமெருகுடன் புனரமைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதற்கும் மேலாக இறையிரக்க ஆண்டில் மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இறையிரக்க ஆண்டவருக்கு ஆலயமில்லாத குறையை நீக்க இறையிரக்க ஆண்டில் இறையிரக்க ஆலயத்திற்கு அடிக்கல் நடப்பட்டு அவ்வாண்டிலேயே இறைமக்கள் வழிபடுவதற்காக திறந்து வைக்கப்பட்டமை பெரிய சாதனையாகும். இத்துடன் மட்டும் நின்றுவிடாது மறைமாவட்டத்தில் ரோசா மிஸ்ரிக்கா சகோதரிகள் சபையொன்றினையும் நிறுவி பணி செய்ய உருவாக்கியதும் அவரது பணிகளில் சேர்த்துக் கொள்ளபடவேண்டியதாகும். ஆயத்துவப் பணியில் அவரது செயற்பாடுகள் மறைமாவட்டத்திற்கு பெருமை சேர்த்த வண்ணமேயுள்ளன.

மட்டக்களப்பு அம்பாறை மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசவ் பொன்னையா ஆண்டகை தொடர்ந்தும் பல்லாண்டு காலம் வாழ்ந்து அவரது பணிவாழ்வுத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.




சீட்டிழுப்பு வாரம்: 276
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.06.09

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 72,394,450/-

வெற்றி இலக்கங்கள்
11 25 36 73 X

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
0114 824 824, 0112 333 778

## வேலையாள்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.

01. உணவு பரிமாறுபவர்கள்
02. குசினி உதவியாளர்
03. ரீ மேக்கர்
04. மரக்கறி வெட்டுபவர்
05. சுத்திகரிப்பாளர்
06. இடியப்பம் தயாரிப்பவர்.

ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும்.

**50/6, வைமன் வீதி, யாழ்ப்பாணம்**
**- 077 7917753, 075 530 4521**

(CS 17369/15/17)

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை தெய்வேந்திரம்



முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாகவும், இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தெய்வேந்திரம் நேற்று (08.06.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசுந்தரம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்புமருமகனும் இராசலட்சுமியின் அன்புக்கணவரும் விக்கினேஸ்வரன் (விரிவுரையாளர்) காலஞ்சென்ற விமலன் மற்றும் வினோதன் (பிரதேச செயலகம் சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் சதீஸ்கலா, கிருஷ்ணரதி (கால்நடை மிருக வைத்திய நிலையம், நல்லூர்) ஆகியோரின் அன்புமாமனாரும் விதுஷன், அபிதா, தீபிகன், ஜதீபிகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**301A, இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**
**077 5405 772, 077 736 4811**

**தகவல் : குடும்பத்தினர்.**

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!*

தோற்றம் 06 09 1962



மறைவு 08 06 2018

### ஆனந்தராசா நற்குணராஜா

***(தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கருணாலயம், கரந்தன்)***

52, குமாரவீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தராசா நற்குணராஜா கடந்த (08.06.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வில்வராஜா பத்மாவதி தம்பதிகளின் மருமகனும் நந்தினியின் (நிர்வாக உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்) பாசமிகு கணவரும் பிரணவியின் (க.பொ.த. உ/த, யா/இந்து மகளிர் கல்லூரி) அன்புத் தந்தையும் மகாதேவியின் (ஆசிரியர், கண்டக்குளி முஸ்லீம் மகா வித்தியாலயம்) அன்புச் சகோதரனும் நடராசா கதிரவேலு (தம்பு) வின் பெறாமகனும் கோவிந்தராசா, வரதராசா, கோபாலகிருஸ்ணன், ரவீந்திரன், ரஞ்சிதமலர், பிரபாகர், மனோகர் மற்றும் காலஞ்சென்ற சுதாகர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**52, குமார வீதி, நல்லூர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## வீடு வாடகைக்கு

வைமன் றோட்டில் அமைந்துள்ள வீட்டின் மேல் மாடியில் அறைகள் வாடகைக்குண்டு. (பெண்களுக்கு மட்டும் பல்கலைக்கழக மாணவிகள், வைத்திய தாதியர் விரும்பத்தக்கது.)

வீட்டின் கீழ்மாடி விசேட வைபவங்களுக்கு தங்குவதற்கு தனிப்பட்ட வீடாக வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு - 50 /6, வைமன் றோட், நல்லூர்.**
**077 791 7753, 075 530 4521**

## நாகபூஷணி திருமணசேவை

நீங்கள் விரும்பும் அரச உயர் பதவிகளில் உள்ளவர்கள், வங்கியாளர், அரச உத்தியோகத்தர், ஆசிரியர்கள். தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு / வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. மிகப் பொருத்தமாக உடன் தெரிவுசெய்து தரப்படும்.

**தொடர்பு - 077 138 7596, 071 894 5692**
**47/1, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(CS 17361/15/17)


## நுரையீரல் பாதிப்பிலிருந்து விடுபடுங்கள்

இருமல், இழுப்பு நோய், மார்பு இறுக்கம், சுவாசக்குறைபாடு ஆகியன சுவாசத்தொகுதியின் செயற்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும்.

நாட்பட்ட மூச்சுக்குழல் அழற்சி, இழுப்பு நோய், சயரோகம், நிமோனியா, நுரையீரல் புற்றுநோய் என்பன சுவாசம் இழப்பு தொடர்பான நோய்களுக்கு வழிவகுக்கும்.

எமது உன்னதமான ஆயுர்வேத மருந்தானது சுவாசப்பாதையின் சளியை அகற்றுவதன் மூலம் சுவாசத்தை இலகுபடுத்தும். வைரஸ் மற்றும் பக்டீரியா தொற்று நோய்களிலிருந்து குணப்படுத்துவதும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

**Hotline: 0777555600**
**0777708310**
**0777708330**



**FAIR PHARMA (PVT) LTD**

செலிங்கோ ஹவுஸ், 10வது மாடி கிழக்கு, இல:69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.

**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

**APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின்
முன்னாள் அதிபர்

**சுப்பிரமணியம் சேய்சோதிகாந்தன்**



அவர்கள் கடந்த 11.05.2018 அன்று
இறைவனடி சேர்ந்த அன்னாருக்கு எமது
கண்ணீர் அஞ்சலி செலுத்துவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்,**
**பழைய மாணவர் சங்கம்.**

(CS 17374/15/18)

## மரண அறிவித்தல்



### திருமதி ஜெகதீஸ்வரி வேலாயுதம்

மல்லாகம், புகையிரத நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி வேலாயுதம் நேற்று (09.06.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை வேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விவேகானந்தன், திருமதி மங்களேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கௌசல்யா, ராதா, ஜெயமோகன் ஆகியோரின் தாயாரும், குசலகுமாரன், ரஞ்சினி ஆகியோரின் மாமியாரும், சாரங்கன், நீலன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 10.06.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று பொறளை Supreme மலர்சாலையில் (ஜயரத்ன மலர்சாலைக்கு அருகில்) காலை 8 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகி, மாலை 4.00 மணிக்கு கனத்தை பொது மாயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ACO 9476/15/17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## வரிச்...

பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு நினைத்தபடி விதிக்கும் வரிச்சுமையால் மக்கள் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். எனவே எதிர்காலத்தில் அமையும் தமது ஆட்சியில் தற்போது நடைமுறையில் இருக்கும் வரியிலிருந்து இருபது சதவீதத்தைக் குறைப்பதாக முன்னாள் அரசதலைவரும் தெரிவித்திருந்தார்.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ஷ விடமிருந்து நாம் நாட்டைப் பொறுப்பேற்கும் போது ஏழாயிரத்து 390 பில்லியன் ரூபாவாக நாட்டின் கடன் இருந்தது. நாட்டின் கடனை மூன்று மடங்கால் அதிகரிக்கும் நிலையை அவர் ஏற்படுத்தியிருந்தார். அதனாலேயே வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதனால்தான் புதிதாக வரி விதிக்க வேண்டி வந்தது. அதனால் மக்கள் அரசின் மீது விமர்சனங்களை முன்வைக்கின்றனர். ஆனால் வெளிநாட்டுக் கடனைச் செலுத்தியாகவேண்டும். அதுவும் 2023ஆம் ஆண்டுக்கு முன்னர் கடன் செலுத்தியாக வேண்டும். இல்லாவிடத்து இளம் தலைமுறையினருக்கு எதிர்காலம் இல்லாது போய்விடும்.

தற்போதுள்ள வரியில் திருத்தம் கொண்டு வந்து வரிச்சுமையைக் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். ஏனெனில் புதிய முறையொன்றை அறிமுகப்படுத்துகின்றபோது அதன் ஒரு வருட காலம் நிறைவடைந்த பின்னர் அது குறித்து பரிசீலனை செய்து திருத்தம் கொண்டுவர வேண்டும் - என்றார். (4)

## வாள்வெட்டுக்...

யாழ்ப்பாணம், ஜூன் 10

மானிப்பாயில் வாள்களுடன் சென்று அட்டகாசம் புரிந்த குற்றச்சாட்டில் 3 பேர் கைதுசெய்யப்பட்டனர். 2 மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாவாந்துறையைச் சேர்ந்த இருவரும் இணுவிலைச் சேர்ந்த ஒருவருமே நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். அவர்கள் மல்லாகம் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வாள்வெட்டுக்குழுக்களுக்கிடையேயான முன்னைய பகை இதற்குக் காரணம் என்ற தகவல் விசாரணையில் கூறப்பட்டுள்ளது. விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வீடு புகுந்து வாள்வெட்டுக் குழுவினர் அடாவடியில் ஈடுபட்டனர். வீட்டிலிருந்த பொருள்கள், ஜன்னல் கண்ணாடிகள், ஓட்டோ என்பன சேதமாக்கப்பட்டன.

(4.8)

## காற்றின்...

யர்கள் நேற்று இரவுபகலாக ஈடுபட்டனர்.

பல இடங்களில் மின் கம்பிகளில் மரங்கள், மரக்கிளைகள், முறிந்து வீழ்ந்தன. அதனால் தான் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டது என்று மின்சார சபையினர் தெரிவித்தனர்.

கைதடி, சாவகச்சேரி உட்பட தென்மராட்சியின் பல இடங்களிலும், வடமராட்சியில் பல இடங்களிலும், வலிகாமத்திலும் பல இடங்களில் மின் தடை ஏற்பட்டது என்று பிரதேசத்தவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் மின்சார சபையினரிடம் கேட்டபோதே மேற்கூறிய காரணத்தைத் தெரிவித்தனர்.

அதனால் மின்சார சபை ஊழியர்கள் பகலும் இரவும் தடைகளைச் சீர் செய்து மின் வழங்கலைச் சீர்செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்று சபையினர் தெரிவித்தனர்.

உடுவில் லவ்லேன் பகுதியில் பனை முறிந்து உயர் மின் அழுத்த கம்பிகளில் வீழ்ந்தமையால் அந்தப் பகுதி ஊடான மின் வழங்கல் ஒரு மணி நேரம் தடைப்பட்டது. வடமராட்சியில் பனை முறிந்து வீழ்ந்ததில் மின்கம்பம் சேதமடைந்ததோடு மின் தடையும் ஏற்பட்டது. மின் தடை மாலையில் சீர்செய்யப்பட்டது.

யாழ்ப்பாண நகரின் ஓர் இடத்தில் பொருத்தப்பட்டிருந்த விளம்பரப் பலகை ஒன்று முறிந்து வீழ்ந்தது. மக்களால் உடனடியாக இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டது. அது சீர் செய்யப்பட்டது.

4.105)

## அறை வாடகைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் புதிதாக கட்டப்பட்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு.
தொழில்புரியும், படிக்கும் ஆண்களுக்கு உகந்தது.

**தொடர்பு - 077 412 4328**

## பீ.ரி.ஏ நீக்கம்...

டுத்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், 2015 ஒக்ரோபரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தல், மக்களின் காணிகளை விரைவாக விடுவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

மனித உரிமைகள் மற்றும் நாட்டிலுள்ள நபர்களுக்கான அடிப்படைச் சுதந்திரம் என்பவற்றைப் பேணுவதற்கும், அவற்றை விரிவுபடுத்துவதற்கும் இலங்கை முன்னெடுத் துள்ள நடவடிக்கைகள் மற்றும் முன்னகர்வுகள் பாராட்டுக்குரியவை. ஆனால் மேற்குறிப்பிட்ட விடயங்களை அரசு கட்டாயம் செய்தே ஆகவேண்டும்.

இதன்போது மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு இலங்கையால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டதோடு, இனமத சார்பான வன்முறைகள், செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும், அவற்றை முற்று முழுதாக நிறுத்துவதற்கும் இலங்கை அரசு முன்னெடுத்துவரும் முன்னகர்வுகளை வரவேற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் தொழிலாளர்கள் தொடர்பான நடவடிக்கைகள், சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்கள், சிறந்த நிர்வாகத்தை கட்டயெழுப்புவதற்கான முயற்சிகள் என்பனவும் ஆராயப்பட்டதுடன், இலங்கையின் நல்லிணக்க முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒத்துழைப்பு வழங்கும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

மனித உரிமைகள் தொடர்பான விடயத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், தகவல் அறியும் உரிமைச்சட்டம் போன்ற முக்கிய நகர்வுகள் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனித உரிமைகள் விடயம் தொடர்பில் பன்னாட்டுக்குப் பொறுப்புக்கூறல், தொழிலாளர் உரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் இலங்கையின் தொடர்ச்சியான செயற்பாடுகளை ஐரோப்பிய ஒன்றியம் கண்காணித்து வருகின்றது.

அத்தோடு ஊடக சுதந்திரம், சிவில் சமூகங்களின் உரிமைகளை வலுப்படுத்தல், பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகளை மேலும் முன்னேற்றுதல், சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்தல், ஆகியன தொடர்பிலும் கூட்டத்தொடரில் ஆராயப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

## தலை ...

மன்னார், ஜீன் 10

கடற்றொழிலுக்குச் சென்ற இரு மீனவர்களைக் காணவில்லை. சக மீனவர்கள் படகுகளில் தேடுதல் நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தலைமன்னார் மேற்கு கிராமப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த சகோதரர்களான தோ. கிறிஸ்ரின் கூஞ்ஞ, தோ. எமல்ரன் கூஞ்ஞ இருவரும் நண்டு வலையைக் கரை சேர்ப்பதற்காக படகில் சென்றுள்ளனர். நேற்றிரவுவரை அவர்கள் கரைசேரவில்லை.

இதனால் தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த நாற்பது மீனவர்கள் பத்துப் படகுகளில் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

இருவரும் பயணித்த படகு இயந்திரம் பழுதடைந்திருந்தால் யாழ்ப்பாணம் அல்லது இந்தியாவை அண்மித்துச் சென்றிருக்க வேண்டும். வட கடலிலே இவர்கள் தங்கள் தொழிலை மேற்கொண்டதால் அதற்குச் சாத்தியமுள்ளது. அதனையும் கவனத்திற் கொண்டு தேடுதல் நடத்தப்படுகிறது.

சில நாள்களாக கடும் காற்றும் கடல் கொந்தளிப்பும் காணப்படுகிறது. அதனால் கடலில் போடப்பட்ட வலைகளுக்குச் சேதம் ஏற்படாமல் வலைத் தொகுதியை மீட்கும் நோக்கில் கடலுக்குச் சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,21,60)

## மக்களிடம்...

பங்களிப்பை - நன்கொடையைச் சபை கோரியுள்ளது. இந்தக் கோரிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுப் பகிரங்கமாக விடுத்தார்.

வடக்கு மாகாண சபையிடம் நிதி வளங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் முழுமை செய்யப்படவேண்டிய வேலைகளோ மலையளவாகக் குவிந்திருக்கின்றன. ஆகவே கிராம அபிவிருத்தி தொடர்பான வேலைகளில் மக்களின் பங்களிப்புக்களை நாங்கள் நாடி நிற்கின்றோம். அவை போதியளவு கிடைக்கப் பெறுகின்ற போது அபிவிருத்திப் பணிகள் சிறப்புற நடைபெறும்" என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பேசாலை கடற்கரைப் பூங்கா, 2017ஆம் ஆண்டு பி.எஸ்.டி.ஜி நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 3.9 மில்லியன் ரூபா செலவில் அழகுபடுத்தப்பட்டுமக்கள்பாவனைக்காகவைபவரீதியாக நேற்றுக் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலா மையங்கள் கூடுதலாகக் காணப்படுகின்ற மன்னார்ப் பிரதேசத்தில் இன்னும் பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளபோதும் உரிய நிதிமூலங்கள் கிடைக்காமையால் அவை தடைப்பட்டுள்ளன. இந்த வேலைகள் நிச்சயமாக அடுத்தடுத்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்படும்.

சுமார் 30 ஆண்டுகால தொடர்ச்சியான போரின் விளைவாக வடபகுதியின் வளங்கள் அனைத்தும் முடக்கப்பட்ட நிலையில், எமது மக்கள் எதுவித அபிவிருத்திகளும் இன்றிவாழவேண்டிய ஒருநிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில், வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது. இந்த நிலை மாற்றப்பட்டு மக்கள் சுயமாக இயங்கக்கூடிய இன்றையநிலையில்சுற்றுலாத்துறைதொடர்பான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வடக்கு மாகாணசபை மேற்கொண்டுவருகின்றது.

சுற்றுலாத்துறைக்கான நியதிச் சட்டங்கள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு முறையாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடற்கரைப் பூங்கா இந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கும், இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் மாலை வேளைகளில் அமர்ந்திருந்து காற்று வாங்குவதற்கும், நடைப் பயற்சி, தேகப் பயிற்சி போன்ற பயிற்சிகளைச் செய்வதற்கும்ஏற்றவையாக இருக்கும்.

ஒவ்வொரு சுற்றுலா மையமும்அந்தந்தப் பகுதிகளுக்கு வருவாயைத் தேடிக் கொடுப்பதுடன் பொருளாதார நிலையில் நலிந்த நிலையிலுள்ள அந்தப் பகுதி மக்கள் தமது பொருளாதாரத்தை விருத்தி செய்யக்கூடிய வகையில் ஒழுங்குகளை மேற்கொள்ளமுடியும். உதாரணமாக பேசாலை கடற்கரைப் பூங்காவில் மக்கள் அதிகம் கூடுகின்றபோது இந்தப் பகுதிகளில் சுண்டல், கடலை வியாபாரம் மற்றும் சிற்றுண்டி வியாபாரங்கள், தேநீர் வியாபாரங்கள் போன்ற பல வர்த்தக நடவடிக்கைகளுக்கு நல்ல மவுசு ஏற்படும். அதேபோன்று இவ்வாறான கடற்கரைகளில் உள்ள தனியார் நிலங்களில் அந்த நிலச் சொந்தக்காரர்கள் அழகான சிறிய குடில்களை சட்டப்படி அமைத்து அதனை சுற்றுலாப் பயணிகளின் பாவனைக்காக குறைந்த வாடகைக் கட்டணத்தில் கையளிக்கின்ற போது சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும்.

பேசாலையைப் பொறுத்த வரையில் வருடத்தின் 12 மாதங்களும் அவர்களுக்கு வாய்ப்பான மாதங்களே என்று நம்புகின்றேன். இங்கு கடல் உணவுகளுக்குப் பஞ்சமில்லை. ஆதலால் இந்தப் பகுதிக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் கடல் உணவுகளில் தயாரிக்கப்பட்ட சுத்தமும் சுகாதாரமும் நிறைந்த உள்ளூர் உணவு வகைகளை விரும்பிஅருந்த வழிவகைகளை உண்டுபண்ணலாம்.

### சாரதிகள் கவனமில்லை

வீதிகள் சீரமைப்புச் செய்யப்பட்டு காப்பெட் வீதிகளாக மாற்றப்பட்ட பின்னர் 1 மணித்தியாலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து பேசாலைக்கு வரக்கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று பேசாலை கொழும்புப் பிரயாணமும் இலகுவாக்கப்பட்டிருக்கின்றது. வீதிகள் செப்பனிடப்பட்ட பின்னர் பிரயாணம் இலகுவாக்கப்பட்டது. ஆனால் வீதி விபத்துக்கள் இங்கு அதிகரித்துள்ளன என்று அறிகின்றேன். இது கவலைக்குரியது. சாரதிகள் வீதி ஒழுங்குகளை முறையாகக் கவனிக்காத காரணத்தாலேயே இந்த விபத்துகள் ஏற்படுகின்றன - என்றார். (4,56,60)

## நாடாளுமன்ற...

மன்ற உறுப்பினர்கள், ஆகக் குறைந்தது மாவட்ட இணைத் தலைவர்களாவது உள்ளீர்க்கப்படவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால், வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் சிறப்புச் செயலணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாணத்துக்கும், மத்திக்கும் இடையிலான முரண்பாடுகள் காரணமாக பல அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பிரச்சினை இருந்து வருகின்றது. குறிப்பாக வடக்கு மாகாண சபையின் அனுமதியின்றி மத்தி தன்னிச்சையாக அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சித்ததால், மாகாணசபையின் ஒத்துழைப்பு அத்தகைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு கிடைத்திருக்கவில்லை.

இரு தரப்புக்களையும் ஒருங்கிணைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டமிடுகின்றமை வரவேற்கத்தக்க விடயம். மாகாண, மத்தி இழுபறி காரணமாக பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் எதிர்காலத்தில் முடங்காது.

வடக்கு கிழக்கின் அபிவிருத்தியில் மாகாணத்துக்குப் பொறுப்பான விடயங்களுக்கு மாகாண சபையின் பிரதிநிதித்துவம் செயலணியில் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடம் வழங்கப்படவில்லை. ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் மாத்திரம் இந்தச் செயலணிக்குள் நியமிக்கப்பட்டுள்ளார். அவர்எந்த அடிப்படையில்நியமிக்கப்பட்டார் என்பது தெரியவில்லை.

இந்தப் பகுதி மக்களின் அபிவிருத்தித் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பங்கு இருக்கின்றது. அவர்களையும் உள்வாங்கவேண்டும். ஆகக் குறைந்தது மாவட்ட இணைத் தலைவர்களாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களையாவது செயலணிக்குள் உள்ளீர்க்கவேண்டும்.

48பேரை செயலணியின் உறுப்பினர்களாக நியமித்திருக்கின்றார்கள். இது மிகப் பெரிய தொகை. இவ்வளவு பேரை வைத்துக் கொண்டு ஒரு விடயத்தைச் செய்து முடிப்பது பெரும் சிரமமான விடயம். இவ்வளவு பேரையும் ஒருங்கிணைப்பதே பெரும் கஷ்டம்.

செயலண்ி நல்ல நோக்கத்தோடு அமைக்கப்பட்டிருக்கின்றது. திறமையான ஒருவர் செயலணியின் செயலராக நியமிக்கப்பட்டார். இதனைச் சரியான திசையில் நடத்திச் செல்வதற்கு மேற்சொன்ன 2 குறைகளையும் நீக்கினால் நல்லது - என்றார். (5)

## வட - கிழக்கு...

யல் கற்கைகள் நிலைய மண்டபத்தில் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் குறித்த ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இணைப்பாளர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

'கிழக்கு தமிழர் ஒன்றியம் கிழக்குக்கு மாத்திரமானதோ வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிரானதொரு சக்தியோ அல்ல. நாங்கள் வடக்கு கிழக்கு இணைந்த தாயகம்தான் தமிழர்களின் தீர்வு என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அது கிடைக்கப்பெறும் வரையில் கிழக்கு மாகாணத்தைக் கிழக்கு மாகாணமாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் ஏதாவது நன்மையிருக்கும் என்று கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் இணைப்பாளர்களான மூத்த சட்டத்தரணி த.சிவநாதன் ,செங்கதிரோன், த.கோபாலகிருஸ்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.

ஊடக சந்திப்பில், கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தலைவர் பேராசிரியர் மா.செல்வராஜா, செயலாளர் எந்திரி வ.பரமகுருநாதன், ஊடக இணைப்பாளர் த.ஈஸ்வரராஜா உள்ளிட்டோரும் இணைந்திருந்தனர். (4)

## கடலட்டை....

மாறு கோரப்பட்டுள்ளது. வடக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தவச்செல்வம் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள சமாச அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அதில் அவர் தெரிவித்ததாவது:

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமாகக் கடலட்டை பிடிப்பதைத் தடுக்கக்கோரி பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ஜனநாயக ரீதியாக எமது போராட்டத்தை விரிவுபடத்தும் வகையில் நாளை திங்கட்கிழமை மதியம்வரை அனைத்து வர்த்தகர்களும் கடையைப் பூட்டி கடையடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தரவேண்டும்.

முச்சக்கர வண்டி சங்கம், கூட்டுறவுச் சங்கங்கள், வணிகர் கழகம் ஆகியனவும் எமக்கு ஆதரவு தரவேண்டும்.

எமது போராட்டத்தின்போது மருத்துவமனை மற்றும் பாடசாலைகள் வழமை போல இயங்க நாம் கோருகின்றோம். மதியம்வரை கடைகளை மட்டும் பூட்டி எமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளோம். அன்று பேரணியும் இடம்பெறும். அது எமது சமாச அலுவலகத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை அடைந்து மாவட்டச் செயலர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநருக்கு மனுக்களைக் கையளிக்கவுள்ளோம்.

இந்தப் போராட்டத்துக்கு வடக்கில் உள்ள 128 சங்கங்கள், 10 சமாசங்கள் ஆதரவு வழங்கியுள்ளன.எமது தொழிலாளர்களின் பிரச்சினைக்கு நாமே போராடித் தீர்வு காணவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே நாளை எமது தொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர்.

எமது இந்த அகிம்சைப் போராட்டங்களுக்குத் தீர்வு கிடைக்காத பட்சத்தில், எமது நிலங்கள் அபகரிக்கப்பட்டதை நாம் வெளிநாட்டு தூதர்களுக்குத் தெரியப்படுத்தியதுபோல, எமது கடலும் அபகரிக்கப்பட்டு வரு வதை தூதர்களுக்குச் சுட்டிக்காட்டி அவர்களுக்கு மனுக் கொடுக்கவுள்ளோம் - என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த வடமராட்சி சமாச தலைவர் வர்ணகுலசிங்கம் அரசியல்வாதிகளைக் குற்றஞ்சாட்டினார். அவர் தெரிவித்ததாவது:

வடமராட்சி கிழக்கில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத கடலட்டை பிடித்தலைத் தடுக்க வலியுறுத்தி கடற்றொழில் சங்கங்களும் சமாசங்களுமே போராட்டத்தில் ஈடுபட்டு வந்தன. இதற்குள் புகுந்த சில அரசியல்வாதிகள் போராட்டத்தைத் திசைதிருப்ப சதி செய்ய முற்படுகின்றனர்.

கடலட்டை பிடித்தலைத் தடுக்குமாறு ஆரம்பத்தில் சமாசங்களும் கடற்றொழில் சங்கங்களும் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தன. இதற்குள் புகுந்த சில அரசியல்வாதிகள் போராட்டங்களை மழுங்கடிக்கச் சதியில் ஈடுபட்டுள்ளனர்.

எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே நாம் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து நாடாளுமன்றுக்கு அனுப்பியுள்ளோம். அவர்கள் நாடாளுமன்றில் குரல் கொடுத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதுவிட்டால் அவர்கள் தமது பதவிகளைத் தூக்கி ஏறியவேண்டும். எமது ஜனநாயகப் போராட்டத்துக்குத் தீர்வு கிடைக்காதுவிட்டால் நாம் தொடர் போராட்டத்தில் களமிறங்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (4,8)

## பாதாளக்...

னர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார். திட்டமிட்டுக் குற்றச் செயலில் ஈடுபடும் பிரபல பாதாள உலகக் குழுவின் உறுப்பினர்களே அவர்கள் என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (4,ரி2)

## பசுவும்...

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார். (4)

# இங்கிலாந்தில் சாதிப்பதற்கு மனதளவில் பலம் வேண்டும்


## முரளி விஜய் சொல்கிறார்

"இங்கிலாந்துத் தொடரில் சாதிப்பதற்கு உடலளவில் மட்டுமன்றி மனதளவிலும் பலம் வேண்டும்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் ஆரம்ப வீரர் முரளி விஜய்.

இந்திய அணி விரைவில் இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பில் பலரும் கருத்துத் தெரிவித்து வரும் நிலையில் இவ்வாறு தெரிவித்தார் முரளி விஜய்.

"ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட், வெளியே சென்று எம்மை வெளிப்படுத்த வாய்ப்பு அளிக்கிறது. அது நிச்சயமாக ஒரு சுவாரஸ்யமான ஆட்டமாக இருக்கும். அதைத்தொடர்ந்து வரும் ஆட்டங்களில் இங்கிலாந்துத் தொடருக்கான உத்திகள் தொடங்கும். ஆப்கானிஸ்தான் ஒரு தரமான அணி, டெஸ்ட் ஆட்டமென்பது எந்தவொரு வீரருக்கும் சவாலாக இருக்கும்.

சிறந்த வீரர்களும் இங்கிலாந்து மைதானங்களில் விளையாட கஷ்டப்படுவார்கள். இத்தகைய சூழ்நிலைகளில் ஓட்டங்கள் எடுப்பது ஒரு மனநிலை சம்பந்தப்பட்ட விளையாட்டு. இங்கிலாந்தில் நேரத்தை செலவழிப்பது முக்கியம், எங்களை நம்பவேண்டும். மனதளவில் நாங்கள் தயாராக இருக்க வேண்டும். அதன் பின்னர் ஓட்டங்கள் தானாக வரும். என் வாழ்க்கை முழுவதும் நான் அதைத்தான் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்" என்று முரளி விஜய் மேலும் தெரிவித்தார். (ம)




# றொனால்டோவை விட மெஸ்ஸியிடம் திறமை

## ரஸ்போர்ட் சொல்கிறார்

"நான் கிறிஸ்ரியானோ றொனால்டோவின் மிகப்பெரிய ரசிகன். என்றாலும், அவரைவிட மெஸ்ஸி சிறந்த வீரர்" என்று தெரிவித்தார் ரஸ்போர்ட்.

இங்கிலாந்தைச் சேர்ந்த முன்னணி கால்பந்து வீரர் மார்கஸ் ரஸ்போர்ட், இங்கிலாந்தின் முன்னணி கழகமான மன்செஸ்டர் யுனைற்ரெட் அணிக்காக விளையாடி வருகிறார். மன்செஸ்டருக்காக றொனால்டோ விளையாடிய காலத்தில் இவர்கள் இருவருக்கும் இடையில் நெருக்கமான நட்பு நிலவியது. றொனால்டோவின் திறமையை பலமுறை புகழ்ந்து தள்ளிய ரஸ்போர்ட், தற்போது றொனால்டோவை விட மெஸ்ஸி திறமையானவர் என்று குறிப்பிட்டார்.

"நான் மெஸ்சியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், சில விடயங்கள் நம்ப முடியாத வகையில் இருக்கும். றொனால்டோவின் சிறந்த ரசிகன்நான். எனினும், நான் மெஸ்சியை விட சிறந்த வீரர் யாருமில்லை என்று நினைக்கிறேன். நான் இணைந்து விளையாடியதில் ரூனேதான் சிறந்த வீரர். அவர் ஒரு ஜாம்பவான். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை" என்று ரஸ்போர்ட் மேலும் தெரிவித்தார். (ம)






# சென். ஜோன்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இரண்டு ஒற்றையர் ஆட்டம் ஓர் இரட்டையர் ஆட்டம் என்பவற்றைக் கொண்டு இறுதியாட்டம் அமைந்தது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை பிரதி நிதித்துவம் செய்த அபினாஸை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து ஆர்.றொசான் மோதினார். 25:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அபினாஸ் வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியைப் பிரதிநிதித்துவம் செய்த எல்சான் டெனுசனனை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து தமிழ்செல்வன் மோதினார். 19:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார் தமிழ்ச் செல்வன்.

இரு ஒற்றையர் ஆட்டங்களிலும் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றிருந்தமையால் இரட்டையர் ஆட்டத்தில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இரட்டையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் இணை வெற்றிபெற்றதை அடுத்து 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது சென். ஜோன்ஸ்.

(ம-23)

# கொக்குவில் இந்து கூடைப்பந்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன்-10

வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்திய வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீ கரித்தது.

யாழ்ப்பாண மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத் திடலில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில், கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 57:56 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

(ம-422)





# யங்ஹென்றிஸ் - பாடும்மீன் இறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 10

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தூயவொளி கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் - குருநகர் பாடும்மீன் அணிகள் இன்று மோதவுள்ளன.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு இந்த இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. இன்றைய நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் இ.ஆர்னோல்ட் கலந்துகொள்ளவுள்ளார்.

(ம-23)

# தீவுகளின் பிடியில் இலங்கை தவிப்பு



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில், இலங்கை அணி பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. நேற்றுமுன்தினமூன்றாம்நாள்நிலவரத்தின்படி மேற்கிந்தியத் தீவுகள் அணி 360 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 8 இலக்குகளை இழந்து 414 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக டவ்ரிச் 125 ஓட்டங்களையும், கோப் 44 ஓட்டங்களையும், கோல்டர் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லகிரு குமார 4 இலக்குகளையும், லக்மல் 2 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சந்திமல் 3 ஓட்டங்களுடனும், சில்வா ஓர் ஓட்டத்துடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுமுன்தினம் களமிறங்கினர்.

5 ஓட்டங்களுடன் சில்வாவை வெளியேற்றினார் றோச். அணித் தலைவர் சந்திமல் தொடர்ந்தும் நிலைத்து நின்று விளையாடினார். சந்திமலுடன் இணைப்பாட்டத்தைக் கட்டமைத்திருந்த டிக்வெல்ல 31 ஓட்டங்களுடன் ரண்அவுட் முறையில் வீழ்ந்தார். 44 ஓட்டங்களுடன் சந்திமலும் ஆட்டமிழக்க சகல இலக்குகளையும் இழந்து 185 ஓட்டங்களை மட்டுமே பெற்றது இலங்கை அணி.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 3 இலக்குகளையும், றோச், கபிரியேல் இருவரும் தலா 2 இலக்குகளையும், கோல்டர், பிஸ்கூ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இலங்கை அணியை இரண்டாவது இன்னிங்ஸ்க்காகத் துடுப்பெடுத்தாடப் பணிக்கக்கூடிய வாய்ப்பு இருந்த போதிலும், தானே தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவது என்று தீர்மானித்தது தீவுகள். அந்த அணி நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பவல் 64 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்.

பந்துவீச்சில் குமார 2 இலக்குகளையும், லக்மல், கேரத் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

(ம)

# குரோசியாவின் கனவு மெய்ப்படுமா?



**நடுகளத்தில் மின்னலென பாயும் வீரர்களாக அணித் தலைவர் லுகோ மட்ரிக், கோவாசி, இவான் ராகிடிக், இவான்பெரிசிக்,மார்செலோ புரோசோவிக் ஆகியோர் உள்ளனர். அணியைத் தாங்கிப் பிடிக்கும் அசகாய சூரர்களும் இவர்கள்தான். இவர்களை நம்பியே அணி உலகக் கிண்ணத் தொடருக்கான களத்தில் குதிக்கிறது. உலக கால்பந்து வீரர்களில் மிகச் சிறந்த நடுகள வீரர்கள் வரிசையில் லுகோ மாட்ரிக்கும் ஒருவர்.**

ஐந்தாவது முறையாக குரோசிய அணி, உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னேறியுள்ளது. பிபா தரவரிசையில் 18ஆவது இடத்தில் இருக்கும் குரோசிய அணியில் உலகத் தரம் வாய்ந்த கால்பந்து வீரர்கள் நிறைந்திருந்தபோதிலும் அந்த அணியால் இதுவரை கிண்ணத்தைக் கைப்பற்ற முடியவில்லை. 1998ஆம் ஆண்டில் அரையிறுதி வரை முன்னேறியமையே அந்த அணியின் அதிகபட்சப் பெறுபேறு.

ரஷ்ய உலகக் கிண்ணத் தொடரில் பலம் வாய்ந்த டி பிரிவில் குரோசியா இடம்பெற்றுள்ளது. இந்தப் பிரிவில் கிண்ணத்தை வெல்லக்கூடிய அணிகளுள் ஒன்றாகக் கருதப்படும் ஆர்ஜென்ரீனாவும் உள்ளது. எனவே அந்த அணிக்கு முதல் சுற்றைத் தாண்டுவதே கடினமான இலக்காக இருக்கும் என்று கால்பந்து விமர்சகர்கள் கணித்துள்ளனர். ஆனாலும் பலம்வாய்ந்த நடுகள வீரர்கள் குரோசியா அணியைத் தாங்கிப் பிடிக்கிறார்கள்.

அணியின் பலமாக இருப்பது ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடும் மாட்ரிக்கும், மட்டியோ கோவாசிக்கும். இதேபோல பார்சிலோனா அணிக்காக களமிறங்கி கலக்கி வரும் இவான் ராகிடிக்கும், இன்டர்மிலன் அணிக்காக விளையாடும் இவான் பெரிசிக்கும், மார்செலோ புரோசோவிக்கும் அணியின் தூண்களாக எதிரணியை மிரட்டுகின்றனர். இவர்கள் அனைவருமே உலகத் தரம் வாய்ந்த வீரர்கள் என்பதில் சந்தேகமில்லை. அதுமட்டுமல்லாமல் ஜுவென்டஸ் அணிக்காக விளையாடும் மரியோ மான்ட்ஜுகிக், மிலனுக்காக விளையாடும் நிகோலா காலினிக், ஹோபன்ஹெய்ம் அணிக்காக சாதனை புரியும் ஆந்திரஜ் கிராமரிக்கும் அணியின் வெற்றிக்கு உறுதுணையாக உள்ளனர்.

**நடுகளப் பலம்**

நடுகளத்தில் மின்னலென பாயும் வீரர்களாக அணித் தலைவர் லுகோ மட்ரிக், கோவாசி, இவான் ராகிடிக், இவான் பெரிசிக், மார்செலோ புரோசோவிக் ஆகியோர் உள்ளனர். அணியைத் தாங்கிப் பிடிக்கும் அசகாய சூரர்களும் இவர்கள்தான். இவர்களை நம்பியே அணி உலகக் கிண்ணத் தொடருக்கான களத்தில் குதிக்கிறது. உலக கால்பந்து வீரர்களில் மிகச் சிறந்த நடுகள வீரர்கள் வரிசையில் லுகோ மாட்ரிக்கும் ஒருவர். அதே நேரத்தில் இதுவரை குரோசியா அணி உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதியைத் தாண்டியதில்லை. அது பெரும் பலவீனமாகப் பார்க்கப்படுகிறது. யுகோஸ்லேவியாவிலிருந்து பிரிந்த பின்னர் முதன்முறையாக 1998ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் குரோசியா பங்கேற்று அரையிறுதி வரை சென்றது. ஆனால் பலம்பொருந்திய பிரான்ஸிடம் தோல்வி கண்டு வெளியேறியது குரோசியா. ஆனால் இம்முறை நாக்அவுட் சுற்றுக்கு முன்னேற வேண்டும் என்ற வேகம் வீரர்களிடையே உள்ளது.

தற்போது பயிற்சியாளராக உள்ள டாலிக், போதிய அனுபவம் இல்லாதவர். மேலும் நெருக்குதலான ஆட்டத்தின்போது அவர் மிகவும் பதற்றமாகக் காணப்படுகிறார். அவர் பதற்றமாக இருக்கும் பட்சத்தில் அது அணியினரிடையே எதிரொலிக்கும். மேலும் குரோசிய அணி தடுப்பாட்டத்தில் மிகவும் பலம் குறைந்த அணியாகப் பார்க்கப்படுகிறது. மூத்த வீரர் வேத்ரன் கோர்லுகா காயமடைந்து தற்போதுதான் அணிக்குத் திரும்பியுள்ளார். அணி வீரர்களை அரவணைத்துச் செல்லும் புதுப் புயலாக இருக்கிறார் அணித் தலைவர் லுகோ மாட்ரிக். 32 வயது குரோசிய சூப்பர் ஸ்டாரான லுகோ, தங்களது நாட்டுக்கு கிண்ணத்தை வாங்கி வருவார் என ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.



## காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் எருவன் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் காணிகள் விற்பனைக்கு உண்டு.

(9263) (14.17) தொடர்பு: 077 501 0196

## வேலையாள் தேவை

கணினி அனுபவம் வாய்ந்த கணக்குப் பதிவுகளை பேணக்கூடியவர் தேவை. (பெண்கள் விரும்பத்தக்கது)

வேலும்மயிலும் அரிசி ஆலை குமாரபுரம் வீதி, பரந்தன்.

077 828 8976

(9264) (14.17)

## E.S Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

esprintersjaffna@gmail.com

021 492 7471, 021 492 7472

SAMSUNG

Galaxy J7 DUO | J6 | J4




Dual Camera | Infinity Display | Elegant Design

Available at: DAMRO | ABANS | SINGHAGIRI | SINGER | softlogic | Dialog | Sri Lanka Telecom Mobitel | WOWK | And all authorized dealers island wide

Rs. 25,790 Upwards

*Terms & conditions apply. Prices are subjected to change without prior notice. For more details contact the distributors or dealers. Product images, features and specifications shown are for visual representation purposes only, the actual product may vary.

SIMPLY DIAL 011 SAMSUNG 7267864

SamsungLankaOfficial

SamsungLankaOfficial

"Youth Brand of the year"

* Award given to Samsung by Nielsen People's Awards held on 9th March for the year 2018.

# மாற்று மோதிரம்

# WEDDING FAIR JAFFNA 2018

## திருமண வழங்குனர்களின் காட்சிக் கூடங்கள்

பங்குபற்றுபவர்கள்

**Wedding Saree**
Sri Vijayas
Kamaleswary Tex

**Beauticians**
Nayagara Salon & Academy
Anu Beauty Clinic & International Makeup Artist
Thivarsana Beauty Care & Academy
Jaffna District Beautician Association
Suriyapiradeeba's Divine Lotus Holistic Beauty Solutions
Thadsha Beauty Parlour
Raam Beauty Center
Golden Look Beauty Care & Academy
Sahana

**Mehendi**
Style One Aja

**Photography**
Studio 3000DF
Studio mayu
Studio JK Dreams
Sai Photography
The Video Blossoms

**Camera**
CameraLK

**Florist**
Lassana Flora

**Cosmatic**
Derma Color

**Wedding Car**
Reacharge Travels

**Wedding Card**
Andra Wedding Cards

**Cake**
Tharu cakes

**Wedding Gift**
Crafttary

**Regiform Designing**
Siththa Regiform Designing

**For More Details**
www.maatrumothiram.com
Facebook.com/Arunthathee
076 822 8522

ஜூன் 16,17
9.00am-6.00pm

செல்வா பலஸ் கே.கே.எஸ்.வீதி.கொக்குவில்.

Main Sponsor: SRI VIJAYAS, NAYAGARA SALON & ACADEMY

Co. Sponsor: STUDIO 3000 DF

Official Partners: LassanaFlora, DERMA COLOR, ASIA EXHIBITION & CONVENTIONS, ANDRA PRINTERS, உதயன்

Organized By: Arunthathee


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.